# பெரியார் பல்கலைக்கழகம்

NAAC 'A++' Grade with CGPA 3.61 (Cycle - 3)

State University - NIRF Rank 56 - State Public University Rank 25

Salem-636011, Tamilnadu, India

## தொலைநிலைமற்றும் இணையவழிகல்விமையம்

## இளங்கலைத் தமிழ்

இரண்டாமாண்டு மூன்றாம் பருவம்

## முதன்மைத்தாள் - 5

## காப்பியங்கள் **23UTACT05**

2024 – ஆம் கல்வியாண்டு முதல் பயிலும்

மாணவர்களுக்குரியபாடநூல்

பாடநூல் உருவாக்கம்

தொலைநிலை மற்றும் இணையவழி கல்வி மையம்

பெரியார் பல்கலைக்கழகம்

சேலம் - 11.

# காப்பியங்கள்

## பாடத்திட்டம்



| அலகு | பாடத்திட்டவிளக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1 | சிலப்பதிகாரம் - அந்திமாலைச் சிறப்புசெய் காதை<br>மணிமேகலை - சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதை | 3 - 31 |
| 2 | சீவகசிந்தாமணி - பூமகள் இலம்பகம்<br>சூளாமணி - நகரச்சருக்கம் | 32- 79 |
| 3 | கம்பராமாயணம் - கடல்தாவு படலம் 1-35<br>பெரியபுராணம் - கண்ணப்பநாயனார் புராணம் | 80 - 160 |
| 4 | தேம்பாவணி - நாட்டுப்படலம்<br>சீறாப்புராணம் - சுரத்திற் புனலழைத்த படலம் | 162 - 209 |
| 5 | இராவணகாவியம் - தமிழகக் காண்டம் - தாய்மொழிப் படலம் (1-11 பாடல்கள்)<br>தமிழ்ஒளி - வீராயி (குறுங்காவியம்) - முழுவதும் | 210 - 285 |

## பாடநோக்கம்

- தமிழ் மொழியில் உருவான காப்பிய மரபின் தொன்மையை மாணவர்கள் அறிந்து கொள்ளுதல்.
- பல்வேறு மதங்கள் சார்ந்த காப்பியங்களையும் மதக்கொள்கைகளையும் மாணவர்கள் அறிந்து கொள்ளுதல்
- மணிமேகலையில் சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக மாற்றி மணிமேகலை குறித்து அறிந்து கொள்ளுதல்
- மைய மாநில அரசுகள் சார்ந்து நடத்தப்படும்தேர்வுகளுக்கு மாணவர்கள் தயாராகுதல்
- சமகாலத்தில் சேர்ந்த தமிழ்மொழி போன்ற படைப்பாளர்களின் சமகால குறுங்காப்பியங்களைப் படைக்கும் திறன் பெறுதல்

## பாடத்தின் பயன்

- காப்பிய இலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து அறிந்து கொள்ளுதல்.
- சிலப்பதிகாரப் புகார் காண்டத்தில் காணப்பெறும் காப்பிய நயங்களையும் உத்தி முறைகளையும் காணுதல்.
- கம்பராமாயணம் பெரியபுராணம் தேம்பாவணி உள்ளிட்ட காப்பியங்களின் காப்பிய இயல்புகளை அறிதல்.
- காப்பியங்களின் கதை எடுப்பு தொடுப்பு முடிப்பு ஆகிய உத்திகளை கற்றறிதல்.
- காலத்திற்கேற்ப குறுங்காவியங்கள் படைக்கும் திறனை வளர்த்துக் கொள்ளுதல்

# பாட அறிமுகம்

# முதன்மைத்தாள் - 5

# காப்பியங்கள்

## காப்பியங்கள்

- **அறம், பொருள், இன்பம், வீடு** ஆகிய உறுதிப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு செய்யுளால் இயன்ற கதைகளைக் காப்பியம் என்று கூறுவர்.
- இது பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என இரு கூறாகப் பகுத்துக்கூறப்பட்டுள்ளது.
- **காவ்யம்** என்ற வடசொல்லின் தமிழாக்கம் **காப்பியம்** என்று வழங்கப்பட்டு வருகிறது.
- ஆங்கிலத்தில் **எபிக்** என்ற சொல் காப்பியத்தைக் குறிக்கும்.

## காப்பியத்தின் இலக்கணம்

கீழ்க்கண்ட இயல்புகளைக் கொண்டு பெருங்காப்பியம் அமையப்பெற்றிருக்க வேண்டும் எனத் **தண்டியலங்காரம்** எடுத்துரைக்கிறது.

1) **வாழ்த்து, வணக்கம், வருபொருள்** இவற்றில் ஒன்றைக் கூறித் தொடங்க வேண்டும்.
2) **அறம், பொருள், இன்பம், வீடு** என்ற நான்கினையும் உணர்த்துவதாக அமைய வேண்டும்.
3) தன்னேரில்லாத தலைவனைக் கொண்டிருக்க வேண்டும்.
4) **மலை, கடல், நாடு, நகர்** முதலான இயற்கைப் புனைவுகள் இடம் பெற்றிருக்க வேண்டும்.
5) திருமணம் புரிதல், பொன்முடி அணிவித்தல், பொழில் விளையாட்டு, புனல் விளையாட்டு, சிறுவரைப்பெறுதல் முதலிய நிகழ்வுகள் இடம் பெற வேண்டும்.
6) மந்திராலோசனை, தூது செல்லுதல், போர் செய்தல், போரில் வெற்றி பெறுதல் ஆகியவை அமைய வேண்டும்.

7) சருக்கம், இலம்பகம், பரிச்சேதம், காண்டம் இவற்றில் ஒன்றினைப் பிரிவாகக் கொண்டு அமையப் பெற வேண்டும்.
8) எண்வகைச்சுவையும், பாவமும் அமையுமாறு செய்திகளைக் கூறவேண்டும்.
9) நன்கு கற்ற சான்றோர்கள் அவற்றை இயற்றியிருக்க வேண்டும்.

# அலகு - 1

## சிலப்பதிகாரம்

## அந்திமாலைச் சிறப்புசெய் காதை

### சிலப்பதிகாரம்

- ✶ தமிழில் தோன்றிய முதற்காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். தமிழ் காப்பிய மரபில் தனித்துவமான அடையாளமாக விளங்கும் முத்தமிழ்க் காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். 'நெஞ்சை அள்ளுகின்ற காப்பியம்' என்ற பெருமைக்குரியதாகும்.
- ✶ சிலம்பு என்கின்ற அணியே இந்த கதையை அலங்கரிக்கக் காரணமானதனால் இப்பெயர் உண்டாயிற்று.
- ✶ காப்பிய மரபுகளுக்கு உட்பட்டு இளங்கோவடிகளால் பாடப்பட்ட இக்காப்பியம் தமிழ் இலக்கிய வரலாற்றில் தனிசிறப்புக்களை உடையதாகும்.

### இளங்கோவடிகள் - குறிப்பு

- ❋ நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்று பாரதியாரால் பாராட்டப்படும் இந்நூலினை இயற்றியவர் இளங்கோவடிகள்.
- ❋ இந்நூல் தமிழில் தோன்றிய முதல் காப்பியமாகும்.
- ❋ இவர் சேரன் செங்குட்டுவனின் தம்பி ஆவார்.
- ❋ அண்ணனுக்காகப் பதவியை விட்டுக்கொடுத்துத் துறவறம் சென்றவர்.
- ❋ கோவலனோடு கண்ணகி வானுலகம் சென்ற செய்தியைக் குன்றக்குறவர்கள் மலைவளம் காணச்சென்ற செங்குட்டுவனிடம் கூற, அச்செய்தியைச் சாத்தனாரும் விவரித்துக்கூற இளங்கோவடிகள் கேட்டார்.
- ❋ பின் சாத்தனார் வேண்டுகோளுக்கிணங்க **இளங்கோவடிகள்** இக்காப்பியத்தை இயற்றினார்.

### சிலப்பதிகாரத்தின் நூலமைப்பு

- ❖ கி.பி.2-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இந்நூல் **மூன்று காண்டங்களையும் முப்பது** காதைகளையும் கொண்டு அமைந்துள்ளது.

- மங்கல வாழ்த்துப்பாடல் தொடங்கி நாடுகாண் காதை முடிய – **10 காண்டங்கள்** - புகார்க் காண்டம்.
- காடுகாண் காதை தொடங்கி கட்டுரைக் காதை முடிய – **13 காதைகள்** - மதுரைக்காண்டம்.
- குன்றக்குரவை தொடங்கி வரந்தரு காதை முடிய – **7 காதைகள்** – வஞ்சிக்காண்டம்.

இவற்றில் நம்பாடப்பகுதி **அந்திமாலைச் சிறப்புசெய் காதை.**

### காதைச்சுருக்கம்

'மாலைப்பொழுது வந்தது. தென்றல் வீசியது. செவ்வானத்தே இளம்பிறை போன்ற நிலவொளி எங்கும் பரவியது. கணவனைப் பிரியா மகளிர் கூடிக் களித்தனர். பிரிந்தோர் காமத்தீயில் வாடி வதங்கினர்! கோவலனும் மாதவியும் நெடுநிலா முற்றத்திருந்து நிலவுப் பயன் கொண்டனர். அழகுச் செல்வி காற்சிலம்பு ஒலிக்க ஆடினாள்; பாடினாள்; ஊடினாள்; கூடினாள்; கொள்ளை இன்பம் உற்றான் கோவலன்! இதுபோலவே கூடிக் களித்தனர் பிற காதலரும்! ஆனால் கண்ணகியின் காலில் சிலம்பு இல்லை; நெற்றியில் திலகம் இல்லை; கூந்தலில் எண்ணெய் இல்லை; முகத்தில் சிரிப்பு இல்லை. கணவனைப் பிரிந்தோர் கண்ணகி போலவே தனிமைத் துயர் உற்றனர். இவ்வாறு புணர்ந்தோர் இன்புற, பிரிந்தோர் துன்புற மீனக் கொடியுடைய மன்மதன் விடிய விடிய இரவுக்காலம் முழுதும் ஆட்சி செய்தான். மாதவியின் மகிழ்வையும் கண்ணகியின் கவலையையும் முரண்பட்ட இரு ஓவியங்களாகத் தீட்டுகிறது. அந்திமாலைச் சிறப்புச்செய் காதை. பெருங்காவியம் உரிய சிறுபொழுது வழியாகவும் இது அமைகிறது.

# அந்திமாலைச் சிறப்புசெய் காதை

## மாலைப் பொழுதின் வரவு

**கோவலன் இல்லாமல் கண்ணகி வாடுகிறாள்**

**கோவலனுடன் மாதவி மகிழ்ந்திருக்கிறாள்.**

விரி கதிர் பரப்பி, உலகம் முழுது ஆண்ட
ஒரு தனித் திகிரி உரவோன் காணேன்;
அம் கண் வானத்து, அணி நிலா விரிக்கும்
திங்கள் அம் செல்வன் யாண்டு உளன்கொல்?' என,
திசை முகம் பசந்து, செம் மலர்க் கண்கள்
முழு நீர் வார, முழு மெயும் பனித்து,
திரை நீர் ஆடை இரு நில மடந்தை
அரைசு கெடுத்து, அலம்வரும் அல்லல்காலை-
கறை கெழு குடிகள் கை தலை வைப்ப,
அறைபோகு குடிகளொடு ஒரு திறம் பற்றி,
வலம்படு தானை மன்னர் இல்வழி,
புலம்பட இறுத்த விருந்தின் மன்னரின்,
தாழ் துணை துறந்தோர் தனித் துயர் எய்த;
காதலர்ப் புணர்ந்தோர் களி மகிழ்வு எய்த;
குழல் வளர் முல்லையில் கோவலர் தம்மொடு
மழலைத் தும்பி வாய் வைத்து ஊத;
அறுகால் குறும்பு எறிந்து, அரும்பு பொதி வாசம்
சிறுகால் செல்வன் மறுகில் தூற்ற;
எல் வளை மகளிர் மணி விளக்கு எடுப்ப,
மல்லல் மூதூர் மாலை வந்து இறுத்தென –

## நிலா-முற்றத்தில் கோவலனும் மாதவியும் களித்திருத்தல்

இளையர் ஆயினும் பகை அரசு கடியும்,
செரு மாண் தென்னர் குலமுதல் ஆகலின்
அந்தி வானத்து, வெண் பிறை தோன்றி,

புன்கண் மாலைக் குறும்பு எறிந்து ஓட்டி,

பான்மையின் திரியாது பால் கதிர் பரப்பி,

மீன் - அரசு ஆண்ட வெள்ளி விளக்கத்து

இல் வளர் முல்லையொடு மல்லிகை அவிழ்ந்த

பல் பூஞ் சேக்கைப் பள்ளியுள் பொலிந்து,

செந் துகிர்க் கோவை சென்று ஏந்து அல்குல்

அம் துகில் மேகலை அசைந்தன வருந்த

நிலவுப் பயன் கொள்ளும் நெடு நிலா - முற்றத்து -

கலவியும் புலவியும் காதலற்கு அளித்து, ஆங்கு;

ஆர்வ நெஞ்சமொடு கோவலற்கு எதிரி,

கோலம் கொண்ட மாதவி அன்றியும் –

## காதலரைக் கூடிய மகளிரின் களி மகிழ்வு

குட திசை மருங்கின் வெள் அயிர் - தன்னொடும்

குண திசை மருங்கின் கார் அகில் துறந்து;

வடமலைப் பிறந்த வான் கேழ் வட்டத்து,

தென்மலைப் பிறந்த சந்தனம் மறுக;

தாமரைக் கொழு முறி, தாதுபடு செழு மலர்,

காமரு குவளை, கழுநீர் மா மலர்,

பைந் தளிர்ப் படலை; பரூஉக் காழ் ஆரம்;

சுந்தரச் சுண்ணத் துகளொடும் அளைஇச்

சிந்துபு பரிந்த செழும் பூஞ் சேக்கை,

மந்த - மாருதத்து மயங்கினர் மலிந்து, ஆங்கு,

ஆவியங் கொழுநர் அகலத்து ஒடுங்கி,

காவி அம் கண்ணார் களித் துயில் எய்த –

## கணவனைப் பிரிந்து வாழும் கண்ணகியின் துயர நிலை

அம் செஞ் சீறடி அணி சிலம்பு ஒழிய,

மென் துகில் அல்குல் மேகலை நீங்க,

கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்,
மங்கல அணியின் பிறிது அணி மகிழாள்,
கொடுங் குழை துறந்து வடிந்து வீழ் காதினள்,
திங்கள் வாள் முகம் சிறு வியர்ப் பிரிய,
செங் கயல் நெடுங் கண் அஞ்சனம் மறப்ப,
பவள வாள் நுதல் திலகம் இழப்ப,
தவள வாள் நகை கோவலன் இழப்ப,
மை இருங் கூந்தல் நெய் அணி மறப்ப,
கையறு நெஞ்சத்துக் கண்ணகி அன்றியும் -

## காதலனைப்பிரிந்த பெண்களின் நிலை

காதலர்ப் பிரிந்த மாதர் நோதக,
ஊது உலைக் குருகின் உயிர்த்தனர் ஒடுங்கி,
வேனில் பள்ளி மேவாது கழிந்து,
கூதிர்ப் பள்ளிக் குறுங்கண் அடைத்து,
மலயத்து ஆரமும் மணி முத்து ஆரமும்
அலர் முலை ஆகத்து அடையாது வருந்த,
தாழிக் குவளையொடு தண் செங்கழுநீர்
வீழ் பூஞ் சேக்கை மேவாது கழிய,
உடைப் பெரும் கொழுநரோடு ஊடல் காலத்து
இடைக் குமிழ் எறிந்து, கடைக் குழை ஓட்டி,
கலங்கா உள்ளம் கலங்க, கடை சிவந்து
விலங்கி நிமிர் நெடுங் கண் புலம்பு, முத்து உறைப்ப

## காதலனைப்பிரியாத பெண்களின் நிலை

வைகறை வரையில் காமன் திரிதல்
அன்னம் மெல் நடை நல் நீர்ப் பொய்கை
ஆம்பல் நாறும் தேம் பொதி நறு விரைத்
தாமரைச் செவ் வாய், தண் அறல் கூந்தல்;
பாண் வாய் வண்டு நோதிறம் பாட,

காண்வரு குவளைக் கண்மலர் விழிப்ப;
புள் வாய் முரசமொடு, பொறி மயிர் வாரணத்து
முள் வாய்ச் சங்கம் முறை முறை ஆர்ப்ப;
உரவுநீர்ப் பரப்பின் ஊர் துயில் எடுப்பி,
இரவுத் தலைபெயரும் வைகறைகாறும்
அரை இருள் யாமத்தும் பகலும் துஞ்சார்,
விரை மலர் வாளியொடு கருப்பு வில் ஏந்தி,
மகர வெல் கொடி மைந்தன், திரிதர -
நகரம் காவல் நனி சிறந்தது - என்.
கூடினார் பால்நிழலாய் கூடார்பால் வெய்யதாய்க்
காவலன் வெண்குடைபோல் காட்டிற்றே - கூடிய
மாதவிக்கும் கண்ணகிக்கும் வானூர் மதிவிரிந்து
போதவிழ்க்கும் கங்குல் பொழுது.

# அந்திமாலைச் சிறப்புசெய் காதை

## அந்திமாலைச் சிறப்புசெய் காதை

- மாலைக்காலத்து தென்றல் வீசியது. காதலனைக் கூடிய பெண்கள் மகிழ்வோடு இருந்தனர்.
- மாதவியும் கோவலனோடு மகிழ்ச்சியோடு இருந்தாள். காதலனைப் பிரிந்த பெண்கள் வருத்தமுற்றிருந்தனர்.
- அதேபோல் கண்ணகி கோவலனைப் பிரிந்து வருத்தமோடு இருந்தாள்.

## மாலைப் பொழுதின் வரவு

விரிந்த ஒளிக் கதிர்களைப் பரப்பி உலகம் முழுவதையும் ஆண்ட உரவோனாகிய ஞாயிற்றைக் காண முடியவில்லை. நிலவொளி வீசி வானத்தில் உலாவரும் திங்கள்-அம்-செல்வன் எங்கே இருக்கிறானோ? திசையின் முகங்கள் இருள் என்னும் பசப்பு நோயில் வாடுகின்றன. நிலம் என்னும் பெண் தன் கடல்-ஆடையுடன் தன் உடம்பு முழுவதும் நடுங்கிக் கண்ணீர்

வடித்துக்கொண்டிருக்கிறாள். அரசைக் கெடுக்கும் சிலர் பகைவனிடம் நாட்டைக் காட்டிக்கொடுத்து அறைபோனதால் கறை பட்ட குடிமக்கள் கையைத் தலையில் வைத்துக்கொண்டு கவலையோடு இருப்பது போல, காதலனின் துணையைப் பிரிந்தவர் தனிமைத் துயரில் வாடுகின்றனர். வெற்றி வேந்தன் தனக்கு விருந்தாகக் கிடைத்த நாட்டில் மகிழ்வது போலக் காதலனைத் தழுவிக்கொண்டிருப்பவர் களிப்பு மகிழ்வில் திளைக்கின்றனர். முல்லை நிலத்தில் குழல் போல் நீண்ட காம்புடன் பூக்கும் முல்லைப் பூவில் வண்டுகள் வாயை வைத்து ஊதுகின்றன. அதுபோலவே கோவலர் தம் புல்லாங்ககுழலில் வாயை வைத்து ஊதுகின்றனர். சிறு-காற்றாகிய தென்றல் மலர் மணத்தைத் தெருவெங்கும் பரப்பிக்கொண்டிருக்கிறது. ஒளிரும் வளையலுடன் மகளிர் விளக்கை ஏற்றிக்கொண்டிருக்கின்றனர். வளம் மிக்க பழமையான இந்த ஊரில் இப்படி மாலைக்காலம் வந்திருக்கிறது.

### நிலா-முற்றத்தில் கோவலனும் மாதவியும் களித்திருத்தல்

இளையவராக இருந்தாலும் பகை அரசை ஓட்டும் போராற்றல் மிக்கவர்கள் பாண்டிய நாட்டு மக்கள். பாண்டியர்கள் குலத்தின் முதல்வனாகத் திகழ்பவன் திங்கள். அந்தத் திங்கள் அந்தி வானத்தில் பிறைநிலவாகத் தோன்றியிருந்தது. அரசன் போரிட்டுச் சிற்றூர்களை அழிப்பது போலப் பிறைநிலா யாரையும் வருத்தவில்லை. தன் பால் போன்ற கதிர்களைப் பரப்பிக்கொண்டிருந்தது. வானத்து மீன்கள் ஆட்சி செய்துகொண்டிருந்தன. மாதவி இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த விளக்கு வெள்ளிபோல் ஒளியைப் பரப்பிக்கொண்டிருந்தது. அவளது இல்லத்தில் வளர்ந்திருந்த முல்லையும் மல்லிகையும் அவளது படுக்கையில் பரப்பப்பட்டிருந்தது. அந்தப் படுக்கையில் மாதவி இருந்தாள். தன் அல்குல் பகுதியில் பவளமணி மேகலை அசைந்து வருத்திக் கொண்டிருந்தது. நிலா முற்றத்தில் நிலவின் பயனைத் துய்த்துக்கொண்டிருந்தாள். தன் காதலன் கோவனுக்குக் கலவியும் புலவியும்

கலந்து இன்பம் ஊட்டிக்கொண்டிருந்தாள். கோவலனின் ஆர்வ நெஞ்சுக்கு ஏற்றாற்போல ஒப்பனை செய்துகொண்டு அவன் விருப்பப்படி இருந்தாள்.

### காதலரைக் கூடிய மகளிரின் களி மகிழ்வு

புகார் நகரத்து மேற்குப் பக்கம் வெண்மணல். கிழக்குப் பக்கம் கடல் வணிகத்தில் கொண்டுவரப்பட்ட அகில் கட்டைகள். தம் காதலருடன் கூடி வாழ்பவர் உடம்புக்குச் சூடு உண்டாக்கும் அந்த அகில் கட்டையைப் புகைக்கவிலை. தென்மலை எனப் போற்றப்படும் பொதிய மலையில் பிறந்த சந்தனக் கட்டையை, வடமலை எனப் போற்றப்படும் இமய மலையிலிருந்து கொண்டுவரப்பட்ட சந்தனக் கல்லில் தேய்த்து அரைத்தனர். அதனைக் குளுமைக்காகப் பூசிக்கொண்டனர்.

தாமரை மலரின் கொழுந்து, காமம் உண்டாக்கும் குவளை, கழுநீர் ஆகிய மலர்களால் படலை மாலை கட்டி அணிந்துக்கொண்டனர். குளுமை தரும் முத்து-மாலை அணிந்துகொண்டனர். சுண்ணப் பொடிகளை பூசிக்கொண்டனர். அவை படுக்கையில் சிந்திக் கிடந்தன. மெதுவாக வீசிய தென்றலில் மயங்கிக் கிடந்தனர். உயிர் போன்ற கொழுநர் நெஞ்சில் காவி-மலர் போன்ற கண்ணினார் களிப்புடன் துயின்றனர். இவ்வாறு காதலரைக் கூடிய மகளிர் மகிழ்ச்சியோடு இருந்தனர்.

### கணவனைப் பிரிந்து வாழும் கண்ணகியின் துயர நிலை

கோவலனைப் பிரிந்ததால் கண்ணகி தன் கால்களில் சிலம்பு அணிவதை மறந்துவிட்டாள். அல்குல் உறுப்புக்குமேல் உள்ள ஆடையின்மேல் மென்துணி மேகலை அணியவில்லை. கொங்கையில் குங்குமம் எழுதிக்கொள்ளவில்லை. மங்கல அணிகலன் தாலி ஒன்றைத் தவிர வேறு அணிகலன் எதையும் பூணவில்லை. காதில் குழை இல்லாமல் வெறும் துளை மட்டும் இருந்தது. ஒளி திகழும் முகத்தில் வியர்வை வழிந்துகொண்டிருந்தது. கண்களில் மை தீட்டப்படவில்லை. பவள நிற நெற்றியில் பொட்டு இட்டுக்கொள்ளவில்லை. இவளது முத்துப் போன்ற சிரிப்பைக் கோவலன் இழந்துவிட்டான் (இவள் முகத்தில் புன்னகை இல்லை). தலையில் எண்ணெய்த் தேய்த்துக் குளிப்பதை மறந்துவிட்டாள். செய்வதறியாத நெஞ்சத்துடன் கலக்கத்துடன் இருந்தாள் கண்ணகி.

## காதலனைப்பிரிந்த பெண்களின் நிலை

காதலரைப் பிரிந்திருக்கும் மகளிர் மனம் நொந்து காணப்படுவர். கொல்லன் உலைக்களத்தில் காற்று ஊதும் குருகு என்னும் துருத்தி காற்றை ஊதுவதுபோலப் பெருமூச்சு விட்டுக்கொண்டு ஒடுங்கிக் கிடப்பர். வேனில் காலத்தில் உலவும் இருப்பிடங்களுக்குச் செல்லமாட்டார்கள். குளிர் காலத்தில் அடைந்து கிடக்கும் இடங்களில் குறுகிய சன்னல்களையும் அடைத்துக்கொண்டு கிடப்பர். பொதிய மலையில் பிறந்த சந்தனத்தைப் பூசிக்கொள்ள மாட்டார்கள். குளுமை தரும் மணி, முத்து கோத்த ஆரத்தை அணிந்துகொள்ள மாட்டார்கள். தம் மலர்ந்த முலைகளில் அவை படுவதை அவர்கள் விரும்பமாட்டார்கள்.

தாழிச் சட்டியில் அவர்கள் வளர்த்த குவளைப் பூக்களையோ, நீரில் பூத்த குளுமையான செங்கழுநீர்ப் பூக்களையோ அணிந்துகொண்டு தாம் விரும்பி உறங்கும் படுக்கைக்குச் செல்லமாட்டார்கள். தன் துணை அன்னத்தைப் புணரும்போது உதிர்ந்த தூவிகளைத் திணித்துச் செய்யப்பட்ட மெத்தைமேல் படுத்து உறங்கமாட்டார்கள்.

தன் கணவனுடன் சேர்திருந்த காலத்தில் ஊடல் கொள்ளும்போது மூக்குக் குமிழ்களின் ஓரத்தில் விழிகளை நிறுத்திச் சினந்து பார்த்த விழிகள் அவர்களுடைய விழிகள். கலங்காத உள்ளம் படைத்த அந்த விழிகள் காதலன் இல்லாதபோது கலங்கும். கடைக்கண் சிவந்து விரிந்து நிமிர்ந்து புலம்பு கண்ணீர் முத்துக்களுடன் காணப்படுவர். இவ்வாறு காதலனைப்பிரிந்த பெண்களின் நிலை இருந்தது.

## காதலனைப்பிரியாத பெண்களின் நிலை

நல்லநீரினையுடைய பொய்கையிலே அன்னத்திரள்கள் மெல்லிய தளர்நடையினைப் பயிலத்தொடங்கும். ஆம்பல் மலர்ந்து மணம்கமழும். தேனமிகுந்த நறுமணத் தாமரையாகிய சிவந்த வாயினையும் தண்மையான அறல்மணல் ஆகிய கூந்தலினையும் உடையவள் அப்பொய்கையாள். பண்பாடும் வண்டினம் வந்து முரன்று அவளுக்குப் பள்ளி எழுச்சி பாடும். அழகுமிக்க குவளையாகிய கண்மலர்கள் இதழ்விரியும் பறவையின் ஒலியாகிய முரசம் ஒலிக்கும். புள்ளிகள் பொருந்திய மயிர் கொண்ட சேவல் சங்கு போல் காலையில் ஒலிக்கும். இவை ஊரை எழுப்பும். இரவுக்காலம் முடிந்து வைகறைப் பொழுது தோன்றும்.

இப்படி வைகறைப் பொழுது தோன்றும் வரையில் பாதி இரவு வேளையிலும், யாமத்திலும் அவர்கள் உறங்காமல் இன்பம் துய்த்துக்கொண்டிருப்பர். மணக்கும் மலர் அம்புகளையும் கரும்பு வில்லையும் கொண்ட காமன் தன் மகரமீன் கொடியை உயர்த்திக்கொண்டு திரிவான்.

இவ்வாறு காதலனைப் பிரிந்த பெண்ணிடமும், காதனைப் பிரியாத பெண்ணிடமும் இப்படி நகரத்தின் பாதுகாவல் சிறந்திருந்தது.

வானத்தில் மதியம் விரிந்து கால மலரை விரித்துக்கொண்டிருக்கும் இரவுக் காலம் காதலனுடன் கூடி வாழ்பவளுக்கு நிழல் போலவும், காதலனைப் பிரிந்து வாழ்பவளுக்கு வெயில் போலவும் காட்டிற்று. அண்டியவர்க்கும் அண்டாதவர்க்கும் ஆளும் அரசனின் வெண்கொற்றக் குடை போலக் காட்டிற்று.

காதலனைப் பிரிந்திருக்கும் கண்ணகிக்கும், காதலனைக் கூடியிருக்கும் மாதவிக்கும் காட்டிற்று. இவ்வாறு மாலைக்காலமானது இருந்த நிலையினை அழகுற எடுத்துக்காட்டியுள்ளார் இளங்கோவடிகள்.

## அருஞ் சொற்பொருள்

1.ஒரு தனித் திகிரி – ஒப்பற்ற ஒற்றைத் தேராழி

2.கறை – கடமை

3.எல்வளை மகளிர் - ஒளி பொருந்திய வளையையுடைய மகளிர்

4.மல்லல் மூதூர் - வளம் பொருந்திய மூதூர்

5.கேழ் – நிறம்

6.வட்டம் - சந்தனம் உரைக்கும் வட்டக்கல்

7.காமரு குவளை - கண்டார்க்கு விருப்ப முண்டாகும் குவளை மலர்

8.வீழ்தல் – விரும்புதல்

9.நன்னீர்ப் பொய்கை - நல்ல நீரையுடைய பொய்கை

10.புள்வாய் முரசமொடு - பறவைகளின் ஒலியாகிய முரசுடனே

11.பொறிமயிர் வாரணத்து - புள்ளிகள்பொருந்திய சிறகினை யுடைய கோழிச்சேவலும்

# மணிமேகலை - சீத்தலைச்சாத்தனார்

## சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதை

### மணிமேகலை

தமிழில் தோன்றிய இரண்டாவது பெருங்காப்பியம் மணிமேகலை. சிலப்பதிகாரத்தின் இறுதியில் 'மணிமேகலைமேல் உரை பொருள் முற்றிய சிலப்பதிகாரம் முற்றும்' எனக் கூறப்படுவதால் சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாகவே இந்நூல் அமைந்திருப்பதை உணரலாம். இதன் ஆசிரியர் சீத்தலைச்சாத்தனார். இவரது தோழரான இளங்கோவடிகள் இவரைத் **தண்டமிழாசான்** என்று பாராட்டியுரைப்பார். இந்நூலின் காலம் இரண்டாம் நூற்றாண்டே ஆகும். இது ஒரு **பௌத்தசமயக் காப்பியம்.** இதிலும் சிலப்பதிகாரம் போன்று 30 காதைகள் இடம் பெற்றுள்ளன. இக்காப்பியம் **விழாவறைக்காதை** முதல் **பவத்திறம் அறுகெனப்பாவை நோற்ற காதை** வரை 30 காதைகளைப் பெற்று விளங்குகின்றது. இது **மணிமேகலைத்துறவு** என்றும் அழைக்கப்படுகிறது.

### நூலின் சிறப்பு

தமிழில் தோன்றிய முதற்சமயக்காப்பியம் கதைத்தலைவியின் பெயரால் பெயர் பெற்ற முதற்காப்பியம். பரத்தைத் தொழிலில் ஈடுபட்டிருந்த சித்ராபதியின் மகள் மாதவிக்குப் பிறந்த மணிமேகலை காவியத்தலைவியாக உயர்வு பெறுகிறாள். பரத்தைக்குலத்தில் பிறந்தவளாயினும் பத்தினியின் மகளாகவே உயர்த்தப்படுகிறாள். கணிகையர்குலத்து மாதவியின் மகளான மணிமேகலை இளமையிலேயே துறவு பூண்டதைக் கூறுவதால் 'மணிமேகலைத்துறவு' என்றும், பரத்தமை ஒழிப்பு, மதுஒழிப்பு, சிறைஒழிப்பு, சாதிஒழிப்பு, கொலை களவு ஒழிப்பு முதலான பலசமுதாயச் சீர்த்திருத்தங்களை பேசுவதால் சீர்த்திருத்தக்காப்பியம் என்றும் மேலும் முதல் சமயக்காப்பியம், அறக்காப்பியம், குறிக்கோள் இலக்கியம், புரட்சிக்காப்பியம், பசிப்பிணி, மருத்துவக்காப்பியம், பசுபோற்றும்காப்பியம் எனப் பல சிறப்புகளைப் பெற்று விளங்குகிறது.

இவற்றில் நம்முடைய பாடப்பகுதியாக சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதை குறித்து இங்கு காண்போம்.

# சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதை

## சம்பாபதி கூற்று

முதியாள் திருந்து அடி மும்மையின் வணங்கி
மதுமலர்த் தாரோன் வஞ்சினம் கூற
ஏடுஅவிழ் தாரோய் எம்கோ மகள்முன்
நாடாது துணிந்து நா நல்கூர்ந் தனையென
வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரம் ஒன்று தெய்வம் கூறலும்,
உதய குமரன் உள்ளம் கலங்கிப்
பொதியறைப் பட்டோர் போன்றுமெய் வருந்தி

அங்குஅவள் தன்திறம் அயர்ப்பாய் என்றே
செங்கோல் காட்டிய தெய்வமும் திப்பியம்
பைஅரவு அல்குல் பலர்பசி களையக்
கையில் ஏந்திய பாத்திரம் திப்பியம்
முத்தை முதல்வி அடிபிழைத் தாய்எனச்
சித்திரம் உரைத்த இதூஉம் திப்பியம்
இந்நிலை எல்லாம் இளங்கொடி செய்தியின்
பின்அறி வாம்எனப் பெயர்வோன் தன்னை
அகல்வாய் ஞாலம் ஆர்இருள் உண்ணப்
பகல்அரசு ஓட்டிப் பணைஎழுந்து ஆர்ப்ப

மாலை நெற்றி வான்பிறைக் கோட்டு
நீல யானை மேலோர் இன்றிக்
காமர் செங்கை நீட்டி வண்டுபடு
பூநாறு கடாஅம் செருக்கிக் கால்கிளர்ந்து
நிறைஅழி தோற்றமொடு தொடர முறைமையின்

நகர நம்பியர் வளையோர் தம்முடன்
மகர வீணையின் கிளைநரம்பு வடித்த
இளிபுணர் இன்சீர் எஃகுஉளம் கிழிப்பப்
பொறாஅ நெஞ்சில் புகைஎரி பொத்திப்

பறாஅக் குருகின் உயிர்த்துஅவன் போயபின்,

உறையுள் குடிகை உள்வரிக் கொண்ட
மறுஇல் செய்கை மணிமே கலைதான்
மாதவி மகளாய் மன்றம் திரிதரின்
காவலன் மகனோ கைவிட லீயான்
காய்பசி யாட்டி காயசண் டிகைஎன
ஊர்முழுது அறியும் உருவம் கொண்டே
ஆற்றா மாக்கட்கு ஆற்றும் துணையாகி

ஏற்றலும் இடுதலும் இரப்போர் கடன்அவர்
மேற்சென்று அளித்தல் விழுத்தகைத்து என்றே
நூற்பொருள் உணர்ந்தோர் நுனித்தன ராம்என
முதியாள் கோட்டத்து அகவயின் இருந்த
அமுத சுரபியை அங்கையின் வாங்கிப்
பதிஅகம் திரிதரும் பைந்தொடி நங்கை

அதிர்கழல் வேந்தன் அடிபிழைத் தாரை
ஒறுக்கும் தண்டத்து உறுசிறைக் கோட்டம்
விருப்பொடும் புகுந்து வெய்துஉயிர்த்துப் புலம்பி
ஆங்குப் பசிஉறும் ஆர்உயிர் மாக்களை
வாங்கு கையகம் வருந்தநின்று ஊட்டலும்,

ஊட்டிய பாத்திரம் ஒன்றுஎன வியந்து
கோட்டம் காவலர் கோமகன் தனக்குஇப்
பாத்திர தானமும் பைந்தொடி செய்தியும்
யாப்புடைத் தாக இசைத்தும்என்று ஏகி,

நெடியோன் குறள்உரு வாகி நிமிர்ந்துதன்
அடியின் படியை அடக்கிய அந்நாள்
நீரின் பெய்த மூரி வார்சிலை
மாவலி மருமான் சீர்கெழு திருமகள்

சீர்த்தி என்னும் திருத்தகு தேவியொடு
போதுஅவிழ் பூம்பொழில் புகுந்தனன் புக்குக்

கொம்பர்த் தும்பி குழலிசை காட்டப்
பொங்கர் வண்டினம் நல்லியாழ் செய்ய
வரிக்குயில் பாட மாமயில் ஆடும்
விரைப்பூம் பந்தர் கண்டுஉளம் சிறந்தும்,

புணர்துணை நீங்கிய பொய்கை அன்னமொடு
மடமயில் பேடையும் தோகையும் கூடி
இருசிறை விரித்துஆங்கு எழுந்துடன் கொட்பன
ஒருசிறைக் கண்டுஆங்கு உள்மகிழ்வு எய்தி
மாமணி வண்ணனும் தம்முனும் பிஞ்ஞையும்
ஆடிய குரவைஇஃது ஆம்என நோக்கியும்,

கோங்குஅலர் சேர்ந்த மாங்கனி தன்னைப்
பாங்குஉற இருந்த பல்பொறி மஞ்ஞையைச்
செம்பொன் தட்டில் தீம்பால் ஏந்திப்
பைங்கிளி ஊட்டும்ஓர் பாவையாம் என்றும்,
அணிமலர்ப் பூம்பொழில் அகவயின் இருந்த
பிணவுக்குரங்கு ஏற்றிப் பெருமதர் மழைக்கண்
மடவோர்க்கு இயற்றிய மாமணி ஊசல்
கடுவன் ஊக்குவது கண்டுநகை எய்தியும்,

பாசிலை செறிந்த பசுங்கால் கழையொடு
வால்வீச் செறிந்த மராஅம் கண்டு
நெடியோன் முன்னொடு நின்றன னாம்எனத்
தொடிசேர் செங்கையில் தொழுதுநின்று ஏத்தியும்
ஆடல் கூத்தினோடு அவிநயம் தெரிவோர்
நாடகக் காப்பிய நல்நூல் நுனிப்போர்
பண்ணியாழ் நரம்பில் பண்ணுமுறை நிறுப்போர்
தண்ணுமைக் கருவிக் கண்எறி தெரிவோர்
குழலொடு கண்டம் கொளச்சீர் நிறுப்போர்

பழுநிய பாடல் பலரொடு மகிழ்வோர்
ஆரம் பரிந்த முத்தம் கோப்போர்
ஈரம் புலர்ந்த சாந்தம் திமிர்வோர்
குங்கும வருணம் கொங்கையின் இழைப்போர்
அஞ்செங் கழுநீர் ஆய்இதழ் பிணிப்போர்
நல்நெடுங் கூந்தல் நறுவிரை குடைவோர்
பொன்னின் ஆடியின் பொருந்துபு நிற்போர்
ஆங்குஅவர் தம்மோடு அகல்இரு வானத்து
வேந்தனிற் சென்று விளையாட்டு அயர்ந்து,

குருந்தும் தளவும் திருந்துமலர்ச் செருந்தியும்
முருகுவிரி முல்லையும் கருவிளம் பொங்கரும்
பொருந்துபு நின்று திருந்துநகை செய்து
குறுங்கால் நகுலமும் நெடுஞ்செவி முயலும்
பிறழ்ந்துபாய் மானும் இறும்புஅகலா வெறியும்
வம்மெனக் கூஉய் மகிழ்துணை யொடுதன்
செம்மலர்ச் செங்கை காட்டுபு நின்று

மன்னவன் தானும் மலர்க்கணை மைந்தனும்
இன்இள வேனிலும் இளங்கால் செல்வனும்
எந்திரக் கிணறும் இடுங்கல் குன்றமும்
வந்துவீழ் அருவியும் மலர்ப்பூம் பந்தரும்
பரப்புநீர்ப் பொய்கையும் கரப்புநீர்க் கேணியும்
ஒளித்துறை இடங்களும் பளிக்குஅறைப் பள்ளியும்
யாங்கணும் திரிந்து தாழ்ந்துவிளை யாடி,
மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்

தண்தமிழ் வினைஞர் தம்மொடு கூடிக்
கொண்டுஇனிது இயற்றிய கண்கவர் செய்வினைப்
பவளத் திரள்கால் பன்மணிப் போதிகைத்
தவள நித்திலத் தாமம் தாழ்ந்த
கோணச் சந்தி மாண்வினை விதானத்துத்

தமனியம் வேய்ந்த வகைபெறு வனப்பின்
பைஞ்சேறு மெழுகாப் பசும்பொன் மண்டபத்து
இந்திர திருவன் சென்றுஇனிது ஏறலும்,
வாயிலுக்கு இசைத்து மன்னவன் அருளால்
சேய்நிலத்து அன்றியும் செவ்விதின் வணங்கி

எஞ்சா மண்நசைஇ இகல்உளம் துரப்ப
வஞ்சியின் இருந்து வஞ்சி சூடி
முறம்செவி யானையும் தேரும் மாவும்
மறம்கெழு நெடுவாள் வயவரும் மிடைந்த
தலைத்தார்ச் சேனையொடு மலைத்துத்தலை வந்தோர்

சிலைக்கயல் நெடுங்கொடி செருவேல் தடக்கை
ஆர்புனை தெரியல் இளங்கோன் தன்னால்
காரியாற்றுக் கொண்ட காவல் வெண்குடை
வலிகெழு தடக்கை மாவண் கிள்ளி
ஒளியொடு வாழி ஊழிதோறு ஊழி

வாழி எம்கோ மன்னவர் பெருந்தகை
கேள்இது மன்னோ கெடுகநின் பகைஞர்
யானைத் தீநோய்க்கு அயர்ந்துமெய் வாடிஇம்
மாநகர்த் திரியும்ஓர் வம்ப மாதர்
அருஞ்சிறைக் கோட்டத்து அகவயின் புகுந்து

பெரும்பெயர் மன்ன நின்பெயர் வாழ்த்தி
ஐயப் பாத்திரம் ஒன்றுகொண்டு ஆங்கு
மொய்கொள் மாக்கள் மொசிக்கஊண் சுரந்தனள்
ஊழிதோறு ஊழி உலகம் காத்து
வாழி எம்கோ மன்னவ என்றலும்,

வருக வருக மடக்கொடி தான்என்று
அருள்புரி நெஞ்சமொடு அரசன் கூறலின்
வாயி லாளரின் மடக்கொடி தான்சென்று

ஆய்கழல் வேந்தன் அருள்வா ழியளனத்
தாங்குஅருந் தன்மைத் தவத்தோய் நீயார்

யாங்கா கியதுஇவ் ஏந்திய கடிஞைஎன்று
அரசன் கூறலும், ஆயிழை யுரைக்கும்
விரைத்தார் வேந்தே நீநீடு வாழி
விஞ்சை மகள்யான் விழவுஅணி மூதூர்
வஞ்சம் திரிந்தேன் வாழிய பெருந்தகை

வானம் வாய்க்க மண்வளம் பெருகுக
தீதுஇன் றாக கோமகற்கு ஈங்குஈது
ஐயக் கடிஞை அம்பலம் மருங்குஓர்
தெய்வம் தந்தது திப்பிய மாயது
யானைத் தீநோய் அரும்பசி கெடுத்தது
ஊன்உடை மாக்கட்கு உயிர்மருந்து இதுஎன,
யான்செயற் பாலதுஎன் இளங்கொடிக்கு என்று

வேந்தன் கூற மெல்இயல் உரைக்கும்
சிறையோர் கோட்டம் சீத்துஅருள் நெஞ்சத்து
அறவோர்க்கு ஆக்கும் அதுவா ழியர்என,
அருஞ்சிறை விட்டுஆங்கு ஆயிழை உரைத்த
பெருந்தவர் தம்மால் பெரும்பொருள் எய்தக்
கறையோர் இல்லாச் சிறையோர் கோட்டம்
அறவோர்க்கு ஆக்கினன் அரசுஆள் வேந்துஎன்.

# சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதை

## சம்பாபதி கூற்று

தேவதைகளில் முதியவளாகிய சம்பாபதி தெய்வத்தை மூன்று முறை வணங்கி மணிமேகலையைத் தனக்குத் தரும்படி பாடுகிடந்தான் உதயகுமாரன். அப்போது சம்பாபதி தெய்வம் அவனுக்குக் கூறிற்று. 'பூ மாலை அணிந்தவனே! மணிமேகலை என் கோமகள். எண்ணிப் பார்க்காமல் அவளை அடையத் துணிந்து வாடுகிறாய். அவள் கலை வல்லான் ஒருவன் இயற்றிய சித்திரம் போன்ற ஒப்பற்ற தெய்வம் என்பதைத் தெரிந்துகொள்' என்றது. அதனைக் கேட்ட உதயகுமாரன் ஒருவாறு தெளிவு பெற்றான்.

## உதயகுமாரன் திரும்பிவிட்டான்

சம்பாபதி தெய்வத்தின் வாக்கைக் கேட்ட உதயகுமாரன் புழுக்கறையில் அடைக்கப்பட்டவன் போலத் துன்புற்றான். இவளைப் பற்றித் தெய்வம் கூறிச் செங்கோலுக்கு வழி காட்டிய தெய்வவாக்கு ஆச்சரியமாக உள்ளது. இந்த அழகி பலருடைய பசியைப் போக்கக் கையில் வைத்திருக்கும் பாத்திரம் ஆச்சரியமாக உள்ளது. இவளுக்குத் துன்பம் செய்கிறாய் என்று கந்திற்பாவை சொன்னதும் ஆச்சரியமாக உள்ளது. இவற்றை எல்லாம் பின்னர் அறிந்துகொள்ளலாம் என்று எண்ணிக்கொண்டு உதயகுமாரன் திரும்பிவிட்டான்.

## காயசண்டிகை உருவம் ஏற்றல்

உதயகுமாரன் திரும்பும்போது இருள் கௌவியது. பகல் என்னும் அரசனை ஓட்டிவிட்டு, மாலைக் காலமாகிய யானை தன் பிறைநிலாக் கொம்பைக் காட்டிக்கொண்டு, யானையை நடத்தும் பாகன் இல்லாமல், தன் கைகளை நீட்டி, அதன் மதநீரைப் பருகுவதுபோல வண்டுகள் சூழ்ந்து வர, நிறைவுடைமை இல்லாமல் மாலைக்காலம் வந்தது. நிறை அழிந்த உதயகுமாரன் போல வந்தது.

நகரத்தில் உள்ள நம்பியர் வளையலணிந்த மகளிருடன் மகர வீணையின் நரம்பு பேசுவதுபோல உரையாடிக்கொண்டிப்பதைக் கண்ட உதயகுமாரன் பொறாமை

கொண்ட தன் நெஞ்சம் கொல்லன் துருத்தி போலப் பெருமூச்சுவிடத் திரும்பிச் சென்றுகொண்டிருந்தான்.

மணிமேகலை தன் உருவத்தைச் சம்பாபதி குடிகை (குகை) கோயிலில் மாற்றிக்கொண்டாள். மாதவி மகள் உருவத்தில் இருந்தால் உதயகுமாரன் விட்டுவைக்க மாட்டான் என்று எண்ணினாள். தீராப் பசியோடு திரிந்த காயசண்டிகையை ஊர் முழுவதும் அறிந்திருந்தது. அவளது உருவத்தைத் தாங்கிக்கொண்டு உணவில்லா மக்களுக்கு உணவு வழங்கிவந்தாள்.

## மணிமேகலை உணவு வழங்குதல்

பிச்சை வாங்குதலும் வாங்கிய பிச்சையைப் பகிர்தளித்தலும் பிச்சை எடுப்போரின் விழுமிய கடமை என்று நூல் வல்லோர் கூறியுள்ளனர் என்பதை மணிமேகலை நினைத்துப் பார்த்தாள். எனவே சம்பாபதி கோட்டத்தில் வைத்திருந்த தன் அமுதசுரபியைக் கையில் எடுத்துக்கொண்டாள். ஊர் முழுவதும் திரிந்து உணவு வாங்கினாள். வேந்தன் தன் ஆணைக்கு அடங்காதவரைச் சிறையில் வைத்திருந்தான். அங்குச் சென்றாள். அவர்களின் பசியைப் போக்கினாள். உணவு வாங்கும் சிறைக் கைதிகளின் கைகள் வாங்கி வாங்கி வருந்தும் அளவுக்கு உணவு வழங்கினாள்.

## காவலர் செயல்

ஒரு பாத்திரத்தை வைத்துக்கொண்டு அத்தனைப் பேருக்கும் உணவு வழங்குகின்ற ஒருத்தி என்னும் வியப்புக்கு உரிய செய்தியை மன்னனுக்குத் தெரிவிப்போம் என்று சிறைக்கோட்டக் காவலாளிகள் சென்று, மன்னனுக்குத் தெரிவித்தனர்.

## மாவலி வேந்தன் மகள் சீர்த்தி

நெடியோனாகிய திருமால் குள்ள உருவம் கொண்டவனாக, பாணர் மன்னன் மாபலியிடம் சென்று அவனிடம் மூன்று கால் தப்படி அளவு நிலம் தானமாகப் பெற்று, அவன் ஆண்ட மூன்று உலகங்களையும் இரண்டு தப்படிகளால் அளந்துவிட்டு, மூன்றாம் தப்படியாக மாபலி மன்னனின் தலையில் காலை வைத்து அளந்து அவனைக்

கொன்றான். அதன் பின்னர் மாவலி மன்னனின் மகள் சீர்த்தி என்பாளுடன் சேர்ந்துகொண்டு அங்கிருந்த பொழிலுக்குச் சென்றான்.

அப்போது நாட்டை ஆண்ட சோழன் மாவண்கிள்ளி மலர்ப் பூங்காவில் மகிழ்ந்திருந்தான். மலர்க்கொம்புகளில் தும்பி இன வண்டுகள் புல்லாங்குழல் போல இசை பாடிக்கொண்டிருந்தன. குயில்கள் பாட மயில்கள் ஆடிக்கொண்டிருந்தன. அவன் பூப்பந்தலில் அமர்ந்து உள்ளக் களிப்போடு இருந்தான். தன் துணையைவிட்டு நீங்கிய அன்னம் ஒன்று அங்கிருந்த பெண்மயிலோடு கூடி ஒன்றை ஒன்று சுற்றி வந்துகொண்டிருந்தது. இது மணிவண்ணன் கண்ணன், அவன் அண்ணன் பலராமன், பிஞ்ஞை (நப்பின்னை) ஆகியோர் ஆடும் குரவைக் கூத்துபோல் அவனுக்குத் தோன்றியது.

கோங்கம் பூ, மாம்பழம், மயில் ஆகியவை அருகருகில் இருந்ததைப் பார்த்து பெண்ஒருத்தி பொன்தட்டில் பாலை வைத்துக்கொண்டு கிளிக்கு ஊட்டுவதுபோல் அவனுக்குத் தோன்றியது. மகளிர் ஆடும் ஊஞ்சலில் தன் பெண் குரங்கை ஏற்றிவிட்டு ஆண் குரங்கு ஆட்டிவிடுவதைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தான். பசுமையான இலைகளுடன் மராமரம் நிற்பதைப் பார்த்து நெடியோனாகிய திருமால் நிற்கின்றான் என்று எண்ணித் தொழுதான்.

### மக்களுடன் மன்னன்

அங்கு இருந்த மக்கள் மன்னனிடம் சென்று அவனுடன் சேர்ந்து விளையாடினர். ஆடும் கூத்தியர், அவிநயம் காட்டுபவர், நாடகநூல் அறிந்தவர்கள், யாழ் இசைப்போர், தண்ணுமை முழக்குவோர், குழல் ஊதுவோர், வாய்பாட்டுப் பாடுவோர் முதலான இசைவாணர்கள் மன்னனை மகிழ்வித்துக்கொண்டிருந்தனர்.

மேலும் சிலர் ஆரத்தில் அறுந்துபோன முத்துக்களைக் கோத்துக்கொண்டிருந்தனர். சிலர் மார்பில் சந்தனம் பூசிக்கொண்டிருந்தனர். சிலர் கொங்கையில் குங்குமம் பூசிக்கொண்டிருந்தனர். சிலர் கழுநீர்ப் பூ மாலை தொடுத்துக்கொண்டிருந்தனர். சிலர் தம் கூந்தலுக்கு மணம் ஊட்டிக்கொண்டிருந்தனர். சிலர் கண்ணாடி முன்னர் நின்றுகொண்டு தன்னைத் திருமகள் போல அழகுபடுத்திக்கொண்டிருந்தனர். இவர்கள் வேந்தனுடன் சேர்ந்து விளையாடினர்.

## மன்னன் விளையாட்டு

குருந்து, செம்முல்லை, செருந்தி, முல்லை, கருவிளம், பொங்கர் முதலான மலர்கள் சிரித்துக்கொண்டிருந்தன. கீரிப்பிள்ளை, முயல், மான், வெறி ஆகிய விலங்குகள் தம் துணையை அழைத்து விளையாடிக்கொண்டிருந்தன. அரசன் மாவண்கிள்ளி இவற்றைக் கைகாட்டி அழைத்து விளையாடிக்கொண்டிருந்தான்.

மன்னனோடு சேர்ந்து காமன் விளையாடிக்கொண்டிருந்தான். வேனில் காலத்தென்றல் வீசியது. தண்ணீர் ஊற்றும் எந்திரக் கிணறு, கல் அடுக்கிய குன்றம், அதிலிருந்து வந்துவிழும் அருவி, பூத்துக்குலுங்கும் பந்தல், நீர் பரவி நிற்கு பொய்கை, நீர் மறைந்திருக்கும் கேணி, ஒளிந்து விளையாடும் இடங்கள், பளிங்குக் கல்லால் ஆன அறைகள் முதலான இடங்களில் மன்னன் விளையாடினான்.

## மணிமண்டபம்

மகதநாட்டுத் தொழில்நுட்பக்காரர்கள், மராட்டிய நாட்டுக் கலைஞர்கள், அவந்தி நாட்டுக் கொல்லர், யவன நாட்டுத் தச்சர் ஆகியோர் தமிழ் நாட்டுத் தொழில் நுட்பக்காரரோடு சேர்ந்து உருவாக்கிய மண்டபத்தில் மாவண் கிள்ளி இருந்தான். அந்த மண்டபம் பவளத்தாலான தூண்களைக் கொண்டிருந்தது. தூண் நின்ற திண்ணையில் முத்து மாலைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. கோணம் பொருந்தும் சந்தியில் விதானம் என்னும் மேல்கட்டி அமைக்கப்பட்டிருந்தது. மேல்கட்டி விரிப்பு பொன்னால் செய்யப்பட்டிருந்தது. அதில் சோழன் மாவண்கிள்ளி இந்திரன்போல ஏறி அமர்ந்தான். இவ்வாறு சோழன் மணிமண்டபம் அமைக்கப்பட்டிருந்தது.

## காரியாற்றில் வென்ற மாவண்கிள்ளி

மணிமண்டபத்தில் இருந்த மாவண்கிள்ளியிடம் சிறைக்கோட்டத்திலிருந்து வந்த காவலர் தெரிவித்தனர். அவர்கள் மணிமண்டப வாயில் காவலனிடம் சொல்லி ஒப்புதல் பெற்று உள்ளே சென்றர். தொலைவில் நின்று மன்னனை வணங்கி வாழ்த்தினர். மன்னனின் வெற்றிகளை எடுத்துரைத்தனர். மன்னன் இளங்கோவை யானை, தேர், குதிரை, மறவர் படைகளுடன் அனுப்பி, 'காரியாறு என்னுமிடத்தில் நடந்த போரில் சேரனையும் பாண்டியனையும் வென்றான். தன் வெண்கொற்றக் குடையை விரித்து வீற்றிருந்தான். காரியாற்றில் வெண்குடை விரித்த வேந்தே!' என்று காவலர்

விளித்தனர். 'நீ உன் புகழுடன் நீடூழி வாழவேண்டும்' என வாழ்த்தினர். 'இந்தச் செய்தியைக் கேள்' என்று கூறினர். 'மன்ன! நின் பகைவர் கெடுக' என மீண்டும் வாழ்த்தினர்.

'யானைத்தீ பசி நோயால் வாடி இந்த மாநகரில் திரியும் ஒரு புதுமைப் பெண் (காயசண்டிகை) நம் சிறைச்சாலைக்குள் புகுந்து உன் பெயரைச் சொல்லி வாழ்த்திக்கொண்டு தன் கையில் இருக்கும் ஒரே பாத்திரத்தில் உள்ள சோற்றைக் கொண்டு அனைத்துச் சிறைக்கைதிகளின் பசியையும் போக்கிக்கொண்டிருக்கிறாள்' என்றனர்.

## மணிமேகலை மன்னனை வாழ்த்தல்

"வருக வருக" என்று அரசன் மணிமேகலையை அருள்புரியும் நெஞ்சோடு வரவேற்றான். வாயிலாளர் மணிமேகலையை மன்னனிடம் அழைத்துச் சென்றனர். "ஆய் கழல் மன்னன் அருள் வாழிய" என மணிமேகலை மன்னனை வாழ்த்திக்கொண்டே சென்றாள். "பிறர் தாங்கமுடியாத தவநெறியை மேற்கொண்டிருப்பவளே! நீ யார்? உன் கையில் இருக்கும் பாத்திரம் எப்படி வந்தது" என்று அரசன் கேட்டான். மணிமேகலை விளக்கலானாள்.

## மன்னன் மணிமேகலையை வரவேற்றல்

காயசண்டிகை உருவில் இருக்கும் மணிமேகலை கூறலானாள். 'மணக்கும் மாலை அணிந்த வேந்தனே! நீடூழி வாழ்வாயாக!. நான் விஞ்சையன் ஒருவனின் மகள். விழாக்கோலம் பூண்டிருக்கும் உன் மூதூரில் ஏதோ திரிந்துகொண்டிருக்கிறேன். பெருந்தகைமை பூண்ட தாங்கள் வாழ வேண்டும். நாட்டில் நல்ல மழை பொழிய வேண்டும். மண் வளம் பெருக வேண்டும். அரசன் தீங்கின்றி வாழவேண்டும். இந்தத் தெய்வத்தன்மை உள்ள பாத்திரத்தை தெய்வம் எனக்குத் தந்தது. வியப்புக்கு உரிய இந்தப் பாத்திரம் என் "யானைத்தீ" என்னும் தீரா வயிற்றுப் பசியைப் போக்கியது.' என்று கூறினாள். 'நான் செய்யவேண்டிய பணியை இந்த இளம்பெண் செய்கிறாள்' என்று மன்னன் அவளைப் பாராட்டினான். 'சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றுங்கள். அறம் செய்வோரக்கு அது உதவட்டும். அறம் தழைக்கட்டும்' என்று மன்னன் ஆணையிட்டான்.

### சிறைச்சாலை அறச்சாலையாக மாற்றம்

அரசன் சிறையிலிருந்தவர்களை விடுதலை செய்தான். 'இந்தப் பெண் சொல்லும் அறிவுரையால் சிறையிலிருந்தவர்கள் கறை இல்லா மனத்தவர் ஆகட்டும். சிறைச்சாலை அறச்சாலையாக மாறட்டும்' என்று ஆணையிட்டான்.

'மன்னா! வறுமைதான் ஒரு மனிதனைத் திருடுவதற்குத் தூண்டுகிறது. பசியைப்போலக் கொடிய பகைவன் மனிதனுக்கு வேறு எதுவும் கிடையாது. அத்தகைய பசியை அகற்றிவிட்டால் அவனுடைய அடிப்படையான தேவைகள் அகன்றுவிடும். பிறகு அவன் மனம் தீயசிந்தனையில் மூழ்காது.

உண்மைதான் பெண்ணே. மக்களை நல்வழிப்படுத்துவதுதான் ஒரு மன்னவனின் தலையாய கடமை. நல்ல ஆலோசனைகளுக்கு இந்த மாவண்கிள்ளி என்றுமே மறுப்பு தெரிவிக்க மாட்டான் பெண்ணே. துணிந்து கூறு!' என்றான்.

'மன்னா? எனவே இப்போதுள்ள இந்தப் பெரிய சிறைக்கோட்டத்தை இடித்துத் தள்ளிவிட்டு, ஒரு மிகப்பெரிய அறக்கோட்டத்தைக் கட்டுங்கள்!' என்றாள் மணிமேகலை.

மன்னன் மெய்சிலிர்த்து நின்றான். அன்றிலிருந்து அதற்கான திட்டமிடல் தொடங்கியது. மணிமேகலையின் பங்கு அதில் முக்கியமாக இருந்தது. சிறைக்குற்றவாளிகளுக்கு உரிய அதிகாரிகள், பணியாளர்களின் உதவியுடன் அமுதசுரபிகொண்டு மூன்று வேளையும் வயிறார உணவளிக்க ஏற்பாடானது. பசியின் கொடுமைகுறித்தும் அதனால் எழும் குற்றங்கள்குறித்தும் கூறப்பட்டது. பசி என்பது மறைந்தால் தாங்கள் குற்றம் செய்யப்போவதில்லை என்று சிறைக்கைதிகள் உறுதிமொழி அளித்தனர். புதியதாக அறக்கோட்டம் எழும்வரையில் சிறையில் உள்ள கைதிகள் அனைவருக்கும் உலகஅறவியில் அமுதசுரபிமூலம் உணவிற்கு ஏற்பாடானது. சிறைக்கோட்டம் முற்றிலும் தரைமட்டமாக்கப்பட்டு, அந்த இடத்தில் மிகப்பிரமாண்டமான அறக்கோட்டம் ஒன்று எழுந்தது.

இவ்வாறு மணிமேகலையில் சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக மாறியதை சீத்தலைச்சாத்தனார் எடுத்துக்காட்டியுள்ளார்.

## அருஞ் சொற்பொருள்

1.வித்தகர்-சிற்பம் வல்லோர்

2.தெய்வம்-மணிமேகலா தெய்வம்

3.பகல் அரசு ஓட்டி - கதிரவனாகிய அரசனை ஓட்டி

4.நீலயானை- கரிய நிறமுடைய இரவாகிய யானை

5.கோமகன் தனக்கு – அரசனுக்கு

6.குறள் - குறிய வடிவமுடைய வாமனன்

7.வரி – கீற்று

8.வம்பு – புதுமை

9.திப்பியமாயது - தெய்வத்தன்மை யுடையது

10.பெரும் பொருள் – அறம், ஞானமுமாம்

11.கறையோர் - கடமை

# அலகு – 1

## தொகுப்புரை

மேற்கண்ட பாடப்பகுதியில் இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்தில் அந்திமாலை சிறப்புச்செய்காதையில் மாலைகாலத்து வர்ணனை நிலாமுற்றத்தில் கோவலனோடு கூடியிருக்கின்ற மாதவியின் நிலை கணவனை சேர்ந்திருக்கும் பெண்களின் இன்பமான நிலை கணவனைப்பிரிந்திருக்கும் கண்ணகியின் நிலை மேலும் காதலனைப்பிரிந்திருக்கும் பெண்களின் நிலை என்று மாலைக்காலமானது கணவனை கூடியிருப்பவருக்கு நிலவின் குளிர்ந்த ஒளிபோலவும் காதலனைப்பிரிந்த பெண்களுக்கு வெயிலின் வெம்மைப்போலவும் உள்ளதாக இளங்கோவடிகள் வருணித்துள்ளார்.

சமயக்காப்பியம் என்று போற்றப்படும் மணிமேகலையில் மணிமேகலை சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய நிகழ்வினை எடுத்துக்கூறியுள்ளார் சீத்தலைச்சாத்தனார். மணிமேகலை காயசண்டிகை உருவம் ஏற்று உணவு வழங்குதல் அதனைக்கண்ட காவலர்கள் மன்னிடம் சென்று காயசண்டிகை என்னும் பெண் ஒரேயொரு பாத்திரம் வைத்துக்கொண்டு சிறையிலுள்ள அனைவரின் பசியையும் போக்கிக் கொண்டிருக்கிறாள் என்று கூறினர். அதன்பின் மன்னன் மணிமேகலையை அழைத்து பாத்திரத்தின் தன்மையை அறிந்து கொண்டான் மணிமேகலையின் விருப்பத்திற்கிணங்க சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றியமைத்தான் என்பதைச் சீத்தலைச்சாத்தனார் எடுத்துக்காட்டியுள்ளார்.

# அலகு – 1

## வினாக்கள்

## பகுதி – அ

### ஒருமதிப்பெண் வினாக்கள்

1. சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் யார்?

அ) இளங்கோவடிகள் ஆ) சீத்தலைச்சாத்தனார் இ) திருத்தக்கதேவர்

ஈ) நாதகுத்தனார் **விடை: அ) இளங்கோவடிகள்**

2.சிலப்பதிகாரத்தில் உள்ள "அந்திமாலை சிறப்புசெய் காதை" இடம்பெற்றுள்ள காண்டத்தின் பெயர் என்ன?

அ) புகார்க்காண்டம் ஆ) வஞ்சிக்காண்டம் இ) மதுரைக்காண்டம்

ஈ) சுந்தரக்காண்டம் **விடை: அ) புகார்க்காண்டம்**

3. ஒண்டொடி மாதர்க்கு உற்றதையெல்லாம் எடுத்தியம்பி 'முடிகெழு வேந்தர் மூவர்க்குமுரியது அடிகள் நீரே அருளுக' என்று கூறியவர் யார்?

அ) சேரன் செங்குட்டுவன் ஆ) சீத்தலைச்சாத்தனார் இ) திருத்தக்கதேவர்

ஈ)நாதகுத்தனார் **விடை:ஆ) சீத்தலைச்சாத்தனார்**

4. சிலப்பதிகாரத்தில் காதலனைப்பிரிந்த பெண்கள் எதனைப் பூசிக்கொள்ள விரும்பமாட்டார்கள்?

அ) மஞ்சள் ஆ) குங்குமம் இ) சந்தனம் ஈ) திருநீறு

**விடை: இ) சந்தனம்**

5. "அம் செஞ் சீறடி அணி சிலம்பு ஒழிய,

மென் துகில் அல்குல் மேகலை நீங்க" - என்ற பாடல் வரிகளை இயற்றியவர் யார்?

அ) இளங்கோவடிகள் ஆ) சீத்தலைச்சாத்தனார்

இ) திருத்தக்கத்தேவர் ஈ) நாதகுத்தனார்

**விடை: அ) இளங்கோவடிகள்**

6. சீர்திருத்தக்காப்பியம் என்று அழைக்கப்படும் நூல் எது?

அ) மணிமேகலை ஆ) சீவகசிந்தாமணி

இ) சிலப்பதிகாரம் ஈ) குண்டலகேசி **விடை: அ) மணிமேகலை**

7.மணிமேகலையில் இடம்பெறும் காதைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

அ) 50 ஆ) 20 இ) 40 ஈ) 30 **விடை: ஈ) 30**

8."சித்திரம் ஒன்று தெய்வம் கூறலும்" - என்ற பாடல் வரி இடம்பெறும் நூல் எது?

அ) சிலப்பதிகாரம் ஆ) சீவகசிந்தாமணி

இ) சூளாமணி ஈ. மணிமேகலை **விடை: ஈ. மணிமேகலை**

9. உதயகுமாரன் மும்முறை வலம் வந்த தெய்வத்தின் பெயர் என்ன?

அ) கந்திற்பாவை ஆ) சம்பாபதி

இ) மணிமேகலாதெய்வம் ஈ) தீவதிலகை **விடை: ஆ) சம்பாபதி**

10. மணிமேகலை யாருடைய உருவம் ஏற்றிருந்தாள்?

அ) காயசண்டிகை ஆ) மாதவி

இ) சம்பாபதி ஈ) சுதமதி **விடை: அ) காயசண்டிகை**

## பகுதி – ஆ

### ஐந்துமதிப்பெண் வினாக்கள்

1. சிலப்பதிகாரத்தில் மாலைப்பொழுதின் வரவு குறித்து எழுதுக.
2. கணவனைச் சேர்ந்திருந்த பெண்களின் நிலையினைப் புலப்படுத்துக.
3. கணவனைப் பிரிந்த கண்ணகியின் நிலையைக் காட்சிப்படுத்துக.
4. சம்பாபதியிடம் உரையாடிய உதயகுமாரனின் நிலையினை விளக்குக.
5. மணிமேகலை காயசண்டிகை உருவமேற்கும் விதத்தினை குறிப்பிடுக.
6. மாவலி சக்ரவர்த்தியின் சிறப்பினைப் புலப்படுத்துக.
7. மன்னன் மாவண்கிள்ளியின் செயலை விளக்குக.
8. சிறைச்சாலை அறச்சாலையாக மாறும் விதத்தினை விளக்குக.

# பகுதி – இ

## பத்துமதிப்பெண் வினாக்கள்

1.சிலப்பதிகாரத்தில் அந்திமாலை சிறப்புசெய் காதையில் இடம்பெறும் நிகழ்வுகளை விளக்குக.

2. சிலப்பதிகாரத்தில் கணவனைப்பிரிந்த பெண்களின் நிலையினையும் கணவனைச்சேர்ந்திருந்த பெண்களின் நிலையினையும் குறித்து விளக்குக.

3.மணிமேகலையில் இடம்பெறும் சிறைச்சாலை அறச்சாலையாக மாற்றும் காதையில் உதயகுமாரனின் செயலை விளக்குக.

4.மணிமேகலையில் இடம்பெறும் சிறைச்சாலை அறச்சாலையாக மாற்றும் காதையில் இடம்பெறும் செய்திகளைக் குறித்துக் கட்டுரை வரைக.

---

## பாடநூல்கள்

சிலப்பதிகாரம் - உ.வே சாமிநாதையர் உ.வேச.நூல்நிலையம் சென்னை. பதிப்பு 2000

சிலப்பதிகாரம் - ந.மு வேங்கடசாமி நாட்டார் – ராமையா பதிப்பகம் - சென்னை.

மணிமேகலை - ந.மு வேங்கடசாமி நாட்டார் சாரதா பதிப்பகம்

தமிழ் வலைதளமுகவரி

1. http://ta.m.vikippedia.org
2. https://nearchathi.wordpress.com
   www.tamilvu.org

# அலகு - 2

## சீவகசிந்தாமணி

### பூமகள் இலம்பகம்

### சீவகசிந்தாமணி

சீவகசிந்தாமணி ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகும். இதன் ஆசிரியர் திருத்தக்கதேவர். இந்நூல் 31 இலம்பகங்களையும், 3145 செய்யுட்களையும் பெற்றுள்ளது. சீவகன் எட்டுப் பெண்களை மணந்து கொண்டதாலும் அவர்கள் ஒவ்வொருவரைப்பற்றியும் ஒவ்வொரு இலம்பகம் பாடப்பட்டிருப்பதாலும் இதற்கு **மணநூல்** என்ற பெயரும் அமைக்கப்பட்டுள்ளது. அவற்றில் நாம் பூமகள் இலம்பகம் குறித்துக் காண்போம்.

### திருத்தக்கதேவர்

- இக்காப்பியத்தை இயற்றிய **திருத்தக்கதேவர்** சமணமுனிவராவார்.
- இவர் திருத்தகு முனிவர் என்றும், திருத்தகு மகாமுனிவர் என்று அழைக்கப் பெறுவார்.
- இவர் சைன ஆசாரியர் சங்கங்களில் ஒன்றாகிய திரமிள சங்கத்து அருங்கலான்வயத்தைச் சேர்ந்தவர் என்பர்.
- இவர் வாழ்ந்த காலமும் இடமும் தெளிவாகத் தெரியவில்லை என்றாலும், இவர் கி.பி. 2ஆம் நூற்றாண்டிற்கும் 7ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் என வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.
- திருத்தக்கதேவர் சோழர் குடியில் பிறந்தவர்.
- இளமையிலேயே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியவர். வடமொழிப் பயிற்சி மிக்கவர்.
- காமம், பொய், கொலை, கள், சூதாடல் என்ற ஐவகைத் தீமையும் அகற்றியவர். சமணத் துறவியாக வாழ்ந்தவர். விருத்தமெனும் பாடல்களைக் கொண்டு பெருங்காப்பியம் பாடியவர்களில் இவர் முதன்மையானவர்.

## கதைச்சுருக்கம்

- ✶ ஏமாங்கத நாட்டு மன்னன் சச்சந்தன் தன் மனைவி விசையைமீது கொண்ட நாட்டத்தால் அரசாட்சியை அமைச்சனான கட்டியங்காரன் என்பவனிடம் ஒப்படைத்தான்.
- ✶ கட்டியங்காரன் சூழ்ச்சியால் நாட்டைக் கவர்ந்துகொள்ளத் திட்டம் தீட்டினான். நிறைமாத கர்ப்பிணியான விசையை மயிற்பொறி ஒன்றில் ஏறி நாட்டைவிட்டுத் தப்பிக்கிறாள்.
- ✶ சச்சந்தன் போரில் மடிந்தான்.
- ✶ சீவகன் சுடுகாட்டில் பிறந்தான்.
- ✶ கந்துக்கடன் என்னும் வணிகன் சீவகனை வளர்த்து வந்தான். அச்சணந்தி என்பவரிடம் சீவகன் கல்வி, கேள்வி பயின்றான்.
- ✶ பல கலைகளில் சிறந்து விளங்கியும் நல்லறிவு உடையவனாகவும் சிறந்த வீரனாகவும் திகழ்ந்தான்.
- ✶ சீவகன் பருவம் அடைந்த பிறகு ஏமாங்கத நாட்டை கைப்பற்றுவதற்காக தாயின் அறிவுரை மற்றும் தாய்மாமன் கோவிந்தன் உதவியுடன் போர் செய்யப்போகிறான்.
- ✶ தன்னுடைய பல்வேறு ஆற்றல் காரணமாக **காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை** ஆகிய எட்டுப்பெண்களை மணந்து கொள்கிறான்.
- ✶ தன் நாட்டைக் கைப்பற்றி முடிசூட்டிக் கொண்டு மனைவிகளுடன் நல்லாட்சி புரிந்து புதல்வர்களைப் பெற்று வாழ்ந்து வருகிறான்.
- ✶ பிறகு உலகின் நிலையாமை உணர்ந்து ஞானம் பெற்றுத் துறவு நிலை அடைந்து முக்தி அடைகிறான்.

இவற்றில் நம்முடைய பாடப்பகுதியாக பூமகள் இலம்பகம் இடம்பெற்றுள்ளது. அவற்றை இங்குக் காண்போம்

## பூமகள் இலம்பகம் கதைச் சுருக்கம்

பகைவரை வென்றுயர்ந்த சீவகன் முருகனைப் போன்று வாகைசூடித் தன் அரண்மனையிற் புகுந்தான். கட்டியங்காரன் மனைவிமாருள் ஒருத்தி கணவன் பட்டமையுணர்ந்து ஆருயிர் நீத்தனள். ஏனை மகளிர் சீவகனைக் காண அஞ்சினர்.

அவர்க்கெல்லாம் சீவகன் அபயமளித்துப் பெருநிதி வழங்கினான். நீவிர் விரும்பியவிடத்தே சென்று விரும்பிய வண்ணம் வாழ்மின் என்று விடுத்தான். போரில் இறந்தொழிந்த மறவர் மக்கட்கு வரிசை பல வழங்கினான். பின்னர்ச் சீவகன் துயில் கொண்டான். மறுநாள் சீவகன் நீத்தெழுந்தவுடன் மங்கல நீராடி அணிகலன் அணிந்து அருகன் திருக்கோயிலை வழிபட்டான். பின்னர் அரிமான் சுமந்த அரசுக்கட்டிலேறி அழகுற வீற்றிருந்தான். தோழரும் உறவினரும் பிறரும் அரண்மனையில் வந்து குழுமினர். சீவகனுக்கு நல்முகூர்த்தத்திலே மணிமுடி அணிவிக்க எண்ணினர். சுதஞ்சணன் என்னுந் தேவன் வானின்றிழிந்து வந்தான். நல்முகூர்த்தத்திலே சீவகனுக்கு மணிமுடி சூட்டி வாழ்த்திச் சென்றான்.

வெண்கொற்றகுடை நிழற்ற அரியணைமிசை அரசுவீற்றிருந்த சீவகன், உடனடியாக நாட்டில் பல சீர்த்திருத்தங்களை மேற்கொண்டான். சிறையில் இருந்த அனைவரையும் விடுதலை செய்தான். மக்கள் இழந்த நிலங்களை திருப்பித்தருமாறு கட்டளையிட்டான். பதினாறு ஆண்டுகள் வரிவிலக்கு அளித்தான். மாந்தர் ஒருவனும் ஒருத்தியும் போன்று இன்புற்று வாழ்ந்தனர்.

### பூமகள் இலம்பகம்

1. கண்ணாடி யன்ன கடிமார்பன் சிவந்து நீண்ட
கண்ணாடி வென்று களங்கண்டு நியம முற்றிக்
கண்ணாடி வண்டு பருகுங்கமழ் மாலை மூதூர்க்
கண்ணாடி யானை யவர்கைதொழச் சென்று புக்கான்.

2. கூடார் புலியு முழைக்கோளரி யேறு மன்ன
கூடார் மெலியக் கொலைவேனினைந் தானை யேத்திக்
கூடார மாலைக் குவிமென்முலைக் கோதை நல்லார்
கூடார மாட மயில்போலக் குழீயி னாரே.

3. மாலைச் செற்றான் மக்களொ டெல்லா முடனேயிம்
மாலைச் செற்றான் வைந்நுனை யம்பின் னிவனென்பார்
மாலைக் கின்றே மாய்ந்தது மாயாப் பழியென்பார்
மாலைக் கேற்ற வார்குழல் வேய்த்தோண் மடநல்லார்.

4. நாகந் நெற்றி நன்மணி சிந்தும் மருவிபோ
னாகந் நெற்றிந் நன்மணி யோடை நறவிம்மு
நாகந் நெற்றிந் நன்மலர் சிந்தி நளிர்செம்பொ
னாகந் நெற்றி மங்கைய ரொத்தார் மடநல்லார்.

5. கோடிக் கொடுங் கூம்புயர் நாவாய் நெடுமாடங்
கோடிப் பட்டிற் கொள்கொடி கூடப் புனைவாருங்
கோடித் தானைக் கொற்றவற் காண்பா னிழைமின்னக்
கோடிச் செம்பொற் கொம்பரின் முன்முன் றொழுவாரும்.

6. அம்புகை வல்லில் லார்கழன் மள்ளர் திறலேத்த
வம்புகைக் கொண்டா லாரிவற் கீண்டு நிகராவா
ரம்புகை யார்ந்த வந்துகி லல்குல் லவிர்கோதா
யம்புகைக் காணா மையனைக் கையிற் றொழுதென்பார்.

7. மைத்துன நீண்ட மாமணி மாடம் மிசையேறி
மைத்துன நீண்ட வாட்டடங் கண்ணார் மலர்தூவ
மைத்துன மன்னர் மால்களி றேறிப் புடைசூழ
மைத்துன நீண்ட மாமணி வண்ண னவனொத்தான்.

8. ஊது வண்டரற் றும்முயர் தாமரைப்
போது பூங்கழு நீரொடு பூத்துடன்
வீதி மல்கின போன்மிளிர் வேற்கணு
மாத ரார்முகப் பூவு மலர்ந்தவே.

9. வீணை வித்தகன் வேந்தடு வீங்குதோள்
காணுங் காரிகை யார்கதிர் வெம்முலைப்
பூணு மாரமு மீன்றுபொன் பூத்தலர்ந்
தியாண ரூரம ராபதி போன்றதே.

10. தேம்பெய் கற்பகத் தாரவன் சேர்தலும்
பூம்பெய் கோதைப் புரிசைக் குழாநல
மோம்பு திங்க ளுலந்து சுடர்கண்ட
வாம்ப லாய்மலர்க் காடொத் தழிந்ததே.

11. மாகம் முழக்கின் மணிநாகம் பதைப்ப வேபோ
லாகம் மறவ ரகன்கோயில்புக் கம்பொன் மாலைத்
தோகைம் மடவார் துவர்வாய் துடித் தஞ்ச வெம்பா
வேகம் முடைத்தாய் விழியாத்தொழித் தேகுகென்றார்.

12. செய்பாவை யன்னார் சிலம்பார்க்கு மென் சீற டியார்
செய்பூந் தவிசின் மிசையல்லது சேற லில்லார்
மையார்ந்த கண்ணீர் மணிப்பூண்முலை பாய விம்மா
வெய்தா மடவார் வெறுவெந்நிலத் தேகி னாரே.

13. நெருப்புற்ற போல நிலமோந்துழிச் செய்ய வாகிப்
பருக்கென்ற கோல மரற்பல்பழம் போன்று கொப்புள்
வருத்தம் மிழற்றிப் பசும்பொற்சிலம் போசை செய்யச்
செருக்கற்ற பஞ்சி மலர்ச்சீறடி நோவச் சென்றார்.

14. பொற்பூண் சுமந்து பொருகோட்டை யழித்து வெம்போர்
கற்பா னெழுந்த முலையார்களங் கண்டு நீங்கி
நற்பூ ணணிந்த முலையார்நிலை கால்ச ரிந்து
நெற்றிந் நிறுத்து வடம்வைத்த முலையி னாரும்.

15. செங்காற் குழவி தழீயினார்திங்கள் புக்க நீரா
ரங்கான் முலையி னரும்பால்வரப் பாயினாரும்
பைங்காசு முத்தும் பவழத்தொடு பைம்பொ னார்ந்த
பொங்கார் முலையார் திருமுற்ற நிறைந்து புக்கார்.

16. பெய்யார் முகிலிற் பிறழ்பூங்கொடி மின்னின் மின்னா
நெய்யார்ந்த கூந்த னிழற்பொன்னரி மாலை சோரக்
கையார் வளையார் புலிகண்ணுறக் கண்டு சோரா
நையாத் துயரா நடுங்கும்பிணை மான்க ளொத்தார்.

17. வட்டம் மலர்த்தா ரவனாலருள் பெற்று வான்பொற்
பட்டம் மணிந்தா ளிவர்தங்களுள் யாவ னென்ன
மட்டா ரலங்க லவன்மக்களுந் தானு மாதோ
பட்டா ரமருட் பசும்பொன்முடி சூழ வென்றார்.

18. மாலே றனையா னொடுமக்களுக் கஃதோ வென்னா
வேலேறு பெற்ற பிணையின்னனி மாழ்கி வீழ்ந்து
சேலேறு சின்னீ ரிடைச்செல்வன போன்று செங்கண்
மேலேறி மூழ்கிப் பிறழ்ந்தாழ்ந்த விறந்து பட்டாள்.

19. ஐவா யரவி னவிராரழல் போன்று சீறி
வெய்யோ னுயிர்ப்பின் விடுத்தேனென் வெகுளி வெந்தீ
மையா ரணல மணிநாகங் கலுழன் வாய்ப்பட்
டுய்யா வெனநீ ருடன்றுள்ள முருகல் வேண்டா.

20. மண்கேழ் மணியி னுழையுந்துகி னூலின் வாய்த்த
நுண்கேழ் நுசுப்பின் மடவீர்நம்மை நோவ செய்யே
னொண்கேழ்க் கழுநீ ரொளிமுத்த முமிழ்வ தேபோற்
பண்கேழ் மொழியீர் நெடுங்கண்பனி வீழ்த்தல் வேண்டா.

21. என்னுங்கட் குள்ள மிலங்கீர்வளைக் கையி னீரே
மன்னிங்கு வாழ்வு தருதும்மவற் றானும் வாழ்மின்
பொன்னிங்குக் கொண்டு புறம்போகியும் வாழ்மின்னென்றான்
வின்னுங்க வீங்கி விழுக்கந்தென நீண்ட தோளான்.

22. தீத்தும்மும் வேலான் றிருவாய்மொழி வான்மு ழக்கம்
வாய்த்தங்குக் கேட்டு மடமஞ்ஞைக் குழாத்தி னேகிக்
காய்த்தெங்கு சூழ்ந்த கரும்பார்தம் பதிகள் புக்கார்
சேய்ச்செந் தவிசி நெருப்பென்றெழுஞ் சீற டியார்.

23. காதார் குழையுங் கடற்சங்கமுங் குங்கு மமும்
போதா ரலங்கற் பொறையும்பொறை யென்று நீக்கித்
தாதார் குவளைத் தடங்கண்முத் துருட்டி விம்மா
மாதார் மயிலன் னவர்சண்பகச் சாம்பலொத்தார்.

24. ஆய்பொற் புரிசை யணியாரகன் கோயி லெல்லாங்
காய்பொற் கடிகைக் கதிர்க்கைவிளக் கேந்தி மள்ளர்
வேய்பொன் னறையும் பிறவும்விரைந் தாய்ந்த பின்றைச்
சேய்பொற் கமல மகள்கைதொழுச் சென்று புக்கான்.

25. முலையீன்ற பெண்ணைத் திரடாமங்க டாழ்ந்து முற்று
மலையீன்ற மஞ்சின் மணிப்பூம்புகை மல்கி விம்மக்
கலையீன்ற சொல்லார் கமழ்பூவணைக் காவல் கொண்டார்
கொலையீன்ற வேற்கண் ணவர்கூடிய மார்பற் கன்றே.

26. போர்க்கோல நீக்கிப் புகழ்ப்பொன்னி னெழுதப் பட்ட
வார்க்கோல மாலை முலையார்மண் ணுறுப்ப வாடி
நீர்க்கோலஞ் செய்து நிழல்விட்டுமிழ் மாலை மார்பன்
றார்க்கோல மான்றேர்த் தொகைமாமற் றொழுது சொன்னான்.

27. எண்கொண்ட ஞாட்பி னிரும்பெச்சிற் படுத்த மார்பர்
புண்கொண்டு போற்றிப் புறஞ்செய்கெனப் பொற்ப நோக்கிப்
பண்கொண்ட சொல்லார் தொழப்பாம்பணை யண்ணல் போல
மண்கொண்ட வேலா னடிதைவர வைகி னானே.

28. வாள்க ளாலே துகைப்புண்டு
வரைபுண் கூர்ந்த போல்வேழ
நீள்கால் விசைய நேமித்தே
ரிமைத்தார் நிலத்திற் காண்கலாத்
தாள்வல் புரவி பண்ணவிழ்த்த
யானை யாவித் தாங்கன்ன
கோள்வா யெஃக மிடம்படுத்த
கொழும்புண் மார்ப ரயாவுயிர்த்தார்.

29. கொழுவாய் விழுப்புண் குரைப்பொலியுங்
கூந்தன் மகளிர் குழைசிதறி
யழுவா ரழுகைக் குரலொலியு
மதிர்கண் முரசின் முழக்கொலியுங்
குழவாய்ச் சங்கின் குரலொலியுங்
கொலைவல் யானைச் செவிப்புடையு
மெழுவார் யாழு மேத்தொலியு
மிறைவன் கேளாத் துயிலேற்றான்.

30. தொடித்தோண் மகளி ரொருசாரார்
துயரக் கடலு ளவர்நீந்த
வடிக்கண் மகளி ரொருசாரார்
வரம்பி லின்பக் கடனீந்தப்
பொடித்தான் கதிரோன் றிரைநெற்றிப்
புகழ்முப் பழநீர்ப் பளிங்களைஇக்
கடிப்பூ மாலை யவரேந்தக்
கமழ்தா மரைக்கண் கழீஇயினான்.

31. முனைவற் றொழுது முடிதுளக்கி
முகந்து செம்பொன் கொளவீசி
நினைய லாகா நெடுவாழ்க்கை
வென்றிக் கோல விளக்காகப்
புனையப் பட்ட வஞ்சனத்தைப்
புகழ வெழுதிப் புனைபூணான்

கனைவண் டார்க்கு மலங்கலுங்
கலனு மேற்பத் தாங்கினான்.

32. முறிந்த கோல முகிழ்முலையார்
பரவ மொய்யார் மணிச்செப்பி
லுறைந்த வெண்பட் டுடுத்தொளிசேர்
பஞ்ச வாசங் கவுட்கொண்டு
செறிந்த கமுநீர்ப் பூப்பிடித்துச்
சேக்கை மரீஇய சிங்கம்போ
லறிந்தார் தமக்கு மநங்கனா
யண்ணல் செம்மாந் திருந்தானே.

33. வார்மீ தாடி வடஞ்சூடிப்
பொற்பார்ந் திருந்த வனமுலையா
ரேர்மீ தாடிச் சாந்தெழுதி
யிலங்கு முந்நீர் வலம்புரிபோற்
கார்மீ தாடிக் கலம்பொழியுங்
கடகத் தடக்கைக் கழலோனைப்
போர்மீ தாடிப் புறங்கண்ட
புலால்வேன் மன்னர் புடைசூழ்ந்தார்.

34. தொல்லை நால்வகைத் தோழருந்
தூமணி நெடுந்தேர்
மல்லற் றம்பியு மாமனு
மதுவிரி கமழ்தார்ச்
செல்வன் றாதையுஞ் செழுநக
ரொடுவள நாடும்
வல்லைத் தொக்கது வளங்கெழு
கோயிலு ளொருங்கே.

35. துளங்கு வெண்மதி யுகுந்தவெண்
கதிர்தொகுத் ததுபோல்
விளங்கு வெள்ளியம் பெருமலை
யொழியலந் தெழிலார்
வளங்கொண் மாநகர் மழகதிர்

குழீஇயின போலக்
களங்கொண் டீண்டினர் கதிர்முடி
விஞ்சையர் பொலிந்தே.

36. எண்ண மென்னினி யெழின்முடி
யணிவது துணிமின்
கண்ண னாரொடு கடிகையும்
வருகென வரலும்
பண்ணி னார்முடி பழிச்சிய
மணிபொனிற் குயிற்றி
யண்ண லாய்கதி ரலமவரப்
புலமக ணகவே.

37. விரியு மாலையன் விளங்கொளி முடியினன் றுளங்கித்
திருவின் மால்வரைக் குலவிய தனையதோர் தேந்தா
ரகுலி போல்வதோ ராரமு மார்பிடைத் துயல
வெரியும் வார்குழை யிமையவ னொருவன்வந் திழிந்தான்.

38. கொம்மை யார்ந்தன கொடிபட வெழுதின குவிந்த
வம்மை யார்ந்தன வழகிய மணிவட முடைய
வெம்மை செய்வன விழுத்தகு முலைத்திட முடைய
பொம்மெ லோதியர் பொழிமின்னுக் கொடியென விழிந்தார்.

39. மையல் யானையின் படுமதங்
கெடப்பகட் டரசன்
செய்த மும்மதம் போற்றிசை
திசைதொறுங் கமழுந்
தெய்வ வாசத்துத் திருநகர்
வாசங்கொண் டொழிய
வெய்யர் தோன்றினர் விசும்பிடைச்
சிறப்பொடும் பொலிந்தே.

40. வெருவி மாநகர் மாந்தர்கள் வியந்துகை விதிர்ப்பப்
பருதி போல்வன பாற்கட னூற்றெட்டுக் குடத்தாற்
பொருவில் பூமழை பொன்மழை யொடுசொரிந் தாட்டி
யெரிபொ னீண்முடி கவித்தனன் பலித்திரற் றொழுதே.

41. தேவ துந்துபி தேவர்கட் கோகையுய்த் துரைப்பா
னாவி யம்புகை யணிகிளர் சுண்ணமோ டெழுந்த
நாவி னேத்தின ரரம்பையர் நரம்பொலி யுளர்ந்த
காவன் மன்னருங் கடிகையுங் கடவது நிறைத்தார்.

42. திருவ மாமணிக் காம்பொடு
திரள்வடந் திளைக்கு
முருவ வெண்மதி யிதுவென
வெண்குடை யோங்கிப்
பரவை மாநில மளித்தது
களிக்கயன் மழைக்கட்
பொருவில் பூமகட் புணர்ந்தன
னிமையவ னெழுந்தான்.

43. மின்னுங் கடற்றிரையின் மாமணிக்கை
வெண்கவரி விரிந்து வீசப்
பொன்னங் குடைநிழற்றப் பொன்மயமா
முழைக்கலங்கள் பொலிந்து தோன்ற
மன்னர் முடியிறைஞ்சி மாமணியங்
கழலேந்தி யடியீ டேத்தச்
சின்ன மலர்க்கோதைத் தீஞ்சொலார்
போற்றிசைப்பத் திருமால் போந்தான்.

44. மந்தார மாமாலை மேற்றொடர்ந்து
தழுவவராத் தாம மல்கி
யந்தோவென் றஞ்சிறைவண் டேக்கறவின்
புகைபோய்க் கழுமி யாய்பொற்

செந்தா மரைமகளே யல்லதுபெண்
சாராத திருவின் மிக்க
சிந்தா மணியேய்ந்த சித்திரமா
மண்டபத்துச் செல்வன் புக்கான்.

45. பைங்க ணுளையெருத்திற் பன்மணி
வாளெயிற்றுப் பவள நாவிற்
சிங்கா சனத்தின்மேற் சிங்கம்போற்
றேர்மன்னர் முடிகள் சூழ
மங்குன் மணிநிற வண்ணன்போல்
வார்குழைகடிருவில் வீசச்
செங்கட் கமழ்பைந்தார்ச் செஞ்சுடர்போற்
றேர்மன்ன னிருந்தா னன்றே.

46. வார்பிணி முரச நாண
வானதிர் முழக்க மேய்ப்பத்
தார்பிணி தாம மார்பன்
றம்பியை முகத்து ணோக்கி
யூர்பிணி கோட்டஞ் சீப்பித்
துறாதவ னாண்ட நாட்டைப்
பார்பிணி கறையி னீங்கப்
படாமுர சறைவி யென்றான்.

47. கடவுள ரிடனுங் காசில்
கணிபெறு நிலனுங் காமர்
தடவளர் முழங்குஞ் செந்தீ
நான்மறை யாளர் தங்க
ளிடவிய நிலத்தோ டெல்லா
மிழந்தவர்க் கிரட்டி யாக
வுடனவை விடுமி னென்றா
னொளிநிலா வுமிழும் பூணான்.

48. என்றலுந் தொழுது சென்னி
 நிலனுறீஇ யெழுந்து போகி
வென்றதிர் முரசம் யானை
 வீங்கெருத் தேற்றிப் பைம்பொற்
குன்றுகண் டனைய கோலக்
 கொடிநெடு மாட மூதூர்ச்
சென்றிசை முழங்கச் செல்வன்
 றிருமுர சறைவிக் கின்றான்.

49. ஒன்றுடைப் பதிளை யாண்டைக்
 குறுகட னிறைவன் விட்டா
னின்றுளீ ருலகத் தென்று
 முடனுளீ ராகி வாழ்மின்
பொன்றுக பசியு நோயும்
 பொருந்தலில் பகையு மென்ன
மன்றல மறுகு தோறு
 மணிமுர சார்ந்த தன்றே.

50. நோக்கொழிந் தொடுங்கி னீர்க்கு
 நோய்கொளச் சாம்பி னீர்க்கும்
பூக்குழன் மகளிர்க் கொண்டான்
 புறக்கணித் திடப்பட் டீர்க்கும்
கோத்தரு நிதியம் வாழக்
 கொற்றவ னகரோ டென்ன
வீக்குவார் முரசங் கொட்டி
 விழுநக ரறைவித் தானே.

51. திருமக னருளப் பெற்றுத்
 திருநிலத் துறையு மாந்த
ரொருவனுக் கொருத்தி போல
 வுளமகிழ்ந் தொளியின் வைகிப்
பருவரு பகையு நோயும்
 பசியுங்கெட் டொழிய விப்பாற்
பெருவிறல் வேந்தர் வேந்தற்
 குற்றது பேச லுற்றேன்.

## பூமகள் இலம்பகம்

- சீவகன் ஆட்சியைத் தொடங்குகிறான்.
- கட்டியங்காரன் உறவினர்களுக்கு ஆறுதலும் பாதுகாப்பும் அளிக்கிறான்.
- கட்டியங்காரனால் துன்புறுத்தப்பட்டவர்களுக்குச் சீவகன் வாழ்வளிக்கிறான். இவற்றை எடுத்துக்கூறுவதே பூமகள் இலம்பகம்

## சீவகன் இராசமாபுரத்தை அடைதல்

கண்ணாடி போன்ற மார்பனான சீவகன்; சிவந்து நீண்ட கண்கள் எல்லோரிடமும் உலவி வென்றி கொண்டு, போர்க்களத்தைப் பார்வையிட்டு களவேள்வி முதலியன முடித்து, தேனை நாடிவந்து வண்டுகள் பருகும் மணங்கமழ் மாலைகள் தொங்கவிடப்பெற்ற பழம்பதியாகிய இராசமாபுரத்திலே வெற்றியையுடைய யானையையுடையவர், கைகுவித்து வணங்கப் போய்ச் சேர்ந்தான்.

கூட்டிலே அடைபட்ட புலியும் குகையில் வாழும் ஆண்சிங்கமும் போன்ற பகைவர் அழியுமாறு கொல்லுதற்குரிய வேலை ஏந்த எண்ணிய சீவகனைப் பாராட்டி, பொருந்திய முத்துமாலையை அணிந்த குவிந்த மென்முலையையும் கோதையையும் உடைய மகளிர், கூடாரங்களிலும் மாடங்களிலும் மயில்போலத் திரண்டு கூடிவந்தனர்.

மலர் மாலைக்கு ஏற்ற நீண்ட கூந்தலையும், மூங்கில் போன்ற தோள்களையும் உடைய மகளிர், “சச்சந்தனைக் கொன்ற கட்டியங்காரனையும் அவன் மக்களையும் எல்லோரையும், உடனே சேர இம்மாலைக்காலத்தே கூரிய முனையையுடைய அம்பினாலே இவன் கொன்றான் என்பார்கள். மேலும் இன்றைக்கே குணமாலைக்கு இதுவரை நீங்காதிருந்த பழியும் இன்றோடு நீங்கியது என்று கூறுவார்கள்.

மலையின் உச்சியிலிருந்து அழகிய மணிகளைச் சிந்தி வீழும் அருவியைப்போல் அழகிய மணிகளிழைத்த பட்டத்தையுடைய யானையின் நெற்றியிலே தேன் சொரியும் சுரபுன்னையின் உச்சியிலிருந்த அழகிய மலர்களைச் சிந்துவதால், மாடங்களின்மேல் நின்ற மங்கையர் விளங்கும் பொன்னிரைந்த சுவர்க்கத்திலிருந்து மலரைச் சொரிகின்ற தேவமங்கையரைப் போன்று விளங்கினர்.

## சீவகனை வரவேற்ற பெண்களின் நிலை

அம்மகளிர் கோள்களாலே சரியான திசையறிந்து ஓடுகின்ற, கூம்பு உயர்ந்த பாய்மரங்களையுடைய மரக்கலங்கள் தந்த புதிய பட்டினால் தைத்த கொடிகளை மாடங்களிலே சேரக் கட்டுவர். கோடிப்படையையுடைய மன்னனைக் காணும்

பொருட்டு அணிகலன்கள் ஒளிவிட, செம்பொன் காடிபோல வளைந்து வந்து அவன் முன்னே தொழுவர்.

அவர்கள் அருகில் இருந்த ஒருத்தியை நோக்கி, "அம்பைச் செலுத்தும் வலிய வில்லேந்திய, செறிந்த கழலையுடைய வீரர்கள் சீவகன் ஆற்றலைப்புகழ, உலகையே கைப்பற்றினால் இங்கு இவனுக்குச் சமமானவர் யார் இருக்கின்றார்கள்? அழகிய புகை ஊட்டப் பெற்ற துகிலை அணிந்த அல்குலையுடைய பெண்ணே! மேலோனாகிய சீவகனைக் கையால் தொழுததால் கையில் வளையைக் காணோம் என்பார்கள்.

முகில் நெருங்க உயர்ந்த பெரிய மணிமாடங்களின்மேல் ஏறி வாள்ஒளியை மழுங்கி நினைக்கும்படி நீண்ட பெரிய கண்களையுடைய மகளிர் மலர்தூவ, மைத்துன வேந்தர்கள் பெரிய களிறுகளில் ஏறிப்புடை சூழ உலாவரும் சீவகன் கருமை நிறம் பொருந்திய நல்மணி வண்ணனாகிய திருமாலைப் போன்று விளங்கினான்.

தேன் உண்ணவரும் வண்டுகள் மொய்த்துப்பாடும் உயர்ந்த தாமரை மலர்கள், செங்கழுநீர் நிறைந்தனபோல மடந்தையரின் முகமலரும் விளங்கும் வேல்அனைய கண்மலரும் எங்கணும் நிறைந்திருந்தன.

## இராசமாபுரத்தின் சிறப்பு

யாழ் இசையிலே வல்லவனாகிய சீவகனின், பகையரசர்களைக் கொன்று அழித்த பருத்த தோள்களைக் கண்டு மகிழும் மகளிர், தம் ஒளிவீசும் முலைகளின்மேல் அணிந்துள்ள அணிகலன்களையும், முத்துமாலைகளையும் தர, எங்கும் பொன்பரந்து இறைந்து கிடக்கும் புதுவருவாயினையுடைய இரசாமாபுரம் சீவகனைக்காண வந்த அமராவதிப்பட்டினம் போன்றிருந்தது.

## பெண்கள் நலம் அழிந்தது

தேன்சிந்தும் கற்பகமாலை அணிந்த சீவகன், அரண்மனையை அடைந்ததும், மலர்மாலையணிந்த மாடமாளிகையிலிருந்த மகளிரின் அழகு, இரவில் மகிழ்வித்த திங்கள் மறைய, இளஞ்சூரியன் தோன்றக் கண்டு குவிந்த ஆம்பல் மலர்க் காட்டைப்போலக் கெட்டது.

## பகைவரின் அரண்மனைப் பெண்களின் நிலை

அப்போது சீவகனுடைய வீரர்கள் கட்டியங்காரனைச் சார்ந்த மகளிர் இருக்கும் அரண்மனை புகுந்து இடியோசை கேட்டு பதைக்கும் மாணிக்கமுடைய பாம்புகள்போல அவர்கள் அஞ்சுமாறு, அழகிய பொன்மாலை அணிந்த மயில்போன்ற அம்மகளிர்தம் சிவந்த வாய் துடித்து நடுங்க விழித்து பார்த்துச் சினந்து 'இவ்விடத்தினின்று விரைந்து செல்க' என்றனர். அதுகேட்டு மேலும் நடுங்கி, ஓவியப்பாவை போன்றவரும், சிலம்புகள் ஒலிக்கும் சிற்றடிகளை உடையவரும், மலரணையின் மேலன்றித் தரையில் நடந்தறியாதவருமான அம்மகளிர், மை எழுதிய கண்களிலிருந்து பெருகும் கண்ணீர், பொற்பூ அணிந்த கைகளில் பாயவிம்மி அழுது, வெப்பம் மிக்க வெறுந்தரையில் நடந்து சென்றனர்.

மகளிர் கால்கள் தரையில் பட்டவுடன் நெருப்பை மிதித்தது போலச் சிவந்தன. வாடிய இலவமலரைப் போன்ற செம்பஞ்சுக்குழம்பு பூசிய அந்தச் சிற்றடிகளில் மரல் பழங்களைப் போன்று தோன்றிய கொப்புளங்கள் வருத்தத்தை உண்டாக்கின. அவ்வருத்தத்தை பொற்சிலம்புகள் புலம்பி ஒலிசெய்ய மகளிர் மெல்லடிநோவ மெல்ல நடந்து சென்றனர்.

பொன் அணிகலன்கள் அணிந்த போரிடத்தக்க யானையின் தந்தக்கொம்பைத் தோற்கச்செய்த இன்பப்போர் விளைவிக்க எழுந்த இரு தனங்களை உடையவர்கள், அவ்வின்பபோரிலே ஈடுபட்டு நல்ல அணிகலன்களை அணிந்த தனங்களை உடையவர்கள், நிலைதளர்ந்து சாய்ந்து அதன்மேல் முத்துவடம் புரளும் தனங்களை உடைவர்கள், சிவந்த சிறிய பாதங்களை உடைய குழந்தைகளைத் தோளில் தூக்கி அணைத்திருப்பவர்; ஒருமாதக் கருவுடையார், அழகிய மணமிகும் தனங்களில் இனியபால் ஊறும்படி சூல்கொண்டவர், பொற்காசும், முத்தும் பவளமும் பொன்னணியும் அணிந்த பருத்த தனங்களை உடையவர் ஆகிய மகளிர் அழகிய அரண்மனை வாயிலில் நிறைந்து சென்றனர்.

கையில் சிறந்த வளையலணிந்த அம்மகளிர், மழை பொழியும் மேகத்திலே தோன்றும் மின்னல்போல மின்னி, வாசநெய் பூசிய அழகிய கூந்தலிலிருந்து பொன்னரிமாலை நழுவிவிழ, நைந்து, துன்புற்று, சோர்ந்து, புலியைக் கண்டு நடுங்கும் பெண்மான்களைப் போன்று விளங்கினார்கள்.

'வட்டமாகத் தொடுத்த மலர்மாலை அணிந்த கட்டியங்காரனால் போற்றி மாதேவிப்பட்டம் அளிக்கப்பட்ட மங்கை இவர்களுள் யார்?' என சீவகன் தன் ஏவலரை

வினவ, அவர்கள் போர்க்களச் செய்திகளை அத்தேவிக்குக் கூறியவர்கள், ‘தேனார்ந்த மாலையணிந்த கட்டியங்காரனும் அவன் மக்களும் பசிய பொன்முடி கவிழப் போர்க்களத்தில் இறந்தனர்’ என்றார்.

### கட்டியங்காரன் மனைவியின் செயல்

அதனைக் கேட்ட அம்மாதேவி, 'அந்தோ! பெருமை மிக்க ஆண் சிங்கம் போன்ற மன்னனுக்கும் அவன் மக்களுக்கும் நேர்ந்த கதி இதுதானோ?’ எனக் கதறி, வேலால் தாக்கப் பெற்ற பெண்மானைப்போல மிகவும் வருந்தி வீழந்து, சேல்மீன் நீர்குறைந்து வற்றிய இடத்தில் மெல்ல ஊர்ந்து செல்வதுபோலத் தன் சிவந்தகண்கள் மேல்கீழாய்ச் சுழன்று செருகக் கீழே வீழ்ந்து உடனே உயிர்துறந்தாள்” என்றனர்.

### சீவகன் உரை

பின் சீவகன் அம்மகளிரை நோக்கி, 'ஐந்துதலை நாகத்தின் கொடிய நஞ்சுபோல நானும் முதலில் கொதித்தெழுந்து கட்டியங்காரனைக் கொன்று வீழ்த்தியபின் என் சினத்தையும் பகையையும் விட்டுவிட்டேன். இனி நீங்கள் கரியநிறக் கழுத்தையும் மாணிக்கத்தையும் உடைய நாகம் கருடன் வாய்ப்பட்டுத் தப்ப முடியாததைப்போல நாமும் இனித்தப்ப முடியாது என்று வருந்தி அழ வேண்டியதில்லை' என்று கூறினான்.

‘ஆடையினுள்ளே மறைந்த தூய ஒளிமிக்க மணியைப் போன்ற நூலினும் மெல்லிய இடையையுடைய மங்கையர்களே! இன்னிசை மொழியினை உடையவர்களே! உங்களை நான் துன்புறுத்த மாட்டேன். இனி உங்கள் அழகு பொருந்திய செங்கழுநீர் மலர்கள், சிந்தும் முத்தனைய நீர்த்துளிகளைப்போல நீண்ட கண்களில் பனித்துளியைச் சிந்துதல் வேண்டாம் என்கின்றார்.

வில்லை வணங்கப் பருத்த, சிறந்த கல்தூண் போன்ற நீண்ட தோள்களையுடைய சீவகன், 'அறுக்கப்பட்ட வளையல்கள் அணிந்த கையையுடைய மங்கையரே! வாழ்வுக்குரிய பொருளை உம்மன்னன் உங்கட்குத் தந்தது போல நானும் தருகின்றேன். நீங்கள் இங்கே வாழ்ந்திருங்கள், அல்லது அப்பொருளை எடுத்துச் சென்று நீங்கள் விரும்பும் இடத்தில் வாழுங்கள்' என்று மேலும் கூறினான்.

## பெண்களின் நிலை

மிகச்சிறந்த மெத்தையையும் நெருப்பெனக் கருதி நீங்கும் சிறிய பாதங்களையுடைய அம்மகளிர், தீயை உமிழும் வேலையுடைய சீவகனின் அழகிய திருவாய்மொழியாகிய வான்முழக்கத்தை அங்குப் பொருந்தக் கேட்டு, இனமயில் கூட்டம் போல ஒன்று கூடிச்சென்று தென்னையும், கரும்பும் சூழ்ந்து நெருங்கிய தங்கள் நகரங்களை அடைந்தனர்.

காதல் நிறைந்த மயிலன்ன அம்மங்கையர், கணவனை இழந்து கைம்பெண்ணான காரணத்தால் காதில் அணிந்த குழையையும் கடல்சங்கினாலான வளை, குங்குமம், மலர்மாலை சுமையாகும் என நீக்கிவிட்டு, தேன் நிறைந்த குவளை மலர் போன்ற கண்கள் முத்துப் போலக் கண்ணீர்ச் சிந்தி, விம்மி, நோன்பை மேற்கொண்டு வாடிய சண்பகப் பூச்சருகு போலாயினர்.

## சீவகன் அரண்மனையுள் புகுதல்

அரண்மனை மகளிர் அகன்ற பின்னர், வீரர்கள் பொன்வேய்ந்த மூங்கில் துண்டுகளால் அமைந்த கை விளக்கை ஏந்தி, பொன்மதில் சூழ்ந்த அழகிய பரந்த அரண்மனையையும், பொன் வைக்கும் கருவூலத்தையும் பிற இடங்களையும் விரைந்து சோதனையிட்டுக் காப்பிட்டபின், பொற்றாமரையில் வாழும் திருமகள் கைகுவித்து வணங்க அழகிய சீவகன் அரண்மனையின் உள்ளே சென்றான்.

முலை போன்ற காய்களைத் தரும் பனைபோன்ற தாமமாலைகள் எங்கணும் தாழ, மாடமெங்கும், மலைசூழ்ந்து கிடக்கும் மேகம்போல் மணப்புகை நிறைந்து தவழ, கொலைவேல் போன்ற கண்களையுடைய மகளிரைக் கூடிய மார்பனான சீவகனின் பூவணையை, கண் நலத்தோடு கனிந்த சொல் உடைய மகளிர் மணங்கமழும் மலரணைக் காவலை மேற்கொண்டனர்.

## சீவகன் மாமனை வணங்குதல்

முத்துமாலை ஒளிவிடும் மார்பன், போர்கோலத்தை நீக்கி, பொன்னாலான வார்க்கச்சையும், பிறஅணிகளையும் மாலையையும் மார்பில் அணிந்த மகளிர் நீராட்ட, நீராடியபின், அதற்குத்தக்க கோலத்தைச் செய்து தூசிப்படையின் அழகினையும் தேர்களையுமுடைய மாமன் கோவிந்தனைத் தொழுது கூறினான்

என்றும் நினைவில் இருக்கத்தக்க இப்போரில் விழுப்புண் பெற்ற வீரர்களின் விழுப்புண்ணைப் போற்றி, அவர்களைக் காத்தருளுமாறு கோவிந்த மன்னனிடம் கூறி, தானும் அவ்வீரர்களை அன்போடு நோக்கினான். பின்னர் நிலவுலகைக் காவல் கொண்ட அச்சீவகன், பண் போன்ற மொழி பேசும் மகளிர் தொழுது அடி தடவிவிட, பாம்பணையில் பள்ளி கொண்ட திருமால்போலத் துயில் கொண்டான்.

## விழுப்புண் பெற்ற வீரர்கள்

வாள்களால் வெட்டப்பட்டதனால் மலையில் புண் தோன்றியதைப் போன்ற யானையும் பெருங்காற்றைப்போல விரைந்து செல்லும் உருளையுடைய தேரும் கண் இமைக்கும் நேரத்தில் தரையில் காணமுடியாது பறக்கும் குதிரையும் பெரும்புண் பெற்ற மார்புடைய வீரர்களும் இளைப்பாறத் துயின்றனர்.

## சீவகன் உறக்கத்தினின்று எழுதல்

இன்பவேதனை தரும் விழுப்புண் வழியே காற்றுப் புகுந்து வரும் ஒலியும், இறந்த வீரர் தம் கூந்தல் மனைவியர் காதுக்குழையை எறிந்து விட்டு அழுகின்ற ஒலியும், வெற்றி முழக்கும் முரசுமுழங்கும் ஒலியும், திரண்டு குவிந்த வாயினையுடைய சங்கின் முழக்கொலியும், புண்பட்டு நொந்த யானைகள் காதுகளை அசைப்பதால் எழும் ஒலியும், யாழ் ஒலியும், போற்றிப் பாராட்டும் வாழ்த்தொலியும் கேட்டுச் சீவகன் உறக்கத்தினின்றும் விழித்தான்.

போர்க்களத்தில் தோற்று இறந்துபட்ட வீரருடைய வளையலணிந்த மனைவியர் துன்பக்கடலில் நீந்த, வெற்றி பெற்று மீண்டும் வந்த வீரரின் மாவடு போன்ற கண்களையுடைய மனைவியர் இன்பக்கடலில் நீந்த, அலைகடல்மேல் சூரியன் தோன்றினான். அவ்வளவில் புகழப்பெற்ற முக்கனிகளான கடு, நெல்லி, தான்றி ஆகிய மூன்றையும் ஊறவைத்த நீரிலே கற்பூரத்தைக் கலந்து, மணமிக்க மலர்மாலைகளை அணிந்த மகளிர் ஏந்தி நிற்க, தாமரை மலர் போன்ற தன் கண்களை சீவகன் கழுவிக் கொண்டான்.

## சீவகன் அரியாசனத்தில் அமர்தல்

அதன்பின் சீவகன் அருகப்பெருமானைத் தொழுது தாழ்ந்து வணங்கினான். செம்பொன்னை அள்ளி எல்லோரும் கொள்ளக் கொடுத்தான். மற்றவரால்

நினைத்தற்கரிய அரச செல்வத்திற்கும் வெற்றிப் புகழுக்கும் விளக்கமாக அமையும்படி கண்களில் அஞ்சனமையை அழகுற எழுதிக் கொண்டான். வண்டுகள் மொய்த்து ரீங்காரம் செய்யும் மாலைகளையும் பொன்னணிகளையும் பொருத்தமாக அணிந்து கொண்டான்.

எழில் நலம் காட்டும் மார்புடைய மங்கையர் வணங்க, மணிகள் பதித்த சிமிழில் இருந்த வெண்பட்டுடையை அணிந்து ஒளிமிக்க ஐந்து வாசத்தை வாயில் அடக்கிக்கொண்டு இதழ்கள் நெருங்கிய செங்கழுநீர்மலரைக் கையில் பிடித்து, நன்கு அறிந்தவர் கூட மன்மதனோ என மயங்குமாறு ஆண்மை மிக்க சிங்கம்போல, சீவகன் பெருமிதத்துடன் அரியாசனத்தில் அமர்ந்திருந்தான்.

### சீவகனுக்கு திருமுடிசூட முடிவுசெய்தல்

மார்புக் கச்சினை மீறிப் பருத்த முத்துமாலை அணிந்த, அழகுற அணிசெய்யப்பட்ட தனங்களையுடைய மகளிர் அழகு மேம்படச் சாந்தை எழுதி, பாற்கடலில் பிறந்த சங்கநிதிபோல், முகிலைப் பழிக்கும் பொன்னணிகளைப் பொழிகின்ற, பொற்கடகம் அணிந்த கையும் வீரக்கழல் அணிந்த காலும் உடைய சீவகனைப் போரிலே வென்று பகைவரைப் புறங்கொள்ளச் செய்த வேல்மன்னர் வந்து சூழ்ந்தனர்.

அப்போது பழமையான நட்புரிமை உடைய நான்கு தோழர்களும் தூய நன்மணிகள் பதித்த பெரிய தேரையுடைய சிறந்த தம்பியும், மாமனும், தேன் பொருந்திய மணமிகும் மாலையணிந்த தந்தையான கந்துக்கடனும் இராசமாபுரமும், ஏமாங்கதநாடும் செல்வம் குவிந்திருக்கும் அரண்மனையில் ஒருசேர விரைந்து வந்து கூடினர்.

விரைந்து செல்லும் வெண்திங்கள் சொரிந்த வெண்கதிரையெல்லாம் குவித்து வைத்திருப்பதைப் போல விளங்கும் வெள்ளி மலையைவிட்டுக் கலுழவேகனைத் தவிர, விளங்கி ஒளிவீசும் மணிமுடி அணிந்த வித்தியாதரர் அனைவரும் இறங்கி வந்து, அழகு பொருந்திய வளப்பம் மிக்க இராசமாபுரத்திலே, இளங்கதிர்கள் ஒன்று திரண்டாற்போலக் குவிந்தனர்.

'இனிமேலும் எண்ணுவதற்கு என்ன இருக்கின்றது? அழகிய முடி சூட்டுவதைப்பற்றி நினையுங்கள்" என்று முன்வந்த அரசர்கள் அமைச்சர்களை நோக்கிக் கூறினர். உடனே அவர்கள், "புரோகிதரும் நல்ல முகூர்த்தநேரம் பார்த்துக்

கூறுவோரும் (நிமித்தம் கூறுவோர்) சிறந்த ஒளிக்கதிர் பரவவும் பூமகள் மகிழவும் புகழ் மணிகளைப் பொன்னில் பதித்து முடி அமைத்து வருக" என்று கூற, அவர்களும் அவ்வாறே வந்தனர்.

## சுதஞ்சணன் தன் தேவியருடன் வருதல்

அப்பொழுது வானவில் ஒரு மாலையாக மலையிலே அசைவது போலத் தேன்சொரியும் ஒரு மாலையும், அம்மலையிலிருந்து பாயும் அருவிபோல ஒரு முத்துச்சரமும் மார்பிலே புரள, ஒளிவிளங்கும் திருமேனியையும் மணிமுடியையும் காதுக்குழையையும் உடைய வானவனாகிய சுதஞ்சணன் விண்ணிலிருந்து வந்து இறங்கினான்.அச்சுதஞ்சணனுடன் பெருமை நிறைந்தனவும், தொய்யில் கொடி எழுதப்பட்டனவும், குவிந்த கரிய கண்களையுடையனவும். அழகிய முத்துச்சரம் அணிந்தனவும் இன்பமூட்டுவனவுமாகிய தனங்களையுடைய நெருங்கிய கூந்தலைக் கொண்ட அவன் தேவியர் மின்னலின் ஒழுங்குபோல வானத்திலிருந்து இறங்கினர்.

மயக்கம் மிக்க யானையின் மதம் கெடுமாறு களிற்றரசன் உண்டாக்கிய மும்மதம்போல, திசை தோறும் கமழும் தெய்வ மணத்தாலே அத்திருநகரிலுள்ள இயற்கையான மணம் அடங்குமாறு சீவகன் முடிசூட்டுவிழாவிற்குத் தேவலோகத்திலிருந்து கொண்டு வந்த உயர்ந்த பொருட்களுடன் வித்தியாதரர் அந்நகரிடத்தே விரைந்து வந்து தோன்றினர். அதனால் விண்ணும் மண்ணும் பொலிவு பெற்று விளங்கின.

## சுதஞ்சணன் முடிசூட்டுதல்

அப்பெருநகரில் உள்ள அனைத்து மக்களும் கண்டு அஞ்சி வியக்கும்படி, பொன்பருதி போன்ற நூற்றியெட்டுப் பொற்குடத்தில் பாற்கடலில் இருந்த கொண்டு வந்த நன்னீரால் நீராட்டி, ஒப்பற்ற மலர்மழையும், பொன் மழையும் மேலிருந்து பொழிய, தூயவனாகிய சீவகனை வணங்கி, ஒளிவிடும் அழகிய மணிமுடியைச் சுதஞ்சணன் அவன் தலையில் சூட்டினான்.

## சுதஞ்சணன் செல்லுதல்

அப்பொழுது ஓமப்புகையுடனும் அழகு விளங்கும் சுண்ணப்பொடியுடனும் வானவர்க்கு இம்மங்கலச் செய்தியைக் கூறுதற்குத் தேவதுந்துபிகள் முழங்கின.

வானமங்கையர் (அரம்பையர்) வாழ்த்துக் கூறினர். வீணையின் நரம்பு ஒலியும் வாய்ப்பாட்டொலியும் எங்கும் மிக்க, காவல் மன்னர் காணிக்கையிட்டு வணங்கினர். கடிகையர் மங்கல வாழ்த்துப் பாடினர்.

அழகிய மாணிக்கக் காம்புடன் முத்துமாலை பொருந்த விளங்கும் வட்டநிலா என்னுமாறு வெண்கொற்றக்குடை உயர்ந்து இந்நிலவுலகைக் காத்தது. மகிழ்ச்சி தரும் கயல்மீன் போன்ற குளிர்ந்த கண்களையுடைய ஒப்பற்ற நிலமகளைச் சீவகன் ஆளத்தொடங்கிய பின், சுதஞ்சணன் தன் பொன்னுலகு செல்லப் புறப்படலானான்.

## சீவகனின் ஆட்சி

ஒளிவிளங்கும் பாற்கடலின் அலையைப்போல மணிகள் பதித்த கைப்பிடியையுடைய வெண்கவரிவீச, திருவின் வடிவாகிய குடை உலகை நிழல் செய்ய, அருகில் பொற்கலங்கள் அழகு விளங்கத் தோன்ற, மன்னர்கள் தம் முடியைத் தாழ்த்திப் பணிந்து நம்பியின் திருவடிகளை ஏந்திப்போற்ற, விடு பூவையும் மலர் மாலையும் அணிந்த இன்மொழி மடந்தையர் பல்லாண்டு கூற, சீவகன் சித்திர மண்டபத்துக்குப் புறப்பட்டான்.

மந்தார மலர்மாலை மேலணிந்து தழுவ முடியாத பெரிய மற்ற மலர்மாலைகளையும் சூடி, அம்மாலைகளின் தேனை உண்ண முடியாது வருந்தி, அந்தோ! என்று வண்டுகள் ஏங்கும்படி, இனிய நறுமணப்புகை நிறைந்த அழகிய பொன்னாலான செந்தாமரை மலர் மேலுள்ள திருமகளே அல்லாது வேறு பெண்சாராத செல்வச் சிறப்பு மிக்க சிந்தாமணியின் தன்மை பொருந்திய, ஓவியம் எழுதிய சித்திர மண்டபத்துக்குள் சீவகன் புகுந்தான்.

பசுமையான மணிக்கண்களையும், பிடரிமயிர் பொருந்திய கழுத்தையும், பலமணிகளால் ஆகிய கூரியபற்களையும் பவளத்தாலான நாவினையும், உடைய அரியணைமேல், சிங்கம் போன்ற வலிமையும் தேரும் உடைய மன்னர்களின் மணி முடிகள் சூழ்ந்து விளங்க, கார்மேகத்தையும் நீலமணியையும் போன்ற நிறமுடைய திருமாலை ஒத்த தேர்மன்னனாகிய சீவகன், நீண்ட காதுக்குழைகள் ஒளிவிட, சிவந்த கண்களையும், மணமிகு மாலைகளையுமுடைய சூரியனைப்போலப் பொலிவுடன் வீற்றிருந்தான்.

வாரால் இழுத்துக்கட்டப்பட்ட முரசின் ஒலி தோற்கவும் வானத்து இடி முழக்கம் போலவும் சீவகன், மாலைகள் தங்கிய ஒளிமிக்க மார்பினையுடைய தம்பி நந்தட்டனை

நோக்கி, 'ஊரிலுள்ளவர்களைப் பிணித்து வைத்திருக்கும் சிறைக்கோட்டங்களை இடித்துத் தள்ளி, நம் பகைவனான கட்டியங்காரன் ஆண்டபோது நாட்டு மக்களை வருத்தி வசூலித்த வரியைப் பதினாறு ஆண்டுகாலம் விலக்க, ஒலி அடங்காத முரசை அறையச் செய்வாய்" என்று கூறினான்.

மேலும், ஒளிவிடும் பொன்னணிகலன்களை அணிந்த சீவகன் அமைச்சர்களை நோக்கி, 'தேவாலயங்களுக்கு இறையிலியாக விட்டநிலத்தையும், குற்றமற்ற சோதிடர் பெற்ற இறையிலி நிலத்தையும், ஓம குண்டத்தில் அழகிய செந்தீயை வளர்க்கும் அந்தணர்க்கு அளித்த இறையிலி நிலத்தையும் முன்புபோலவே இறையிலியாக விடுமின். அதுவுமல்லாது கட்டியங்காரனால் பறிக்கப்பட்ட நிலங்களை இழப்பீட்டுடன் இருமடங்காக திரும்பவும் ஒப்படைமின்' என்று ஆணையிட்டான்.

### முரசறைதல்

உடனே, நந்தட்டன் தரையில் தலைபொருந்துமாறு விழுந்து சீவகனை வணங்கிச் சென்று, வெற்றிமுழங்கும் முரசை யானையினது பெரிய பிடரியிலே ஏற்றி, புதிய பொன்னாலான, மலையினைக் கண்டாற் போன்ற அழகுடைய கொடியுடன் கூடிய உயர்ந்த மாடங்களையும் கொண்ட மூதூராகிய இராசமாபுரத்தில் சீவகனின் புகழ்விளங்க வள்ளுவனைக் கொண்டு அழகிய முரசை அறைவிக்கலானான்.

'மன்னன் சீவகன் இன்று முதல் பதினாறு ஆண்டுகளுக்கு உரிய வரிகளை நீக்கிவிட்டான்;. இன்று போல் என்றும் உலகத்துடன் ஒட்டி வாழ்வீராக. மக்களைத் துன்புறுத்தும் பசியும், பிணியும், பொருந்தாத பகையும் நீங்குக" என்று அப்பொழுது மணம் கமழும் இராசமாபுரத்தின் வீதிகள் தோறும் அழகிய முரசம் முழங்கியது.

மேலும், 'கண்பார்வை இழந்து மெலிந்தவர்க்கும், நோயுற்று மனம் தளர்ந்தவர்க்கும். மலர்க்கூந்தலுடைய பரத்தையரிடம் கொண்ட வேட்கையாலே கணவனால் புறக்கணிக்கப்பட்ட மனைவியர்க்கும் வாழ்வுக்குரிய வீடும், இடையறாப் பெருஞ்செல்வமும் மன்னவன் நல்குவான்" என்று அச்சிறந்த நகரிலே இழுத்துக்கட்டடப்பட்ட வாரையுடைய முரசினை அறைந்து அறிவித்தான்.

## மக்கள் இன்பத்தோடு வாழ்தல்

இவ்வாறு மாமன்னன் அருள, அவன் நாட்டு மக்கள் துன்பத்தைத் தரும் பகை, நோய், பசி ஆகியன தொலைய, ஒருவனுக்கு ஒருத்தி என மனமகிழ்ந்து புகழுடன் வாழ்ந்து வந்தனர். இனி பேராற்றல் மிக்க மன்னர் மன்னனான சீவகனுக்கு நேர்ந்ததைக் கூறத் தொடங்கினேன்.

மேற்கண்டவாறு சீவகசிந்தாமணி பூமகள் இலம்பகத்தில் சீவகன் இராசமாபுரம் வந்து மணிமுடிசுட்டி மக்களுக்கு நல்தொரு ஆட்சியினை வழங்கியதை ஆசிரியர் கூறியுள்ளார்.

---

## அருஞ் சொற்பொருள்

1.களம் கண்டு - போர்க்களத்தைப்பார்வையிட்டு

2.கூடார் – பகைவர்

3.நாகம் நெற்றி - மலையின் உச்சி

4.மடநல்லார் - மாடங்களின்மேல் நின்ற மங்கையர்

5.ஓடை – முகபடாம்

6.அம்புகை - அழகிய புகை

7.முகப்பூ – முகப்பொலிவு

8.யாணர்ஊர் - புதுவருவாயினையுடைய இராசமாபுரம்

9.புரிசை – மதில்

10.மடவார் – பெண்கள்

11.பூங்கொடிமின் - அழகிய கொடி மின்னல்.

12.பிணைமான் – பெண்மான்

13.கேழ் – ஒளி

14.கடிகை – துணித்தது

15.பெண்ணை – பனை

16.அயா வுயிர்த்தார் – இளைப்பாறினார்

17.முப்பழம் - கடு, நெல்லி, தான்றி

18.அலங்கல் – மாலை

19.கழலோன் – சீவகன்

20.திருவில் – வானவில்

21.இமையவன் – தேவன்

22.காசு இல் - குற்றம் அற்ற

23.வீங்கெருத்து - பருத்த பிடரி

24.கோ – பசு

25.ஒளி - புகழ்

# சூளாமணி

## நகரச் சருக்கம்

### சூளாமணி

ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்றான சூளாமணி சமண சமயம் சார்ந்த நூல். பத்தாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட யாப்பருங்கல விருத்தியுரையில் சூளாமணிப் பாடல்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. எனவே, இந்நூலின் காலம் கி.பி. 10 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டது எனலாம். ஜினசேனர் என்பவர் வடமொழியில் எழுதிய ஸ்ரீபுராணம் எனப்படும் ஆருகத மகாபுராணம் என்னும் நூலைத்தழுவித் தமிழில் எழுதப்பட்டது இந்நூல். 12 சருக்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 2131 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. விருத்தப்பாவால் ஆனது. கதை கூறும் போக்கில் சீவக சிந்தாமணியை ஒட்டியுள்ளது.

### நூல் அமைப்பு

சூளாமணிக் காப்பியம் பாயிரமும், 12 சருக்கங்களும், 2131 விருத்தப் பாக்களும் கொண்டது. பாயிரப் பகுதி 6 பாடல்களைக் கொண்டது. நாட்டுச் சருக்கம், நகரச் சருக்கம், குமார காலச் சருக்கம், இரத நூபுரச் சருக்கம், மந்திர சாலைச் சருக்கம், தூதுவிடு சருக்கம், சீயவதைச் சருக்கம், கல்யாணச் சருக்கம், அரசியற் சருக்கம், சுயம்வரச் சருக்கம், துறவுச் சருக்கம், முத்திச் சருக்கம் எனப் பன்னிரு சருக்கங்களைக் கொண்டது சூளாமணிக் காப்பியம்.

### நூல் ஆசிரியர்

சூளாமணியை இயற்றியவர் தோலாமொழித்தேவர். இவர் சமண சமயத்தவர். காலம் 10-ஆம் நூற்றாண்டிற்கு முன். இவரை விசயன் என்ற மன்னர் ஆதரித்துள்ளார். மைசூர் மாநிலத்தில் உள்ள சிரவணபெலகோலாக் கல்வெட்டு இவரைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

### கதை கூறும் செய்தி

இக்கதை சுரமை நாட்டின் இளவரசனான திவிட்டன் என்பவன், வித்தியாதர நாட்டு இளவரசி ஒருத்தியை மணந்து கொண்டதனால் ஏற்பட்ட

சிக்கல்களையும் அதனால் திவிட்டன் நிகழ்த்திய வீரச் செயல்களையும் கூறுகிறது. இந்தப் பின்னணியில் இதன் ஆசிரியர் சமண சமயத் தத்துவங்களை விளக்குகிறார்.

சமணத் தத்துவங்கள் மற்றும் நான்கு வகையான பிறவிகள் பற்றி விரிவாக விளக்குகிறது இந்நூல். இந் நான்கு பிறவிகளுள் மனிதப் பிறவியில் மட்டுமே வீடுபேறு அடைவதற்கான முயற்சிகளைச் செய்யும் வாய்ப்பு உண்டென்றும் அதனால் மனிதப் பிறவி எடுத்த அனைவரும் அதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும் என்றும் கருதும் சமணக் கோட்பாடுகளின் வழி நின்று அதற்கான வழிமுறைகளையும் இந்நூல் எடுத்தியம்புகிறது.

## காப்பியக் கதை

பரத கண்டத்தில் சுரமை நாட்டின் தலைநகர் போதன மாநகர். அதன் அரசன் பயாபதி. அவனுக்கு மிகாபதி, சசி என இரு மனைவியர். அவர்களுக்கு வெண்ணிறமான விசயன், கருநிறமான திவிட்டன் ஆகிய இருவரும் பிறந்தனர். இவர்கள் பலராமன், கண்ணன் அவதாரமாகக் கருதப்பட்டனர். திவிட்டன் வித்தியாதர நாட்டு இளவரசியை மணப்பான் என்று நிமித்திகன் (சோதிடன்) கூறுகிறான். அதே நேரத்தில், வித்தியாதரர் (வானவர்) உலகிலுள்ள இரத நூபுரம் என்ற நகரில் ஆட்சி புரியும் சுவலனசடி தன் மகளுக்குச் சுயம்வரம் நடத்த எண்ணுகிறான். சுவலனசடியின் மகள் சுயம்பிரபை. அவளைப் பூலோகத்தில் உள்ள திவிட்டனே மணப்பான் என்று நிமித்திகன் கூறுகிறான். தன் சோதிடக் குறிப்பிற்குச் சான்றாக, திவிட்டன் ஒரு மாதத்திற்குள் ஒரு சிங்கத்தை அடக்குவான் என்கிறான். எனவே சுவலனசடி, மருசி என்பவனைப் பயாபதியிடம் மணத்தூதாக அனுப்புகிறான். பயாபதியின் ஒப்புதலை அறிந்த சுவலனசடி, திவிட்டன் சிங்கத்தை அடக்குகிறானா என்பதை அறிய விரும்புகிறான். சுவலனசடி திவிட்டனுக்குப் பெண் கொடுக்க இருப்பதை அறிந்த மற்றொரு வித்தியாதர அரசன் அச்சுவகண்டன் பயாபதியைத் தனக்குத் திறை செலுத்த ஆணையிட்டுத் தூதனுப்புகிறான். அத்தூதுவனைத் திவிட்டன் விரட்டியடித்து விடுகிறான். விரட்டியடிக்கப்பட்ட தூதுவன், அச்சுவகண்டனிடத்தே செல்வதற்கு அஞ்சி, அவனுடைய அமைச்சனாகிய அரிமஞ்சு என்பவனிடம் சென்று திவிட்டன் செயலைக் கூறினான். அதுகேட்ட அவ்வமைச்சன் மாயவித்தையில் வல்ல அரிகேது

என்பவனை மாயச்சிங்க உருவில் பயாபதி நாட்டுக்கு அனுப்பி அச்சுறுத்துகிறான். வீரன் திவிட்டன் விட்டுவிடுவானா? அம்மாயச் சிங்கத்தைக் கொல்லும் பொருட்டுத் துரத்திச் செல்கிறான். மாயச்சிங்கமாகிய அரிகேதுவோ உயிருக்குப் பயந்து, உண்மைச் சிங்கம் உறங்கும் ஒரு குகைக்குள் புகுந்து மறைந்து விடுகிறான். உண்மையான சிங்கம் குகையை விட்டு வெளிவர, திவிட்டன் அதனோடு எதிர்த்துப் போரிட்டு, அதன் வாயைப் பிளந்து கொன்று விடுகிறான்.

நிமித்திகன் கூற்று மெய்யாகி விட்டதல்லவா? சுவலனசடிக்கு மிகுந்த மகிழ்ச்சி. தன்மகளைத் திவிட்டனுக்கு மணம் செய்து மகிழ்கிறான். பழியுணர்ச்சியால் குமுறுகிறான் அச்சுவகண்டன். தன் பெரும்படையுடன் தாக்குகிறான். ஆனால் திவிட்டன் கண்ணனுடைய அவதாரமல்லவா? எனவே அவனிடம் திருமாலின் ஆயுதங்களான பாஞ்ச சன்னியமும் சக்கரமும் வந்து தாமே பொருந்தின. கருடன் வந்து அவன் தோளிலே தங்கினான். பின் கேட்கவா வேண்டும்! போரில் திவிட்டனுக்கே வெற்றி கிடைக்கிறது. வெற்றி வாகை சூடிய திவிட்டனை வாசுதேவன் என்றும், விசயனைப் பலராமன் என்றும் வாழ்த்தி முடி சூட்டினர். கண்ணன் கோவர்த்தன மலையைத் தூக்கியது போலத் திவிட்டனும் கோடிமாசிலை என்ற மலையைத் தூக்கித் தன் ஆற்றலை உலகிற்கு வெளிப்படுத்தினான். உரிய காலத்தில் திவிட்டன் - சுயம்பிரபை தம்பதியருக்கு ஒரு மகனும் மகளும் பிறந்தனர். சுயம்பிரபை தமையன் அருக்க கீர்த்திக்கும் ஒருமகனும் மகளும் பிறக்கின்றனர். இவர்கள் வளர்ந்து திருமண வயதுக்கு வர, முறைப்படி அவர்களுக்கு சுயம்வரம் நடத்தித் திருமணம் நடத்தப்படுகிறது. பயாபதி தன் தேவியருடன் துறவு பூண்டு தவம் மேற்கொண்டு முக்தி அடைய முயற்சி மேற்கொள்கிறான். திவிட்டன், விசயன் நாட்டை நன்முறையில் ஆளுகின்றனர். இத்துடன் இக்காப்பியக் கதை முற்றுப் பெறுகிறது.

இவற்றில் நம்முடைய பாடப்பகுதியாக நகரச்சருக்கம் இடம்பெற்றுள்ளது அவற்றை இங்கு காண்போம்.

### நகரச் சருக்கம்

1.சொன்னநீர் வளமைத் தாய சுரமைநட் டகணி சார்ந்து
மன்னன்வீற் றிருந்து வைக நூலவர் வகுக்கப் பட்ட
பொன்னவிர் புரிசை வேலிப் போதன மென்ப துண்டோர்
நன்னகர் நாக லோக நகுவதொத் தினிய தொன்றே.

2. சங்கமேய் தரங்க வேலித் தடங்கடற் பொய்கை பூத்த்
அங்கண்மா ஞால மென்னுந் தாமரை யலரி னங்கேழ்ச்
செங்கண்மால் சுரமை யென்னுந் தேம்பொகுட் டகத்து வைகும்
நங்கையோர் படிவங் கொண்ட நலத்ததந் நகர மன்றே.

3. செஞ்சுடர்க் கடவு டிண்டே ரிவுளிகா றிவள வூன்றும்
மஞ்சுடை மதர்வை நெற்றி வானுழு வாயின் மாடத்
தஞ்சுட ரிஞ்சி யாங்கோ ரகழணிந் தலர்ந்த தோற்றம்
வெஞ்சுடர் விரியு முந்நீர் வேதிகை மீதிட் டன்றே.

அம்மதிற் புறத்தே அமைந்த யானைகட்டுமிட மாண்பு
4. இரும்பிடு தொடரின் மாவி னெழுமுதற் பிணித்த யானைக்
கரும்பிடு கவள மூட்டும் கம்பலை கலந்த காவின்
அரும்பிடை யலர்ந்த போதி னல்லியுண் டரற்று கின்ற
கரும்பொடு துதைந்து தோன்றுஞ் சூழ்மதில் இருக்கை யெல்லாம்.

## மாடங்களின் மாண்பு

5.மானளா மதர்வை நோக்கின் மையரி மழைக்க ணார்தம்
தேனளா முருவக் கண்ணிச் செல்வர்தோ டிளைக்கு மாடங்
கானளாங் காம வல்லி கற்பகங் கலந்த கண்ணார்
வானளாய் மலர்ந்து தோன்று மணிவரை யனைய தொன்றே.

இதுவுமது - வேறு

6.அகிலெழு கொழும்புகை மஞ்சி னாடவும்
முகிலிசை யெனமுழா முரன்று விம்மவும்
துகிலிகைக் கொடியனார் மின்னிற் றோன்றவும்
இகலின மலையொடு மாட மென்பவே.

## மாடங்களின் சிறப்பு

7.கண்ணெலாங் கவர்வன கனக கூடமும்
வெண்ணிலாச் சொரிவன வெள்ளி வேயுளும்
தண்ணிலாத் தவழ்மணித் தலமுஞ் சார்ந்தரோ
மண்ணினா லியன்றில மதலை மாடமே.

### முழவொலி முதலியன

8.மாடவாய் மணிமுழா விசையு மங்கையர்
ஆடுவார் சிலம்பிணை யதிரு மோசையும்
பாடுவார் பாணியும் பயின்று பல்கலம்
முடிமா ணகரது முரல்வ தொக்குமே.

### வண்டுகளின் மயக்கம்

9.தாழிவாய்க் குவளையுந் தண்ணெ னோதியர்
மாழைவா ணெடுங்கணு மயங்கி வந்துசென்
றியாழவா மின்குர லாலித் தார்த்தரோ
ஏழைவாய்ச் சுரும்பின மிளைக்கு மென்பவே.

### கடைவீதி

10.பளிங்குபோழ்ந் தியற்றிய பலகை வேதிகை
விளிம்புதோய் நெடுங்கடை வீதி வாயெலாம்
துளங்குபூ மாலையுஞ் சுரும்புந் தோன்றலால்
வளங்கொள்பூங் கற்பக வனமும் போலுமே.

### சிலம்பொலிக்கு மயங்குஞ் சிறுஅன்னங்கள்

11.காவிவாய்க் கருங்கணார் காமர் பூஞ்சிலம்
பாவிவாய் மாளிகை யதிரக் கேட்டொறும்
தூவிவான் பெடைதுணை துறந்த கொல்லென
வாவிவா யிளவனம் மயங்கு மென்பவே.

### அரசர் தெருவழகு

12.விலத்தகைப் பூந்துணர் விரிந்த கோதையர்
நலத்தகைச் சிலம்படி நவில வூட்டிய
அலத்தகக் குழம்புதோய்ந் தரச வீதிகள்
புலத்திடைத் தாமரை பூத்த போலுமே.

### செல்வச் சிறப்பு

13.கண்ணிலங் கடிமலர்க் குவளைக் கற்றையும்
வெண்ணிலாத் திரளென விளங்கு மாரமும்
வண்ணவான் மல்லிகை வளாய மாலையும்
அண்ணன்மா நகர்க்கவைக் கரிய அல்லவே.

### மாளிகைகளில் உணவுப்பொருள்களின் மிகுதி

14.தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா
மேம்பழுத் தளிந்தன சுளையும் வேரியும்
மாம்பழக் குவைகளு மதுத்தண் டீட்டமும்
தாம்பழுத் துளசில தவள மாடமே.

### போதனபுரத்துக்கு விண்ணுலகம் உவமை

15.மைந்தரு மகளிரு மாலை காலையென்
றந்தரப் படுத்தவ ரறிவ தின்மையால்
சுந்தரப் பொற்றுக டுதைந்த பொன்னக
ரிந்திர வுலகம்வந் திழிந்த தொக்குமே.

### பயாபதி மன்னன் மாண்பு

16.மற்றமா நகருடை மன்னன் றன்னுயா
ஒற்றைவெண் குடைநிழ லுலகிற் கோருயிர்ப்
பொற்றியான் பயாபதி யென்னும் பேருடை
வெற்றிவேல் மணி முடி வேந்தர் வேந்தனே.

### பயாபதி மன்னன் சிறப்பு

17.எண்ணின ரெண்ணகப் படாத செய்கையான்
அண்ணிய ரகன்றவர் திறத்து மாணையான்
நண்ணுநர் பகைவரென் றிவர்க்கு நாளினும்
தண்ணியன் வெய்யனந் தானை மன்னனே.

### மக்கட்குப் பகையின்மை

18.நாமவே னரபதி யுலகங் காத்தநாட்
காமவேள் கவர்கணை கலந்த தல்லது
தாமவேல் வயவர்தந் தழலங் கொல்படை
நாமநீர் வரைப்பக நலித தில்லையே.

### குடிகளை வருத்தி இறை கொள்ளாமை

19.ஆறிலொன் றறமென வருளி னல்லதொன்
றூறுசெய் துலகினி னுவப்ப தில்லையே
மாறிநின் றவரையும் வணக்கி னல்லது
சீறிநின் றெவரையுஞ் செகுப்ப தில்லையே.

### மன்னனின் முந்நிழல்

20.அடிநிழ லரசரை யளிக்கு மாய்கதிர்
முடிநிழன் முனிவரர் சரண முழ்குமே
வடிநிழல் வனைகதி ரெஃகின் மன்னவன்
குடைநிழ லுலகெலாங் குளிர நின்றதே.

### இருவகைப்பகையும் அற்ற ஏந்தல்

21.மன்னிய பகைக்குழா மாறும் வையகம்
துன்னிய வரும்பகைத் தொகையும் மின்மையால்
தன்னையுந் தரையையுங் காக்கு மென்பதம்
மன்னவன் றிறத்தினி மருள வேண்டுமோ.

### அரசியல் சுற்றத்துடன் உலகப் பொதுமை நீக்குதல்

22.மேலவர் மெய்ப்பொருள் விரிக்கும் வீறுசால்
நூலினாற் பெரியவர் நுழைந்த சுற்றமா
ஆலுநீ ரன்னமோ டரச வன்னமே
போலநின் றுலகினைப் பொதுமை நீக்கினான்.

### அரசர் சுற்றத்தின் இயல்பு

23.கொதிநுனைப் பகழியான் குறிப்பி னல்லதொன்
றிதுநமக் கிசைக்கென வெண்ணு மெண்ணிலா
நொதுமலர் வெருவுறா நுவற்சி யாளர்பின்
அதுவவன் பகுதிக ளமைதி வண்ணமே.

### இராசமா தேவியர் பெருமை

24.மற்றவன் றேவியர் மகர வார்குழைக்
கொற்றவர் குலங்களை விளக்கத் தோன்றினார்
இற்றதிம் மருங்குலென் றிரங்க வீங்கிய
முற்றுறா முலையினார் கலையின் முற்றியார்.

### அரசியர் இயல்பு

25.பஞ்சனுங் கடியினார் பரந்த வல்குலார்
செஞ்சுணங் கிளமுலை மருங்கு சிந்தினார்
வஞ்சியங் குழைத்தலை மதர்வைக் கொம்புதம்
அஞ்சுட ரிணர்க்கொசிந் தனைய வைம்மையார்.

### காமம் பூத்த காரிகையர்

26.காமத்தொத் தலர்ந்தவர் கதிர்த்த கற்பினார்
தாமத்தொத் தலர்ந்துதாழ்ந் திருண்ட கூந்தலார்
தூமத்துச் சுடரொளி துளும்பு தோளினார்
வாமத்தின் மயங்கிமை மதர்த்த வாட்கணார்.

### பட்டத்து அரசிகள் இருவர்

27.ஆயிர ரவரவர்க் கதிகத் தேவியர்
மாயிரு விசும்பினி னிழிந்த மாண்பினார்
சேயிருந் தாமரைத் தெய்வ மன்னர் என்
றேயுரை யிலாதவ ரிருவ ராயினார்.

### பெருந்தேவியர் இருவரின் பெற்றி

28.தீங்கரும் பமிழ்த மூட்டித் தேனளாய்ப் பிழிந்த போலும்
ஓங்கிருங் கடலந் தானை வேந்தணங் குறுக்கு மின்சொல்
வீங்கிருங் குவவுக் கொங்கை மிகாபதி மிக்க தேவி
தாங்கருங் கற்பின் றங்கை சசிஎன்பாள் சசியோ டொப்பாள்.

### மங்கையர்க்கரசியராகும் மாண்பு

29.பூங்குழை மகளிர்க் கெல்லாம் பொன்மலர் மணிக்கொம் பன்ன
தேங்குழல் மங்கை மார்கள் திலகமாய்த் திகழ நின்றார்
மாங்கொழுந் தசோக மென்றாங் கிரண்டுமே வயந்த காலத்
தாங்கெழுந் தவற்றை யெல்லா மணிபெற வலரு மன்றே.

30.பெருமக னுருகும் பெண்மை மாண்பினும் பேணி நாளும்
மருவினும் புதிய போலும் மழலையங் கிளவி யாலும்
திருமகள் புலமை யாக்குஞ் செல்விஎன் றிவர்கள் போல
இருவரு மிறைவ னுள்ளத் தொருவரா யினிய ரானார்.

### அன்பின் ஒருமைப்பாடு

31.மன்னவ னாவி யாவார் மகளிரம் மகளிர் தங்கள்
இன்னுயி ராகி நின்றா னிறைமக னிவர்க டங்கட்
கென்னைகொ லொருவர் தம்மே லொருவர்க்கிங் குள்ள மோட
முன்னவன் புணர்த்த வாறம் மொய்ம்மலர்க் கணையி னானே.

### மங்கையர் மன்னனைப் பிணித்து வைத்தல்

32.சொற்பகர்ந் துலகங் காக்குந் தொழில்புறத் தொழிய வாங்கி
மற்பக ரகலத் தானை மனத்திடைப் பிணித்து வைத்தார்
பொற்பகங் கமழப் பூத்த தேந்துணர் பொறுக்க லாற்றாக்
கற்பகக் கொழுந்துங் காம வல்லியங் கொடியு மொப்பார்.

### மாலாகி நிற்கும் மன்னன்

33.மங்கைய ரிருவ ராகி மன்னவ னொருவ னாகி

அங்கவ ரமர்ந்த தெல்லா மமர்ந்தருள் பெருகி நின்றான்
செங்கயல் மதர்த்த வாட்கட் டெய்வமா மகளிர் தோறும்
தங்கிய வுருவந் தாங்குஞ் சக்கரன் றகைமை யானான்.

34.முற்றுநீர் வளாக மெல்லா முழுதுட னிழற்று மூரி
ஒற்றைவெண் குடையி னீழ லுலகுகண் படுப்ப வோம்பிக்
கொற்றவ னெடுங்க ணார்தங் குவிமுலைத் தடத்து மூழ்கி
மற்றவற் கரசச் செல்வ மின்னண மமர்ந்த தன்றே.

## போதனபுரம்

நீர்மையும் வளப்பமும் உடைய சுரமை நாட்டின் நடுவில் அந்நாட்டு அரசன் வீற்றிருந்து வாழ்வதற்கு ஏற்ற இடமாக அமைந்து, சிற்ப நூல் வல்லவர்களால் அமைக்கப்பட்ட, அழகு விளங்குகின்ற மதிலினால் சூழப்பட்ட, போதனம் என்னும் ஊர் தேவருலகத்தை இகழ்ந்து நகைப்பதைப் போன்று பலவகைச் சிறப்புகளை உடையது. தேவருலகத்தைக் காட்டிலும் ஒரு நல்ல நகரம் நிலவுலகத்தில் உள்ளதெனில் அது போதனம் என்னும் நகரே ஆகும்.

## நகரத்தின் அமைதி

சங்குகள் மேய்கின்ற அலைகளாகிய அரணையுடைய பெரிய கடலாகிய தடாகத்தினிடத்திலே மலர்ந்த அழகிய இடத்தையுடைய பெரிய நிலவுலகம் என்று கூறப்பெறும் தாமரைப்பூவின் அழகிய ஒளியமைந்த சிவந்த கண்களையுடைய திவிட்டன் பிறத்தற்கிடமான சுரமை நாடெங்கிலும் இனிய பொகுட்டினிடத்திலே தங்கியிருக்கின்ற திருமகளினது வடிவத்தைக்கொண்ட நல்ல தன்மையுடையதாயிருந்தது அப்போதனமாநகரம்.

## அகழியும் மதிலரணும்

சிவந்த ஒளியையுடைய கதிரோனது திண்தேர் வலிய தேரிற்பூட்டப் பெற்ற குதிரைகள் தமது கால்கள் மெலியும்படி ஊன்றி ஏறுதற்கிடமாய், முகிலை இடையிலே உடைக்கின்ற அழகிய முடிகளையும், விண்ணைக் கீறுகின்ற கோபுரங் களையுமுடைய அழகிய ஒளியை உடைய மதில், அவ்விடத்தே ஒப்பற்ற அகழியாற் சூழப்பெற்று

விளங்குகின்ற காட்சி, கடலிடையே வெம்மையான ஒளிகள் பரவப்பெற்ற ஒரு மேடையை மேலாக அமைத்து வைத்ததைப்போன்றிருந்தது அகழியும் மதிலரணும்.

## மதிற்புறத்தே அமைந்த யானைகட்டுமிட மாண்பு

இரும்பினாற் செய்யப்பெற்ற சங்கிலிகளால், மாமரங்களின் நீழலினுள்ள இருப்பெழுக்களிலே கட்டப்பெற்றுள்ள யானைகளுக்கு பாகர் கரும்புகளையும் பிற உணவுத்திரள்களையும் உண்பிக்கின்ற ஒலி கலந்த நிரம்பிய சோலைகளிலே அரும்புகளின் இடையிடையே மலர்ந்துள்ள நாள்மலர்களின்; அகவிதழினிடத்துள்ள தேனைகுடித்துவிட்டு ஒலிக்கின்ற வண்டுகளுடனே நெருங்கி, அந்நகரத்தைச் சூழ்ந்த மதில்களின் இடமெல்லாம் விளங்கும்.

## மாடங்களின் மாண்பு

மை தீட்டப்பெற்றிருத்தலோடு கோடுகளுமுடையவாய்க் குளிர்ந்து விளங்குங் கண்களையுடைய பெண்கள், மானின் மருண்ட தன்மையைத் தம்மிடத்தே பெற்றதன்றிக் களிப்பினையுமுடைய பார்வையால், தங்களுடைய தேன் பொருந்திய அழகிய மாலையையுடைய கணவர்களுடைய தோள்களைத் தழுவி மகிழும் மாளிகையானது மணங்கலந்த காமவல்லி கற்பகமரத்தைத் தழுவிய இடத்தைத் தன் உச்சியிலே உடையதும் வானத்தை நெருங்கி, அக்காமவல்லியும் கற்பகமும் மலரப்பட்டுத் தோன்றாநின்ற மணிவரை அழகிய குன்றத்தை ஒப்பதாம் என்கிறார் ஆசிரியர்.

அகிற்கட்டை புகைக்கப்படுதலினால் எழுகின்ற மிகுந்த புகையானது முகில்கள்போல அசைந்து தோன்றுதலாலும், மத்தளங்கள், முகில் இசை என முகிலினது இடியைப்போல ஒலித்து மிகுதலாலும், ஓவியத்திலெழுதப்பெற்ற பூங்கொடியை ஒத்தவர்களான மகளிர், மின்னல்போல விளங்கிக்காணப் படுதலாலும் நகரத்திலே உயர்ந்து விளங்கும் வீடுகள், மலைகளோடு மாறுபட்டுத் தோன்றின.

## மாடங்களின் சிறப்பு

நோக்குகின்றவர்களுடைய கண்களையெல்லாம் தம் அழகினால் தம்மிடம் இழுப்பனவான பொன்னினாலாகிய கூடங்களும் வெண்மையான திங்கள் ஒளியைப்போன்ற ஒளியை வீசுவனவாகிய வெள்ளியினாலாகிய கூரையும் குளிர்ந்த திங்கள் ஒளியை, திங்கள் ஒளிக்கற்கள் பதிக்கப்பட்ட தரையிடங்களும் பொருந்தி

கொடுங்கைகளையுடைய மாளிகைகள், (இங்ஙனம் பொன் முதலியவற்றால் இயற்றப்பட்டிருந்தனவேயன்றி) மண்ணினால் இயற்றப்பெற்றதில்லை என்கிறார்.

### முழவொலி முதலியன

மாளிகைகளிலே அழகிய மத்தளங்களின் ஒலியும் இணை அதிரும் ஓசையும் கூத்தாடுகின்ற இளமகளிரது இணைச் சிலம்புகள் ஒலிக்கின்ற ஒலியும் பாடுகின்றவர்களது இசைப்பாட்டொலியும் எல்லாவிடங்களினும் நிறைந்து பெருமை பொருந்திய அந்தப்போதனமாநகரமாகிய பாண்மகள், மாடங்களாகிய பலவகை அணிகலன்களையும் தன்மேல் அணிந்துகொண்டு பாடுவதை ஒத்திருக்கும்.

### வண்டுகளின் மயக்கம்

நல்கூர்ந்த வாயினையுடையவண்டுக்கூட்டங்கள், மாடங்களில் தாழியில் வைத்துவளர்த்த குவளை மலரும், குளிர்ந்த கூந்தலையுடைய பெண்களின் மாவடுவையும் வாளையும்போன்ற நீண்ட கண்களும் ஆகிய இவற்றிடையே வேற்றுமையுணரமாட்டாது பேதுற்று கண்களிடத்திற்கும் மலர்களிடத்திற்குமாக அலைந்து யாழும் விரும்புதற்குக் காரணமான இனிய குரலாலே ஆரவாரஞ்செய்து மெலிவடையும் என்கிறார் ஆசிரியர்.

### கடைவீதி

படிகக்கற்களை நிரல்பட அறுத்து இயற்றப்பட்ட பலகைகளாற் செய்த மேடைகள் ஓரத்திலே பொருந்தப்பெற்ற பெரிய கடைகளின் தெருக்களிலெல்லாம், அசைகின்ற பூமாலைகளும், அவற்றில்மொய்க்கின்ற வண்டுகளும் காணப்படுவதால் அக்கடைத் தெருக்கள் எல்லாச் செல்வங்களையும் தன்னிடத்தேகொண்ட அழகிய கற்பகச் சோலையையும் ஒத்திருந்தது.

### சிலம்பொலிக்கு மயங்குஞ் சிறுஅன்னங்கள்

கருங்குவளை மலரின் தன்மையமையப்பெற்ற கரிய பெரிய கண்களையுடைய பெண்களினது அழகிய விளக்கத்தையுடைய காலணிகள், அகிற்புகைபொருந்திய வீடுகளிலே ஒலிக்கக் கேட்கும்பொழுதெல்லாம் ஆண்டு வளர்க்கப்படும் தூவியையுடைய சிறந்த பெடையன்னங்கள், தம் துணையாகிய ஆண் அன்னங்களை

நீங்கினவோ என்று தடாகத்திலே உள்ள இளமையுடைய அன்னங்கள் மயங்கி வருந்துதலையடையும் என்கிறார்.

## அரசர் தெரு அழகு

நீர்நிலையின்கண் உண்டான அழகிய பூங்கொத்துக்கள், மலர்ந்துள்ள மாலை அணியப்பெற்ற கூந்தலையுடைய பெண்கள், நல்ல தன்மை யமைந்த சிலம்பென்னும் காலணியை அணிந்த கால் அடிகளில் பொருந்தும்படியாக ஊட்டப்பெற்ற செம்பஞ்சுக் குழம்புதோயப்பட்டு அந்நகரத்து அரண்மனைத் தெருக்கள், புலத்திடத்தே தாமரைமலர் மலரப்பெற்றாற் போல விளங்கியது.

## செல்வச் சிறப்பு

தேன் நிலவாநின்ற மணம்பொருந்திய குவளைமலர்களின் தொகுதியும், வெண்மையான திங்கள்ஒளியின் கூட்டம் என்று சொல்லும்படியாக மிளிரும் முத்துமாலைகளும் அழகிய வெண்ணிறமுடைய மல்லிகைமலர்கள் விரவிய மலர்மாலைகளும் பெருமைபொருந்திய சிறந்த அந்த நகரத்திலமைந்த முச்சந்தி முதலிய கவர் வழிகட்கு அரும்பொருள்களல்ல அவை யாண்டும் மிகுந்து கிடக்கும் எண்பொருள்களே.

## மாளிகைகளில் உணவுப்பொருள்களின் மிகுதி

மணம் மிகுந்து இனிமையுள்ளனவான மூன்று வகை நீர்களும் இனிய பலாமரங்களில், மேன்மையாகப் பழுத்து அளிந்தனவாகிய சுளைகளும் வேரியும் கனிந்து முதிர்ந்த மாம்பழங்களின் திரளும் மதுப்பெய்யப்பெற்ற மூங்கில் குழாய்களின் தொகுதியும் சில வெள்ளிய மாடங்கள், மிகுதியாகப் பெற்றுள்ளன. ஆண்களும் பெண்களும் காலையும் மாலையும் அழகு செய்து இந்திரலோகத்தை யொத்திருந்தனர்.

## பயாபதி மன்னன் மாண்பு

அத்தகைய சிறப்புடைய போதன நகரத்தையுடைய மன்னன் எத்தகையன் எனின்? அவன் பயாபதி என்று சொல்லப்பெறுகிற பேரையுடையவனும் வெற்றியைக் கொடுக்கின்ற வேலாயுதத்தையும் மணிகள் இழைத்த முடியையும் உடைய அரசர்க்கரசனும், தன்னுடைய உயர்ந்த ஒப்பற்ற வெண்கொற்றக் குடைநிழலிலே வாழ்கின்ற உலகமாகிய உடலுக்குத் தான் ஓர் உயிராக விளங்குகின்ற பெருமையை உடையவனும் ஆவான்.

## பயாபதி மன்னன் சிறப்பு

அழகிய படையை உடைய அந்தப் பயாபதிஅரசன், எண்ணிப் பார்க்கின்றவர்களது எண்ணத்துக்குப் புலப்படாத செய்கைகளையுடையவன். தன்னை நெருங்கியுள்ளவர்களிடத்திலும் விலகியுள்ளவர்களிடத்திலும் ஒரே தன்மையாகச் செல்லும் ஆணையையுடையவன். நட்பாளர் பகைவர் என்று சொல்லப்பெறுகின்ற இவர்கட்கு எக்காலத்தினும், முறையே தண்ணளியையுங் கொடுமையையும் உடையவன் ஆவான்.

## மக்கட்குப் பகையின்மை

பகைவர்கட்கு அச்சத்தையுண்டாக்குகின்ற வேற்படையை உடைய அப்பயாபதி மன்னனானவன், அரசாட்சி செய்து உலகத்தைப்புரந்த நாளிலே காமனுடைய உள்ளத்தைக் கவருங்கணை நாட்டின் எல்லாவிடங்களினும் பொருந்திற்றேயல்லாமல் வெற்றிமாலையை அணிந்த வேற்படையை உடைய போர் தீயைப் போன்ற அழகிய கொலைக்கருவியானது நாமம் புகழ்மிக்க கடலையெல்லையாகவுடைய உலகத்துயிர்களை வருத்துதல் ஒரு சிறிதும் இல்லையாகும்.

## குடிகளை வருத்தி இறை கொள்ளாமை

அந்நாட்டு மக்கள் தங்கள் வருவாயின் ஆறில் ஒரு பகுதியை அரசனுக்குக் கொடுப்பது அறமாகும் என்று அன்புடன் கொண்டுவந்து கொடுத்தால் அல்லாமல், மக்களுக்குத் துன்பஞ்செய்து ஒரு பொருளை உலகிலே விரும்பிப் பெறுவது இல்லை. பகையினால் மாறுபாடு கொண்டுள்ளவர் களையும் தன்பணிவுடைமையினாலே தன்வழிப்படுத்துவதல்லாமல் சினந்துபோய், எத்தன்மையுடையார்களையும் கொல்லுதல் இல்லை அத்தகையது பயாபதி அரசாட்சி.

## மன்னனின் முந்நிழல்

தீயிலிட்டுக்காய்ச்சி அடிக்கப்பட்டு ஒளியைச்செய்கின்ற கூர்மையுள்ள வேற்படையையுடைய பயாபதி மன்னனது கால் அடிகளின் நிழல், பிறநாட்டுச் சிற்றரசர்களைப் பாதுகாக்கும். சிறந்த ஒளியையுடைய முடியின் நிழல் சிறந்த முனிவர்களது திருவடிகளிலே படியும். வெண்கொற்றக் குடையின் நிழல், உலகத்திலுள்ள உயிர்த் தொகைகளெல்லாம் இன்பத்தையடையுமாறு சிறந்து நிற்கும்.

## இருவகைப்பகையும் அற்ற ஏந்தல்

தன்னுள் நிலைபெற்ற காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் உட்பகைகள் ஆறும், நிலவுலகத்தில் பொருந்திய வெல்லுதற்கரிய இல்லாதபடியால்; தன்னையும் தரையையும் தன்னுயிரையும் உலகத்துயிர்களையும் காப்பாற்றுவான் என்பதைப் பற்றி, அவ்வரசனுடைய செயலிலே நாம் இன்னமும் ஐயப்படுதல்வேண்டுமோ?

## அரசியல் சுற்றத்துடன் உலகப் பொதுமை நீக்குதல்

முனிவர் மெய்ப்பொருள் உண்மையான பொருள்களை விரித்துக் கூறுகின்ற சிறப்பமைந்த அறநூற்களையுணர்ந்த அமைச்சர்கள் முதலியோர், தன்னையடுத்து நெருங்கிய அரசியல் சுற்றமாக் களித்து ஒலிக்கின்ற நீரில் வாழ்கின்ற பல அன்னப்பறவை களுடனே அரச அன்னம் விளங்கி நிற்பதைப்போல நிலவுலகத்தைப் பல அரசர்களுக்கும் பொதுவாந் தன்மையினின்று நீக்கித் தனதாக்கினான்.

## அரசர் சுற்றத்தின் இயல்பு

அரசனுக்கு அடுத்ததாகிய அவனுடைய அரசர் சுற்றமாகிய அமைச்சர் படைஞர் முதலியோரது தன்மையை காய்ச்சிக் கூராக்கப்பட்ட நுனியுள்ள கணைகளையுடைய அரசன், குறிப்பைத் தெரிந்து கொண்டால் அல்லாமல், இதை நாம் சொல்வோமென்று எண்ணுகின்ற எண்ணத்தையுடையவர்களல்லர். அயலார்கள் அஞ்சுதலில்லாத சொல்லையுடையவர்கள்.

## இராசமா தேவியர் பெருமை

பயாபதி மன்னனுடைய மனைவியர், மகரமீன் வடிவாகச் செய்யப்பட்ட நீண்ட குண்டலங்களையணிந்தவர்கள். தாம் பிறந்த குடியையும் புகுந்த குடியையும் புகழ்பெற்று விளங்கும் படியாகச் செய்யப் பிறந்தவர்கள். இம்மருங்குல் கண்டவர்கள் இவ்விடையானது ஒடிந்துபோய்விட்டது என்று கூறிவருந்துமாறு பருத்துள்ள, இளங்கொங்கைகளையுடையவர்கள்; மகளிர்க்குரிய கலைகளில் முதிர்ச்சி பெற்றவர்கள் ஆவர்.

## அரசியர் இயல்பு

செம்பஞ்சூட்டினும் வருந்தும் மெல்லிய அடிகளையுடையவர்கள். அகன்ற அல்குலையுடையவர்கள். செந்நிறத்தேமல் படரப்பெற்ற இளங்கொங்கைகளால் இடையைக் கெடுத்தவர். அழகிய இலையையுடைய செழித்த வஞ்சிக்கொடி அழகிய ஒளியையுடைய பூங்கொத்துக்கு வளைந்தாற் போன்ற மென்மைத்தன்மையை உடையவர்கள்.

தம்முள்ளத்தே காமமாகிய பூங்கொத்து அரும்பற மலரப்பெற்றவர்; ஒத்து ஒளிமிக்க கற்புடையவர்கள், மாலைகளுக்கு அமைந்து, விளங்கிப்படிந்து இருண்டுள்ள கூந்தலையுடையவர்கள், கரியபுகையினூடே ஒளிர்கின்ற தீப்போன்று, கூந்தலினூடுஒளிவிட்டு விளங்கும், தோள்களையுடையவர். அழகினோடு கலந்து மையுண்டு மதர்க்கும் வாள்போன்ற கண்ணையுடையவர்கள்.

## பட்டத்து அரசிகள்

அத்தகையோர் பயாபதி மன்னன் தேவிமார் அவ்வாயிரம் மனைவியர்க்குள்ளும், சிறந்த மனைவியர் ஆனவர்கள் மிகப்பெரிய விண்ணுலகத்தினின்றும் இறங்கினாற்போன்ற சிறப்பையுடையவர்களும், செந்நிறமுடைய தாமரை மலரில் வாழ்கின்ற திருமகளைப் போன்றவரென்று கூறப்படும் உவமைச் சொல் எடுத்துக்கூறற்கு இடமில்லாதவர்களும் ஆகிய இரண்டுபேர் உளர் ஆனார்கள்.

ஓங்கிய பெரிய கடலைப்போலும் அழகிய படையை உடைய அரசனை வருத்தப்படுத்தும். அவ்விருமங்கையரின் இனியமொழிகள், இனிய கரும்பில், தேவர்களுணவாகிய அமிழ்தத்தைத் கலந்து தேனையும் விரவி, பிழிந்தசாற்றைப் போன்றிருக்கும். அவ்விருதேவியர்களுள் மிகப்பெருத்துத் திரண்டகொங்கை களையுடைய மிகாபதி என்பவள், முதலாவது பட்டத்தரசியாவாள். பிறரால் தாங்கமாட்டாத கற்புநலத்தையுடைய மிகாபதியின் தங்கையாகிய சசி என்பவள். சசியோடு இந்திரன் மனைவியாகிய இந்திராணியோடு ஒப்புக்கூறத் தக்கவளாவள்.

## மங்கையர்க்கரசியராகும் மாண்பு

பொன் மலர்களையுடைய அழகிய கொம்பைப்போன்ற மணம்பொருந்திய கூந்தலையுடைய அந்த இரண்டு மங்கையர்களும் அழகிய குழையென்னுங்

காதணியையுடைய மாதர்களுக்கெல்லாம் சிறந்தவர்களாக விளங்குமாறு அமைந்து நின்றார்கள்.

வசந்தகாலத்திலே மாந்தளிர் அசோகந்தளிர் என்னும் இரண்டு தளிர்களுமே தளிர்த்தலைச் செய்து அக்காலத்துத்தோன்றிய பிற தளிர்களையெல்லாம், அழகு செய்விக்க விளங்கும். பயாபதி மன்னனுடைய உள்ளத்தை உருகுமாறு செய்கிற பெண்தன்மைச் சிறப்பினாலும் தினந்தோறும் ஒருவரை ஒருவர் பொருந்தியிருந்தாலும், புதியனவாகத் தோன்றுகின்ற மழலைத்தன்மையுடைய அழகிய சொற்களாலும், மிகாபதி சசி என்ற இருமனைவியரும் செல்வத்திற்குரியவளாகிய மலர்மகள், அறிவையுண்டாக்கும் கலைமகள், என்று கூறப் பெறுகின்ற இவ்விருவரையும் போன்று அரசனுடைய மனத்தகத்திலே இருவர்களாக இல்லாமல் ஒருவரைப் போன்றே இனிய தன்மையுடையவர்கள் ஆனார்கள்.

## அன்பின் ஒருமைப்பாடு

மிகாபதியும் சசியும் பயாபதி மன்னனுடைய உயிர் ஆவார்கள். பயாபதி மன்னன். அம்மகளிர் தங்கள் அப்பெண்களுடைய இனிய உயிராகப் பொருந்தி அமைந்தான். இம்மன்னனுக்கும் இவனுடைய மனைவியர்களுக்கும், இப்படி ஒருவர்மேல் ஒருவர்க்கு மனது செல்ல பழைமையுள்ளவனாகிய வலிய மலர்க்கணைகளையுடையவனான அந்தக்காமன், புணர்த்த ஆறு செய்தவகை எவ்வாறோ? என்பதாகும்.

## மங்கையர் மன்னனைப் பிணித்து வைத்தல்

மணம்வீச தன்னிடத்திலே அலர்ந்த அழகாகிய பூங்கொத்தைத் தாங்கமாட்டாது கற்பக மரத்தின் இளந்தளிரையும் காமவல்லி என்னும் அழகிய பூங்கொடியையும் ஒத்தவர்களான அவ்விரண்டு மங்கையரும் கட்டளைச் சொற்களைக் கூறி உலகத்தைப் பாதுகாக்கும் வேலையை அமைச்சர் முதலாயினாரிடத்திலே நீக்கி, மல்தொழில் தன்மையை வெளிப்படுத்துகின்ற அகன்ற மார்பையுடையவனான பயாபதி மன்னனை உள்ளத்திலே கட்டி வைத்தார்கள்.

## மாலாகி நிற்கும் மன்னன்

மனைவியர் இரண்டு பேராகி, அவர்கட்குரிய தலைவன்தான் ஒருவனேயாகி, அத்தன்மையை உடைய அவர்கள் விரும்பிய எல்லாவற்றையும் தானும் விரும்பி,

அவர்களிடத்திலே சிறந்த அன்பு பெருகி நின்றவனானான் பயாபதி மன்னன். சிவந்த கயல்மீன் போன்றன ஒளிபொருந்திய கண்களையுடைய தெய்வத்தன்மை யுள்ளவர்களாகிய பூமகள் நிலமகள் என்னும் இருவரிடத்தும் ஒரே தன்மையாகப் பொருந்துகின்ற வடிவத்தைக் கொள்ளுகின்ற உருளைப்படையையுடைய திருமாலின் தன்மையுடையவன் ஆனான்.

பயாபதி மன்னன் கடல்நீரால் சூழப்பெற்ற இடங்களை எல்லாம், சிறிதும் எஞ்சவிடாமல் பெருமை பொருந்திய ஒப்பற்ற வெண்கொற்றக் குடையின் நிழலிலே உலகத்துயிர்களானவை கண்வளரும்படியாகப் பாதுகாத்து நீண்ட கண்களையுடையவர்களின் திரண்ட கொங்கைகளிடத்திலே படிந்து நிற்குமாறு அம்மன்னனுக்கு அரசாட்சிப் பொருளானது இவ்வாறு பொருந்துவதாக அமைந்துள்ளது.

இவ்வாறு சூளாமணிக் காப்பியத்தில் நகரச்சருக்கத்தில் போதான புரத்து அழகும் சிறப்பும் பயாபதி மன்னனின் சிறப்பும், ஆட்சிபெருமையும் இருமனைவிகளின் தன்மையும் அழகுற எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

## தொகுப்புரை

திருத்தக்கதேவர் இயற்றிய சீவகசிந்தாமணியில் சீவகன் போரில் வெற்றிபெற்று ஏமாங்கத நாட்டைக் கைப்பற்றியவுடன் இராசமாபுரம் வந்தடைகின்றான் அப்பொழுது மக்கள் அனைவரும் அவனைவரவேற்று மகிழ்தனர் ஆனால் கட்டியங்காரனைச்சேர்ந்த பெண்கள் அவர்கள் நலம் அழிந்து துன்புற்றனர். சீவகன் அவர்களுக்கு பொருளுதவி கொடுத்து அருள்செய்தான். பின் சீவகனுக்கு முடிசூட்டுவிழா ஏற்பாடு செய்தனர். அப்பொழுது தேவலோகத்தில் இருந்து சுதஞ்சனன் வந்து முடிசூட்டுவிழாநிகழ்த்தி வைத்தல் அதன்பின் சீவகன் நல்லாட்சிபுரிதல், மக்களுக்கு வரிவிலக்கு செய்தல் போன்ற நல்ல திட்டங்களை செயல்படுத்துதல் மக்கள் மகிழ்வோடு இருத்தல் என்று ஆசிரியர் கூறியுள்ளார்.

சூளாமணிக்காப்பியம் சுரமைநாட்டு இளவரசன் திவிட்டன். இதில் நகரச்சருக்கம் என்னும் தலைப்பில் அமைந்த பாடப்பகுதியில் போதனநகரத்தின் சிறப்பு, அமைப்பு மாடங்களின் சிறப்பு, வண்டுகளின் ஒலி, அரசரின் தெருஅழகு பயாபதி மன்னனின் மாண்பு, அரசர் சுற்றத்தின் இயல்பு, இருமனைவியர்க்கும் திருமால்போன்று இயல்பு கொண்ட மன்னன் என்று நகரச்சருக்கத்தின்வழி நாம் அறிந்து கொள்ளலாம்.

## அருஞ் சொற்பொருள்

1.இரும்பிடு தொடரின் - இரும்பினாற் செய்யப்பெற்ற சங்கிலி

2.மான் அளாம் - மானின் மருண்ட

3.மாடம்-நகரத்திலே உயர்ந்து விளங்கும் வீடுகள

4.ஆர்த்து -ஆரவாரஞ்செய்து

5.காவிவாய் கருங்கணார் - கருங்குவளை மலரின் தன்மை யமையப்பெற்ற கரிய பெரிய கண்கள்

6.இள அனம் மயங்கும் - இளமையுடைய அன்னங்கள் மயங்கும்

7.குழம்பு தோய்ந்து - செம்பஞ்சுக் குழம்புதோயப்பட்டு

8.அம் தானை மன்னன் - அழகிய படையை உடைய பயாபதி

9.வாள்கணார் - வாள்போன்ற கண்ணையுடையவர்கள

10.வயந்தகாலத்து – வசந்தகாலத்திலே

11.மங்கையர் இருவர் ஆகி - மனைவியர் இரண்டு பேராகி

12.சக்கரன் தகைமை ஆனான் - உருளைப்படையையுடைய திருமாலின்தன்மையுடையவன் ஆனான். கொற்றவன் - பயாபதி மன்னன்

# அலகு - 2

## வினாக்கள்

## பகுதி – அ

### ஒருமதிப்பெண் வினாக்கள்

1.சீவகசிந்தாமணில் அமைந்துள்ள விருத்தப்பாக்களின் எண்ணிக்கை எத்தனை?

அ) 3145 ஆ) 3245 இ) 3155 ஈ) 3165

விடை: அ) 3145

2.சீவகன் ஆட்சி செய்வதைப்பற்றிக் கூறும் இலம்பகம் எது?

அ) பூமகள் இலம்பகம் ஆ) கோவிந்தையார் இலம்பகம்

இ) மண்மகள் இலம்பகம் ஈ) நாமகள் இலம்பகம்

விடை: அ) பூமகள் இலம்பகம்

3. பூமகள் எத்னையாவது இலம்பகம்?

அ) 11 ஆ) 12 இ) 10 ஈ) 13 விடை: அ) 11

4.'பொன்னிங்குக் கொண்டு புறம்போகியும் வாழ்மின் என்றான்' - இது யாருடைய கூற் று?

அ) சீவகன் ஆ) பதுமுகன்

இ) நந்தட்டன் ஈ) கட்டியங்காரன் விடை: அ) சீவகன்

5. தூய கண்ணாடிப் போன்ற மார்புடையவன் யார்?

அ) சீவகன் ஆ) பதுமுகன்

இ) நந்தட்டன் ஈ) கட்டியங்காரன் விடை: அ) சீவகன்

6. சூளாமணியின் ஆசிரியர் யார்?

அ) தோலாமொழித்தேவர் ஆ) சீத்தலைச்சாத்தனார் இ) திருத்தக்கதேவர்

ஈ) நாதகுத்தனார் விடை: அ) தோலாமொழித்தேவர்

7.சூளாமணியில் இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை எவ்வளவு?

அ) 1850 ஆ) 2131 இ) 3145 ஈ) 1450 விடை: ஆ) 2131

8.சுரமை நாட்டின் தலைநகரம் எது?

அ) போதனபுரம் ஆ) இராசமாபுரம் இ) மகாபலிபுரம் ஈ) அரசமாபுரம்

**விடை:** அ) போதனபுரம்

9."கண்ணெலாங் கவர்வன கனக கூடமும்

வெண்ணிலாச் சொரிவன வெள்ளி வேயுளும்" - என்ற பாடல் வரி இடம்பெறும் நூல் எது?

அ) சீவகசிந்தாமணி ஆ) மணிமேகலை

இ) சிலப்பதிகாரம் ஈ) சூளாமணி **விடை:** ஈ) சூளாமணி

10.தமிழ்த்தாயின் தலையில் சூடும் அணிகலனாக விளங்கும் நூல்

அ) சூளாமணி ஆ) வளையாபதி

இ) மணிமேகலை ஈ) சீவகசிந்தாமணி **விடை:** அ) சூளாமணி

## பகுதி – ஆ

### ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1.சீவகனுடைய வெற்றியை எவ்வாறு பெண்கள் புகழ்ந்து வரவேற்றனர்?

2. சீவகனின் ஆட்சிச்சிறப்பு குறித்து எழுதுக.

3. கட்டியங்காரன் அரண்மனையில் இருந்த பெண்களின் துன்பநிலை குறித்து எழுதுக.

4.சீவகன் முடிசூட்டிக்கொண்ட பாங்கினை விவரிக்க.

5. போதான புரத்தின்அமைப்பும் சிறப்பும் குறித்து எழுதுக.

6.போதான புரத்தில் ஏற்படும் பல்வேறு ஒலிகள் குறித்து எழுதுக.

7.சூளாமணி காப்பியத்தில் இடம்பெறும் நகரத்தின் செல்வச்சிறப்புக் குறித்து எழுதுக.

8.பயாபதி மன்னனின் சிறப்பு குறித்து எழுதுக.

## பகுதி – இ

### பத்து மதிப்பெண் வினாக்கள்

1.கட்டியங்காரனை வென்ற சீவகனின் செயல்களை விளக்குக.

2. சீவகசிந்தாமணியில் இடம்பெற்றுள்ள பூமகள்இலம்பகம் குறித்துக் கட்டுரை வரைக.

3. சூளாமணி காப்பியத்தில் இடம் பெறும் நகரத்தின் செல்வச்சிறப்பும் அமைப்பும் குறித்து விளக்குக.

4.சூளாமணிகாப்பியத்தில் பயாபதி மன்னின சிறப்பும் பெருமையும் குறித்து எழுதுக.

---

## பார்வைநூல்

காப்பியக்கொள்கை, து.சீனிவாசன், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1985.

சீவகசிந்தாமணி – ஞா.மாணிக்கவாசகன்

தமிழ் வலைதளமுகவரி

1. http://ta.m.vikippedia.org
2. https://nearchathi.wordpress.com
   www.tamilvu.org

# அலகு - 3

## கம்பராமாயணம்

### கடல்தாவு படலம்

## கம்பராமாயணம்

மேலைநாட்டுக் காப்பியங்களான **இலியட், ஒடிசி** ஆகியவற்றிற்கு இணையாகத் தமிழ்க் காவிய உலகில் சிறந்து விளங்குவது **கம்பரின் இராமாயணம்.** வடமொழியில் **வான்மீகி** முனிவர் இயற்றிய இராமாயணம் இந்திய மொழிகள் பலவற்றிலும் தழுவலாகவும் மொழிபெயர்க்கப்பட்டும் எழுதப்பட்டுள்ளது. தாம் இயற்றிய இராமாயணத்திற்குக் கம்பர் இட்ட பெயர் இராமாவதாரம் ஆகும். வடமொழி இராமாயணக் கதையைத் தழுவி தமிழ் மரபிற்கேற்ப மாற்றங்களும், ஏற்றங்களும் செய்து கம்பர் படைத்துள்ளார். இன்று இராமாயணம் என்றால் அது கம்பராமாயணத்தையே குறிக்கும். இராமனது வரலாற்றைக் கூறும் நூல் இராமாயணம் எனப்பட்டது. ஆறு காண்டங்களை கொண்டுள்ளது. அவற்றில் சுந்தரகாண்டத்தில் உள்ள பகுதி கடல்தாவு படலம் பாடமாக அமைந்துள்ளது.

### கம்பர்

1. கம்பராமாயணம் எனும் நூல் குலோத்துங்க சோழனின் ஆணைப்படி கம்பர் எனும் பெரும் புலவரால் இயற்றப்பட்ட தமிழ் நூலாகும்.

2. இந்நூல் இந்து சமய இதிகாசங்கள் இரண்டினுள் ஒன்றான இராமாயணத்தினை மூலமாகக் கொண்டு இயற்றப்பட்டதாகும்.

3. கம்பரால் இயற்றப்பட்ட கம்பராமாயணம் ஒரு வழி நூலாகும்.

4. இது வடமொழியில் வால்மீகி என்பவர் இயற்றிய இராமாயணத்தினைத் தழுவி எழுதப்பட்ட நூல் ஆகும்.

5. இது ஒரு வழி நூலாகவே இருந்தாலும் கம்பர் தனக்கே உரித்தான பாணியில் கருப்பொருள் சிதையாமல் தமிழ் மொழியில் இயற்றியுள்ளார்.

6. கம்பராமாயணம் பாலகாண்டம், அயோத்தியாகாண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தாகாண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம் எனும் ஆறு காண்டங்களையும் 118 படலங்களையும் உடையது.

### கம்பராமாயணம் - கடல்தாவு படலம்

அனுமன் மகேந்திரமலையிலிருந்து தென்பெருங்கடலைக் கடந்து பவளமால் வரையில் பாய்ந்த செய்தியைக் கூறுகிறது. இப்படலத்தில் மைந்நாகன், சுரசை, அங்காரதாரை என்னும் மூன்று பாத்திரங்களை அனுமன் சந்திக்கின்றான். பேருருக் கொண்டு அனுமன் கடல் கடந்து செல்லும்போது அவனுக்கு உதவி செய்வதற்காக மைந்நாகமலை கடலிலே தோன்றி, அனுமனைத் தன்மீது தங்கி இளைப்பாறிச் செல்ல வேண்டுகிறது. அனுமன், ‘இராமன் திருத்தொண்டு செய்யும் நான் ஓய்வை விரும்பேன். திரும்பி வரும்பொழுது உன்னைக் காண்கிறேன்’ என்று சொல்லிக் கடந்து செல்கிறான். கடந்து செல்கிற அனுமனைத் தேவர்கள் ஏவலால் சுரசை தடுக்கிறாள்.

அவள் ‘எனக்குப் பசியாக இருக்கிறது. உன்னை உண்பேன்’ என்று வாயைத் திறக்கிறாள். அனுமன் அவள் வாய்க்குள் புகுந்து வெளியே வருகிறான். சுரசையை வென்ற அனுமன் அங்கார தாரையைச் சந்திக்கின்றான். அங்காரதாரை அனுமனை விழுங்குகின்றாள். அனுமன் அவள் உடலைப் பிளந்து வெளிப்படுகிறான். அரக்கி இறக்கிறாள். தேவர்கள் அனுமனை வாழ்த்துகின்றனர். அனுமன், வருகின்ற இடையூறுகள் எல்லாம் நீங்க வேண்டும் என்று கருதி, இராம நாமத்தைத் தியானிக்கின்றான். மூன்று தடையைக் கடந்த அனுமன் பவளமால் வரையில் பாய்ந்து இலங்கையின் வளங்களை நோக்குகிறான். இவற்றில் நம் பாடப்பகுதியில் இடம்பெறும் பாடல்கள் குறித்துக் காண்போம்.

### கடவுள் வாழ்த்து

அலங்கலில் தோன்றும் பொய்ம்மை அரவு என, பூதம் ஐந்து
விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபாடு உற்ற வீக்கம்,
கலங்குவது எவரைக் கண்டால்? அவர், என்பர் - 'கை வில் ஏந்தி,
இலங்கையில் பொருதார் அன்றே, மறைகளுக்கு இறுதி ஆவார்!'

ஆண்தகை, ஆண்டு, அவ் வானோர் துறக்க நாடு அருகில் கண்டான்;
'ஈண்டு, இதுதான்கொல் வேலை இலங்கை?' என்று ஐயம் எய்தா,
வேண்டு அரு விண்ணாடு என்னும் மெய்ம்மை கண்டு, உள்ளம் மீட்டான்;
'காண் தகு கொள்கை உம்பர் இல்' என, கருத்துள் கொண்டான். 1

கண்டனன், இலங்கை மூதூர்க் கடி பொழில் கனக நாஞ்சில்
மண்டல மதிலும், கொற்ற வாயிலும், மணியின் செய்த
வெண் தளக் களப மாட வீதியும், பிறவும் எல்லாம்;
அண்டமும் திசைகள் எட்டும் அதிர, தோள் கொட்டி ஆர்த்தான். 2

வன் தந்த வரி கொள் நாகம், வயங்கு அழல் உமிழும் வாய,
பொன் தந்த முழைகள்தோறும் புறத்து உராய்ப் புரண்டு பேர்வ-
நின்று, அந்தம் இல்லான் ஊன்ற-நெரிந்து கீழ் அழுந்தும் நீலக்
குன்றம் தன் வயிறு கீறிப் பிதுங்கின குடர்கள் மான. 3

புகல் அரும் முழையுள் துஞ்சும் பொங்கு உளைச் சீயம் பொங்கி,
உகல் அருங் குருதி கக்கி, உள்ளுற நெரிந்த; ஊழின்,
அகல் இரும் பரவை நாண அரற்றுறு குரல ஆகி,
பகல் ஒளி கரப்ப, வானை மறைத்தன, பறவை எல்லாம். 4

மொய் உறு செவிகள் தாவி முதுகு உற, முறை கால் தள்ள,
மை அறு விசும்பினூடு நிமிர்ந்த வாலதிய, மஞ்சின்
மெய் உறத் தழீஇய, மெல்லென் பிடியொடும், வெருவலோடும்,
கை உற மரங்கள் பற்றி, பிளிறின-களி நல் யானை. 5
பொன் பிறழ் சிமயக் கோடு பொடியுற, பொறியும் சிந்த,
மின் பிறழ் குடுமிக் குன்றம் வெரிந் உற விரியும் வேலை,
புன் புற மயிரும் பூவா, கண்புலம் புறத்து நாறா,
வன் பறழ் வாயில் கவ்வி, வல்லியம் இரிந்த மாதோ. 6

தேக்கு உறு சிகரக் குன்றம் திரிந்து மெய்ந் நெரிந்து சிந்த,
தூக்குறு தோலர், வாளர், துரிதத்தின் எழுந்த தோற்றம்,
தாக்குறு செருவில், நேர்ந்தார் தாள் அற வீச, தாவி,
மேக்குற விசைத்தார் என்னப் பொலிந்தனர்-விஞ்சை வேந்தர். 7

தாரகை, சுடர்கள், மேகம், என்று இவை தவிரத் தாழ்ந்து,
பாரிடை அழுந்துகின்ற படர் நெடும் பனி மாக் குன்றம்,
கூர் உகிர் குவவுத் தோளான் கூம்பு என, குமிழி, பொங்க
ஆர் கலி அழுவத்து ஆழும் கலம் எனல் ஆயிற்று அன்றே! 8

தாது உகு நறு மென் சாந்தம், குங்குமம், குலிகம், தண் தேன்,
போது உகு பொலன் தாது, என்று இத் தொடக்கத்த யாவும் பூசி,
மீது உறு சுனை நீர் ஆடி, அருவி போய் உலகின் வீழ்வ,
ஓதிய குன்றம் கீண்டு குருதி நீர் சொரிவது ஒத்த. 9

'கடல் உறு மத்து இது' என்ன, கார் வரை திரியும்காலை,
மிடல் உறு புலன்கள் வென்ற மெய்த் தவர் விசும்பின் உற்றார்;
திடல் உறு கிரியில் தம்தம் செய்வினை முற்றி, முற்றா
உடல் உறு பாசம் வீசாது, உம்பர் செல்வாரை ஒத்தார். 10

வெயில் இயல் குன்றம் கீண்டு வெடித்தலும், நடுக்கம் எய்தி,
மயில் இயல் தளிர்க் கை மாதர் தழீஇக் கொளப் பொலிந்த வானோர்,
அயில் எயிற்று அரக்கன் அள்ளத் திரிந்த நாள், அணங்கு புல்லக்
கயிலையில் இருந்த தேவைத் தனித் தனி கடுத்தல் செய்தார். 11

ஊறிய நறவும் உற்ற குற்றமும் உணர்வை உண்ண,
சீறிய மனத்தர், தெயவ மடந்தையர் ஊடல் தீர்வுற்று
ஆறினர், அஞ்சுகின்றார், அன்பரைத் தழுவி உம்பர்
ஏறினர், இட்டு நீத்த பைங் கிளிக்கு இரங்குகின்றார். 12

இத் திறம் நிகழும் வேலை, இமையவர், முனிவர், மற்றும்
முத் திறத்து உலகத்தாரும், முறை முறை விரைவில் மொய்த்தார்,
தொத்து உறு மலரும், சாந்தும், சுண்ணமும், இனைய தூவி,
'வித்தக! சேறி' என்றார்; வீரனும், விரைவது ஆனான். 13

'குறுமுனி குடித்த வேலை குப்புறம் கொள்கைத்து ஆதல்
வெறுவிது; விசயம் வைகும் விலங்கல்-தோள் அலங்கல் வீர!
"சிறிது இது" என்று இகழற்பாலை அல்லை; நீ சேறி' என்னா,
உறு வலித் துணைவர் சொன்னார்; ஒருப்பட்டான், பொருப்பை ஒப்பான். 14

'இலங்கையின் அளவிற்று அன்றால், இவ் உரு எடுத்த தோற்றம்;
விலங்கவும் உளது அன்று' என்று, விண்ணவர் வியந்து நோக்க,
அலங்கல் தாழ் மார்பன் முன் தாழ்ந்து, அடித் துணை அழுத்தலோடும்,
பொலன் கெழு மலையும் தாளும் பூதலம் புக்க மாதோ! 15

வால் விசைத்து எடுத்து, வன் தாள் மடக்கி, மார்பு ஒடுக்கி, மாதை
தோள் விசைத் துணைகள் பொங்கக் கழுத்தினைச் சுருக்கி, தூண்டும்
கால் விசைத் தடக் கை நீட்டி, கண்புலம் கதுவா வண்ணம்
மேல் விசைத்து எழுந்தான், உச்சி விரிஞ்சன் நாடு உரிஞ்ச-வீரன். 16

ஆயவன் எழுதலோடும், அரும் பணை மரங்கள் யாவும்,
வேய் உயர் குன்றும், வென்றி வேழமும், பிறவும், எல்லாம்,
'நாயகன் பணி இது' என்னா, நளிர் கடல் இலங்கை, தாமும்
பாய்வன என்ன, வானம் படர்ந்தன, பழுவம் மான. 17
இசையுடை அண்ணல் சென்ற வேகத்தால், எழுந்த குன்றும்,
பசையுடை மரனும், மாவும், பல் உயிர்க் குலமும், வல்லே
திசை உறச் சென்று சென்று, செறி கடல் இலங்கை சேரும்
விசை இலவாக, தள்ளி வீழ்வன என்ன வீழ்ந்த. 18

மாவொடு மரனும், மண்ணும், வல்லியும், மற்றும் எல்லாம்,
போவது புரியும் வீரன் விசையினால், புணரி போர்க்கத்
தூவின; கீழும் மேலும் தூர்த்தன; சுருதி அன்ன
சேவகன் சீறாமுன்னம் சேதுவும் இயன்ற மாதோ! 19

கீண்டது வேலை நல் நீர்; கீழ் உறக் கிடந்த நாகர்
வேண்டிய உலகம் எல்லாம் வெளிப்பட, மணிகள் மின்ன,
ஆண்தகை அதனை நோக்கி, 'அரவினுக்கு அரசன் வாழ்வும்
காண்தகு தவத்தென் ஆனேன் யான்!' எனக் கருத்துள் கொண்டான். 20

வெய்தின் வான் சிறையினால் நீர் வேலையைக் கிழிய வீசி,
நொய்தின் ஆர் அமுதம் கொண்ட நோன்மையே நுவலும் நாகர்,
'உய்தும் நாம் என்பது என்னே? உறு வலிக் கலுழன் ஊழின்
எய்தினான் ஆம்' என்று அஞ்சி, மறுக்கம் உற்று, இரியல்போனார். 21
துள்ளிய மகர மீன்கள் துடிப்பு அற, சுறவு தூங்க,
ஒள்ளிய பனைமீன் துஞ்சும் திவலைய, ஊழிக் காலின்,
வள் உகிர் வீரன் செல்லும் விசை பொர மறுகி, வாரி
தள்ளிய திரைகள் முந்துற்று, இலங்கைமேல் தவழ்ந்த மாதோ. 22

இடுக்கு உறு பொருள்கள் என் ஆம்? எண் திசை சுமந்த யானை,
நடுக்கு உற விசும்பில் செல்லும் நாயகன் தூதன், நாகம்
ஒடுக்குறு காலை, வன் காற்று அடியொடும் ஒடித்த அந் நாள்,
முடுக்குறக் கடலில் செல்லும் முத்தலைக் கிரியும் ஒத்தான். 23

கொட்புறு புரவித் தெய்வக் கூர் நுதிக் குலிசத்தாற்கும்,
கண்புலன் கதுவல் ஆகா வேகத்தான், கடலும் மண்ணும்
உட்படக் கூடி அண்டம் உற உள செலவின், ஒற்றைப்
புட்பக விமானம்தான் அவ் இலங்கைமேல் போவது ஒத்தான். 24

விண்ணவர் ஏத்த, வேத முனிவரர் வியந்து வாழ்த்த,
மண்ணவர் இறைஞ்ச, செல்லும் மாருதி, மறம் உள் கூர,
'அண்ணல் வாள் அரக்கன் தன்னை அமுக்குவென் இன்னம்' என்னா,
கண்ணுதல் ஒழியச் செல்லும் கைலைஅம் கிரியும் ஒத்தான். 25

மாணி ஆம் வேடம் தாங்கி, மலர் அயற்கு அறிவு மாண்டு, ஓர்
ஆணி ஆய் உலகுக்கு எல்லாம், அறம் பொருள் நிரப்பும் அண்ணல்,
சேண் உயர் நெடு நாள் தீர்ந்த திரிதலைச் சிறுவன்தன்னைக்
காணிய, விரைவில் செல்லும் கனக மால் வரையும் ஒத்தான். 26

மழை கிழித்து உதிர, மீன்கள் மறி கடல் பாய, வானம்
குழைவுற, திசைகள் கீற, மேருவும் குலுங்க, கோட்டின்
முழையுடைக் கிரிகள் முற்ற, முடிக்குவான், முடிவுக் காலத்து
அழிவுறக் கடுக்கும் வேகத் தாதையும் அனையன் ஆனான். 27

தடக் கை நால்-ஐந்து பத்துத் தலைகளும் உடையான்தானே
அடக்கி ஐம் புலன்கள் வென்ற தவப் பயன் அறுதலோடும்,
கெடக் குறி ஆக, மாகம் கிழக்கு எழு வழக்கு நீங்கி,
வடக்கு எழுந்து இலங்கை செல்லும் பரிதி வானவனும் ஒத்தான். 28

புறத்து உறல் அஞ்சி, வேறு ஓர் அரணம் புக்கு உறைதல் நோக்கி,
மறத் தொழில் அரக்கன் வாழும் மா நகர், மனுவின் வந்த
திறத் தகை இராமன் என்னும் சேவகற் பற்றி, செல்லும்
அறத்தகை அரசன் திண் போர் ஆழியும் அனையன் ஆனான். 29

கேழ் உலாம் முழு நிலாவின் கிளர் ஒளி இருளைக் கீற,
பாழி மா மேரு நாண, விசும்பு உறப் படர்ந்த தோளான்,
ஆழி சூழ் உலகம் எல்லாம் அருங் கனல் முருங்க உண்ணும்
ஊழி நாள், வட பால் தோன்றும் உவா முழு மதியும் ஒத்தான். 30

அடல் உலாம் திகிரி மாயற்கு அமைந்த தன் ஆற்றல் காட்ட,
குடல் எலாம் அவுணர் சிந்த, குன்று எனக் குறித்து நின்ற
திடல் எலாம் தொடர்ந்து செல்ல, சேண் விசும்பு ஒதுங்க, தெய்வக்
கடல் எலாம் கலங்க, தாவும் கலுழனும் அனையன் ஆனான். 31

நாலினோடு உலகம் மூன்றும் நடுக்குற, அடுக்கு நாகர்
மேலின் மேல் நின்றகாறும் சென்ற கூலத்தன், 'விண்டு
காலினால் அளந்த வான முகட்டையும் கடக்கக் கால
வாலினால் அளந்தான்' என்று வானவர் மருள, சென்றான். 32

வெளித்துப் பின் வேலை தாவும் வீரன் வால், வேதம் ஏய்க்கும்
அளி, துப்பின் அனுமன் என்று ஓர் அருந் துணை பெற்றதாயும்,
களித்துப்புன் தொழில்மேல் நின்ற அரக்கர் கண்ணுறுவராம் என்று,
ஒளித்து, பின் செல்லும் கால பாசத்தை ஒத்தது அன்றே. 33

மேருவை முழுதும் சூழ்ந்து, மீதுற்ற வேக நாகம்,
கார் நிறத்து அண்ணல் ஏவ, கலுழன் வந்துற்ற காலை
சோர்வுறு மனத்தது ஆகி, சுற்றிய சுற்று நீங்கிப்
பேர்வுறுகின்றவாறும் ஒத்தது, அப் பிறங்கு பேழ் வால். 34

குன்றோடு குணிக்கும் கொற்றக் குவவுத் தோள் குரக்குச் சீயம்,
சென்றுறு வேகத் திண் கால் எறிதர, தேவர் வைகும்
மின் தொடர் வானத்து ஆன விமானங்கள், விசையின் தம்மின்
ஒன்றோடு ஒன்று உடையத் தாக்கி, மாக் கடல் உற்ற மாதோ. 35

## கம்பராமாயணம் - கடல்தாவு படலம்

இரவில் பார்க்கும்போது கண்ணுக்குத் தெரிவது பாம்பா, பழுதைக் கயிறா என்று தெரியாது. அதுபோல ஐம்பூதங்களும் நம்மை மயங்க வைக்கும். இராமன் மனிதனா, தெய்வமா என்னும் மயக்கமும் அப்படித்தான்.

## துறக்க நாட்டை இலங்கை என்று அனுமன் ஐயுற்றுத் தெளிதல்

அனுமன் ஆண்மையிற் சிறந்த அனுமன் அங்கே அந்தத் தேவர்களின் சுவர்க்க லோகத்தை பக்கத்தில் பார்த்தான், (பார்த்த அனுமன்) இங்கே தெரிகின்ற இந்த உலகம் கடலால் சூழப்பட்ட இலங்கையோ என்று சந்தேகம் அடைந்து யாவரும் விரும்புகின்ற, அரிய தேவநாடு என்கின்ற உண்மையைத் தெரிந்து (அங்கே தேடும்) எண்ணத்தை விலக்கி தேடிக் காண வேண்டிய கோட்பாடாகிய பிராட்டி விண்ணுலகில் இல்லை என்று மனத்தில் நினைத்துக்கொண்டான்.

## இலங்கையைக் கண்ட அனுமன் ஆர்த்தல்

பழைமையான இலங்கை நகரின் காவற் சோலைகளையும் பொன்னாற் செய்த குருவித்தலையையும் வட்டமான மதிலையும் வெற்றியை அறிவிக்கும் கோபுரவாயிலையும் மணிகள் பதிக்கப் பெற்ற வெண்மையான சுண்ணம் பூசப்பெற்ற, மாளிகைகளை உடைய வீதியையும் (கூறப்பெறாது விடுத்த) பிறவற்றையும் பார்த்தான் வானத்தின் உச்சியும் எட்டுத் திக்குகளும் எதிரொலிக்க தோள்களைப் புடைத்து ஆரவாரித்தான்.

## மயேந்திர மலையில் நிகழ்ந்த குழப்பம்

அழிவில்லாத அனுமன் நின்று (திருவடிகளை) வன்மையாக (மலையில்) திக்க (அதனால்) சிதைந்து பூமிக்கு அடியிலே புதைந்து நீலநிறமுடைய மகேந்திர மலை தன்னுடைய வயிறு கிழிபட்டு வெளியிட்ட குடல்களைப் போல பொன்னைத் தருகின்ற குகைகள் தோறும் விளங்குகின்ற நெருப்பைக் கக்கும் வாயை உடைய வலிமையான பற்களையும் கோடுகளையும் பெற்ற பாம்பு உராய்ந்து கொண்டு புரண்டு வெளியே சென்றன.

நுழையமுடியாத குகையின்கண் உறங்கின்ற, சிலிர்க்கின்ற, பிடரி மயிரையுடைய சிங்கங்கள், கொந்தளித்து, சிந்தக்கூடாத இரத்தத்தை வெளிப்படுத்தி, உள்ளே சிதைந்தன. எல்லாப் பறவைகளும் பரந்த பெரிய ஊழிக்காலத்துக் கடல்கள்

வெட்கம் அடைய கதறுகின்ற கூக்குரலை உடையனவாய் சூரியனுடைய பிரகாசம் மறையும்படி ஆகாயத்தை மூடின.

மதமயக்கமுடைய பெரிய யானைகள் மேகம் இல்லாத ஆகாயத்தின்கண்; நீண்ட வாலையுடைய (யானைக் கன்றுகள்), வலிமை மிக்க காதுகள் பரவி முதுகைச்சார (அதனால்) பருவக் காற்று வீச மேகத்தைப்போல(த்தம்) உடம்பைத் தழுவிக்கொண்ட மென்மையான பெண்யானைகளுடன் அச்சத்தோடும் கைகளால் மரங்களைச் சுற்றிக் கொண்டு, வீறிட்டுக் கதறின.

ஒளிவிளங்கும் தலைமையுடைய மகேந்திரமலையின் முதுகின்கண் பொன்போலப் பொலிவு பெற்ற சிகரமானது நன்றாக அழுந்த (அதனால்) பொடிப் பொடியாகிப் பொறி பறக்க பிளவுபடும் சமயத்தில் புலிகள், மெல்லிய உடம்பில் பூனை மயிரும் முளைக்காத வெளியில் தோன்றும்படி கண்கள் திறவாத (தம்முடைய) வலிமையான குட்டிகளை வாயில் பற்றிஅஞ்சியோடின.

தேக்கு மரங்கள் மிகுதியாகப் பெற்ற மகேந்திர மலை தன் இயல்பு வேறுபட்டு உடல் சிதைந்து சிதற (அதனால்) வித்தியாதரத் தலைவர்கள் உயர்த்திப் பற்றிய கேடகமுடையவராய் வாளை ஏந்தியவராய் வேகமாக எழுந்த காட்சி, மோதிச் செய்கின்ற போரில் எதிர்த்த பகைவர்களின் முயற்சியற்றுப் போக ஆயுதங்களைச்சுழற்ற வானிலே நன்றாகப் பாய்ந்து வேகம் பெற்றவர்களைப் போல விளங்கினார்கள்.

நட்சத்திரம், சூரிய சந்திரர்கள், மேகம் என்னும் இப்பொருள்கள் (சார்ந்து வராமல்) நீங்கிநிற்க, இறங்கி பூமியின்கண் கீழ்நோக்கிப் போகும்; விரிந்து நீண்ட குளிர்ந்த மலை கூர்மையான நகங்களையும் திரண்ட தோள்களையும் உடைய அனுமன் பாய்மரம் போலிருக்க கடலின் ஆழத்திலே நீர்க்குமிழிகள் கொந்தளிக்க, மூழ்குகின்ற கப்பல் என்று கூறும் தன்மையைப் பெற்றது.

மகேந்திரமலையின் அருவி, காவிக் கற்களையும், கரைந்து தேய்ந்த நறுமணம் வீசும் சந்தனக் குழம்பையும் குங்குமப் பூக்களையும் சாதிலிங்கத்தையும், குளிர்ந்த மலர்கள்சிந்திய பொன்நிறம் பெற்ற மகரந்தங்களையும், இது முதலான பல பொருள்களையும் தன்மேல் பூசிக் கொண்டு மலையின் மேலே உள்ள சுனை நீரிலே குளித்து பூமியில் பரந்து வீழும் காட்சி பேசப்பெற்ற மலை, வயிறு பிளக்கப்பெற்று இரத்தமாகிய நீரைச் சொரிவதைப் போன்றிருந்தன.

கரிய மகேந்திரமலை, பாற் கடலைச் சார்ந்த மத்து என்று கூறும்படி சுழல்கின்ற சமயத்தில், வன்மை மிக்க ஐம்புலன்களும் பொறிவழியே போகாமல் அடக்கிய முனிவர்கள் ஆகாயத்தை அடைந்தார்கள் (அவர்கள்), மேட்டுப் பாங்கான மலையில் தாம் தாம் செய்யவேண்டிய கடமைகளைத் தொடங்கி நிறைவு செய்யாமல் உடலின்கண் கொண்ட பற்றை விடாமல் விண்ணுலகத்திற்குச் செல்பவரை ஒத்தார்.

ஒளியமைந்த மகேந்திர மலை பிளவுபட்டு இரண்டாதலும், மயில் போன்ற சாயலும், தளிர் போன்ற கைகளும் கொண்ட தெய்வப்பெண்கள் அச்சமுற்றுத் தழுவிக்கொள்ள(அதனால்), பூரித்த தேவர்கள் கூரிய பற்களைப் பெற்ற இராவணன்; பெயர்த்தெடுக்க (கயிலாய மலை) அசைந்த காலத்தில் உமாதேவி தழுவிக்கொள்ள கயிலாய மலையில்வீற்றிருந்த சிவபிரானை, ஒவ்வொருவரும்தனித்தனியே ஒத்திருந்தார்கள்.

(வியஞ்சனத்துடன்) ஊறிக்கிடந்த மதுவும் உற்ற நேர்ந்த பிழையும் அறிவை அழிக்க (அதனாலே) கொதிப்புற்ற மனத்தையுடைய தேவலோகப் பெண்கள் (மலையின் அதிர்ச்சியால்) ஊடல் நீங்கி அமைதியடைந்தனர் அச்சம் அடைந்து; கணவரைத் தழுவிக்கொண்டு விண்ணின் கண்ணே சென்று; கூண்டுக்குள் அடைத்து விட்டு விட்டுவந்த இளமையான கிளியின் பொருட்டாக; கவலைப்படுகிறார்கள்.

## தேவர் முதலோர் விடைதர அனுமன் கடலைக் கடக்க விரைதல்

இப்படிப்பட்டநிகழ்ச்சிகள் நடைபெறுங்காலத்தில் தேவர்களும், முனிவர்களும் இன்னும் மூவகையான உலகத்தில் இருப்பவர்களும் தகுதிக்கேற்ற வரிசைப்படி; விரைவாக ஆகாயத்தில் ஒன்று கூடினர்; கொத்துக் கொத்தான பூக்களையும், சந்தனத்தையும், வாசனைப் பொடிகளையும், இப்படிப்பட்ட பொருள்களையும் (அனுமன் திருமேனியில்) அள்ளி வீசி அறிஞனே!; 'செல்க!' என்று கூறினார்கள். அனுமனும்வேகமாகப் போக முற்பட்டான். மிக்கவலிமையையுடைய நண்பர்கள் (அனுமனை நோக்கி) வெற்றி குடிகொண்ட மலைபோன்ற தோளில் மாலையணிந்த வீரனே ! அகத்திய முனிவனால் பருகப்பட்ட இந்தக் கடல், பாய்ந்து கடக்க வேண்டிய கோட்பாட்டுக்கு உரிய பொருளாயிருத்தல் மதிக்கத் தகாதது(பயனற்றது) இந்தக் கடல் (என் வலிமைக்கு) அற்பம் என்று இக் கடலை அவமதிக்கும் பான்மையை அடையாதே

நீ செல்வாயாக என்று கூறினார்கள் (அம்மொழி கேட்டு); மலையை ஒத்த அனுமான் அவர்கள் சொற்களுக்கு உடன் பட்டான்.

## காலை ஊன்றி எழுந்த போது மலையிலும் கடலிலும் நிகழ்ந்த மாறுதல்கள்

அனுமன்மேற்கொண்ட இந்த வடிவத்தின் பெருமிதமான உயர்ச்சி இலங்கையை எல்லையாகக் கொண்டது அன்று, அனுமனைத் தடுத்து நிறுத்தவும், ஒரு பொருளும் இல்லையென்று தேவர்கள் ஆச்சரியப்பட்டுப் பார்க்க மாலைகள் தங்கிய மார்பை உடைய அனுமான் முன் புறமாக மேனியை வளைத்து, இரண்டு திருவடிகளையும் ஊன்றியவுடன், பொன் மயமான மகேந்திர மலையும் அதன் அடிச்சாரலும் பூமியின் அடித்தளத்தைச் சென்று சேர்ந்தன.

அனுமன் வாலை வேகமாக உயர்த்தி, வலிமையான திருவடிகளை மடக்கி, மார்பைச் சுருக்கி பெருமையும் புகழும் வெற்றியும் பெற்ற இரண்டு புயங்கள் பூரிக்க, கழுத்தை ஒடுக்கி, தூண்டுகின்ற காற்றைப் போன்று வேகமாகக் கைகளை நீட்டி, தலை பிரம்ம லோகத்தை உராயும்படி கண்புலம் கண்ணின் பார்வை பற்ற முடியாதபடி விண்ணில் வேகமாக எழும்பினான் அனுமன்.

அந்த அனுமான் மலையை விட்டு எழுந்தவுடன் சிறந்த கிளையைப் பெற்ற மரங்களும் மூங்கில் வளர்ந்த மலைகளும் வெற்றியையுடைய யானைகளும், கூறப்பெறாத எல்லாப் பொருள்களும், இராமபிரானுக்குச் செய்யும் தொண்டு இது என்று கருதி, குளிர்ந்த கடலால் சூழ்ந்த இலங்கை தாங்களும்பாய்ந்து செல்வன என்று கூறும்படி, சோலைபோல வானத்திற் பரவிச் சென்றன. புகழ்பெற்ற அனுமன் பாய்ந்துபோன வேகத்தினாலே எழுந்து சென்ற மலைகளும், பிசினைப் பெற்ற மரங்களும், விலங்குகளும், பல உயிர்த் தொகுதிகளும், விரைவாக, அனுமன் சென்ற திக்கின் வழியேபோய்ப் போய் கடலால்சூழப் பெற்ற இலங்கையை அடையும் ஆற்றல் அற்றவையாய் தள்ளப்பட்டுக் கீழ் வீழ்ந்தாற்போல கடலிலே விழுந்தன.

இலங்கை நோக்கிச்சென்ற அனுமனின் வேகத்தால், விலங்குகளும் மரங்களும் வேரடிமண்ணும், கொடியும் பிற பொருள்களும், கடல் மூடும்படி தூவப்பெற்றன. கடலின் மேலும் ஆழத்திலும் தூர்க்கப்பட்டன. வேதம் போன்ற இராமபிரான் கடலைச் சீறுவதற்குமுன்பு சேதுவும் அமைந்தது.

மிக்க நீரையுடைய கடல்பிளவுபட்டு மிகவும் கீழான இடத்தே அமைந்துள்ள நாகலோகத்தவர்கள் விரும்புகின்ற உலகம் முழுவதும் வெளிப்பட்டுத் தெரிய அதனால்

மாணிக்கங்கள் ஒளிவீச, ஆண்மை மிக்கஅனுமன் அதைப் பார்த்து பாம்புகளின்வேந்தனான ஆதிசேடனின் செல்வச் செழிப்பையும் நான் பார்க்கும் தவத்தைச் செய்தவனாய் விட்டேன் என்று உள்ளத்தே எண்ணினான்.

பெரிய சிறகுகளாலே நீர் நிரம்பிய கடலை வேகமாகப் பிளவு படும்படி வீசி எளிதாக அருமையான அமுதத்தைக்கவர்ந்த (கருடனின்) வலிமையைப் பேசிக்கொண்டிருக்கும் நாகலோக வாசிகள் மிக்க வலிமையுடைய கருடன் நம்முடைய தீயூழால் மறுபடியும் வந்து சேர்ந்தான். நாம் தப்பிப் பிழைப்போம் என்று கூறுவது எப்படி?; என்று கூறி பயந்து, பெருந்துயர் அடைந்து, சிதறி ஓடினார்கள். செருக்கிப் பாயும்இயல்புடைய மீன்கள் கிளர்ச்சியற்றுப் போகவும் சுறாமீன்கள் அடங்கிக் கிடக்கவும் ஒளிமிக்க பனைமீன்கள் இறக்க இடனாகும் நீர்த்திவலைகளை வீசுகின்ற யுகமுடிவில் வீசுகின்ற காற்றைப்போல கூர்மையான நகத்தைப் பெற்ற அனுமன் பாய்ந்து செல்கின்ற வேகமானது தாக்க (அதனால்) அல்லோலப்பட்டு, கடலில் உந்தப் பெற்ற அலைகள் இலங்கை மாநகரின்கண் அனுமனுக்கு முன் தத்திச் சென்றன.

## வானில் செல்லும் அனுமனின் தோற்றம்

எட்டுத் திசைகளையும் தாங்கும் யானைகள், நடுக்கம் அடையும்படியாக ஆகாயத்திற் பறந்து செல்லும் இராம தூதனான அனுமன் ஆதிசேடன் மேருமலையைத் தன் படங்களில் ஒடுக்கிக் கொண்ட சமயத்தில் கொடுங்காற்று அடியொடு முறித்த அக்காலத்தில் வேகமாக உந்தப்படத் தென் கடலின்கண் போகும் மூன்று தலைகளைப் பெற்ற திரிகூட மலையையும் ஒத்திருந்தான் (என்றால்), அவன் போகும் வழி இடையிலுள்ள பொருள்கள் என்ன பாடுபடும்.

சுழன்றுசுழன்று செல்கின்ற குதிரைமேல் உள்ள தெய்வத் தன்மை பெற்ற கூரிய நுனியையுடைய வச்சிராயுதத்தை ஏந்திய இந்திரனுக்கும் கண்ணின் பார்வை பின்பற்ற முடியாத வேகமுடைய அனுமன், கடலும் கடலாற் சூழ்ந்த உலகமும் தன்னுள் ஒடுங்கும்படி பேருருக் கொண்டவனாய் அண்டத்தின் உச்சியானது மோதும்படி, செல்கின்ற பயணத்தால் ஒப்பற்ற **புட்பக விமானம்** இலங்கை மாநகருக்குப் போவதை ஒத்திருந்தான்.

தேவர்கள் போற்றவும், வேதங்களை அறிந்த சிறந்த முனிவர்கள் வியப்புற்று, வாழ்த்தவும், மண்ணுலக்கத்தவர் வணங்கவும் போகும் அனுமான், உள்ளத்தே இராவணன் மேல் கோபம்மிகுதியாவதால் பெருமிதமுடைய கொடிய இராவணனை,

மறுபடியும் அழுத்துவேன் என்று கருதி சிவபிரான் இல்லாமல் தனித்துப் போகின்ற **கயிலாயமலையையும்** ஒத்திருந்தான்.

பிரமசாரியாகியகோலத்தை மேற்கொண்டு, பிரம்ம தேவனைவிட அறிவால் மாட்சிமை பெற்று எல்லா உலகங்களுக்கும் ஒப்பற்ற அச்சாணிபோல அமைந்து, அறத்தையும் பொருளையும் பூரணத்துவமடையச் செய்யும் அனுமன் நீண்ட நாட்களுக்குமுன் பிரிந்து போன மிக்க உயர்வினையுடைய திரிகூடம் என்னும் புதல்வனைக் காண்பதற்காக வேகமாகப் போகிற பொன் வடிவமான **மேருமலையைப்** போன்றிருந்தான்.

மேகத்தைப் பிளந்துகொண்டு உதிரும்படி நட்சத்திரங்கள் அலைகள் மடங்கும் கடலிலே பாயவும், ஆகாயம் நெகிழ்ச்சியடையவும், திக்குகள் கிழிபடவும், மேருமலையும் அசையவும், சிகரங்களில் குகைகளை உடையமலைகள் நீரால் சூழப் பெறவும் வேகமாகச் செல்லும்அனுமன், ஊழிக் காலத்தில் யாவும் அழிந்துபடச் சினந்து செல்கின்ற வேகத்தையுடைய தன் தந்தையான வாயுதேவனைப் போலவும்இருந்தான்.

இருபது பெரிய கரங்களையும் பத்துத்தலைகளையும் உடைய இராவணன் ஐந்து புலன்களையும், பிறர் உதவியின்றி தனியாக இருந்து ஒடுக்கி, வெற்றி கொண்ட தவத்தின் பயனான புண்ணியம் அற்றுத் தீர்ந்தவுடன், உற்பாதமாக வானத்தில் கீழ்த்திசையில் உதித்தலாகிய இயல்பிலிருந்து விலகி வடக்குத் திசையில் உதித்து, இலங்கை நோக்கிப் போகும் சூரியபகவானை ஒத்திருந்தான். வெளிப்படையாக இருக்கப் பயப்பட்டு மற்றொரு பாதுகாப்பான இடத்தில் தங்குதலை விலக்கியும் மனிதனைப் போன்று மண்ணுலகுக்கு வந்த வலிமையும் தகுதியும் பெற்ற இராமபிரான் என்னும் வீரனை இறுகப் பிடித்துக் கொண்டு, வீரத்தையே தொழிலாகக் கொண்ட இராவணன் வாழுகின்ற பெரியநகருக்கு போகிற தகுதிபெற்ற தருமராஜனின் வலிமை மிக்க போர்புரியும் ஆணைச்சக்கரத்தை அனுமன் ஒத்திருந்தான்.

எல்லா இடத்திலும் ஒளிபரப்பும் பூரணசந்திரிகையைப் போன்று கிளர்ச்சிபெற்ற அனுமனின் ஒளியானது, இருளைப் போக்கவும், பருத்தமேருமலை நாணம் அடையவும் ஆகாயம் அளாவும் தோளையுடைய அனுமான், கடலால் சூழப்பெற்ற எல்லா உலகங்களும் அழிய, நெருப்பு விழுங்கும் ஊழிக்காலத்தில் வடதிசையில் உதிக்கும் பௌர்ணமிக் காலத்து முழு மதியையும் ஒத்திருந்தான்.

அனுமன் பகைவரைஅடக்குவதில் மிக்க வல்லமை பரவிய சக்கரப்படை ஏந்திய திருமாலுக்கு அடங்கிய தன்னுடைய வன்மையைக் காண்பிக்க எல்லா அசுரர்களும் குடல் கலங்கவும் மலை என்று பேசப்பட்டு நிமிர்ந்து நிற்கின்ற மேடுகள் யாவும் தொடர்ந்து போகவும் ஆகாயம் தூரத்தில் ஒதுங்கிக் கொள்ளவும் தெய்வத்

தன்மையுடைய எல்லாச்சமுத்திரங்களும் கலங்கவும், பறந்து சென்ற கருடனையும் ஒத்தவன் ஆனான்.

### வாலை உயர்த்தி அனுமன் வானில் சென்ற காட்சி

கீழ் ஏழுஉலகங்களும் நடுக்கம் அடைய தேவர்கள் மேலும் மேலும் சிறப்புடன் நிலைத்துள்ள அடுக்கப்பெற்ற உலகம் வரையிலும், பயணம் செய்த வாலையுடைய அனுமன், திருமாலின் திருவடியால் அளந்த வானத்தின் உச்சியையும் கடப்பதற்கு காலபாசம் போன்ற வாலினால் அளந்து விட்டான் என்று தேவர்கள் வியப்படையப் போயினான்.

அறைகூவி பிறகு கடலைத் தாவுகின்ற வீரனுடைய வாலானது வேதங்களை அறிந்துள்ள கருணையையும் உற்சாகத்தையும் உடைய அனுமனாகிய அரிய உதவியை அடைந்ததாய். கள்ளுண்டு களித்து, அற்பத்தொழிலை மேற்கொண்ட அரக்கர்கள், கண்டு கொள்வார்களோ என்று கருதி மறைந்து அனுமனுக்குப் பின்னே போகின்ற யமனுடைய பாசத்தைப் போன்றிருந்தது.

அந்த விளக்கமானபெரிய வால் கரிய நிறத்தையுடைய திருமால் கட்டளையிட, கருட பகவான் வந்த சமயத்தில், மேருமலையை முற்றிலும் பற்றிக்கொண்டு சிகரத்திலே தங்கிய விடம் பெற்ற ஆதிசேடன், தளர்ச்சியுற்ற மனத்தை உடையதாய் மேருமலையைச் சுற்றியிருந்த கட்டு விலகி நீங்கிப் போகின்ற தன்மையையும் ஒத்திருந்தது.

### அனுமனின் வேகம்

மலைகளுடன் ஒப்புமையாகப் பேசப்படும் வெற்றியையுடைய பருத்த தோள்களை உடைய வானர சிங்கமாகிய அனுமன், செல்வதால் உண்டாகும் கடுங்காற்று மோத அதனால் மின்னல்இடையறாது இயங்கும் வானில் தேவர்கள் தங்கியுள்ள விமானங்கள் வேகத்தால் தங்களுக்குள் ஒன்றுடன் ஒன்று உடையும்படி மோதி கருங்கடலில் விழுந்தன.

இவ்வாறு தெய்வக்கழுகு பறப்பது போல் வானில்பறந்தான். திருமால் காலினால் அளந்த வானை அனுமன் வாலினால் அளந்தான். கீழே இருக்கும் அரக்கருக்குத் தெரியாமல் வாலை மேலே மறைத்துக்கொண்டு காலத்தைக் கட்டும் எமனது பாசக்கயிறு போல் சென்றான். மேரு மலையைச் சுற்றிய நாகம் கருடன்

வரக்கண்டு நீங்குவது போல் அனுமன் வால் வானில் தோன்றிற்று .அனுமன் செல்லும் வேகத்தில் வானுலக மாளிகை விமானங்கள் ஒன்றோன்று மோதிக்கொண்டு கடலில் விழுந்தன என்று கம்பராமணத்தில் கடல்தாவு படலம் மூலம் அனுமன் கடலைதாவும் பொழுது ஏற்படும் நிகழ்வுகளை வர்ணித்துள்ளார் ஆசிரியர்.

---

## சொற்பொருள்

1.ஆண்தகை- ஆண்மையிற் சிறந்த அனுமன்

2.வேலை இலங்கை – கடலால் சூழப்பட்ட இலங்கை

3.ஆண்தகை - புலனடக்கம் பெற்றவன்

4.கடிபொழில் - காவல் சோலை

5.அதிர - எதிரொலிக்க

6.நீலக்குன்றம' - நீலநிறமுடைய மகேந்திர மலை

7.முழையுள் துஞ்சும் - குகையில் உறங்குகின்ற

8.மெய்உறு செவிகள் - வலிமைமிக்க காதுகள்

9.வெருவலோடும் - அச்சத்தோடும்

10.வல்லியம் - புலிகள்

11.ஆர்கலிஅழுவத்து - கடலின் ஆழத்திலே

12.குலிகம் - சாதிலிங்கம்

13.கிண்டு - வாய்பிளக்கப்பெற்று

14.அயில்எயிற்று அரக்கன் - கூரிய பற்கள் உடைய இராவணன்

15.குறுமுனி குடித்த வேலை - அகத்தியர் பருகிய கடல்

16.பழுவமான - சோலைபோல

17.சுருதி அன்ன - வேதம் போன்ற

18.அலக்கண் உற்று - பெருந்துயர் அடைந்து

19.இரியல் போனார் - சிதறி ஓடினார்கள்

20.வன்காற்று - கொடுங்காற்று

21.குலிசாத்தாற்கும் - வச்சிராயுதத்தை ஏந்திய இந்திரனுக்கும்

22.கெடக்குறிஆக -உற்பாதமாக

23.தாவும்கலுழனும் - பறந்து சென்ற கருடனையும்

24.கூலம் - வால்

25.விண்டு - திருமால்

26.வேகநாகம் - விடம்பெற்ற ஆதிசேடன்

27.குரக்குச்சீயம் - வானரசிங்கமாகிய அனுமன்

# பெரிய புராணம்

## கண்ணப்பநாயனார் புராணம்

### பெரிய புராணம்

- சேக்கிழார் பெருமானால் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட இப்புராணம் சிவனடியார்களான 63 நாயன்மார்களின் வரலாற்றைக் கூறுகின்றது.
- பெரியபுராணத்தில் துறவிகள், இல்லறத்தோர், நாட்டுமன்னர், காட்டுவேடன், உயர்குலத்தோர், தாழ்குலத்தோர் முதலான பல்வேறு நிலைகளில் உள்ளவர்களின் வாழ்க்கை வரலாறுகள் வேறுபாடின்றிப் பாடப்பெற்றுள்ளன.
- தேவாரம் பாடிய பெருமக்களின் வரலாற்றைக் கூறும்போது எந்த எந்த இடங்களில் எந்த எந்த வேளையில் பாடப் பெற்றன என்ற வரலாற்று உண்மைகளையும் நுணுக்கமாகக் கண்டு ஆய்ந்து பாடியிருக்கின்றார்.
- இதில் **இரண்டு காண்டங்களும், 13 சருக்கங்களும், 4287** பாடல்களும் இடம் பெற்றுள்ளன. **63 தனியடியார்கள் பற்றியும், 9 தொகையடியார்கள்** குறித்தும் கூறப்பட்டுள்ளது.
- இந்நாயன்மார்கள் கி.பி.3 – ஆம் நூற்றாண்டு முதல் 9 - ஆம் நூற்றாண்டு வரை வாழ்ந்தவராவார்கள்.

### பெரியபுராணத்தின் சிறப்பு

- சைவக்காப்பியமான இது தமிழ்நாட்டின் சொந்தக்காப்பியம்.
- தமிழகத்தில் வாழ்ந்த சிவனடியார்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் வரலாற்றுக் காப்பியம்.
- இறைவன் உலகெலாம் என அடி எடுத்துக் கொடுத்தார்.

இதனைத் தொடர்ந்து,

**'உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்**

**நிலவு உலாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்**
**மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவோம்'**

- ✶ என்று முதல் பாடலாக சேக்கிழார் பாடியுள்ளார். இறுதியிலும் 'உலகெலாம்' என்று பாடல் பாடியே முடிக்கின்றார்.
- ✶ இதன் சிறப்புக் கருதியே தேசியக் காப்பியம் என்றும் வழங்குவர்.
- ✶ இயற்கை வர்ணனைகளிலும், மற்ற வர்ணனைகளிலும் பக்திச் சுவையே மேலிட்டு விளங்குகிறது.
- ✶ வயலில் விரிந்து அசையும் நெற்கதிர்கள் சிவனடியார்களின் மனம் போல் மலர்ந்து அழகாக உள்ளனவாம்.
- ✶ முற்றிய நிலையில் அந்தக்கதிர்கள் தலை சாய்ந்து தோன்றும் காட்சி சிவனடியார்கள் கூடியிருக்கும் போது ஒருவரையொருவர் வணங்கி, பக்தி செலுத்துவது போல் உள்ளதாம்.
- ✶ இவ்வாறு எளிய சொற்களால் வர்ணணைகளும், உவமைகளும் சிறப்பாக அமைந்திருப்பதைக் காப்பியத்தில் காணலாம்.

## சேக்கிழார்

- ❖ இவர் தொண்டை நாட்டிலுள்ள புலியூர்க் கோட்டத்தில் குன்றத்தூரில் வேளாளர் மரபில் சேக்கிழார் குடியில் தோன்றியவர்.
- ❖ இவருக்குப் பெற்றோர் இட்டப்பெயர் **அருண்மொழித் தேவர்**. கி.பி.12-ஆம் நூற்றாண்டில் அநபாயன் எனும் சிறப்புப் பெயருடன் சோழ நாட்டை ஆண்ட இரண்டாம் குலோத்துங்கனின் முதல் அமைச்சராய்த்திகழ்ந்தவர்.
- ❖ தனது அமைச்சர் எனும் செல்வாக்கைப் பயன்படுத்தி ஊர்கள் தோறும் நேரில் சென்று ஆங்காங்கு பரவிக்கிடந்த உண்மைகளையும், கல்வெட்டுச்செய்திகளையும், பக்திப்பாடல்களையும் திரட்டி முடித்த பின் பொன்னம்பலம் சென்று பரமனை வேண்ட, அம்பலத்தாரும் தம்பிரான்

'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுக்க, தன் காப்பியத்தைத் தொடர்ந்து பாடிமுடித்து திருத்தொண்டர் புராணம் எனும் பெயரிட்டார்.

- இதனைத் தில்லையில் திருஞானசம்பந்தர் அவதரித்த திருவாதிரைத் திருநாளில் தொடங்கி ஓராண்டுக்காலம் ஓதி அரங்கேற்றி முடித்தார்.
- இறுதியில் அரசுப்பணியை முற்றிலும் துறந்து தில்லையிலேயே வாழ்ந்து முக்தி அடைந்தார்.

## சேக்கிழாரின் சிறப்பு

சேக்கிழாரின் வாழ்க்கை மிகப் பண்பட்ட வாழ்க்கையாக அமைந்திருந்தது.

- அடியார்களின் அன்பை விளக்கும் இடங்களில் சேக்கிழாரின் சொற்கள் மேன்மைப் பெற்று விளங்குகின்றன.
- பெரியபுராணத்தைக் கேட்டு மகிழ்ந்த மன்னன் அலங்கரித்த யானையின் மீது சேக்கிழாரையும் அவர் இயற்றிய நூலையும் ஏற்றிவைத்து, தானும் அருகிலிருந்து கவரி வீசி நகர்வலம் வந்துமகிழ்ந்ததுடன், சேக்கிழாருக்கும் தொண்டர் சீர் பரவுவார் எனும் பட்டம் அளித்துப் பாராட்டினார்.
- தடுத்தாட்கொண்ட புராணம் இவரது சட்ட அறிவைத் தெளிவாக விளக்குகின்றது.

சேக்கிழார் மறைந்து 200 ஆண்டுகள் பின்புத் தோன்றிய உமாபதி சிவாச்சாரியார், சேக்கிழார் புராணம் இயற்றியுள்ளார்.

700 ஆண்டுகள் பின்னால் தோன்றிய பெரும்புலவரான மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் சேக்கிழார்ப் பிள்ளைத்தமிழ் பாடி, சேக்கிழாருக்குப் புகழ் அஞ்சலி செலுத்தினார். மேலும் பக்திச்சுவை நனிச் சொட்ட சொட்ட பாடிய கவிவலவ என்றுப் புகழ்ந்துள்ளார்.

## காப்பியச் சிறப்பு

அறுபத்து மூன்று நாயன்மார்களின் புகழ் மிக்க வரலாற்றினை உலகறிய, பக்திச் சுவையோடு விரிவாக எழுதிய பெருமைக்கு உரியவர் சேக்கிழார் ஆவார். அவர் சோழ நாட்டு அமைச்சராக இருந்தமையால் நாட்டின் பல பகுதிகளுக்கும், நாயன்மார்கள்

வாழ்ந்த ஊர்களுக்கும் நேரில் சென்று, அவ்விடத்தில் செவிவழி மரபாக வழங்கும் வரலாற்றுச் செய்திகளையும் தொகுத்து இந்நூலை அமைத்தார் என்பர்.

பிற மொழிக்கதைகளைத் தழுவாமல், தமிழ் மக்களையும், தமிழகச் சூழலையும் மையமாகக் கொண்டு இயற்றப்பட்ட சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களைப் போலவே பெரியபுராணம் என்னும் நூல் சிறப்புற்றுத் திகழ்கின்றது. ஆண் பெண் வேறுபாடின்றிப் பல இனங்களையும், தொழில் பிரிவுகளையும் சார்ந்த சிவனடியார்களைப் பற்றிய நூலாக அமைந்துள்ளதால் இந்நூலைத் தேசிய இலக்கியம் என்று சான்றோர்கள் பாராட்டுவர்.

இவற்றில் நம்பாடப்பகுதியாக கண்ணப்பநாயனார் வரலாறு இடம்பெற்றுள்ளது அவற்றைக் குறித்து இங்கு காண்போம்.

## பெரியபுராணம்

### கண்ணப்ப நாயனார் புராணம்

1.மேலவர் புரங்கள் செற்ற விடையவர் வேத வாய்மைக்
காவலர் திருக் காளத்திக் கண்ணப்பர் திரு நாடு என்பர்
நாவலர் புகழ்ந்து போற்றும் நல் வளம் பெருகி நின்ற
பூவலர் வாவி சோலை சூழ்ந்த பொத்தப்பி நாடு

2.இத் திரு நாடு தன்னில் இவர் திருப் பதியாதென்னில்
நித்தில அருவிச் சாரல் நீள் வரை சூழ்ந்த பாங்கர்
மத்த வெம் களிற்றுக் கோட்டு வன் தொடர் வேலி கோலி
ஒத்த பேர் அரணம் சூழ்ந்த முது பதி உடுப்பூர் ஆகும்

3.குன்றவர் அதனில் வாழ்வார் கொடுஞ் செவி ஞமலி யாத்த
வன்றிரள் விளவின் கோட்டு வார்வலை மருங்கு தூங்கப்
பன்றியும் புலியும் எண்கும் கடமையும் மானின் பார்வை
அன்றியும் பாறை முன்றில் ஐவனம் உணங்கும் எங்கும்

4. வன் புலிக் குருளையோடும் வயக் கரி கன்றினோடும்
புன்றலைச் சிறு மகார்கள் புரிந்து உடன் ஆடல் அன்றி
அன்புறு காதல் கூற அணையும் மான் பிணைகளோடும்
இன்புற மருவி ஆடும் எயிற்றியர் மகளிர் எங்கும்

5. வெல் படைத் தறுகண் வெஞ்சொல் வேட்டுவர் கூட்டம் தோறும்
கொல் எறி குத்து என்று ஆர்த்துக் குழுமிய ஓசை அன்றிச்
சில்லரித் துடியும் கொம்பும் சிறு கண் ஆகுளியும் கூடி
கல் எனும் ஒலியின் மேலும் கறங்கிசை அருவி எங்கும்

6. ஆறலைத்து உண்ணும் வேடர் அயற் புலங் கவர்ந்து கொண்ட
வேறு பல் உருவின் மிக்கு விரவும் ஆன் நிரைகள் அன்றி
ஏறுடை வானம் தன்னில் இடிக் குரல் எழிலி யோடு
மாறுகொள் முழக்கங் காட்டும் மதக்கை மாநிரைகள் எங்கும்

7. மைச் செறிந்தனைய மேனி வன் தொழில் மறவர் தம்பால்
அச்சமும் அருளும் என்றும் அடைவிலார் உடை வன் தோலார்
பொச்சை யின் நறவும் ஊனின் புழுக்கலும் உணவு கொள்ளும்
நச்சழற்பகழி வேடர்க்கு அதிபதி நாகன் என்பான்

8. பெற்றியால் தவமுன் செய்தான் ஆயினும் பிறப்பின் சார்பால்
குற்றமே குணமா வாழ்வான் கொடுமையே தலை நின்றுள்ளான்
வில் தொழில் விறலின் மிக்கான் வெஞ்சின மடங்கல் போல்வான்
மற்றவன் குறிச்சி வாழ்க்கை மனைவியும் தத்தை என்பாள்

9. அரும் பெறல் மறவர் தாயத்தான்ற தொல் குடியில் வந்தாள்
இரும் புலி எயிற்றுத் தாலி இடை இடை மனவு கோத்துப்
பெரும் புறம் அலையப் பூண்டான் பீலியும் குழையும் தட்டச்
சுரும்புறு படலை முச்சிச் சூர் அரிப் பிணவு போல்வான்

10.பொருவரும் சிறப்பின் மிக்கார் இவர்க்கு இனிப் புதல்வர் பேறே
அரியது என்று எவரும் கூற அதற்படு காதலாலே
முருகலர் அலங்கல் செவ்வேள் முருகவேள் முன்றில் சென்று
பரவுதல் செய்து நாளும் பராய்க் கடன் நெறியில் நிற்பார்

11.வாரணச் சேவலோடும் வரிமயிற் குலங்கள் விட்டுத்
தோரண மணிகள் தூக்கிச் சுரும்பணி கதம்பம் நாற்றிப்

போரணி நெடுவேலோற்குப் புகழ்புரி குரவை தூங்கப்
பேரணங்கு ஆடல் செய்து பெருவிழா எடுத்த பின்றை

12.பயில் வடுப் பொலிந்த யாக்கை வேடர்தம் பதியாம் நாகற்கு
எயிலுடைப் புரங்கள் செற்ற எந்தையார் மைந்தர் ஆன
மயிலுடைக் கொற்ற ஊர்தி வரையுரங் கிழித்த திண்மை
அயிலுடைத் தடக்கை வென்றி அண்ணலார் அருளினாலே

13.கானவர் குலம் விளங்கத் தத்தைபால் கருப்பம் நீட
ஊனமில் பலிகள் போக்கி உறுகடன் வெறி ஆட்டோ டும்
ஆன அத் திங்கள் செல்ல அளவில் செய் தவத்தினாலே
பான்மதி உவரி ஈன்றால் என மகப் பயந்த போது

14.கரிப்பரு மருப்பின் முத்தும் கழை விளை செழுநீர் முத்தும்
பொருப்பின் மணியும் வேடர் பொழி தரு மழையே அன்றி
வரிச் சுரும்பு அலைய வானின் மலர் மழை பொழிந்தது எங்கும்
அரிக்குறுந் துடியே அன்றி அமரர் துந்துபியும் ஆர்த்த

15.அருவரைக் குறவர் தங்கள் அகன் குடிச் சீறூர் ஆயம்
பெரு விழா எடுத்து மிக்க பெருங்களி கூறும் காலைக்
கருவரை காள மேகம் ஏந்தியது என்னத் தாதை
பொருவரைத் தோள்களாரப் புதல்வனை எடுத்துக் கொண்டான்

16.கருங் கதிர் விரிக்கும் மேனி காமரு குழவி தானும்
இரும்புலி பறழின் ஓங்கி இறவுளர் அளவே அன்றி
அரும் பெறல் உலகமெல்லாம் அளப்பரும் பெருமை காட்டித்
தருங்குறி பலவும் சாற்றும் தன்மையிற் பொலிந்து தோன்ற

17.அண்ணலைக் கையில் ஏந்தற்கு அருமையால் உரிமைப் பேரும்
திண்ணன் என்றியம்பும் என்னத் திண்சிலை வேடர் ஆர்த்தார்
புண்ணியப் பொருளாய் உள்ள பொருவில் சீர் உருவினானைக்
கண்ணினுக்கு அணியாத் தங்கள் கலன்பல அணிந்தார் அன்றே

18.வரையுறை கடவுட் காப்பு மறகுடி மரபில் தங்கள்
புரையில் தொல் முறைமைக்கு ஏற்பப் பொருந்துவ போற்றிச் செய்து
விரையிளந் தளிருஞ் சூட்டி வேம்பு இழைத்து இடையே கோத்த
அரை மணிக் கவடி கட்டி அழகுற வளர்க்கும் நாளில்

19.வருமுறைப் பருவம் தோறும் வளமிகு சிறப்பில் தெய்வப்
பெருமடை கொடுத்துத் தொக்க பெருவிறல் வேடர்க்கெல்லாம்
திருமலி துழனி பொங்கச் செழுங்களி மகிழ்ச்சி செய்தே
அருமையில் புதல்வர் பெற்ற ஆர்வமும் தோன்ற உய்த்தார்

20.ஆண்டு எதிர் அணைந்து செல்ல விடும் அடித் தளர்வு நீங்கிப்
பூண் திகழ் சிறு புன் குஞ்சிப் புலியுகிர்ச் சுட்டி சாத்தி
மூண்டெழு சினத்துச் செங்கண் முளவு முள் அரிந்து கோத்த
நாண்டரும் எயிற்றுத் தாலி நலங்கிளர் மார்பில் தூங்க

21.பாசொளி மணியோடு ஆர்த்த பன் மணிச் சதங்கை ஏங்க
காசொடு தொடுத்த காப்புக் கலன் புனை அரைஞாண் சேர்த்தித்
தேசுடை மருப்பில் தண்டை செறிமணிக் குதம்பை மின்ன
மாசறு கோலம் காட்டி மறுகிடை ஆடும் நாளில்

22.தண் மலர் அலங்கல் தாதை தாய் மனம் களிப்ப வந்து
புண்ணிய கங்கை நீரில் புனிதமாம் திருவாய் நீரில்
உண்ணனைந்து அமுதம் ஊறி ஒழுகிய மழலைத் தீஞ் சொல்
வண்ண மென் பவளச் செவ்வாய் குதட்டியே வளரா நின்றார்

23.பொரு புலிப் பார்வைப் பேழ்வாய் முழை எனப் பொற்கை நீட்டப்
பரிஉடைத் தந்தை கண்டு பைந்தழை கைக் கொண்டோ ச்ச
இரு சுடர்க் குறு கண் தீர்க்கும் எழில் வளர் கண்ணீர் மல்கி
வருதுளி முத்தம் அத்தாய் வாய் முத்தம் கொள்ள மாற்றி

24.துடிக் குறடு உருட்டி ஓடித் தொடக்கு நாய்ப் பாசம் சுற்றிப்
பிடித்து அறுத்து எயினப் பிள்ளைப் பேதையர் இழைத்த வண்டல்

அடிச் சிறு தளிரால் சிந்தி அருகுறு சிறுவரோடும்
குடிச் செறு குரம்பை எங்கும் குறு நடை குறும்பு செய்து

25.அனையன பலவும் செய்தே ஐந்தின் மேல் ஆன ஆண்டின்
வனை தரு வடிவார் கண்ணி மறச் சிறு மைந்த ரோடும்
சினை மலர்க் காவுகள் ஆடி செறிகுடிக் குறிச்சி சூழ்ந்த
புனை மருப் புழலை வேலிப் புறச்சிறு கானிற் போகி

26.கடு முயல் பறழினோடுங் கான ஏனத்தின் குட்டி
கொடு வரிக் குருளை செந்நாய் கொடுஞ் செவிச் சாபம் ஆன
முடுகிய விசையில் ஓடித் தொடர்ந்து உடன் பற்றி முற்றத்து
இடு மரத் திரளில் கட்டி வளப்பன எண்ணிலாத

27. அலர் பகல் கழிந்த அந்தி ஐயவிப் புகையும் ஆட்டிக்
குலமுது குறத்தி ஊட்டிக் கொண்டு கண் துயிற்றிக் கங்குல்
புலர ஊன் உணவு நல்கிப் புரி விளையாட்டின் விட்டுச்
சில முறை ஆண்டு செல்ல சிலை பயில் பருவம் சேர்ந்தார்

28.தந்தையும் மைந்தனாரை நோக்கித் தன் தடித்த தோளால்
சிந்தை உள் மகிழப் புல்லிச் சிலைத் தொழில் பயிற்ற வேண்டி
முந்தை அத் துறையில் மிக்க முதியரை அழைத்துக் கூட்டி
வந்த நாள் குறித்தது எல்லாம் மறவர்க்குச் சொல்லி விட்டான்

29.வேடர் தம் கோமான் நாதன் வென்றி வேள் அருளால் பெற்ற
சேடரின் மிக்க செய்கைத் திண்ணன் வில் பிடிக்கின்றான் என்று
ஆடியல் துடியும் சாற்றி அறைந்த பேர் ஓசை கேட்டு
மாடுயர் மலைகள் ஆளும் மறக் குலத் தலைவர் எல்லாம்

30.மலை படு மணியும் பொன்னும் தரளமும் வரியின் தோலும்
கொலை புரி களிற்றுக் கோடும் பீலியின் குவையும் தேனும்
தொலைவில் பல் நறவும் ஊனும் பலங்களும் கிழங்கும் துன்றச்
சிலை பயில் வேடர் கொண்டு திசை தொறும் நெருங்க வந்தார்

31. மல்கிய வளங்கள் எல்லாம் நிறைந்திட மாறில் சீறூர்
எல்லையில் அடங்கா வண்ணம் ஈண்டினர் கொணர்ந்தா எங்கும்
பல்பெருங் கிளைஞர் போற்றப் பராய்க் கடன் பலவும் செய்து
வில் விழா எடுக்க என்று விளம்பினான் வேடர் கோமன்

32.பான்மையில் சமைத்துக் கொண்டு படைக்கலம் வினைஞர் ஏந்த
தேனலர் கொன்றையார் தம் திருச்சிலைச் செம்பொன் மேரு
வானது கடலின் நஞ்சும் ஆக்கிட அவர்க்கே பின்னும்
கான ஊன் அமுதம் ஆக்கும் சிலையினைக் காப்புச் செய்தார்

33.சிலையினைக் காப்புக் கட்டும் திண் புலி நரம்பில் செய்த
நலமிகு காப்பு நன்னாண் நாகனார் பயந்த நாகர்
குலம் விளங்கு கரிய குன்றின் கோலம் முன்கையில் சேர்த்தி
மலை உறை மாக்கள் எல்லாம் வாழ்த்த எடுத்து இயம்பினார்கள்

34.ஐவன அடிசில் வெவ்வேறு அமைந்தன புற்பாற் சொன்றி
மெய் வரைத் தினை மென் சோறு மூங்கில் வன் பதங்கள் மற்றும்
கைவினை எயினர் ஆக்கிக் கலந்த ஊன் கிழங்கு துன்றச்
செய் வரை உய்ப்ப எங்கும் கலந்தனர் சினவில் வேடர்

35.செம் தினை இடியும் தேனும் அருந்துவார் தேனில் தோய்த்து
வெந்த ஊன் அயில்வார் வேரி விளங்கனி கவளம் கொள்வார்
நந்திய ஈயல் உண்டி நசையொடு மிசைவார் வெவ்வேறு
அந்தமில் உணவின் மேலோர் ஆயினர் அளவிலார்கள்

36.அயல் வரைப் புலத்தின் வந்தார் அருங்குடி இருப்பின் உள்ளார்
இயல் வகை உணவில் ஆர்ந்த எயிற்றியர் எயினர் எல்லாம்
உயர் கதிர் உச்சி நீங்க ஒழிவில் பல் நறவு மாந்தி
மயலுறு களிப்பின் நீடி வரிசிலை விழவு கொள்வார்

37. பாசிலைப் படலைச் சுற்றிப் பன் மலர்த் தொடையல் சூடிக்
காசுடை வடத் தோல் கட்டி கவடி மெய்க் கலன்கள் பூண்டார்

மாசில் சீர் வெட்சி முன்னா வருதுறைக் கண்ணி சூடி
ஆசில் ஆசிரியன் ஏந்தும் அடற் சிலை மருங்கு சூழ்ந்தார்

38.தொண்டக முரசும் கொம்பும் துடிகளும் துளை கொள் வேயும்
எண்டிசை நிறைந்து விம்ம எழுந்த பேர் ஒலியினோடும்
திண்டிறல் மறவர் ஆர்ப்புச் சேண் விசும்பு இடித்துச் செல்லக்
கொண்ட சீர் விழவு பொங்கக் குறிச்சியை வலம் கொண்டார்கள்

39.குன்றவர் களி கொண்டாடக் கொடிச்சியர் துணங்கை ஆட
துன்றிய மகிழ்ச்சியோடும் சூர் அரமகளிர் ஆட
வென்றி வில் விழவினோடும் விருப்புடை ஏழாம் நாளாம்
அன்றிரு மடங்கு செய்கை அழகுற அமைத்த பின்னர்

40.வெங்கதிர் விசும்பின் உச்சி மேவிய பொழுதில் எங்கும்
மங்கல வாழ்த்து மல்க மருங்கு பல்லியங்கள் ஆர்ப்பத்
தங்கள் தொல் மரபின் விஞ்சைத் தனுத் தொழில் வலவர் தம்பால்
பொங்கொளிக் கரும் போர் ஏற்றைப் பொருசிலை பிடிப்பித்தார்கள்

41. பொற்றட வரையின் பாங்கர்ப் புரிவுறு கடன் முன் செய்த
வில் தொழில் களத்தில் நண்ணி விதிமுறை வணங்கி மேவும்
அற்றை நாள் தொடங்கி நாளும் அடல் சிலை ஆண்மை முற்றக்
கற்றனர் என்னை ஆளும் கானவர்க்கு அரிய சிங்கம்

42.வண்ணவெஞ் சிலையும் மற்றப் படைகளும் மலரக் கற்று
கண்ணகல் சாயல் பொங்கக் கலை வளர் திங்களே போல்
எண்ணிரண்டு ஆண்டின் செவ்வி எய்தினார் எல்லை இல்லாப்
புண்ணியம் தோன்றி மேல் மேல் வளர் அதன் பொலிவு போல்வார்

43. இவ் வண்ணம் திண்ணனார் நிரம்பு நாளில்
இருங் குறவர் பெருங்குறிச்சிக்கு இறைவன் ஆய
மை வண்ண வரை நெடுந் தோள் நாகன் தானும் மலை எங்கும்
வனம் எங்கும் வரம்பில் காலம்
கை வண்ணச் சிலை வேட்டை ஆடித் தெவ்வர் கண

நிரைகள் பல கவர்ந்து கானம் காத்து
மெய் வண்ணந்தளர் மூப்பின் பருவம் எய்தி வில்லுழவின்
பெரு முயற்சி மெலிவன் ஆனான்

44. அங்கண் மலைத் தடஞ்சாரல் புனங்கள் எங்கும்
அடலேனம் புலி கரடி கடமை ஆமா
வெங் கண் மரை கலையொடு மான் முதலாய் உள்ள மிருகங்கள்
மிக நெருங்கி மீதூர் காலைத்
திங்கள் முறை வேட்டை வினை தாழ்தது என்று சிலை
வேடர் தாம் எல்லாம் திரண்டு சென்று
தங்கள் குல முதல் தலைவன் ஆகி உள்ள தண் தெரியல்
நாகன் பால் சார்ந்து சொன்னார்

45.சொன்ன உரை கேட்டலுமே நாகன் தானும் சூழ்ந்து
வரும் தன் மூப்பின் தொடர்வு நோக்கி
முன் அவர்கட்கு உரை செய்வான் மூப்பினாலே முன்பு போல்
வேட்டையினில் முயல கில்லேன்
என் மகனை உங்களுக்கு நாதனாக எல்லீரும் கைக்
கொண்மின் என்ற போதின்
அன்னவரும் இரங்கிப் பின் மகிழ்ந்து தம் கோன் அடி வணங்கி
இம் மாற்றம் அரைகின்றார்கள்

46. இத்தனை காலமும் நினது சிலைக் கீழ் தங்கி இனிது
உண்டு தீங்கு இன்றி இருந்தோம் இன்னும்
அத்த! நினது அருள் வழியே நிற்பது அல்லால் அடுத்த நெறி
வேறு உளதோ அதுவே அன்றி
மெய்த்த விறல் திண்ணனை உன் மரபில் சால மேம் படவே
பெற்று அளித்தாய் விளங்கு மேன்மை
வைத்த சிலை மைந்தனை ஈண்டு அழைத்து நுங்கள் வரை
ஆட்சி அருள் என்றார் மகிழ்ந்து வேடர்

47. சிலை மறவர் உரை செய்ய நாகன் தானும் திண்ணனை
முன் கொண்டுவரச் செப்பி விட்டு

மலை மருவு நெடும் கானில் கன்னி வேட்டை மகன் போகக்
காடு பலி மகிழ்வு ஊட்ட
தலை மரபின் வழி வந்த தேவராட்டிதனை அழைமின் என
அங்குச் சார்ந்தோர் சென்று
நிலைமை அவள் தனக்கு உரைப்ப நரை மூதாட்டி நெடிது வந்து
விருப்பினோடும் கடிது வந்தாள்

48. கானில் வரித்தளிர் துதைந்த கண்ணி சூடிக் கலை
மருப்பின் அரிந்த குழை காதில் பெய்து
மானின் வயிற்று அரிதாரத் திலகம் இட்டு மயில் கழுத்து
மனவு மணி வடமும் பூண்டு
தான் இழிந்து இரங்கி முலை சரிந்து தாழத் தாழைப்பீலி
மரவுரி மேல் சார எய்திப்
பூ நெருங்கு தோரை மலி சேடை நல்கிப் போர் வேடர்
கோமானைப் போற்றி நின்றாள்

49. நின்ற முதுகுறக்கோலப் படிமத்தாளை நேர் நோக்கி
அன்னை நீ நிரப்பு நீங்கி
நன்று இனிதின் இருந்தனையோ என்று கூறும் நாகன்
எதிர் நலம் பெருக வாழ்த்தி நல்ல
மென் தசையும் ஈயலொடு நறவும் வெற்பில் விளை
வளனும் வேண்டிற்று எல்லாம்
அன்று நீ வைத்தபடி பெற்று வாழ்வேன் அழைத்த பணி
என் என்றாள் அணங்கு சார்ந்தாள்

50. கோட்டமில் என்குல மைந்தன் திண்ணன் எங்கள்
குலத் தலைமை யான் கொடுப்பக்கொண்டு பூண்டு
பூட்டுறு வெஞ் சிலை வேடர் தம்மைக் காக்கும் பொருப்புரிமை
புகுகின்றான் அவனுக்கு என்றும்
வேட்டை வினை எனக்கு மேலாக வாய்த்து வேறு
புலங் கவர் வென்றி மேவு மாறு
காட்டிலுறை தெய்வங்கள் விரும்பி உண்ணக் காடு பலி
ஊட்டு என்றான் கவலை இல்லான்

51.மற்று அவன்தன் மொழி கேட்ட வரைச் சூராட்டி மனமகிழ்ந்து
இங்கு அன்போடு வருகின்றேனுக்கு
எற்றையினுங் குறிகள் மிக நல்ல ஆன இதனாலே உன்
மைந்தன் திண்ணனான வெற்றி வரிச்
சிலையோன் நின் அளவில் அன்றி மேம்படுகின்றான்
என்று விரும்பி வாழ்த்திக்
கொற்றவன் தெய்வங்கள் மகிழ ஊட்ட வேண்டுவன
குறைவின்றிக் கொண்டு போனாள்

52.தெய்வ நிகழ் குற முதியாள் சென்ற பின்பு திண்ணனார்
சிலைத் தாதை அழைப்பச் சீர்கொள்
மைவிரவு நறுங் குஞ்சி வாசக் கண்ணி மணி நீல
ஒன்று வந்தது என்னக்
கைவிரவு சிலை வேடர் போற்ற வந்து காதல் புரி
தாதை கழல் வணங்கும் போதில்
செய்வரை போல் புயம் இரண்டும் செறியப் புல்லிச்
செழும் புலித்தோல் இருக்கையின் முன்சேர வைத்தான்

53.முன் இருந்த மைந்தன் முகம் நோக்கி நாகன்
மூப்பு எனை வந்து அடைந்தலினால் முன்புபோல
என்னுடைய முயற்சியினால் வேட்டை ஆட இனி
எனக்குக் கருத்து இல்லை எனக்கு மேலாய்
மன்னு சிலை மலையர் குலக் காவல் பூண்டு மாறு
எறிந்து மா வேட்டை ஆடி என்றும்
உன்னுடைய மரபு உரிமை தாங்குவாய் என்றுடைய
தோலும் சுரிகையும் கைக் கொடுத்தான் அன்றே

54.தந்தை நிலை உள்கொண்டு தளர்வு கொண்டு தங்கள்
குலத் தலைமைக்குச் சார்வு தோன்ற
வந்த குறைபாடு அதனை நிரப்புமாறு மனம் கொண்ட
குறிப்பினால் மறாமை கொண்டு
முந்தையவன் கழல் வணங்கி முறைமை தந்த முதல் சுரிகை
உடை தோலும் வாங்கிக் கொண்டு
சிந்தை பரங்கொள நின்ற திண்ணனார்க்குத் திருத்
தாதை முகம் மலர்ந்து செப்புகின்றான்

55.நம்முடைய குல மறவர் சுற்றத்தாரை நான் கொண்டு
பரித்து அதன் மேல் நலமே செய்து
தெம் முனையில் அயற் புலங்கள் கவர்ந்து கொண்ட திண்
சிலையின் வளமொழியாச் சிறப்பின் வாழ்வாய்
வெம் முனையின் வேட்டைகளும் உனக்கு வாய்க்கும்
விரைந்து நீ தாழாதே வேட்டை ஆட
இம் முரண் வெஞ் சிலை வேடர் தங்களோடும் எழுக என
விடை கொடுத்தான் இயல்பில் நின்றான்

56.செங்கண் வயக் கோளரியேறு அன்ன திண்மை
திண்ணனார் செய் தவத்தின் பெருமை பெற்ற
வெங்கண் விறல் தாதை கழல் வணங்கி நின்று விடை
கொண்டு புறம் போந்து வேடரோடும்
மங்கல நீர்ச் சுனை படிந்து மனையின் வைகி வைகிருளின்
புலர் காலை வரிவிற் சாலைப்
பொங்கு சிலை அடல் வேட்டைக் கோலம் கொள்ளப் புனை
தொழில் கை வினைஞரோடும் பொலிந்து புக்கார்

57.நெறி கொண்ட குஞ்சிச் சுருள் துஞ்சி நிமிர்ந்து பொங்க
முறி கொண்ட கண்ணிக்கு இடை மொய்யொளிப் பீலி சேர்த்தி
வெறி கொண்ட முல்லைப் பிணைமீது குறிஞ்சி வெட்சி
செறி கொண்ட வண்டின் குலம் சீர் கொளப் பின்பு செய்து

58.முன் நெற்றியின் மீது முருந்திடை வைத்த குன்றி
தன்னில் புரி கொண்ட மயிர் கயிறாரச் சாத்தி
மின்னல் திகழ் சங்கு விளங்கு வெண் தோடு காதின்
மன்னிப் புடை நின்றன மா மதி போல வைக

59.கண்டத்திடை வெண் கவடிக் கதிர் மாலை சேர
கொண்டக் கொடு பன் மணி கோத்திடை ஏனக் கோடு
துண்டப் பிறை போல்வன தூங்கிட வேங்கை வன்தோல்
தண்டைச் செயல் பொங்கிய சன்ன வீரம் தயங்க

60. மார்பில் சிறு தந்த மணித்திரள் மாலைத் தாழத்
தாரிற் பொலி தோள் வலயங்கள் தழைத்து மின்னச்
சேர்விற் பொலி கங்கண மீது திகழ்த முன் கைக்
கார்விற் செறி நாண் எறி கைச் செறி கட்டி கட்டி

61.அரையில் சரணத்து உரி ஆடையின் மீது பௌவத்து
திரையில் படு வெள்ளலகு ஆர்த்து விளிம்பு சேர்த்தி
நிரையில் பொலி நீளுடை தோல்கரி கைப்புறம் சூழ்
விரையில் துவர் வார் விசி போக்கி அமைத்து வீக்கி

62.வீரக் கழல் காலின் விளங்க அணிந்து பாதம்
சேரத் தொடு நீடு செருப்பு விருப்பு வாய்ப்பப்
பாரப் பெரு வில் வலம் கொண்டு பணிந்து திண்ணன்
சாரத் திருத்தாள் மடித்து ஏற்றி வியந்து தாங்கி

63.அங்கு அப்பொழுதில் புவனத்து இடர் வாங்க ஓங்கித்
துங்கப் பெரு மா மழை போன்று துண் என்று ஒலிப்ப
வெங்கண் சின நீடு விலங்கு விலங்கி நீங்கச்
செங்கைத் தலத்தால் தடவிச் சிறு நாண் எறிந்தார்

64.பல்வேறு வாளி புதை பார்த்து உடன் போத ஏவி
வில் வேடர் ஆயத் துடி மேவி ஒலிக்கு முன்றில்
சொல் வேறு வாழ்த்துத் திசைதோறும் துதைந்து விம்ம
வல்லேறு போல்வார் அடல் வாளி தெரிந்து நின்றார்

65.மானச் சிலை வேடர் மருங்கு நெருங்கும் போதில்
பானற்குல மாமலரில் படர் சோதியார் முன்
தேனற்றசை தேறல் சருப் பொரி மற்றும் உள்ள
கானப் பலி நேர் கடவுள் பொறையாட்டி வந்தாள்
66.நின்று எங்கும் மொய்க்கும் சிலை வேடர்கள் நீங்கப் புக்குச்
சென்று அங்கு வள்ளல் திரு நெற்றியில் சேடை சாத்தி
உன் தந்தை தந்தைக்கும் இந் நன்மைகள் உள்ள வல்ல
நன்றும் பெரிது விறல் நம்மளவு அன்று இது என்றாள்

67.அப் பெற்றியில் வாழ்த்தும் அணங்குடை ஆட்டி தன்னைச்
செப்பற்கு அரிதாய சிறப்பு எதிர் செய்து போக்கிக் கைப் பற்றிய
திண் சிலை கார் மழை மேகம் என்ன
மெய்ப் பொற்புடை வேட்டையின் மேல் கொண்டு எழுந்து போந்தார்

68. தாளில் வாழ் செருப்பர் தோல் தழைத்த நீடு தானையர்
வாளியோடு சாபம் மேவு கையர் வெய்ய வன் கணார்
ஆளி ஏறு போல ஏகும் அண்ணலார் முன் எண்ணிலார்
மீளி வேடர் நீடு கூட்டம் மிக்கு மேல் எழுந்ததே

69. வன் தொடர் பிணித்த பாசம் வன் கை மள்ளர் கொள்ளவே
வென்றி மங்கை வேடர் வில்லின் மீது மேவு பாதமுன்
சென்று நீளுமாறு போல்வ செய்ய நாவின் வாய வாய்
ஒன்றோடு ஒன்று நேர் படாமல் ஓடு நாய்கள் மாடெலாம்
70.போர் வலைச் சிலைத் தொழில் புறத்திலே விளைப்பச்
சார் வலைத் தொடக்கு அறுக்க ஏகும் ஐயர் தம் முன்னே
கார் வலைப் படுத்த குன்று கானமா வளைக்க நீள்
வார் வலைத் திறம் சுமந்து வந்த வெற்பர் முந்தினார்

71. நண்ணி மா மறைக் குலங்கள் நாட என்று நீடும் அத்
தண்ணிலா அடம்பு கொன்றை தங்கு வேணியார் தமைக்
கண்ணில் நீடு பார்வை ஒன்று கொண்டு காணும் அன்பர் முன்
எண்ணில் பார்வை கொண்டு வேடர் எம் மருங்கும் ஏகினார்

72. கோடுமுன் பொலிக்கவும் குறுங் கணா குளிக்குலம்
மாடு சென்று இசைப்பவும் மருங்கு பம்பை கொட்டவும்
சேடு கொண்டகை விளிச் சிறந்த ஓசை செல்லவும்
காடு கொண்டு எழுந்த வேடு கை வளைந்து சென்றதே

73.நெருங்கு பைந்தருக் குலங்கள் நீடு காடு கூட நேர்
வருங்கருஞ் சிலைத் தடக்கை மான வேடர் சேனை தான்
பொருந் தடந் திரைக்கடல் பரப்பு இடைப் புகும் பெருங்
கருந்தரங்க நீள் புனல் களிந்தி கன்னி ஒத்ததே

74.தென் திசைப் பொருப்புடன் செறிந்த கானின் மான் இனம்
பன்றி வெம் மரைக் கணங்கள் ஆதியான பல் குலம்
துன்றி நின்ற என்றடிச் சுவட்டின் ஒற்றர் சொல்லவே
வன் தடக்கை வார்கொடு எம் மருங்கும் வேடர் ஓடினார்

75.ஓடி எறிந்து வாரொழுக்கி யோசனைப் பரப்பு எலாம்
நெடிய திண் வலைத் தொடக்கு நீளிடைப் பிணித்து நேர்
கடி கொளப் பரந்த காடு காவல் செய்து அமைத்த பின்
செடி தலைச் சிலைக்கை வேடர் திண்ணனார் முன் நண்ணினார்

76. வெஞ்சிலைக்கை வீரனாரும் வேடரோடு கூடி முன்
மஞ்சலைக்கு மாமலை சரிப் புறத்து வந்த மா
அஞ்சுவித்து அடர்க்கும் நாய்கள் அட்டமாக விட்டு நீள்
செஞ்சரத்தினோடு குழல் செய்த கானுள் எய்தினர்

77.வெய்ய மா எழுப்ப ஏவி வெற்பராயம் ஓடி நேர்
எய்யும் வாளி முன் தெரிந்து கொண்டு செல்ல எங்கணும்
மொய் குரல் துடிக் குலங்கள் பம்பை முன் சிலைத்து எழக்
கை விளித்து அதிர்த்து மா எழுப்பினார்கள் கானெலாம்

78.ஏனமோடு மான் இனங்கள் எண்கு திண் கலைக் குலம்
கான மேதி யானை வெம் புலிக் கணங்கள் கான் மரை
ஆன மா அநேக மா வெருண்டு எழுந்து பாய முன்
சேனை வேடர் மேல் அடர்ந்து சீறி அம்பில் நூறினார்

79.தாளறுவன் இடை துணிவன தலை துமிவன கலைமா
வாளிகளொடு குடல் சொரிதர மறிவன சில மரை மா
நீளுடல் விடு சரம் உருவிட நிமிர்வன மிடை கட மா
மீளிகொள் கணை படும் உடல் எழ விழுவன பல உழையே

80.வெங்கணை படு பிடர் கிழிபட விசை உருவிய கயவாய்
செங் கனல் விட அதனொடு கணை செறிய முன் இரு கருமா

அங்கு எழும் சிரம் உருவிய பொழுது அடல் எயிறு உற அதனைப்
பொங்கிய சினமொடு கவர்வன புரைவன சில புலிகள்

81. பின் மறவர்கள் விடு பகழிகள் பிற குற வயிறிடை போய்
முன் நடுமுக மிசை உருவிட முடுகிய விசையுடன் அக்
கொன் முனை அடு சரம் இனம் எதிர் குறுகிய முகம் உருவத்
தன் எதிர் எதிர் பொருவன நிகர் தலையன பல கலைகள்

82.கரு வரை ஒரு தனுவொடு விசை கடுகியது என முனை நேர்
குரிசில் முன் விடும் அடுசரம் எதிர் கொலை பயில் பொழுது அவையே
பொரு கரி யொடு சின அரியிடை புரையறவுடல் புகலால்
வரும் இரவொடு பகல் அணைவன என மிடையும் அவ்வனமே

83.நீளிடை விசை மிசை குதிகொள நெடு முகில் தொட எழு மான்
தாளுறு கழல் மறவர்கள் விடு சரம் நிரை தொடர்வன தாம்
வாள் விடுகதிர் மதி பிரிவுற வருமென விழும் உழையைக்
கோளொடு பயில் பணி தொடர் நிலை கொளவுள எதிர் பலவே

84.கடல் விரி புனல் கொள விழுவன கரு முகிலென நிரையே
படர்வொடு செறி தழை பொதுளிய பயில் புதல் வனம் அதன் மேல்
அடலுறு சரம் உடலுற வரை அடியிடம் அலமரலால்
மிடை கரு மரை கரடிகள் ஓடு விழுவன வன மேதி

85.பல துறைகளின் வெருவரலொடு பயில் வலையற நுழை மா
உலமொடு படர்வன தகையுற உறு சினமொடு கவர் நாய்
நிலவிய இரு வினை வலை இடை நிலை சுழல் பவர் நெறி சேர்
புலனுறு மனனிடை தடைசெய்த பொறிகளின் அலவுளவே

86.துடியடியன மடி செவியன துறுகய முனி தொடரார்
வெடி பட விரி சிறு குருளைகள் மிசை படு கொலை விரவார்
அடி தளர்வுறு கரு உடையன அணை உறு பிணை அலையார்
கொடியன எதிர் முடுகியும் உறு கொலை புரி சிலை மறவர்

87.இவ்வகை வரு கொலை மறவினை எதிர் நிகழ்வுழி அதிரக்
கைவரைகலும் வெருவுற இடை கான் எழுவதோர் ஏனம்
பெய் கருமுகில் என இடியொடு பிதிர் கனல் விழி சிதறி
மொய் வலைகளை அற நிமிர் முடுகிய கடு விசையில்

88.போமது தணை அடுதிறலொடு பொரு மறவர்கள் அரியேறு
ஆமவர் தொடர்வுறும் விசையுடன் அடி வழி செலும் அளவில்
தாம் ஒருவரும் அறிகிலரவர் தனி தொடர்வுழி அதன்மேல்
ஏமுனை அடு சிலை விடலைகள் இருவர்கள் அடி பிரியார்

89.நாடிய கழல் வயவர்கள் அவர் நாணனும் நெடு வரிவில்
காடனும் எனும் இருவரும் மலை காவலரொடு கடிதில்
கூடினர் விடு பகழிகளொடு கொலை ஞமலிகள் வழுவி
நீடிய சரி படர்வது தரு நீழலின் விரை கேழல்

90.குன்றியை நிகர் முன் செற எரி கொடு விழி இடக் குரல் நீள்
பன்றியும் அடல் வன் திறலொடு படர் நெறி நெடிதோடித்
துன்றியது ஒரு குன்று அடி வரை சுலவிய நெறி குழல்
சென்று அதனிடை நின்றது வலிது தெருமர நிரையில்

91.அத் தரு வளர் சுழல் இடை அடை அதன் நிலை அறிபவர் முன்
கைத் தெரி கணையினில் அடுவது கருதலர் விசை கடுகி
மொய்த்தெழு சுடர் விடு சுரிகையை முனை பெற எதிர் உருவி
குத்தினர் உடல் முறிபட வெறி குல மறவர்கள் தலைவர்

92.வேடர் தங்கரிய செங்கண் வில்லியார் விசையில் குத்த
மாடிரு துணியாய் வீழ்ந்த வராகத்தைக் கண்டு நாணன்
காடனே இதன் பின் இன்று காதங்கள் பல வந்து எய்த்தோம்
ஆடவன் கொன்றான் அச்சோ என்று அடியில் தாழ்ந்தார்

93.மற்றவர் திண்ணனார்க்கு மொழிகின்றார் வழி வந்து ஆற்ற
உற்றது பசி வந்து எம்மை உதவிய இதனைக் காய்ச்சிச்

சற்று நீ அருந்தி யாமும் தின்று தண்ணீர் குடித்து
வெற்றி கொள் வேட்டைக் காடு குருகுவோம் மெல்ல என்றார்

94.என்று அவர் கூற நோக்கித் திண்ணனார் தண்ணீர் எங்கே
நன்றும் இவ் வனத்தில் உள்ளது என்று உரை செய்ய நாணன்
நின்ற இப் பெரிய தேக்கின் அப்புறம் சென்றால் நீண்ட
குன்றினுக்கு அயலே ஓடும் குளிர்ந்த பொன் முகலி என்றான்

95.பொங்கிய சின வில் வேடன் சொன்னபின் போவோம் அங்கே
இங்கிது தன்னைக் கொண்டு போதுமின் என்று தாமும்
அங்கது நோக்கிச் சென்றார் காவதம் அரையில் கண்டார்
செங்கண் ஏறு உடையார் வைகும் திருமலைச் சாரல் சோலை

96.நாணனே தோன்றும் குன்றில் நாணுவோம் என்ன நாணன்
காண நீ போதின் நல்ல காட்சியே காணும் இந்தச்
சேணுயர் திருக் காளத்தி மலை மிசை எழுந்து செவ்வே
கோணமில் குடுமித் தேவர் இருப்பர் கும்பிடலாம் என்றான்

97.ஆவதென் இதனைக் கண்டு இங்கு அணை தொறும் என் மேல் பாரம்
போவது ஒன்று உளது போலும் ஆசையும் பொங்கி மேல் மேல்
மேவிய நெஞ்சும் வேறோர் விருப்புற விரையா நிற்கும்
தேவர் அங்கு இருப்பது எங்கே போகென்றார் திண்ணனார் தாம்

98.உரை செய்து விரைந்து செல்ல அவர்களும் உடனே போந்து
கரை வளர் கழையின் முத்தும் கார் அகில் குறடும் சந்தும்
வரை தரு மணியும் பொன்னும் வயிரமும் புளினம் தோறும்
திரைகள் முன் திரட்டி வைத்த திரு முகலியினைச் சார்ந்தார்

99.ஆங்கு அதன் கரையின் பாங்கோர் அணி நிழல் கேழல் இட்டு
வாங்கு வில் காடன் தன்னை மரக் கடை தீக் கோல் பண்ணி
ஈங்கு நீ நெருப்புக் காண்பாய் இம்மலை ஏறிக் கண்டு
நாங்கள் வந்து அணைவோம் என்று நாணனும் தாமும் போந்தார்

100.அளி மிடை கரை சூழ் சோலை அலர்கள் கொண்டு அணைந்த ஆற்றின்
தெளி புனல் இழிந்து சிந்தை தெளிவுறும் திண்ணனார் தாம்
களி வரும் மகிழ்ச்சி பொங்கக் காளத்தி கண்டு கொண்டு
குளிர் வரு நதி ஊடு ஏகிக் குலவரைச் சாரல் சேர்ந்தார்

101.கதிரவன் உச்சி நண்ணக் கடவுள் மால் வரையின் உச்சி
அதிர் தரும் ஓசை ஐந்தும் ஆர் கலி முழக்கம் காட்ட
இது என் கொல் நாணா என்றார்க்கு இம் மலைப் பெருந்தேன் சூழ்ந்து
மது மலர் ஈக்கள் மொய்த்து மருங்கு எழும் ஒலி கொல் என்றான்

102.முன்பு செய் தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பம் ஆன
அன்பினை எடுத்துக் காட்ட அளவிலா ஆர்வம் பொங்கி
மன் பெரும் காதல் கூர வள்ளலார் மலையை நோக்கி
என்பு நெக்கு உருகி உள்ளத்து எழு பெரு வேட்கை யோடும்

103.நாணனும் அன்பும் முன்பு நளிர் வரை ஏறத் தாமும்
பேணு தத்துவங்கள் என்னும் பெருகு சோபானம் ஏறி
ஆணையாம் சிவத்தைச் சாரா அணைபவர் போல ஐயர்
நீணிலை மலையை ஏறி நேர் படச் செல்லும் போதில்

104.திங்கள் சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணா முன்னே
அம் கண்ணர் கருணை கூர்ந்த அருள் திரு நோக்கம் எய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்பு விட்டு அகல நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழல் பொருவில் அன்பு உருவம் ஆனார்

105.மாகமார் திருக் காளத்தி மலை எழு கொழுந்தாய் உள்ள
ஏக நாயகரைக் கண்டார் எழுந்த பேர் உவகை அன்பின்
வேகம் ஆனது மேல் செல்ல மிக்கது ஓர் விரைவின் ஓடும்
மோகமாய் ஓடிச் சென்றார் தழுவினார் மோந்து நின்றார்

106.நெடிது போது உயிர்த்து நின்று நிறைந்து எழு மயிர்க்கால் தோறும்
வடிவெலாம் புளகம் பொங்க மலர்க் கண்ணீர் அருவி பாய

அடியனேற்கு இவர் தாம் இங்கே அகப்பட்டார் அச்சோ என்று
படி இலாப் பரிவு தான் ஓர் படிவமாம் பரிசு தோன்ற

107. வெம் மறக் குலத்து வந்த வேட்டுவச் சாதியார் போல்
கைம் மலை கரடி வேங்கை அரி திரி கானம் தன்னில்
உம்முடன் துணையாய் உள்ளார் ஒருவரும் இன்றிக் கெட்டேன்
இம் மலைத் தனியே நீர் இங்கு இருப்பதே என்று நைந்தார்

108. கைச்சிலை விழுந்தது ஓரார் காளையார் மீள இந்தப்
பச்சிலையோடும் பூவும் பறித்திட்டு நீரும் வார்த்து
மச்சிது செய்தார் யாரோ என்றலும் மருங்கு நின்ற
அச்சிலை நாணன் தானும் நான் இது அறிந்தேன் என்பான்

109. வன்றிறல் உந்தை யோடு மா வேட்டை ஆடிப் பண்டிக்
குன்று இடை வந்தோம் ஆகக் குளிர்ந்த நீர் இவரை ஆட்டி
ஒன்றிய இலைப் பூச்சூட்டி ஊட்டி முன்பு அறைந்த தேர் பார்ப்பான்
அன்றிது செய்தான் இன்றும் அவன் செய்தது ஆகும் என்றான்

110. உண்ணிறைந்து எழுந்த தேனும் ஒழிவின்றி ஆரா அன்பில்
திண்ணனார் திருக் காளத்தி நாயனார்க்கு இனிய செய்கை
எண்ணிய இவைகொலாம் என்று இது கடைப் பிடித்துக் கொண்டு அவ்
அண்ணலைப் பிரிய மாட்டா அளவில் ஆதரவு நீட

111. இவர் தமைக் கண்டேனுக்குத் தனியராய் இருந்தார் என்னே
இவர் தமக்கு அமுது செய்ய இறைச்சியும் இடுவார் இல்லை
இவர் தமைப் பிரிய ஒண்ணாது என்செய்கேன் இனி யான் சால
இவர் தமக்கு இறைச்சி கொண்டிங்கு எய்தவும் வேண்டும் என்று

112.போதுவர் மீண்டும் செல்வர் புல்லுவர் மீளப் போவர்
காதலின் நோக்கி நிற்பர் கன்று அகல் புனிற்று ஆப் போல்வர்
நாதனே அமுது செய்ய நல்ல மெல் இறைச்சி நானே
கோதறத் தெரிந்து வேறு கொண்டு இங்கு வருவேன் என்பார்

113.ஆர்தமராக நீர் இங்கு இருப்பது என்று அகலமாட்டேன்
நீர் பசித்து இருக்க இங்கு நிற்கவும் இல்லேன் என்று
சோர் தரு கண்ணீர் வாரப் போய் வரத் துணிந்தார் ஆகி
வார் சிலை எடுத்துக் கொண்டு மலர்க் கையால் தொழுது போந்தார்

114.முன்பு நின்று அரிதில் நீங்கி மொய் வரை இழிந்து நாணன்
பின்பு வந்து அணைய முன்னைப் பிற துறை வேட்கை நீங்கி
அன்பு கொண்டு உய்ப்பச் செல்லும் அவர் திரு முகலி ஆற்றின்
பொன் புனை கரையில் ஏறிப் புது மலர்க் காவில் புக்கார்

115.காடனும் எதிரே சென்று தொழுது தீக் கடைந்து வைத்தேன்
கோடுடை ஏனம் உங்கள் குறிப்படி உறுப்பை எல்லாம்
மாடுற நோக்கிக் கொள்ளும் மறித்து நாம் போகைக்கு இன்று
நீட நீர் தாழ்த்தது என்னோ என்றலும் நின்ற நாணன்

116.அங்கிவர் மலையில் தேவர் தம்மைக் கண்டு அணைத்துக் கொண்டு
வங்கினைப் பற்றிப் போதாவல்லுடும்பு என்ன நீங்கான்
இங்கும் அத் தேவர் தின்ன இறைச்சி கொண்டு ஏகப் போந்தான்
நம்குலத் தலைமை விட்டான் நலப்பட்டான் தேவர்க்கு என்றான்

117. என் செய்தாய் திண்ணா நீ தான் என்ன மால் கொண்டாய் எங்கள்
முன் பெரு முதலி அல்லையோ என முகத்தை நோக்கார்
வன் பெரும் பன்றி தன்னை எரியினில் வதக்கி மிக்க
இன்புறு தசைகள் வெவ்வேறு அம்பினால் ஈர்ந்து கொண்டு
118.கோலினில் கோத்துக் காய்ச்சி கொழும் தசை பதத்தில் வேவ
வாலிய சுவைமுன் காண்பான் வாயினில் அதுக்கிப் பார்த்துச்
சாலவும் இனிய எல்லாம் சருகு இலை இணைத்த கல்லை
ஏலவே கோலிக் கூட அதன் மிசை இடுவார் ஆனார்

119. மருங்கு நின்றவர்கள் பின்னும் மயல் மிக முதிர்ந்தான் என்னே
அரும் பெறல் இறைச்சி காய்ச்சி அதுக்கி வேறு உமிழா நின்றான்
பெரும் பசி உடையன் ஏனும் பேச்சிலன் எமக்கும் பேறு
தரும் பரிசு உணரான் மற்றைத் தசை புறத்து எறியா நின்றான்

120.தேவுமால் கொண்டான் இந்தத் திண்ணன் மற்று இதனைத் தீர்க்கல்
ஆவது ஒன்று அறியோம் தேவராட்டியை நாகனோடு
மேவி நாம் கொணர்ந்து தீர்க்க வேண்டும் அவ் வேட்டைக் கானில்
ஏவல் ஆட்களையும் கொண்டு போதும் என்று எண்ணிப் போனார்

121. கானவர் போனது ஓரார் கடிதினில் கல்லையின் கண்
ஊன் அமுது அமைத்துக் கொண்டு மஞ்சனம் ஆட்ட உன்னி
மா நதி நன்னீர் தூய வாயினில் கொண்டு கொய்த
தூ நறும் பள்ளித் தாமங் குஞ்சி மேல் துதையக் கொண்டார்

122. தனு ஒரு கையில் வெய்ய சரத்துடன் தாங்கிக் கல்லைப்
புனித மெல் இறைச்சி நல்ல போனகம் ஒரு கை ஏந்தி
இனிய எம்பிரானார் சாலப் பசிப்பர் என்று இரங்கி ஏங்கி
நனி விரைந்து இறைவர் வெற்பை நண்ணினார் திண்ணனார்தாம்

123.இளைத்தனர் நாயனார் என்று ஈண்டச் சென்று எய்தி வெற்பின்
முளைத்து எழு முதலைக் கண்டு முடிமிசை மலரைக் காலில்
வளைத்த பொற் செருப்பால் மாற்றி வாயின் மஞ்சன நீர் தன்னை
விளைத்த அன்பு உமிழ்வார் போன்று விமலனார் முடிமேல் விட்டார்

124. தலை மிசைச் சுமந்த பள்ளித் தாமத்தைத் தடங் காளத்தி
மலை மிசைத் தம்பிரானார் முடி மிசை வணங்கிச் சாத்திச்
சிலைமிசைப் பொலிந்த செங்கைத் திண்ணனார் சேர்த்த கல்லை
இலை மிசைப் படைத்த ஊனின் திரு அமுது எதிரே வைத்து
125.கொழுவிய தசைகள் எல்லாம் கோலினில் தெரிந்து கோத்து அங்கு
அழலுறு பதத்தில் காய்ச்சிப் பல்லினால் அதுக்கி நாவில்
பழகிய இனிமை பார்த்துப் படைத்த இவ் இறைச்சி சால
அழகிது நாயனீரே அமுது செய்து அருளும் என்றார்

126.அன்ன இம் மொழிகள் சொல்லி அமுது செய்வித்த வேடர்
மன்னனார் திருக் காளத்தி மலையினார்க்கு இனிய நல் ஊன்
இன்னமும் வேண்டும் என்னும் எழு பெரும் காதல் கண்டு
பன்னெடுங் கரங்கள் கூப்பிப் பகலவன் மலையில் தாழ்ந்தான்

127. அவ்வழி அந்தி மாலை அணைதலும் இரவு சேரும்
வெவ்விலங்கு உள என்று அஞ்சி மெய்மையின் வேறு கொள்ளாச்
செவ்விய அன்பு தாங்கித் திருக் கையில் சிலையும் தாங்கி
மைவரை என்ன ஐயர் மருங்கு நின்று அகலா நின்றார்

128.சார்வரும் தவங்கள் செய்து முனிவரும் அமரர் தாமும்
கார்வரை அடவி சேர்ந்தும் காணுதற்கு அரியார் தம்மை
ஆர்வம் முன் பெருக ஆரா அன்பினில் கண்டு கொண்டே
நேர் பெற நோக்கி நின்றார் நீள் இருள் நீங்க நின்றார்

129. கழை சொரி தரளக் குன்றில் கதிர் நிலவு ஒருபால் பொங்க
முழை அரவு உமிழ்ந்த செய்ய மணி வெயில் ஒருபால் மொய்ப்பத்
தழை கதிர்ப் பரிதியோடும் சந்திரன் தலை உவாவில்
குழையணி காதர் வெற்பைக் கும்பிடச் சென்றால் ஒக்கும்

130.விரவு பன்மணிகள் கான்ற விரிகதிர்ப் படலை பொங்க
மரகதம் ஒளி கொள் நீல மணிகளும் இமைக்கும் சோதி
பொர இரு சுடருக்கு அஞ்சிப் போயின புடைகள் தோறும்
இரவு இருள் ஒதுங்கினாலே போன்று உளது எங்கும் எங்கும்

131. செந்தழல் ஒளியில் பொங்கும் தீப மா மரங்களாலும்
மந்திகள் முழையில் வைத்த மணி விளக்கு ஒளிகளாலும்
ஐந்தும் ஆறடக்கி உள்ளார் அரும் பெரும் சோதியாலும்
எந்தையார் திருக்காளத்தி மலையினில் இரவு ஒன்று இல்லை

132. வரும் கறைப் பொழுது நீங்கி மல்கிய யாமஞ் சென்று
சுருங்கிட அறிந்த புள்ளின் சூழ் சிலம்பு ஓசை கேட்டுக்
கருங்கடல் என்ன நின்ற கண் துயிலாத வீரர்
அரும் பெறல் தம்பிரனார்க்கு அமுது கொண்டு அணைய வேண்டி
133. ஏறுகாற்பன்றியோடும் இருங்கலை புனமான் மற்றும்
வேறு வேறு இனங்கள் வேட்டை வினைத் தொழில் விரகினாலே
ஊறுசெய் காலம் சிந்தித்து உருமிகத் தெரியாப் போதின்
மாறடு சிலையும் கொண்டு வள்ளலைத் தொழுது போந்தார்

134. மொய் காட்டும் இருள் வாங்கி முகம் காட்டும் தேர் இரவி
மெய் காட்டும் அன்புடைய வில்லியர் தனி வேட்டை
எய்காட்டின் மாவளைக்க இட்ட கரும் திரை எடுத்துக்
கை காட்டும் வான் போலக் கதிர் காட்டி எழும் போதில்

135. எய்திய சீர் ஆகமத்தில் இயம்பிய பூசனைக்கு ஏற்பக்
கொய்த மலரும் புனலும் முதலான கொண்டு அணைந்தார்
மை தழையும் கண்டத்து மலை மருந்தை வழி பாடு
செய்து வரும் தவம் உடைய முனிவர் சிவ கோசரியார்

136. வந்து திருமலையின் கண் வானவர் நாயகர் மருங்கு
சிந்தை நியமத்தோடும் செல் கின்றார் திரு முன்பு
வெந்த இறைச்சியும் எலும்பும் கண்டு அகல மிதித்து ஓடி
இந்த அனுசிதம் கெட்டேன் யார் செய்தார் என்று அழிவார்

137. மேவநேர் வர அஞ்சா வேடுவரே இது செய்தார்
தேவ தேவ ஈசனே திருமுன்பே இது செய்து
போவதே இவ் வண்ணம் புகுத நீர் திரு உள்ளம்
ஆவதோ எனப் பதறி அழுது விழுந்து அலமந்தார்
138. பொருப்பில் எழுஞ் சுடர்க் கொழுந்தின் பூசனையும் தாழ்க்க நான்
இருப்பது இனி ஏன் என்று அவ் இறைச்சி எலும்புடன் இலையும்
செருப்பு அடியும் நாய் அடியும் திரு அலகால் மாற்றிய பின்
விருப்பின் ஒடும் திருமுகலிப் புனல் மூழ்கி விரைந்து அணைந்தார்

139. பழுது புகுந்தது அது தீரப் பவித்திரமாம் செயல் புரிந்து
தொழுது பெறுவன கொண்டு தூய பூசனை தொடங்கி
வழுவில் திரு மஞ்சனமே வரும் முதலாக வரும் பூசை
முழுது முறைமையின் முடித்து முதல்வனார் கழல் பணிந்தார்

140. பணிந்து எழுந்து தனி முதலாம் பரன் என்று பன் முறையால்
துணிந்த மறை மொழியாலே துடி செய்து சுடர்த் திங்கள்
அணிந்த சடை முடிக் கற்றை அங்கணரை விடை கொண்டு
தணிந்த மனத் திருமுனிவர் தபோ வனத்திடை சார்ந்தார்

141. இவ் வண்ணம் பெருமுனிவர் ஏகினார் இனி இப்பால்
மைவண்ணக் கருங் குஞ்சி வன வேடர் பெருமானார்
கைவண்ணச் சிலை வளைத்துக் கான் வேட்டை தனி ஆடிச்
செய்வண்ணத் திறம் மொழிவேன் தீவினையின் திறம் ஒழிவேன

142. திரு மலையின் புறம் போன திண்ணனார் செறி துறுகல்
பெருமலைகள் இடைச் சரிவில் பெரும் பன்றி புனம் மேய்ந்து
வருவனவும் துணி படுத்து மான் இனங்கள் கான் இடை நின்று
ஒரு வழிச் சென்று ஏறு துறை ஒளி நின்று கொன்று அருளி

143.பயில் விளியால் கலை அழைத்துப் பாடு பெற ஊடுருவும்
அயில் முகவெங் கணை போக்கி அடி ஒற்றி மரை இனங்கள்
துயில் இடையில் கிடை செய்து தொடர்ந்து கடமைகள் எய்து
வெயில் படு வெங்கதிர் முதிரத் தனி வேட்டை வினை முடித்தார்

144. பட்ட வன விலங்கு எல்லாம் படர் வனத்தில் ஒரு சூழல்
இட்டு அருகு தீக் கடை கோல் இரும் சுரிகை தனை உருவி
வெட்டி நறுங் கோல் தேனும் மிக முறித்துத் தேக்கு இலையால்
வட்டமுறு பெருங் கல்லை மருங்கு புடை பட அமைத்தார்

145. இந்தனத்தை முறித்து அடுக்கி எரி கடையும் அரணியினில்
வெம் தழலைப் பிறப்பித்து மிக வளர்த்து மிருகங்கள்
கொந்தி அயில் அலகம்பால் குட்டம் இட்டுக் கொழுப்பரிந்து
வந்தன கொண்டு எழும் தழலில் வக்குன வக்குவித்து
146. வாய் அம்பால் அழிப்பதுவும் வகுப்பதுவும் செய்து அவற்றின்
ஆய உறுப்பு இறைச்சி யெலாம் அரிந்து ஒருகல் இலையில் இட்டு
காய நெடும் கோல் கோத்துக் கனலின் கண் உறக்காய்ச்சி
தூய திரு அமுது அமைக்கச் சுவை காணல் உறுகின்றார்

147. எண்ணிறைந்த கடவுளருக்கு இடும் உணவு கொண்டு ஊட்டும்
வண்ண எரி வாயின் கண் வைத்தது எனக் காளத்தி
அண்ணலார்க்கு ஆம் பரிசு தாம் சோதித்து அமைப்பதற்குத்
திண்ணனார் திருவாயில் அமைத்தார் ஊன் திரு அமுது

148.நல்ல பதமுற வெந்து நாவின் கண் இடும் இறைச்சி
கல்லையினிற் படைத்துத் தேன் பிழிந்து கலந்து கொண்டு
வல் விரைந்து திருப் பள்ளித் தாமமும் உந்தூய் மஞ்சனமும்
ஒல்லையினின் முன்பு போல் உடன் கொண்டு வந்து அணைந்தார்

149. வந்து திருக் காளத்தி மலை ஏறி வனசரர்கள்
தந்தலைவனார் இமையோர் தலைவனார் தமை எய்தி
அந்தணனார் பூசையினை முன்பு போல் அகற்றிய பின்
முந்தை முறை தம்முடைய பூசனையின் செயல் முடிப்பார்

150. ஊனமுது கல்லை உடன் வைத்து இது முன்னையின் நன்றால்
ஏனமொடு மான் கலைகள் மரை கடமை இவையிற்றில்
ஆன உறுப்பு இறைச்சி அமுது அடியேனும் சுவை கண்டேன்
தேனும் உடன் கலந்து இதுதித்திக்கும் என மொழிந்தார்

151. இப் பரிசு திரு அமுது செய்வித்துத் தம்முடைய
ஒப்பரிய பூசனை செய்து அந்நெறியில் ஒழுகுவார்
எப்பொழுதும் மேன்மேல்வந்து எழும் அன்பால் காளத்தி
அப்பர் எதிர் அல்லுறங்கார் பகல் வேட்டை ஆடுவார்

152. மாமுனிவர் நாள் தோறும் வந்து அணைந்து வன வேந்தர்
தாம் முயலும் பூசனைக்குச் சால மிகத் தளர்வு எய்தித்
தீமை என அது நீக்கிச் செப்பிய ஆகம விதியால்
ஆமுறையில் அர்ச்சனை செய்து அந் நெறியில் ஒழுவாரால்

153. நாணனொடு காடனும் போய் நாகனுக்குச் சொல்லியபின்
ஊனும் உறக்கமும் இன்றி அணங்கு உறைவாளையும் கொண்டு
பேணு மகனார் தம் பால் வந்து எல்லாம் பேதித்துக்
காணு நெறி தங்கள் குறி வாராமல் கை விட்டார்

154. முன்பு திருக் காளத்தி முதல்வனார் அருள் நோக்கால்
இன்புறு வேதகத்து இரும்பு பொன் ஆனால் போல் யாக்கைத்

தன் பரிசும் வினை இரண்டும் சாரும் மலம் மூன்றும் அற
அன்பு பிழம் பாய்த் திரிவார் அவர் கருத்தின் அளவினரோ?

155. அந்நிலையில் அன்பனார் அறிந்த நெறி பூசிப்ப
மன்னிய ஆகமப் படியால் மாமுனிவர் அருச்சித்து இங்கு
என்னுடைய நாயகனே இது செய்தார் தமைக் காணேன்
உன்னுடைய திருவருளால் ஒழித்து அருள வேண்டும் என

156. அன்று இரவு கனவின் கண் அருள் முனிவர் தம்பாலே
மின் திகழும் சடை மவுலி வேதியர் தாம் எழுந்து அருளி
வன்திறல் வேடுவன் என்று மற்று அவனை நீ நினையேல்
நன்றவன் தன் செயல் தன்னை நாம் உரைப்பக் கேள் என்று

157. அவனுடைய வடிவு எல்லாம் நம் பக்கல் அன்பு என்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமை அறியும் அறிவு என்றும்
அவனுடைய செயல் எல்லாம் நமக்கு இனியவாம் என்றும்
அவனுடைய நிலை இவ்வாறு அறிநீ என்று அருள் செய்வார்

158. பொருட்பினில் வந்தவன் செய்யும் பூசனைக்கு முன்பென்மேல்
அருப்புறுமென் மலர்முன்னை அவை நீக்கும் ஆதரவால்
விருப்புரும் அன்பெனும் வெள்ளக்கால் பெருகிற் றெனவீழ்ந்த
செருப்படி அவ்விளம்பருவச் சேயடியிற் சிறப்புடைத்தால்.

159. உருகிய அன்பொழிவின்றி நிறைந்த அவன் உருவென்னும்
பெருகியகொள் கலமுகத்தில் பிறங்கியினி தொழுகுதலால்
ஒருமுனிவன் செவிஉமிழும் உயர்கங்கை முதல்தீர்த்தப்
பொருபுனலின் எனக்கவன்தன் வாயுமிழும் புனல்புனிதம்.

160. இம்மலைவந் தெனையடைந்த கானவன்தன் இயல்பாலே
மெய்மலரும் அன்புமேல் விரிந்தனபோல் விழுதலால்
செம்மலர்மேல் அயனொடுமால் முதல்தேவர் வந்துபுனை
எம்மலரும் அவன் தலையால் இடுமலர்போல் எனக்கொல்வா

161. வெய்யகனற் பதங்கொள்ள வெந்துளதோ எனும் அன்பால்
நையுமனத் தினிமையினால் நையமிக மென்றிடலால்
செய்யுமறை வேள்வியோர் முன்புதருந் திருந்தவியில்
எய்யும்வரிச் சிலையவந்தான் இட்டஊன் எனக்கினிய.

162. மன்பெருமா மறைமொழிகள் மாமுனிவர் மகிழ்ந்துரைக்கும்
இன்பமொழித் தோத்திரங்கள் மந்திரங்களியாவையினும்
முன்பிருந்து மற்றவன்தன்முகமலர அகநெகிழ
அன்பில்நினைந் தெனையல்லால் அறிவுறா மொழிநல்ல.

163. உனக்கவன் தன் செயல் காட்ட நாளை நீ ஒளித்து இருந்தால்
எனக்கு அவன் தன் பரிவு இருக்கும் பரிசு எல்லாம் காண்கின்றாய்
மனக் கவலை ஒழிக என்று மறை முனிவர்க்கு அருள் செய்து
புனல் சடிலத் திரு முடியார் எழுந்து அருளிப் போனார்

164. கனவு நிலை நீங்கிய பின் விழித்து உணர்ந்து கங்குல் இடைப்
புனை தவத்து மாமுனிவர் புலர் அளவும் கண் துயிலார்
மனம் உறும் அற்புதமாகி வரும் பயமும் உடன் ஆகித்
துனை புரவித் தனித் தேர் மேல் தோன்றுவான் கதிர் தோன்ற

165. முன்னை நாள் போல் வந்து திருமுகலிப் புனல் மூழ்கிப்
பன் முறையும் தம்பிரான் அருள் செய்த படி நினைந்து
மன்னு திருக் காளத்தி மலை ஏறி முன்பு போல்
பிஞ்ஞகனைப் பூசித்துப் பின்பாக ஒளித்திருந்தார்

166. கருமுகில் என்ன நின்ற கண் படா வில்லியார் தாம்
வருமுறை ஆறாம் நாளில் வரும் இரவு ஒழிந்த காலை
அருமறை முனிவனார் வந்தணை வதன் முன்னம் போகித்
தருமுறை முன்பு போலத் தனிப்பெரு வேட்டை ஆடி

167. மாறில் ஊன் அமுதும் நல்ல மஞ்சனப் புனலும் சென்னி
ஏறு நாண் மலரும் வெவ்வேறு இயல்பினில் அமைத்துக் கொண்டு

தேறுவார்க்கு அமுதம் ஆன செல்வனார் திருக்காளத்தி
ஆறுசேர் சடையார் தம்மை அணுக வந்து அணையா நின்றார்

168. இத்தனை பொழுது தாழ்த்தேன் என விரைந்து ஏகுவார் முன்
மொய்த்த பல்சகுனம் எல்லாம் முறை முறை தீங்கு செய்ய
இத் தகு தீய புட்கள் ஈண்ட முன் உதிரங் காட்டும்
அதனுக்கு என் கொல் கெட்டேன் அடுத்தது என்று அணையும் போதில்

169. அண்ணலார் திருக் காளத்தி அடிகளார் முனிவனார்க்கு
திண்ணனார் பரிவு காட்டத் திரு நயனத்தில் ஒன்று
துண்ணென உதிரம் பாய இருந்தனர் தூரத்தே அவ்
வண்ணவெஞ் சிலையார் கண்டு வல் விரைந்து ஓடி வந்தார்

170. வந்தவர் குருதி கண்டார் மயங்கினார் வாயில் நன்னீர்
சிந்திடக் கையில் ஊனும் சிலையுடன் சிதறி வீழக்
கொந்தவர் பள்ளித் தாமம் குஞ்சி நின்று அலைந்து சோரப்
பைந்தழை அலங்கல் மார்பர் நிலத்து இடைப் பதைத்து வீழ்ந்தார்

171. விழுந்தவர் எழுந்து சென்று துடைத்தனர் குருதி வீழ்வது
ஒழிந்திடக் காணார் செய்வது அறிந்திலர் உயிர்த்து மீள
அழிந்து போய் வீழ்ந்தார் தேறி யாரிது செய்தார் என்னா
எழுந்தனர் திசைகள் எங்கும் பார்த்தனர் எடுத்தார் வில்லும்

172. வாளியுந் தெரிந்து கொண்டு இம் மலையிடை எனக்கு மாறா
மீளி வெம் மறவர் செய்தார் உளர் கொலோ? விலங்கின் சாதி
ஆளி முன்னாகி யுள்ள விளைத்தவோ? அறியேன் என்று
நீளிருங் குன்றைச் சாரல் நெடிதிடை நேடிச் சென்றார்

173. வேடரைக் காணார் தீய விலங்குகள் மருங்கு எங்கும்
நாடியுங் காணார் மீண்டும் நாயனார் தம்பால் வந்து
நீடிய சோகத்தோடு நிறை மலர்ப் பாதம் பற்றி
மாடுறக் கட்டிக் கொண்டு கதறினார் கண்ணீர் வார

174. பாவியேன் கண்ட வண்ணம் பரமனார்க்கு அடுத்தது என்னோ?
ஆவியின் இனிய எங்கள் அத்தனார்க்கு அடுத்தது என்னோ ?
மேவினார் பிரிய மாட்டா விமலனார்க்கு அடுத்தது என்னோ?
ஆவது ஒன்று அறிகிலேன் யான் என் செய்கேன் என்று பின்னும்

175. என் செய்தால் தீருமோதான்? எம்பிரான் திறத்துத் தீங்கு
முன்செய்தார் தம்மைக் காணேன் மொய் கழல் வேடர் என்றும்
மின்செய்வார் பகழிப் புண்கள் தீர்க்கும் மெய் மருந்து தேடிப்
பொன்செய் தாழ் வரையிற் கொண்டு வருவன் நான் என்று போனார்

176. நினைத்தனர் வேறு வேறு நெருங்கிய வனங்கள் எங்கும்
இனத்திடை பிரிந்த செங்கணேறு என வெருக் கொண்டு எய்திப்
புனத்திடைப் பறித்துக் கொண்டு பூத நாயகன்பால் வைத்த
மனத்தினும் கடிது வந்து தம் மருந்துகள் பிழிந்து வார்த்தார்

177. மற்றவர் பிழிந்து வார்த்த மருந்தினால் திருக் காளத்திக்
கொற்றவர் கண்ணில் புண்ணீர் குறை படாது இழியக் கண்டும்
இற்றையின் நிலைமைக்கு என்னோ இனிச் செயல் என்று பார்ப்பார்
உற்ற நோய் தீர்ப்பது ஊனுக்கு ஊன் எனும் உரைமுன் கண்டார்

178. இதற்கினி என்கண் அம்பால் இடந்து அப்பின் எந்தையார் கண்
அதற்கிது மருந்தாய்ப் புண்ணீர் நிற்கவும் அடுக்கும் என்று
மதர்த்து எழும் உள்ளத்தோடு மகிழ்ந்து முன் இருந்து தங்கண்
முதற்சரம் அடுத்து வாங்கி முதல்வர் தம் கண்ணில் அப்ப

179. நின்ற செங்குருதி கண்டார் நிலத்தின் நின்றேப் பாய்ந்தார்
குன்றென வளர்ந்த தோள்கள் கொட்டினார் கூத்தும் ஆடி
நன்று நான் செய்த இந்த மதி என நகையும் தோன்ற
ஒன்றிய களிப்பினாலே உன் மத்தர் போல மிக்கார்

180. வலத்திரு கண்ணில் தம் கண் அப்பிய வள்ளலார் தம்
நலத்தினைப் பின்னும் காட்ட நாயனார் மற்றைக் கண்ணில்

உலப்பில் செம் குருதி பாயக் கண்டனர் உலகில் வேடர்
குலப்பெருந் தவத்தால் வந்து கொள்கையின் உம்பர் மேலார்

181. கண்டபின் கெட்டேன் எங்கள் காளத்தியார் கண் ஒன்று
புண்டரு குருதி நிற்க மற்றைக் கண் குருதி பொங்கி
மண்டுமற்று இதனுக்கு அஞ்சேன் மருந்து கை கண்டேன் இன்னும்
உண்டொரு கண் அக்கண்ணை இடந்து அப்பி ஒழிப்பேன் என்று

182. கண்ணுதல் கண்ணில் தம் கண் இடந்து அப்பிற் காணும் நேர்பாடு
எண்ணுவர் தம்பிரான் தன் திருக் கண்ணில் இடக்கால் ஊன்றி
உண்ணிறை விருப்பினோடும் ஒரு தனிப் பகழி கொண்டு
திண்ணனார் கண்ணில் ஊன்றத் தரித்திலர் தேவ தேவர்

183. செங்கண் வெள்விடையின் பாகர் திண்ணனார் தம்மை ஆண்ட
அங்கணர் திருக் காளத்தி அற்புதர் திருக்கை அன்பர்
தங்கண் முன் இடக்குங் கையைத் தடுக்க மூன்று அடுக்கு நாக
கங்கணர் அமுதவாக்குக் கண்ணப்ப நிற்க என்ற

184.கானவர் பெருமானார் தங்கண் இடந்து அப்பும் போதும்
ஊனமும் உகந்த ஐயர் உற்று முன் பிடிக்கும் போதும்
ஞான மாமுனிவர் கண்டார் நான்முகன் முதலாய் உள்ள
வானவர் வளர் பூ மாரி பொழிந்தனர் மறைகள் ஆர்ப்ப

185.பேறினி இதன் மேல் உண்டோ ? பிரான் திருக் கண்ணில் வந்த
ஊறு கண்டு அஞ்சித் தம் கண் இடந்தப்ப உதவும் கையை
ஏறுயர்த்தவர் தம் கையால் பிடித்துக் கொண்டு என் வலத்தில்
மாறிலாய் நிற்க என்று மன்னு பேர் அருள் புரிந்தார்

186. மங்குல் வாழ் திருக் காளத்தி மன்னனார் கண்ணில் புண்ணீர்
தங்கணால் மாற்றப் பெற்ற தலைவர் தாள் தலைமேற் கொண்டே
கங்கை வாழ் சடையார் வாழும் கடவூரில் கலயனாராம்
பொங்கிய புகழின் மிக்கார் திருத் தொண்டு புகலல் உற்றேன்.

## பொத்தப்பி நாடு

பகை அசுரரின் முப்புரங்களை அழித்தவரும், ஆனேற்றை ஊர்தியாகக் கொண்டவரும், நான்மறைகளின் உட்பொருளாய் நிற்கும் காவலரும் ஆன திருக்காளத்தி மலையில் இருந்தருளும் புண்ணியருக்குத் தம்கண்ணினை அப்பிய கண்ணப்ப நாயனார் தோன்றிய திருநாடாவது, நாவன்மையுடைய புலவர்கள் புகழ்ந்து போற்றிடுகின்ற நல்ல வளங்கள் பலவும் பெருகி நிற்கும் பூக்கள் மலரும் குளங்களும், பூஞ்சோலைகளும் சூழ விளங்கி யிருக்கும் பொத்தப்பி நாடு என்பதாகும்.

## உடுப்பூர்

இப்பொத்தப்பி என்னும் திருநாட்டில், கண்ணப்பர் தோன்றியருளிய திருவுடைய நகரம் யாதெனில், முத்துக்கொழித்திடும் அருவிகளின் நீர்வீழ்ச்சிகள் குறைவுபடாத நீண்ட பெரியமலைகள் சூழ்ந்திருப்ப, அவற்றின் எல்லையில் மதம் பொழியும் கொடிய யானைகளின் கொம்புகளால் வேலியிட்டு, அதன் வலிய நீண்ட தொடராய மதிலே அவ்வூருக்குக் காவலாக அமைந்த மிகவும் பழையதாகிய உடுப்பூர் என்னும் நகரமாகும்.

அவ்வுடுப்பூரில் வாழ்பவர்கள் வேடர்களாவர். பற்பல இடங்களிலும் கொடிய நீண்ட காதுகள் வளைந்து தொங்கும் வேட்டை நாய்களை வார்க்கயிற்றினால் கட்டி வைத்திருக்கும் பெருவிளாமரங்களின் கொம்புகளிலே, வாரினால் அமைந்த வலைகள் தொங்க விடப்பட்டிருக்கும். அவற்றின் புறத்து, வேடரின் வளர்ப்பு மிருகங்களான பன்றி, புலி, கரடி, காட்டுப்பசு, மான் முதலிய பார்வை மிருகங்கள் கட்டப்பட்டிருக்கும். அன்றியும் அங்கு மலை நெல்லின் புழுங்கலும் முற்றத்தில் காய்ந்து கொண்டிருக்கும்.

கொடிய புலிக்குட்டிகளோடும், வீரமுடைய யானைக் கன்றுகளோடும், முரட்டு மயிருடைய சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருப்பர். அன்றியும் தம்பால் அன்புடன் காதல் கொண்டு அணைகின்ற கன்னி மான்களுடன் இன்புற மகிழ்ந்து விளையாடும் வேடருடைய பெண்களும் எங்கும் அப்பதியில் காணப்படுவர்.

## பலவகை ஒலிகள்

வெல்லும் படைகளும், கொடுந்தன்மையும், கடிய சொல்லும் கொண்டிருக்கும் வேட்டுவருடைய கூட்டந்தோறும், 'கொல்', 'எறி', 'குத்து' என்னும் பேரொலிகள் கேட்கும். அவ்வோசையே அன்றி, சிறியபரல்கள் உள்ளிட்ட உடுக்கும், ஊது கொம்பும்,

சிறுமுகமுடைய ஆகுளிப்பறையும் கூடிக் கலீரென ஒலித்திடும். இவ்வோசைகளுக்கு மேலாக அங்குள்ள மலைகளில் இரைந்தோடும் அருவி ஒலிகளும் ஆங்காங்குக் கேட்கும்.

அப்பதிகளிலும், வழிப்பறிசெய்து களவினால் வரும் பொருள் கொண்டு உண்ணும் தொழிலுடைய வேடர்கள், அயற்புலத்திற்குச் சென்று, களவினால் கொண்டுவந்த வெவ்வேறான பல வடிவங்களில் மிகுந்து காணப்படும் பசுவின் நிரைகளேயன்றி, வானத்தில் இடிக்கும் ஓசையுடைய முகில்களுடன் மாறு கொண்டு முழங்கும் பேரோசையைக் காட்டும் மதம் பொழியும் யானைகளின் நிரைகளும் காணப்படுகின்றன.

### நாகன்

மை செறிந்துள்ளது எனும்படி கரிய மேனியையும், கொடுந்தொழிலையும் உடைய அந்த ஊரில் வாழும் வேடர்கள், அச்சமும் அருளும் என்றுமே தம்மிடம் வந்து அடைதல் இல்லாதவர்கள். வலிய தோலின் உடையை உடையவர்கள். மலைத் தேனும் ஊன் கலந்த சோறும் உணவாக உண்பவர்கள். நஞ்சு ஊட்டிய கூரிய கொடிய நெருப்புப் போலும் அம்பினைக் கைக்கொண்டவர்கள். அத்தகைய வேடர்களுக்கெல்லாம் அரசன் 'நாகன்' என்னும் பெயருடையான்.

## தத்தை

இந்நாகன் என்பான், இப்பிறவி பெறுதற்கு முற்பிறப்பில் தவம் செய்துள்ளான் எனினும், பிறந்த இப்பிறப்பின் சார்பால் கொலை முதலிய குற்றங்கள் செய்தலையேகுணம் எனக் கொண்டு வாழ்பவன். கொடுமையையே தன் தலையாய செய்கையாகப் பேணி வாழ்பவன். விற்றொழிலில் மிகுந்த வலியுடையவன். கொடிய சினமுடையசிங்கத்தின் இயல்பை ஒத்தவன். அத்தகையோனுக்கு அக்குறிஞ்சியில் அவனுடைய வாழ்க்கைத் துணைவியாக அமைந்தவள் 'தத்தை' எனப்படுவாள்.

வேடர் இனத்துள் ஒன்றாய உயர்ந்த பழங்குடியில் பிறந்தவள். பெரிய புலியின் பற்களால் ஆய மங்கலநாணில் இடையிடையே அத் தத்தை என்பாளும், பெறுதற்கரிய சிறப்புடைய கோர்க்கப்பட்ட மணிகள் தனது பெரிய பிடரியில் அசைய அதனை மார்பில் அணிந்தவள். அவள் மயிற்பீலியும்

இளந்தளிர்களும் சேரக்கொண்ட வண்டுகள் மொய்த்திடும் பூமாலையைக் கொண்டையில் அணிந்தவள். அச்சம் பொருந்திய பெண்சிங்கத்தைப் போன்றவள்.

### குரவையாடல்

ஒப்பற்ற பெருஞ்சிறப்புமிக்க இவர்களுக்குத் திருமணமாகிப் பல்லாண்டுகள் ஆகியும், மக்கட் பேறிலதாக, அங்குள்ளார் அனைவரும் இனி இவர்க்கு மக்கட்பேறே அரிது எனக்கூறிவரும் சமையத்தில், தமக்கு ஒரு மகன் வேண்டுமெனும் காதலால், அப்பேற்றைப் பெறவிரும்பி, தம் குலதெய்வமான நறுமணம் கமழும் மலர்மாலையைச் சூடிய செவ்விய வேலேந்திய முருகப்பெருமானுடைய திருமுன்னிலையில் சென்று நாளும் வழிபாடு புரிந்து வந்தனர்.

### திருவிழா

சேவற்கோழிகளையும், வரிகளையும் உடைய அழகிய மயில்களையும் காணிக்கையாக விடுத்தும், மணிமாலைகளின் தோரணங்களைத் தூக்கியும், வண்டுகள் மொய்க்கும் கடப்ப மாலைகளைத் தூக்கியும், போரில் அழகும், வெற்றிகாணும் திருவுமுடைய நெடிய வேலையுடைய முருகப் பெருமானின் புகழ்பாடிடும் குரவையாடலைச் செய்தும், பெரிய திருவிழா நடத்தினர்.

### ஆண்குழந்தை பிறத்தல்

வேட்டையாடுதலினாலும், போரினாலும் ஏற்பட்ட வடுக்கள் நிறைந்த உடலுடைய வேடர்களின் தலைவனான நாகன் என்பானுக்கு, மதில்களையுடைய முப்புரங்களையும் எரித்த பெருமானின் மைந்தரும், சிறந்த மயிலினைத் தம் வெற்றிக்கு அறி குறியாக ஊர்தியாகக் கொண்டவரும், வஞ்சனையாய கிரவுஞ்சமலையின் நீக்கமுடியாத வலியினைக் கிழித்த திண்மையுடைய வேலைத் திருக்கையில் கொண்டவருமான வெற்றிதரும் ஆறுமுகப் பெருமானின் திருவருளினாலே.

வேடருடைய குலம் சிறந்து விளங்கிடத் தத்தை என்பாளிடத்துக் கருத்தங்கி வளர்ந்திட, அதுகண்ட நாகன், தாய்க்கும் கருவிற்கும் ஊனம் இல்லையாகச் செய்யும் கடன்களை முருகப்பெருமானுக்குக் கொடுத்து, மேலும் செயத்தக்க கடன்களுடன் வெறியாடலும் நிகழ்வித்து வர, அக்கருவினுக்கு உற்ற பத்துத் திங்களும் நிறைவெய்த,

இவ்வுலகம் செய்த அளவிலாத நற்றவத்தினாலே, நிறைமதியை உவர்க்கடல் பெற்றெடுத்தது போல, கரியமேனியையுடைய ஓர் ஆண்குழந்தையைத் தத்தை பெற்றெடுத்தாள். அப்பொழுது,

யானைக் கொம்பினின்றும் அரிந்தெடுத்த முத்துக்களையும், மூங்கிலில் விளைந்த நீரோட்டமுடைய நன் முத்துக்களையும், மலையில் விளையும் மணிகளையும் வேடர்கள் தம்மகிழ்வால் அள்ளிப் பொழியும் மழையே அன்றி, வரிகளையுடைய வண்டுகளும் தேனுக்கு அலைந்திட வானின்று எங்கும் பூமழையும் பொழிந்தது. சிறு ஓசையுடைய வேடரின் உடுக்குகளுடன் வானில் உள்ள தேவர்களுடைய துந்துபிகளும் முழங்கின.

## கரியமேகம்

அரிய மலையில் வாழும் பெருகிய சுற்றத்தையுடைய குறவர்கள் வாழ்கின்ற அச்சிற்றூர் மக்கள். மகிழ்வால் பெருவிழா எடுத்து, மிக்கதொரு பெருமகிழ்வு எய்தும் காலையில், கரியதொரு பெருமலை கருமுகில் ஒன்றை ஏந்திக்கொண்டது எனும்படியாக, தந்தையான நாகன் மலைபோன்ற தன்தோள்கள் இனிமை கூரத் தன் மகனைத் தூக்கி எடுத்து அணைத்துக் கொண்டான்.

## திண்ணன்

கரிய ஒளியைப் பரப்பிடும் அழகில் சிறந்த அக்குழவிதானும், பெரியதொரு புலிக்குட்டியின் வனப்பினைப்போல் சிறந்து, அவ்வூரில் உள்ள வேடர்கள் அளவே அன்றிப் பெறற்கரிய இவ்வுலகம் எங்கணும் பெறமுடியாத அளப்பரிய பெருமைகளைக் காட்டி, பெருஞ்சிறப்புகள் பின்விளைதற்கேற்ற குறிகள் பலவும் காண்டற்குரிய தன்மையில் பொலிந்து தோன்றிட ,

தலைமைசான்ற அக்குழந்தையை நாகன் கையில் எடுத்து ஏந்துவதற்கு அருமையாக இருத்தலால், இக்குழந்தைக்கு உற்றபேரும் "திண்ணன்" என்று அழையுங்கள் என்னலும், வலிமை பொருந்திய வில்வேடர் யாவரும் பேரொலி செய்து மகிழ்ந்தார்கள். அதுபொழுது புண்ணியத்தின் பொருளாய் நின்ற தனக்கு நிகரில்லாத சிறப்பினையுடைய அக்குழந்தைக்கு, அங்குள்ள வேடர்கள் தங்கள் கண்ணிற்கு அழகு பொருந்தத் தங்களிடத்துள்ள பல அணிகலன் களையும் அணிவித்தார்கள்.

## குழந்தை வளர்தல்

மலையிடத்து வாழும் தம்தெய்வமாகிய முருகப்பெருமானுக்குக் கடவுட் காப்பாக, தமது வேடரின் குடிமரபிலே நிகழ்ந்து வரும் குற்றமற்ற பழைய முறைமைக் கேற்பப் பொருந்திடும் செயல்களை மிகச்சிறப்புடன் புரிந்து, நறுமணமுடைய இளந் தளிர்களும் சூட்டி, மலைவேம்பின் கொட்டைகளை இடையிடையே வைத்துக் கோத்த மணிகளாலாய அரைஞாண் மணிக்கோவையை அரையில்கட்டி, அழகுபொருந்திட வளர்த்து வந்தநாட்களில்,

குழந்தை வளர்ந்து வரும் முறையான பருவங்கள் தோறும், வளம் மிகுந்த சிறப்புக்களோடு, தெய்வங்கட்கு ஏற்றிடும் முறையான பெருமடைகளையும் கொடுத்து, தமது பெருகவிளங்கும் கிளைகளான வேடர்களுக்கெல்லாம் மங்கலம் நிறையும் பெருகிய பூசைபொங்கிட, சிறக்கும் களியாட்டங்களை நிகழ்வித்து அதனால் மகிழ்ச்சி பெறச் செய்து அருமையாக ஓர் ஆண் மகவைப் பெற்ற தம் அன்பின் மிகுதி வெளிப்பட அக்குழந்தையை வளர்த்து வந்தார்கள்.

## புலிப்பல் கட்டுதல்

அவ்வாறு அன்புடன் வளர்த்திட வளரும் குழந்தைக்கு ஓராண்டு முன் அணைந்து சென்றிட, அடி எடுத்து வைத்தலில் தனக்குற்ற தளர்வு நீங்கிச் செப்பமாக நடந்திட வெள்ளிப்பூண் திகழும் புலிநகச் சுட்டியினைச் சிறுமயிராகத் திகழும் தலையில் சாத்தி, பகை காண மூண்டு எழும் சினமுடைய செங்கண் கொண்ட முள்ளம் பன்றியின் முள்களை அரிந்து இடையிடையே கோத்த நீண்ட புலிப்பல் மாலையை நெஞ்சினில் தொங்கும்படி அணிவித்தனர்.

பசிய ஒளியுடைய மணிகளுடன் ஏனைய மணிகளும் இடைவைத்துக் கோத்த சதங்கைகள் ஒலிக்க, செப்புக் காசுகளுடனும் சிறுவளையங்களுடனும் சேரக் கொண்டு தொகுத்த அரைஞாண் கயிற்றை அணிந்து, ஒளியுடைய யானைக் கொம்பினால் செய்த தண்டையையும் நல்மணிகளையுடைய குதம்பையையும் காலிலும் காதிலும் முறையே அணிந்து மின்னிட, இத்தகைய மாசற்ற கோலத்தைக் காட்டித் திண்ணனார் வீதியிடை விளையாடும் நாள்களில்.

குளிர்ந்த மலர்மாலை அணிந்த தந்தையும் தாயும் கண்டுமனம் களிகூரவந்து, புண்ணியம் நிறைந்த கங்கையினும் மிகப்புனிதமாய தம் திருவாய் நீரினால் உள் நனைந்து அமுதமாக ஊறி மேல் ஒழுகிய நிலையில் மழலைச் சொற்களை அழகிய

மெல்லிய பவளம் போலும் தமது செவ்வாயினைக் குதட்டி மொழிந்து வளர்ந்து வருகின்றார்.

## தந்தையின் கண்டிப்பு

வளரும் இக்குழந்தைப் பருவத்தில், பொருதற்குரிய பார்வை மிருகமாக அங்கிருந்த புலியின் வாயைத் திண்ணனார், அது ஒருகுகை எனக் கொண்டு, தமது பொற்கையை அப்புலி வாய்க்குள் நீட்ட, அன்புடைத் தந்தையான நாகன் அதுகண்டு, அப்படிச் செய்யாதே என்று பசிய இலையுடைய சிறுகொம்பினைக் கையில் எடுத்து வீச, அஞ்சி, விம்மி, கதிரவனும் மதியமும் ஆய இருசுடர்களையும் கண்களாகக் கொண்டு இலங்கும் சிவபெருமானின் கண்களில் பின்னர் நேர இருக்கும் தீங்கினை, தீர்க்க இருக்கும் அழகு வளரும் திண்ணனாரின் திருக்கண்களில் நீர் சொரிந்திட, அதுகண்டு ஓடிவந்த தாய் எடுத்தணைத்துக் கண்ணீராய அம்முத்துக்களை, தன்வாயால் முத்தம் கொடுத்தவாறு மாற்றினாள்.

## குழந்தையின் குறும்பு

உடுக்குகளின் கட்டைகளை உருட்டி ஓடியும், நாய்களைக் கட்டி வைத்த வார்க்கயிற்றைப் பற்றிப்பிடித்து இழுத்து அறுத்தும், வேட்டுவச்சிறுமியர் விளையாட்டாகச் செய்திடும் சிறுவீடுகளைத் தம் தளிர்போலும் மென்மையான அடிகளால் அழித்தும், அருகில் தம்மோடு விளையாடும் வேட்டுவச் சிறுவர்களுடன் அங்குள்ள சிறுகுடில்களில் பல சிறு குறும்புகளைச் செய்தான்.

## வேட்டையாடல்

இவ்வாறு பலவிளையாடல்களைச் செய்ய, வளர்ந்துற்ற ஆறாம்ஆண்டில், வலையினைப் போன்று வட்டமாகச் சுருக்கிட அமைத்தவாரையும், மயிர்க் கண்ணியையும் எடுத்துக் கொண்டு, வேட்டுவமைந்தரோடும் கூடி, நல்ல மலர்கள் தோன்றும் கொம்பர்களுடைய சோலையுள் விளையாடியும், அப்பால் தங்கள் சிற்றூரின் எல்லையில் சூழ்ந்திருந்த யானைக் கொம்பினால் செய்தமைத்த வேலியின் புறத்தே உள்ள காட்டினிடத்துச் சென்று, மிக வேகமுடன் ஓடும் முயற்குட்டியுடன் காட்டுப் பன்றியின் குட்டியும், வளைந்த காதுகளைஉடைய செந்நாயின் குட்டியும் ஆகிய இவற்றை எல்லாம், தாம் ஓடக்கூடிய கடுகிய விசை யால் ஓடிப் பிடித்து வந்து,

தங்கள் முற்றத்தில் உற்ற மரத்தின் அடியில் கட்டி, திண்ணனார் வளர்த்திடும் விலங்கினங்கள் எண்ணிலடங்காதவை.

## வில்வித்தை பயிலும் பருவம்

கதிரவன் ஒளி அலர்ந்திருக்கும் பகற்பொழுது கழிந்த மாலைக்காலத்தில், அவர் குலத்தில் மூத்தவளாய குறத்தி, திண்ணனாருக்கு வெண்சிறுகடுகின் புகையைச் சுற்றிக் காண்பித்து, அதன்பின் உணவு கொடுத்துத் துயில்வித்துப், பின்னர்ப் பாழுது புலர்ந்ததும், ஊன் உணவு கொடுத்துப், பின்னர் விளையாடச் செய்து, இவ்வாறு சில ஆண்டுகள் சென்றிட, வில்வித்தை பயிலும் பருவத்தை அடைந்தார்.

தந்தை நாகனும், தன் மைந்தன் திண்ணனாரை நோக்கி மகிழ்ந்து, தன் தடித்த தோளினாலே உள்ளம் மகிழ்ந்து கட்டித் தழுவி, வில்வித்தை பயிற்றவேண்டி, முன்னே அவ்வித்தையில் துறை போய முதிர்ந்த முதியோரைத் தன்முன்பு வரவழைத்து, அவருடன் ஆராய்ந்து, வித்தை தொடங்கற்குரிய நாளையும் குறித்து, அப்பயிற்சி குறித்த செய்தியைத் தன்குடியிலுள்ள வேடர்கட்கெல்லாம் அறியுமாறு சொல்லிவிடுத்தான்.

வேடர்கட்கெல்லாம் தலைவனாகியநாகன், வெற்றிவேற்பெருமான் அருளினால் பெற்ற, அறிஞரின் மிக்க பெருந்திறலுடைய திண்ணன், விற்பிடிக்கப் போகிறான் என்று அனைவரும் அறியுமாறு வெற்றிக்குரிய உடுக்கை ஒலிப்பித்து அறிவித்த பேரோசை கேட்டு, அருகிலுள்ள உயர்ந்த மலைநாட்டினை ஆளுகின்ற வேடர்குலத் தலைவர்கள் யாவரும்.

மலையிடத்துள்ள பொருள்களான மணியும் பொன்னுமாகிய இவற்றையும், வேங்கைப் புலியின்தோலையும், கொலை செய்யும் யானைக்கொம்பையும், மயிற்பீலியையும், தேனையும், அளவற்ற பலவகைக் கள்ளையும், இறைச்சி, பழம், கிழங்கு முதலாயவற்றையும், வில்பயிலும் வேடர்கள் எடுத்துக் கொண்டு திரள்திரளாக எவ்விடமும் நிறைந்திருக்கும்படி வந்தார்கள்.

## விற்பிடிக்கும் விழா

இவ்வாறு கொண்டு வரப்பெற்ற வளங்கள் எல்லாம் நிறைந்திடும்படி மாறில்லாத சிறிய உடுப்பூரின் எல்லையில், எங்கும் அடங்காத வண்ணம் வேடர்கள்

பொலிவுற ஒன்றுகூடி எடுத்து வந்தனர். அதன்பின்னர், சுற்றத்தார் அனைவரும் பாராட்டத் தெய்வத் திற்கு முதற்கண் செய்யத்தகும் பூசனைகள் யாவும் செய்து, பின்னர் விற்பிடிக்கும் விழாவை நீங்கள் மேற்கொள்ளுங்கள்' என மொழிந்தனன் நாகன்.

## காப்பு கட்டுதல்

விழா எடுத்தற்குரிய முறையில் பணியாளர்கள் வில்லினை ஏந்த, தேன் பொருந்த அலரும் கொன்றையை அணிந்த சிவபெருமானுடைய சிவந்த பொன்மயமான மேருமலையானது முன்னர்ப் பாற்கடலில் மத்தாகக் கடைந்தபோது அவருக்கு நஞ்சை எடுத்து உண்ணும்படி கொடுத்ததற்குத் தீர்வாக, அப்பெருமானுக்குப் பின்னர், இம்மலையின்கண் ஊன் ஆகும் அமுதைக் கொடுக்க இப்பொழுது திண்ணனார் கையில் வில்லாயிற்று எனக் கூறுமாறு அமைந்த அவ்வில்லிற்குக் காப்புக்கட்டினர்.

வில்லினைக் காப்புக் கட்டிடுவதற்காகக் கொண்ட திண்மையான புலியின் நரம்பினால் செய்த நலம் மிகுந்த காப்பு நாணினை, குறித்த நன்னாளில் நாகனார் பெற்ற, வேடர்குலம் விளங்கிட வந்து தோன்றிய கரியமலை போன்ற கோலமுடன் விளங்கும் திண்ணனார் கையில் சேர அணிவித்து, அங்கு மலை நாட்டில் வாழும் வேடர் யாவரும் கூடி நின்று வாழ்த்துக்கள் பலவும் எடுத்துக் கூறி மகிழ்ந்தார்கள்.

## உணவு உண்ணுதல்

காப்பணிந்து வாழ்த்தியபின், மலைநெற்சோறும், வேறுவகையாகச் சமைத்த பாலுடன்கலந்த புல்லரிசிச்சோறும், அடர்ந்த மலைபடுபொருளாய தினைமென்சோறும், மூங்கில்அரிசியின் சிறந்த பதங்களுடன் ஆக்கிய சோறும், மற்றும் இவ்வகையான உணவு வகைகளைக், கைதேர்ந்துள்ள வேடப்பெண்கள் ஆக்கி, அவற்றுடன் ஊன்கலந்த கிழங்குகளும் பெருமளவில் சமைத்துச் செயற்கை மலைபோல் எங்கும் குவித்து வைத்திட, அவ்உணவுகளை இயல்பிலேயே சினமுடைய அவ்வில்வேடர்கள் பலரும் உண்ணக் கூடினார்கள்.

செந்தினை மாவுடன் தேனைக் குழைத்து அருந்து வாரும், தேனில் தோய்த்து வெந்த இறைச்சியினை உண்பாரும், தேனுடன் இனிய விளாம்பழத்தைக் குழைத்து உண்பாரும், ஈசல்உணவை மிகுவிருப்புடன் உண்பாரும் ஆக இவ்வாறு தத்தமக்கு ஏற்ற உணவுகளை அருந்துவதில் வல்லவரானார்கள்.

## வேடர்கள் சூழ்தல்

அயலாக உள்ள மலைப்பகுதியிலிருந்து வந்தவர்களும், உடுப்பூரில் குடியிருப்பாய் உள்ளவர்களும், தங்கள் இயல்பிற்கேற்ற வகையால் சமைக்கப் பெற்ற உணவினை உண்டு மகிழ்ந்த எயிற்றியரும் ஆக அனைவரும், வானில் உயரநின்ற கதிரவன், உச்சி நீங்கிய பிற்பகல் வேளையில், நிரம்ப இருந்த பலவகைக் கள்ளையும் குடித்து, அதனால் மயங்கும் களிப்பால் பெருகி, வில்விழாவைக் கொண்டாடுபவர்களாய் பசிய இலைகளால் இழைத்த ஆடைபோலும் தழையைத் தன் மேனியில் சுற்றி அணிந்து, அதன்மேல் நல்ல பலவகைப் பூக்களின் மாலைகளை அணிந்து, அதன்மேல் காசின் மணிகள் பதித்த தோலினாலாய வடத்தைக் கட்டி, மணிகள் கோர்க்கப்பெற்ற கவடி எனப்படும் மாலையை மார்பில் அணிந்து, குற்றம் இல்லாத சிறப்புடைய வெட்சி முதலாக, ஆசிரியன் அணிவதற்கு ஏற்ற கண்ணிகளைச் சூடிய இந்தக் கோலம்கொண்டு, திண்ணனாருக்கு வில்வித்தை கற்பிப்பதற்கு உரிய குற்றமில்லாத ஆசிரியன், ஏந்திய அடல் கொண்ட வில்லின் மருங்காக வேடர்கள் வந்து சூழ்ந்தனர்.

பின் அவ்வேடர்கள், தொண்டகப் பறையும், கொம்பு வாத்தியமும், உடுக்குகளும், துளைகளையுடைய மூங்கில்குழலும் ஆய இவ்விசைக்கருவிகள் முழக்கம் செய்திட, எழுந்த பேரோசை எல்லாம் எட்டுத்திக்கிலும் நிறைந்து விம்மிட, அவ்வோசையுடன் திண்மையான வலியுடைய வேடர் ஒலித்திடும் ஓசை, உயர்ந்த வானையும் முட்டிச்செல்ல, இத்தகைய சீர்கொண்டவிழா பொங்கிடத் தமது குறிச்சியை வலங்கொண்டார்கள்.

வேடர்கள் மகிழ்ச்சி கொண்டு கூத்தாட, எயிற்றியர்கள் துணங்கைக் கூத்தாட, இதுகண்டு பெருமகிழ்ச்சியால் அச்சம் தருகின்ற தெய்வங்கள் ஆடிட, இத்தகையதான மகிழ்ச்சிமிக வெற்றியையுடைய வில்லேந்தி, நகர்வலம் வரும் விழாவினை ஆறு நாள்கள் வரை கொண்டாடியபின், ஏழாவது நாளின்கண், முன்னாள்களிலும் மேம்படச் சிறப்பும் களிப்பும் கொண்டு, அன்றைய விழாவிற்கு என அழகுற அமைத்த பின்பு, வெய்யகதிரவன் உச்சியில் வரும் நல்வேளையில், மங்கலமாய வாழ்த்துக்கள் எங்கும் பெருகி விளங்க, அருகில் பலஇன்னியங்கள் முழங்க, தாங்கள் வழிவழியாகக் கற்று வந்த வில்தொழில் வித்தையில் வல்ல வீரர்களிடமாக, ஒளிமிகும் கரிய

மேனியையுடைய அரியேறனைய திண்ணனாரைப் போரிடக் கொல்லும் வில்லை அவர்கைக் கொடுத்து ஒப்பற்ற வில்லினைப் பிடிப்பித்தார்கள்.

### திண்ணனார் வில்வித்தைக் கற்றல்

என்னை ஆளுகின்ற வேடர்குலச் சிங்கமாய திண்ணனார், விருப்பம் மிக அமைந்த மலையின் புறத்து, விற்பயில் வதற்கமைந்த ஏற்பாடுகளை முன்செய்து வைத்த களத்தில் சென்று, ஆசிரியனையும் கடவுளையும் முறைமையால் வணங்கி, விற்பயிலத் தொடங்கும் அன்றைய நாள் தொடக்கமாக, நாள்தோறும் வலியுடைய போர் வில்லைக் கைக்கொள்ளும் வீரம் முதிர்ந்து, தெளிவுற வில்வித்தை கற்றனர்.

இவ்வாறு அழகிய கொடிய விற்பயிற்சியையும், பிறபடைகளின் பயிற்சியையும் சிந்தை மலரத் தெளிவுடன் கற்று, தமது மேனியின் வனப்புச் சிறந்து அழகுடன் அகன்று பழுத்த முழுஅழகு பெற்றிட, நாள் தோறும் கலைவளர்ந்த திங்கள் எனப் பதினாறாவது ஆண்டைப் பெற்றார் திண்ணனார். இவ்வளர்ச்சி எல்லையிலாத புண்ணியம் இவர் வடிவாகத்தோன்றி மேன்மேல் வளர்வதன் பொலிவு போல அமைந்தது. இவ்வாறு பன்னிரண்டாம் வயதில் தொடங்கிய வித்தை பதினாறாம் ஆண்டில் முடிந்தது என்கிறார் ஆசிரியர்.

### நாகனின் தளர்ச்சி

இவ்வண்ணமாகத் திண்ணனார் பருவம்நிரம்பிய காலத்தில், வலிய வேடருடைய பெருங்குறிச்சிக்குத் தலைவனாய, கறுத்தமலையை ஒத்த நெடுந் தோள்களையுடைய நாகன் என்பானும், மலைகளிலும் காடுகளிலுமாக அளவிறந்த காலமாகக் கைவன்மையால் வேட்டையாடிப் பகைவருடைய பசு நிரைகள் பலவற்றைக் கவர்ந்து, நாட்டைக் காத்து, தனது உடல் தளரும் படியான மூப்பின் பருவத்தை அடைந்து, வில்லால் வாழும் அத்தொழிலின் பெருமுயற்சி இனிக் கூடாத நிலை வந்தடையப் பெற்று, அம்முயற்சியில் குன்றியவனாயினான்.

அந்நிலையில், அங்குள்ள மலைகளின் பரந்த பக்கங்களிலும், பயிர் விளையும் காடுகளிலுமாக எங்கும் கொடிய பன்றி, புலி, கரடி. காட்டுப்பசு, காட்டெருது, கொடுங்கண்ணுடைய மரை, கலைமான் ஆகிய இவைமுதலாக உள்ள விலங்குகள் மிகவும் நெருங்கிப் பெருமளவில் வந்து அழிவு செய்திட, அதுகண்டு, திங்கள் தோறும் செய்திடும் முறையான வேட்டையின் தொழில் இம்முறை தாழ்த்தமையின் இந்நிலை

நேர்ந்ததென்று அங்குள்ள வில்லேந்திய வேடர்கள் அனைவரும் திரண்டு, தங்கள் குலத்தின் தலைவனாகவுள்ள நல்ல மாலை சூடிய நாகன்பால் அடைந்து, இவ்வழிவு பற்றிச் சொன்னார்கள்.

## திண்ணனை தலைவனாக்குதல்

இவ்வாறுகூறியவற்றைக் கேட்டலுமே நாகன் தானும், தன்னைப்பற்றி வரும் தன் மூப்பின் தொடர்ச்சியினை நோக்கி, சொன்ன அவர்க்கு முன்னாகச் சொல்வான், 'என் மக்களே! மூப்பினால் நான் முன்பு போலச் செப்பமாக வேட்டையினில் முயற்சி கொள்ள இயலாதாயிற்று. ஆதலின் என் மகன் திண்ணனை உங்கட்குத் தலைவனாக எல்லீரும் ஏற்றுக் கொள்ளுங்கள்' என, அது கேட்ட அவ்வேடர்களும் அவன் நிலை கண்டு இரங்கினர், எனினும் திண்ணனாரைத் தலைவராகக் கொள்ளும் பேற்றால் பெரிதும் மகிழ்ந்து தம் தலைவன் நாகன் அடி பணிந்து இம் மாற்றத்தைக் கூறினார்.

'இத்துணைக் காலமும் உனது வில்லாட்சியின் கீழ் நாங்கள் தங்கி இனிதுண்டு தீங்கின்றி இருந்தோம். இன்னமும் எம் ஐயனே! நீ எமக்கு ஆணையிட்டருளும் அருள்வழியே நிற்பதல்லாது அடுத்த ஒரு செயல் எமக்கு உளதோ? இதுவே அல்லாமல், மிகுவிறல் பூண்ட திண்ணனாரை உனது மரபில் மிகவும் மேம்படவே பெற்றுத் தந்திருக்கின்றாய், விளங்கிடும் மேன்மை கொண்ட வில்வீரனான உன் மைந்தனை இவ்விடத்து நீ அழைத்து, உங்கள் மலைநாட்டு அரசாட்சிப் பொறுப்பை முறைப்படி கொடுத்திடுவாய்' என்றனர் மகிழ்வு கொண்ட அவ்வேடர்கள்.

## முதிய தேவராட்டி

வில்மறவர்கள் இவ்வாறு கூறக்கேட்ட நாகன் என்பானும், திண்ணனாரைத் தன் முன்பு கொண்டு வருமாறு கூறிவிட்டு, அதன்பின்பு, அங்கு நின்றார் சிலரைநோக்கி, மலையிட மாகப் பொருந்திய நெடிய காட்டில் தன்மகன் கன்னி வேட்டையாடப் போதற்கு, அக்காட்டிலுள்ள தெய்வங்கள் மகிழ்வுறுமாறு பலியூட்ட வேண்டி, அதனைப் புரிகின்ற தங்கள் குலத்தலைமை அமைந்த தேவராட்டியை அழையுங்கள்' எனலும், அதுகேட்ட வீரர்களும் அப்பெருமாட்டியிடத்துச் சென்று, அந்நிலையைஎடுத்துக் கூறிடலும், நரையுடைய அம்மூதாட்டியும் பெரிதும் மகிழ்ந்து, விருப்பத்துடன் விரைவில் வந்தாள்.

காட்டில் உள்ள பசுந்தளிர்களுடன் மலர்க்கண்ணிகளும் சேரக்கட்டிய மாலையைச் சூடி, கலைமான் கொம்பிலிருந்து அரிந்து எடுத்து வளையமாகச் செய்த தோட்டைக் காதில் அணிந்து, மானின் வயிற்றினின்றும் எடுக்கப் பெற்ற அரிதாரத்தால் பொட்டிட்டு, மயிற்கழுத்துப் போன்ற வட்டமான நிறம்பொருந்திய சங்கு மணிவடமும் கழுத்தில் அணிந்து, மார்பகம் சுருங்கித் தாழ, இலையின் தழையும் மரப்பட்டையும் மயில்இறகும் சேரக் கொண்ட ஆடையை இடுப்பில் அணிந்து, வந்தவளாகிய தேவராட்டி, நாகன் முன்வந்து, மலர்கள் நிறைந்த நெல்லோடு கூடிய அரிசியைக் கொடுத்து, வேடர் தலைவனாய நாகனை அப்பெருமாட்டி வணங்கி நின்றாள்.

வணங்கி நிற்கும் முதிய தேவராட்டியைப் பார்த்து, 'அன்னையே! நீ வறுமை இன்றி என்றும் நன்றாக வாழ்கின்றனையோ!' எனக்கேட்கும் நாகன் முன்பு, அவன்பால் நலமெல்லாம் பெருகும்படி வாழ்த்தி, 'எனக்கு வேண்டிய மெல்லிய இறைச்சியும், ஈசல்களின் புழுக்கலும், தேனும், மலையிடத்து விளையும் பொருளும், இன்ன பிறபொருள்களும் எல்லாம் எனக்கு இன்னவகையாகக் கொடுத்திட வேண்டுமென்று நீ சொல்லியவாறு நான் பெற்று வாழ்வேன்! அது நிற்க! இப்போது என்னை இங்கு அழைத்த பணியாது?" எனக் கேட்டாள் அத்தேவராட்டி.

நடுவுநிலைமையினின்றும் பிறழாத என்குலமைந்தன் திண்ணன், எங்கள் குலத்தின் தலைமைப் பொறுப்பை நான் கொடுப்ப அதனையேற்று, வாரில் நாண் பூட்டிய வில்லைக் கைக் கொண்ட வேடர்களைக்காக்கும் மலைநாட்டரசு உரிமையைப் பெறுகின்றான். அவனுக்கு என்றும் வேட்டைச் செயல் எனக்கு மேலாக வாய்க்குமாறும், அயலிடங்களிலுள்ள பகைவரை வெற்றி கொள்ளுமாறும் 'அருள்புரிந்திடக் காட்டில் உள்ள தெய்வங்கட்கு நல்ல பலிகளை நீ கொடுப்பாயாக' என்றான், கவலை என்பதில்லாத நாகன்.

நாகனுடைய கருத்தைக் கேட்ட தேவராட்டியும், மனமகிழ்ந்து, அன்புடன் வந்த எனக்கு, எந்நாளிலும் இல்லாத நல்நிமித்தங்கள் பல காணப்பட்டன, இதனால் நின்மகன் திண்ணன் நின்னளவில் அன்றிமிக மேம்படுகின்றான் என்று வாழ்த்தி, வெற்றி விளைவிக்கும் காட்டுத் தெய்வங்கள் மகிழுமாறு பலிகொடுத்தற்கு வேண்டிய பொருள்களைக் குறைவின்றிப் பெற்றுக் கொண்டு போயினாள்.

### திண்ணனாரை இருக்கையின் மீது அமர வைத்தல்

தெய்வம் ஏறுதற்குரிய தேவராட்டியார் சென்ற பின்பு, திண்ணனார் வில் ஏந்திய தந்தையாய நாகன் அழைத்திட, சிறப்புடைய கரிய நறுமணமாலையையும், சிறந்த கரிய குடுமியினையும், உடைய நீலமலையொன்று வந்தது என்ன, வில்லுடைய வேடர் போற்றிட வந்து, நாகனின் கழலடிகளை வணங்கும் பொழுதில், நாகன், திண்ணனாரை அன்புடன் கையால் அணைத்தெடுத்து, செப்ப முடைய இரண்டுமலை போலும் தோள்களுடன் இறுக அணைத்து, தான்இருக்கும் இடத்து முன்பு உள்ள செழுமையான புலித்தோல் இருக்கையின் மீதுசேர அமர வைத்தான்.

நாகன், தன் முன்இருந்த தன் மைந்தனின் முகம் நோக்கி, 'மூப்பு என்னை வந்து அடைந்து கொண்டமையால் முன் போல என் ஆற்றலுடன் விளங்கவும், அதுகொண்டு இனி வேட்டையாடவும், எனக்கு எழுச்சியில்லை; எனக்கும் மேலாக இவ்வில்மறவர் குலத்தின் காவல் பொறுப்பை நீ ஏற்றுப் பகைவரை அழித்து, தீய விலங்குகளையும் பெருவேட்டையாடி வென்று, உன்மரபுரிமையாகிய தலைமையை நீ தாங்கிக்கொள்வாய், என மொழிந்து, தலைமைப் பொறுப்பிலுள்ளார் கொண்டு விளங்குதற்குரிய உடை தோலையும், வாளையும் கொடுத்தான்.

தந்தையின் நிலையைத் திண்ணனார் மனத்தில் கொண்டு, அதனால் தம் மனத்தில் கவலை கொண்டு, பின்னர்த் தந்தையின் தளர்வால் தங்கள் குலத்தலைமைக்கு வந்த குறைபாட்டை நிரப்ப வேண்டும் என்று மனத்தில் கொண்ட குறிப்பால், அப்பொறுப்பினை மறாது ஏற்றுக்கொண்டு, முன்னாகத் தந்தையின் திருவடிகளை முறைப்படி வணங்கி, முறைமையால் அவன் கொடுக்கும் சுழல்வாளையும் உடைத்தோலையும் வாங்கிக் கொண்டு, உளத்தில் அரசியல் பளுவைக் கொண்ட திண்ணனார்க்கு, சிறந்த தந்தையாகிய நாகன், மகன் நிலைகண்டு முகமலர்ந்து இதனைச் சொல்லுகின்றான்.

### நாகன் மகனுக்கு உரைத்தல்

'நம் குலத்து வேடர்கள், சுற்றத்தவர்கள் ஆகியோரை நான் தாங்கிவந்த அத்தன்மையின் மேலாக, நீ நல்லனவே செய்து, கொடிய பகைமுனையில் வரும் பகைவர்களை வென்று, அயலில் உள்ள இடங்களை வெற்றி கொண்டு, எக்காலமும் குறைவில்லாத சிறப்பில் நீ வாழ்வாயாக! விரும்பத்தக்க வேட்டை முனையில்

வேட்டைகளும் உனக்கு நன்கு வாய்க்கும். விரைந்து வேட்டையாட இந்த வலிய கொடியவில் வேடர்களுடன் எழுவாயாக' என விடை கொடுத்தான், மகனைச் சிறந்த தலைவனாக ஆக்கும் அவ்வியல்பில் நின்ற நாகன்.

சிவந்த கண்களையுடைய வீரமுடைய ஆண்சிங்கம் போலும் வலிமையுடைய திண்ணனார், தம்மைப் பெறுதற்குரிய பெருந்தவத்தினையுடைய, வலிமை மிகுந்த சிறந்த தந்தையின் கழல்களை வணங்கி, விடைபெற்றுக் கொண்டு, வெளியே வந்து, வேடருடன் வேட்டையாடப் புறப்படுதற்கு முன்னாக, மங்கலமுடைய சுனைநீரில் நீராடித், தம்மனையில் அன்று இரவு தங்கி, இரவு விடிகின்ற காலைப் பொழுதில், வரியையுடைய வில் இருக்கும் படைக்கலக் கொட்டிற்குச் சென்று, அங்குப் பொங்கும் வில்லாண்மை சிறந்திடும் கொலையுடைய வேட்டையாடற்குரிய கோலத்தைக் கொண்டிட, கைவன்மை உடைய வில்தொழிலாளருடன் மகிழ்ந்து புகுந்தார்.

## பலவகை அணிகள் அணிதல்

இயல்பாகச் சுருண்டிருக்கும் அவர் கூந்தலின் சுருள், நிமிர்ந்து பொலிவுறும்படி மேலே உச்சிக்கொண்டையாகத் தூக்கிக் கட்டி, அதன்மீது தளிர்களையும் மலர்க்கண்ணிகளையும் சேர்த்துக் கட்டிய மாலையை அணிந்து, அதற்கிடையே சிறந்த ஒளியுடைய ஒரு மயிற்பீலியைச் செருகி, பின்னர் அவற்றின் கீழாக வாசனையுடைய முல்லை மாலையுடன் குறிஞ்சிப் பூவையும் வெட்சிப் பூவையும் அவற்றின்மீது நிறைந்த வண்டின் கூட்டம் தேன் பொருட்டாக மொய்க்குமாறு சிறப்புறக் கொண்டை மாலையாகக் கட்டி முன் நெற்றியில், மயில் இறகின் அடியில், குன்றி மணிகளை இடை இடையே வைத்துச் சேரக்கட்டிய அழகுடைய மயிர்க்கற்றையை நெற்றியில் பொலிவுபெறச் சாத்தி, மின்னல் போல் ஒளிரும் சங்கினால் செய்து விளங்குகின்ற வெண்மையான தோடு காதின்புறத்தே இருநிறை நிலாக்கள் போல் பொலிவெய்த அணிந்து, திருக்கழுத்தில் வெள்ளை நிறமான பலகறைகளாலாய ஒளியுடைய மாலையைப் பொருந்த அணிந்திருந்தான். சங்குமணிகளோடு பலவகை மணிகளைக்கோர்த்து அவற்றின் இடையிடையே பன்றிக் கொம்புகளை இளம்பிறைத் துண்டங்கள் எனத் தொங்கவைத்து, அவற்றை வேங்கைப் புலியின் தோல் மேலாகப் பதித்து, தட்டை வடிவினதாக அமையப் பெற்ற சன்னவீரம் எனும் அணி சிறப்புடன் அணிந்திருந்தான்.

மார்பினிற் சிறியயானைக் கொம்பின் முத்துக்களாலாய மணிமாலை சிறந்திடத்தோள்களில் மாலைகளால் பொலிவெய்தும் வாகுவலயங்கள் ஒளிதழைத்து

மின்னிட, அழகிய ஒளிதிகழும் காப்புக்கள் அணியப் பெற்று விளங்கிடும் முன் கையில், மழைமேகம் போல் அம்பு சொரியும் வில்லின் நாணினைப் பற்றிடும் கோதையைக் கட்டி, திருவரையில் மயிற்பீலியமைந்த புலித்தோல் ஆடையை உடுத்தி, அதன் மேலாகக் கடலின் நீர்க் குமிழிகள் போன்ற முத்துக்கள் விளிம்பில் பதித்த நீண்ட உடைத் தோலினையும், அதனுடன் கூட விளங்கிய சிவந்த நிறம் கொண்ட உறையுள் செருகப் பெற்ற சுழல் வாளையும் சேர அணிந்து இறுகக்கட்டியிருந்தான், காலில் வீரக்கழல் அணிந்திருந்தான். அப்போது கையில் உள்ள வில்லில் நாணேற்றினார்.

### பலவகையான வாழ்த்தொலி

வலிய சிங்கஏற்றைப் போன்ற திண்ணனார், மேற்கூறியவாறு நாணோசை செய்த பின்பு, பல்வேறு அம்புகளை அவற்றின் கூர்மைச் சிறப்பைப் பார்த்து, உடன் கொண்டு வருமாறு ஆணையிட்டு, வில்ஏந்திய வேடர்கூட்டம் உடுக்கை அடித்து ஒலித்திடும் முன்றிலில் வந்து, பல்வேறு வகையான வாழ்த்துகள் திசைதோறும் பொலிந்து விம்மிடத் தாமும், கொலை புரியும் அம்புகளைத் தெரிந்து எடுத்து நின்றார்.

### தேவராட்டி வருதல்

பெருமை பொருந்திய வில்வேடர்கள், அவர் அருகில் நெருங்க, நீலமலர் என விரிகின்ற ஒளிபொருந்திய முகத்தையுடைய திண்ணனார் முன், தேன் தோய்ந்த தசைகளும், கள்ளும், பொரியும், மற்றுமுள்ள பிறபொருள்களும் கொண்டு, காட்டிலுள்ள தெய்வங்கட்குப் பலிகொடுத்துவந்த தேவராட்டி வந்தாள். திண்ணனாரைச் சூழ நிற்கும் வில்வேடர்கள், அப்பெருமாட்டிக்கு வழிவிட்டு நிற்ப, உட்புகுந்து சென்று அவளும், அவர் திருநெற்றியில் முனை முரியாத மஞ்சளோடு கலந்த அரிசியையும் மலரையும் சாத்தி, உன் தந்தை தந்தைக்கும் கன்னிவேட்டையாடச் சென்றிடும் போது, இன்று உனக்கு வாய்த்திருக்கும் நன்மைகள் போல வாய்த்தில. உன்னுடைய வலிமை பெரிதாகும். அது உரையிடற்கு அரிதாகும் எனக் கூறி, ஆசி வழங்கினாள்.

### திண்ணனார் வேட்டைக்குச் செல்லல்

அதன்பின் தேவராட்டியை அனுப்பியபின் வில்லுடன் திண்ணனார் வேட்டைக்குப் புறப்பட்டார். திண்ணனாருடன் சேர்ந்து பல்வேறு வீரர்களும் வில்

அம்புடன் திரண்டெழுந்தனர். வலிமையுடன் தொடுத்துக்கட்டிய வார்க் கயிற்றினைக் கொடிய கைகளையுடைய வேடர்கள் பற்றிக்கொண்டு வரவும், வெற்றிக்குரிய தெய்வமான கொற்றவையின் திருவடிமுன் போய் நீள்வது போன்ற சிவந்த நாக்குகளைத் தொங்கவிட்டிருக்கும் நாய்கள் இருமருங்கும் ஒன்றொடு ஒன்று பொருந்தாமல் ஓடும்.

போர் வலைகள் கொண்டு வில்லும் கொண்ட வேட்டைத் தொழிலை வெளியிலே புரியுமாறு சென்றாலும், தம் உள்ளத்துள் சார்கின்ற பாசவலைகளின் தொடக்கறுக்க ஏகின்ற திண்ணனாருக்கு முன்னரே, மேகங்கள் பற்றிச் சூழும் பெருமலையின் இடைப்பட்ட அக்காட்டில் விலங்குகள் தப்பி ஓடாதபடி, காட்டை வளைத்திட, நீண்ட பெரியவார் வலைகளின் பொதிகளைப் பல்வேறு வகையாகச் சுமந்து கொண்டு வருகின்ற வேடர்கள், தம் கூட்டத்தினரை முந்திக் கொண்டு ஓடினார்கள்.

## எல்லாதிசைகளிலும் வேடர்கள்

பெருமை பொருந்திய நான்மறைகளும் சென்று தேடிடும், அக்குளிர்ந்த வெண்பிறையும் அடம்பும் கொன்றைமலரும் தங்கும் சடையையுடைய பெருமானை, முன்னைய தவத்தால் அகக்கண்ணினால் கண்டு மகிழ்கின்ற அன்பராம் திண்ணனார் முன்னே, எண்ணற்ற பார்வை மிருகங்களைக் கொண்டு வேடர்கள் எப்பக்கங்களிலும் சென்றனர். வேடர்கள் காட்டின் அனைத்து திசைகளிலும் சென்றனர்.

அவ்வாறு ஓடிய வேடுவர்கள், காட்டின் மரக்கிளைகளை வெட்டி வீழ்த்தியும், வாரினைக் கட்டி, அவ்வெல்லையெல்லாம் நீண்ட வலியுடைய அவ்வலையின் தொடர்ச்சி நீளிடையாக ஒழுங்குடன் விளங்கப் பிணித்தும், அக்காட்டினில் விலங்குகள் தப்பிடாத வண்ணம் காவல் செய்து, அடைத்த பின், வில்லேந்திய கையினையுடைய வேடர்கள், திண்ணனார் முன்பாக வந்து சேர்ந்தார்கள்.

## மிருகங்கங்களை எழுப்புதல்

கொடிய விலங்குகளை எழுப்பும்படி வேடர்களை ஏவ, அம்மலைநாட்டு வேடரெல்லாம் மிருகங்களை எய்வதற்கு ஏற்ற கூரிய அம்புகளை எடுத்துக் கொண்டு, எங்கும் ஓடிச் செல்ல, எப்பக்கங்களிலும் மொய்த்தெழுகின்ற உடுக்கின் கூட்டங்களின் ஓசை பெருக, பம்பைப் பறைமுன் முழங்க, கைகளைத் தட்டி, நிலம் அதிரும் ஓசை

செய்து, காட்டிலுள்ள மிருகங்களையெல்லாம் அவ்வேடர்கள் எழுப்பினார்கள். காட்டுப் பன்றிகளோடு, மானினங்கள், கரடி, திண்மையான கலைமான் கூட்டம், காட்டெருமைகள், யானைகள், கொடிய புலியின் வகைகள், காட்டு மரைகள் ஆன பெருமிருகங்கள் பலவாக வெருண்டு எழுந்துபாய, திண்ணனாரின் முன் வந்த சேனையாய வேடர்கள், அம்மிருகங்கள் மேல் நெருங்கிச் சீறி அம்பினால் எய்து கொன்றார்கள்.

கலைமான்கள் கால் அறுவனவும், இடை அறு வனவும், தலை முறிவனவும், தைத்த அம்புடன் குடல் சொரிந்திடப் புரண்டு வீழ்வனவும் ஆயின. சில காட்டுப் பசுக்கள் தமது நீண்ட உடல் மேல் விடப் பெறும் அம்பு வந்து பின்னால் உருவிச் செல்ல, உடல் பதைத்து நிமிர்வனவாயின. பலமான்கள் மிகக் கொடிய அம்புகள் வந்து தைக்க எழுந்து துள்ளி அறுபடலாயின.

### புலி,பன்றி

கொடிய அம்பு படப்பிடரி கிழியும்படி விசையுடன் உருவப்பட்ட சிறிய வாயினையுடைய மான், அவ்வம்பு முன் போதலால் வாயினில் குருதி பெருகிச் சிவந்த நெருப்பைப் போலக் காட்சி தர, அதன்பின் இன்னும் அம்புகள் விசையுடன் சென்று முன் வந்த பெரும் பன்றியின் தலையில் அவை உருவிய பொழுது, அவ் வீச்சுடன் அப்பன்றி சென்று முன்னாக வந்த புலியின் வாய்க்குள் அம்புடன் சேரத் தைக்கப்பட்டு அம்பினால் புலியின் வாயும் பன்றியின் முகமும் ஒன்றாக்கப் பட்ட தன்மையினால் புலி,பன்றியைக் கௌவிக் கொண்டோடிய தன்மைபோல் இக்காட்சி ஒத்திருந்தது.

### யானை சிங்கம்

கரிய பெருமலை, கையில் ஒரு வில்லுடன் விரைவாக ஓடுகின்றதெனப், பொருந்தும் படியாக வனத்தின் முன்னாக நேர்ந்து வரும் திண்ணனார், முன் விடுகின்ற கொலை புரியும் அம்புகள் எதிர்வந்த மிருகங்களைக் கொலை செய்கின்ற அமையத்து, அவ்வம்புகள் போரிடும் யானையோடு சினமுடைய சிங்கங்களின் வயிற்றிலும் இடையீடு இன்றிப் புகுதலால், இறந்து வீழ்ந்து கிடக்கும் அம்மிருகங்கள் இரவின் பின்னால் பகல் தொடர்கின்றது எனும்படி அவ்வனம் காட்சியளித்தது.

### மானின் செயல்

வேட்டை மிக்க நிலையில், அச்சத்தால் நீண்ட இடம்வரையும் கடிதோடி மேலே துள்ளிக் குதித்து, நெடிய முகிலைத் தொடும்படி எழுந்த மான்களைக் கொல்லுமாறு வீரக் கழலை அணிந்த வேடர்கள் விடுகின்ற அம்புகளின் நிரை, பின்னால் தொடர்கின்ற தன்மை, ஒளிவிடுகின்ற நிலாக்கதிரை விடுத்து, அதனிட மிருந்து கீழ்விழுகின்ற மானைப் பிடிப்பதற்கெனப் பின்பற்றச் செல்லும் பாம்புகளின் நிலையை ஒத்திருந்தது.

### பன்றியின் செயல்

வேட்டையாடும் இவ்வகையில் கொலைச்செயல் அங்கே நிகழ்ந்து வரும் பொழுது, அக்காட்டிடத்து உள்ள மிருகங்களில் மலைபோன்ற பெரிய துதிக்கையுடைய யானைகளும் அச்சமுற, அக்காடும் புழுதி பரவுமாறு ஒரு பன்றி எழுந்து, பெரிய மழை பெய்யும் கறுத்தமுகில் ஒன்று இடிஇடித்துக் கொண்டு போகின்ற தன்மைபோல, தன்கண்களூடாகப் பிறக்கின்ற சினப்பொறிகளுடன் பாய்ந்தோடி, வேடர்கட்டிய வலைகள் எல்லாம் அறுந்திடும்படியாகப் புறப்பட்டு, நிமிர்கின்ற விசையோடு ஓடியது.

### திண்ணனார் பன்றியைக் கொல்லல்

அதிகாலையில் சூரியன் எழும்முன் திண்ணன் அர்ச்சுனனைப் போல அம்பும் வில்லுமாக ஒரு மாவீரன் போல் வேட்டையாடப் புறப்பட்டான். அவனுடன் ஏனைய வேடர்களும் சென்றனர். ஏராளமான மிருகங்களைக் கொன்று வீழ்த்தினர். அப்போது ஒரு காட்டுப்பன்றி வேட்டைக்குத் தோண்டியிருந்த குழிகளிலிருந்தும் வேடர்கள் விரித்து வைத்திருந்த வலைகளினின்றும் தப்பியோடியது. மூன்று பேரால் மட்டுமே அந்தப் பன்றியின் வேகத்துக்கு ஈடுகொடுத்து அதைத் துரத்த முடிந்தது. திண்ணன், நாணன், காடன். ஆயினும் அது அவர்கள் எப்போதும் வேட்டையாடும் காட்டை விட்டு வெகுதூரம் ஓடிச்சென்று திருக்காளஹஸ்தி மலையடிவாரத்தில் ஒரு மரத்தடியில் நின்றது. அந்தக் காட்டுப் பிரதேசத்திற்கே தலைவனான திண்ணன் வீராவேசத்தோடு முன் சென்று அதைக் கொன்று வீழ்த்தினான்.

கரிய மேனியும் சிவந்த கண்களும், வில்லும் கொண்ட வேடர் தலைவராய திண்ணனார், விரைந்து குத்தலும் இரு துண்டுகளாய் வீழ்ந்த அப்பன்றியைக் கண்டு, நாணன், "காடனே! இப் பன்றியின் பின்னாக இன்று பல காததூரம் ஓடிவந்து

களைத்து இளைத்தோம் ஆயினும் இவ் ஆடவனாய திண்ணன் அதனைக் கொன்றான் அச்சோ" எனப் பாராட்டுக் கூறி, தம் தலைவர் திண்ண னார் திருவடிகளில் தாழ்ந்தார்கள்.

## திண்ணனார் சிவனைக் காணுதல்

அப்போது தான் மற்ற வேடர்களை விட்டு வெகுதூரம் வந்துவிட்டதை மூவரும் உணர்ந்தனர். திண்ணன் அந்தப் பன்றியைக் காடனிடம் கொடுத்து மூவரும் பசியாறுவதற்காகச் சமைக்கச்சொன்னான். காட்டுக்கும் மலைக்கும் அந்தப்பக்கம் பொன்முகலி என்ற நதி இருப்பதாக நாணன் கூறவே, அவனும் திண்ணனும் தண்ணீர் எடுத்துவருவதற்காக அங்கே சென்றனர். அவ்வாறு காட்டைக் கடந்து செல்லும்போது திண்ணன் காளஹஸ்தி மலையைக் கண்டு பரவசப்பட்டு அதனருகே சென்றான். மலையுச்சியில் குடுமித்தேவர் (சிவன்) ஆலயம் இருப்பதாகவும் அவரைத் தரிசிக்கலாமென்றும் நாணன் கூற, அதுவே சிவனின் பாற்செல்ல திண்ணன் எடுத்த முதல்அடியாகும். முற்பிறவிகளில் செய்த நற்செயல்களின் பலன், திண்ணனை சிவபெருமானின் பால்ஈர்க்க உதவின. அவரிடம் அவன் கொண்ட ஈடிலா அன்பானது பெருவெள்ளமாகப் பொங்கி வளரத் தொடங்கியது. அவனுடைய தூய அன்பும் உடன் வந்த நாணனும் அவனை மலைமேல் அழைத்துச் சென்றன. உள்ளம் கவர் கள்வனாகிய சிவபெருமானை அவன் காண்பதற்குமுன் அந்தக் கள்வனே திண்ணனுடைய பிறப்பின் ஆதாரமும் அவனுடைய பிறப்புக்கும் வாழ்க்கைக்குமிடையேயான உறவாகிய வேட்டையெனும் கலையைக் களவாடிவிட்டார்.

## சிவன் மேல் கொண்ட அன்பு

திண்ணன் அங்கே ஒர் சிவலிங்கத்தைக் கண்டான். அந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் கண்களினால் பருக, அக்காட்சியின் அருமை அவன் நெஞ்சில் நிரம்பி வழிந்தது. அவன் நினைவு தன் வசமில்லாமல் போயிற்று. அந்த அன்புப் பரவசத்தில் அவனை ஆழ்த்திய சிவனிடம் ஓடிச்சென்று கட்டிப்பிடித்து முத்தமிட்டான். அவன் உடம்பின் ஒவ்வொரு அணுவிலும் அளவிலாப் பேரானந்தம் பொங்கித் திளைத்தது.

அதே சமயம் அவன் கண்களிலிருந்து அருவிபோல் கண்ணீர் வழிந்தது. “எம்பெருமானே! இந்த அடர்ந்த காட்டில் கொடிய மிருகங்களுக்கிடையே உன்னைக்

காக்க ஆளில்லாமல் இப்படித் தனிமையில் இருக்கிறாயே? இது முறையன்று! இது முறையன்று!" என்று கதறினான். அவனுடைய வில் கீழே விழுந்தது கூடத் தெரியாமல், நாணனிடம், "யார் இப்படி எம்பெருமானுக்குப் பச்சிலையும் பூக்களுமாக உணவளித்திருப்பார்கள்?" என்று வினவினான். அதற்கு நாணன், "ஒரு முறை நான் இங்கே வேட்டையாட வந்தபோது ஓர் அந்தணர் அபிஷேகம் செய்து பூச்சொரிந்ததைக் கண்டேன். அவர் தான் இன்றும் செய்திருக்கவேண்டும்" என்றான். திண்ணனுக்குப் பொறுக்கவில்லை. "எம்பெருமான் இப்படித் தனியே இருப்பதா? அவருக்கு மாமிச உணவு, இறைச்சி உணவளிக்க ஆளில்லை! அவரை எப்படித் தனியே விட்டு வருவேன்? என் செய்வேன்? அவருக்குப் பசியாற நல்இறைச்சி கொண்டுவரவேண்டும் நான்!" என்று கூறினான்.

திண்ணன் சிவனுக்கு இறைச்சி கொணர முற்படுவான், ஆனால் அவர் தனிமையிலிருப்பது நினைவுக்கு வரவும் ஓடோடி வந்து அவருக்குத் துணையிருக்க எண்ணுவான். மீண்டும் இறைச்சி கொணர முற்படுவான், மீண்டும் ஓடோடி வந்து துணையிருப்பான். இப்படியே ஒரு பசு தன் இளம்கன்றை விட்டு அகலாதது போல் சிவனுக்கு முன்நின்று அவரிடமிருந்து தன்கண்களைப் பறித்தெடுக்க இயலாமல் தடுமாறினான். ஒரு கணம், "எம்பெருமானே! உனக்கு மிகச்சிறந்த இறைச்சி கொண்டுவரப் போகிறேன்!" என்று உறுதிமொழி கூறுவான். மறுகணம், "உன்னைத் தனிமையில் விட்டு எங்ஙனம் செல்வேன்?" என்பான். பின், "ஆனால் நீ மிகுந்த பசியுடனிருப்பதை என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லையே... என் செய்வேன்!" என்று புலம்புவான். கடைசியில் தன்னைத் தானே தேற்றிக் கொண்டு, அனைத்தும் உடைய சிவபெருமானுக்கு வேண்டியதைக் கொண்டு வந்தே தீரவேண்டுமென்ற ஒரு முடிவோடு சென்றான்.

இவ்வுலகிலுள்ள எல்லாவற்றின் மீதும் உள்ள ஆசைகளனைத்தும் எரிந்துபோய் சிவனின் மீதுள்ள ஆசை மட்டுமே அவனிடமிருக்க, திண்ணனும் நாணனும் பொன்முகலி நதிக்கரையிலிருந்த ஓர் அழகிய சோலையை வந்தடைந்தனர்.

அப்போது காடன் வந்து காட்டுப் பன்றியைச் சமைத்து முடித்த செய்தியைச் சொல்லி மூவரும் உணவருந்தலாமென்று அழைத்தான். நாணன் அவனிடம், திண்ணன் சிவனைத் தரிசித்தபின் தான் வேடர்களின் தலைவன் என்ற உண்மையை மறந்து (மெய்மறந்து) அந்த எண்ணத்தைத் துறந்து, தன்னை இப்போது சிவனின்

அடிமையாகவே கருதுகிறானென்று சொன்னான். அதைக் கேட்டதும் காடன் அதிர்ச்சியடைந்தான்.

### சிவனுக்கு உணவளித்தல்

திண்ணனோ எதைப்பற்றியும் கவலையே இல்லாமல் பன்றிக்கறியின் மிகச்சுவையாக இருக்கக்கூடிய பாகங்களை ஒரு அம்பினால் குத்தியெடுத்துத் தன் வாயிலிட்டுச் சுவைத்துப் பின் அதை வாயினின்றும் வெளியிலெடுத்துத் தான் சுவைத்தவற்றுள் மிகச்சிறந்தவையைத் தனியே சேகரித்தான். மற்ற இருவரும், “இவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது! இறைச்சியைச் சுவைத்தபின் அதையெடுத்துச் சேகரிக்கிறானே! அவனுக்குக் நிச்சயமாகக் கடும் பசியிருக்கும், ஆனாலும் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் இருக்கிறானே! நமக்கும் உணவளிக்க மாட்டேனென்கிறான்! அவனுடைய தந்தை நாகனையும் மற்றவர்களையும் அழைத்து வந்து என்ன செய்வதென்று பார்ப்போம்” என்று அந்த இடத்தை விட்டுச் சென்றனர்.

எந்தச் சலனமுமில்லாமல், திண்ணன் இறைச்சியைக் கையில்எடுத்துக்கொண்டு, அபிஷேகம் செய்யச் சிறிது தண்ணீரைத் தன்வாயில் நிரப்பிக்கொண்டு, சிவனுக்குச் சமர்ப்பிக்க அழகிய மலர்கள் சிலவற்றைக் கொய்து தன்தலையில் சூடியெடுத்துக்கொண்டு, சிவனுக்குப் பசிக்குமே என்றெண்ணி மலையுச்சிக்கு விரைந்து சென்றான். சுயம்புவாகத் தோன்றிய அந்தச் சிவலிங்கத்தின் தலையிலிருந்த பூக்களைத் தன் கால்களால் களைந்து வீசித் தன் வாயிலிருந்த தண்ணீரால் அபிஷேகம் செய்து, தன்தலையில் சூடிவந்த மலர்களால் அலங்கரித்துப் பணிந்தபின் தான் சுவைத்து எடுத்து வந்த இறைச்சியை உணவாக அளித்தான். அப்படியும் அவனுக்குச் சமாதானமாகவில்லை. சிவனுக்கு மேலும் உணவளிக்க வேண்டுமென்றெண்ணினான்.

### சிவனுக்கு காவலாகத் திண்ணன்

சூரியன் அஸ்தமனமாகிப் பொழுதுசாய்ந்தது. அச்சமென்றால் என்னவென்றே அறிந்திராத வேடர்கள் தலைவன் திண்ணன், வனவிலங்குகள் இரவில் வந்து சிவனைத் துன்புறுத்துமோ என்று அஞ்சினான். அதனால் அருகிலேயே தன் வில்லும் அம்பும் உடனாகக் காவலிருந்தான். மறுநாள் பொழுது புலரும் சமயம் சிவனை விழுந்து வணங்கிவிட்டு அவருக்கு மீண்டும் உணவளிப்பதற்காக வேட்டையாடக் கிளம்பினான்.

### சிவாச்சாரியார் சிவனை வணங்குதல்

அவன் சென்றவுடன் சிவகோச்சாரியார் என்ற முனிவர் வந்தார். சிவலிங்கத்துக்கு முன் சிதறிக் கிடந்த இறைச்சியையும் எலும்புத் துண்டுகளையும் கண்டு அதிர்ச்சியடைந்தார். “இது அந்தப் பொல்லாத வேடர்களின் வேலையாகத்தானிருக்கும்” என்றெண்ணிச் சன்னதியை மிகவும் சிரத்தையாகச் சுத்தம் செய்தபின் பொன்முகலியாற்றுக்குச் சென்று நீராடிவிட்டு விரைந்து வந்தார். பின்னர் சிவனுக்கு அபிஷேகம், அர்ச்சனை, தீபாராதனை செய்து அவருடைய திருநாமங்களை மொழிந்து அந்த ஒப்பிலாப் பரம்பொருளைப் பல முறை விழுந்து வணங்கிவிட்டு வீடு திரும்பினார்.

### திண்ணன் மீண்டும் உணவளித்தல்

அன்பு வேடன் திண்ணன் மான்களையும் காட்டுப்பன்றிகளையும் மற்ற மிருகங்களையும் வேட்டையாடி அவற்றின் இறைச்சியை தீயில் வேகவைத்தான். சிவனுக்கு மிகுந்த சுவையுள்ள உணவையே அளிக்கவேண்டுமென்பதால் இறைச்சித் துண்டங்களைச் சுவைத்து அவற்றுள் மிகச்சுவையானவற்றையே தேர்ந்தெடுத்தான். அவற்றை மேலும் சுவையுள்ளவையாக்க அவற்றின் மேல் தேன் வார்த்துக் கொடுத்தான் திண்ணன்.

தினமும் பூசைக்கு வேண்டியபொருட்களை எடுத்துக்கொண்டு பிறப்பிறப்பிலாப் பெருமானை மிகுந்த அன்புடன் வழிபடச் செல்வான். முனிவர் இட்டிருந்த மலர்களை அவன் காலால் அப்புறப்படுத்தி மான்கறி, காட்டுப்பன்றிக்கறி அளிப்பான். இரவு உறக்கத்தை மறந்து சிவனைக் காவல் காப்பதையே கருத்தாகக் கொள்வான். மீண்டும் பகலில் சிவனுக்கு இரை தேடுவதற்காக வேட்டையாடச் செல்வான். பகலில் வழிபட வரும் சிவகோச்சாரியாரோ சன்னதியில் தகாத பொருட்கள் இருப்பதைக் கண்டு வேதனைப்பட்டு அவற்றை அப்புறப்படுத்திச் சுத்தம் செய்து முறைப்படி வழிபடுவார்.

### சிவபெருமான் கனவில் தோன்றுதல்

இப்படியாக நம் நாயனார் (திண்ணனார்) இறைவருக்கு இறைவனான சிவபெருமானைத் தனக்குத் தெரிந்த முறையில் வழிபட்டுக் கொண்டிருக்க, சிவகோச்சாரியார் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காணவேண்டித் தவித்தார். இப்படியொரு தகாதசெயலைச் செய்பவனை நீ தான் அடையாளம் காட்டி

அவனை அகற்றவேண்டுமென்று சிவனிடம் முறையிட்டார். நாயனாரின் மெய்யான அன்பைவிளக்க, சிவகோச்சாரியாரின் கனவில் சிவன் தோன்றி, “அவனை ஒரு குற்றவாளியைப் போல் எண்ணாதே! என்னுடைய அன்பே அவனை முழுக்க ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது.

அவன் என்னைப் பற்றி மட்டுமே நினைக்கிறான். அவன் செயல்கள் எனக்கு ஆனந்தமளிக்கின்றன. அவன் வாயிலிருந்து என் மேல் அவன் துப்பும் தண்ணீர் கங்கையைவிடப் புனிதமானது, அவன் தலையில் சூடிக்கொண்டுவந்து எனக்கு அளிக்கும் மலர்கள் தேவர்களுக்கு அர்ப்பணிக்கப்படும் மலர்களை விடப் புனிதமானவை. இவையெல்லாம் அவனுடைய அன்பின் அடையாளம். நாளை அவன் வரும்போது மறைந்திருந்து பார்த்தாயானால் அவனுடைய பக்தியின் மகிமை உனக்குத் தெரியும்!” அச்சமும் பிரமிப்பும் கலந்த எண்ணங்களோடு சிவகோச்சாரியார் அன்றிரவு முழுவதும் உறங்க இயலாமல், சூரியன் உதித்தவுடன் பொன்முகலியாற்றுக்குச் சென்று நீராடிவிட்டு காளஹஸ்தி ஈசுவரனின் சன்னதியை அடைந்து மறைவாக இருந்து கவனித்தார்.

### திண்ணனாரின் பக்தி

அன்று ஏழாவதுநாள் திண்ணனார் என்றும் போல் அளவிலா அன்புடன் பூசைப்பொருட்களைக் கொண்டுவந்தார். பூசைக்குத் தாமதமாயிற்றே என்றெண்ணிய திண்ணனாருக்குப் போகிற வழியெல்லாம் அபசகுனங்கள் பல தோன்றின. சிவனுக்கு ஏதேனும் ஆயிற்றோ என்றஞ்சி விரைந்தோடினார். சிவகோச்சாரியாருக்குத் திண்ணனாரின் அன்பைக் காட்டுவதற்காக சிவன் தன் முக்கண்ணில் ஒன்றிலிருந்து இரத்தம் கசியச் செய்தார். அதைக் கண்ட திண்ணனார் அம்பும் வில்லும் இறைச்சியும் ஆங்காங்கே சிதற அஞ்சி அதிர்ச்சியடைந்து மிகவும் வேதனைப்பட்டார். சிவனருகே ஓடிச்சென்று குருதியை நிறுத்த முயன்றார், ஆனால் அது நிற்கும்படியாக இல்லை.

இச்செயலைச் செய்த குற்றவாளி யாராக இருக்குமென்று உக்கிரமான கோபத்துடன் எல்லாப் பக்கமும் தேடினார். மக்களையோ மிருகங்களையோ யாரையும் அருகே காணவில்லை. மனமுடைந்து சன்னதிக்குத் திரும்பியவர், தன்

கால்களைக் கட்டிக்கொண்டு அழுதார். பிறவிப்பிணி முதலாய எல்லாப் பிணிகளையும் தீர்க்கும் மருந்தான சிவபெருமானின் பிணிதீர்க்க மருந்து தேடிக் காற்றைப்போல் மிகவிரைவாகச் சென்று காட்டிலிருந்த மூலிகைகளிலிருந்து மருந்தெடுத்துக் கொண்டுவந்தார். அப்படியும் ஒரு பிரயோசனமுமில்லை!

சிவன் கண்ணினின்றும் வழியும் குருதியை நிறுத்தமுடியாத தன் இயலாமையை எண்ணி வாடிவருந்திய திண்ணனாருக்குத் திடீரென்று ஒரு யோசனை உதிக்க, அம்பினால் தன் கண்ணைத் தோண்டியெடுத்து சிவனின் கண் இருக்குமிடத்தில் வைத்தார். உடனே இரத்தம் வழிவது நிற்கவும், அவர் பேரானந்தமடைந்து வான் வரை குதித்துத் தான் செய்த வீரச்செயலையெண்ணி மகிழ்ந்தார்.

## தன்னலமில்லா அன்பு

ஆனால் சிவபெருமானோ அவருடைய பக்தி இதைக்காட்டிலும் எல்லையற்றது என்பதை நிரூபிக்க முடிவெடுத்தார். அவர் வலது கண்ணில் குருதி நின்றதும் இடது கண்ணினின்று குருதி வழியத் தொடங்கியது. ஒரு கணம் அதிர்ச்சியடைந்த நாயனார், "ஓ... இப்போது தான் இப்பிணிக்கு மருந்து என்னவென்று எனக்குத் தெரியுமே... என்னிடம் இன்னொரு கண் உள்ளதல்லவா? அதுவே இதைத் தீர்த்து வைக்கும்!" என்று தெளிந்தார். முன்பு போலவே அம்பினால் கண்ணைத் தோண்டப் போனவர் அதையும் எடுத்துவிட்டால் கண்ணில்லாமல் (பார்வையிழந்த பின்) எப்படிச் சிவலிங்கத்தின் கண் எங்கேயிருக்கிறது என்று தேடி வைப்பது என்று குழம்பி அதற்கும் ஒரு வழி கண்டுபிடித்தார். அவர் காலைத் தூக்கிச் சிவலிங்கத்தின் கண் இருக்குமிடத்தைக் குறித்துக் கொள்வதற்காகத் தன் கால் கட்டை விரலை வைத்துக் கொண்டார். பின் அவர் அம்பை எடுத்துத் தன் இன்னொரு கண்ணைத் தோண்டியெடுக்க எத்தனித்தார்.

இதை விவரிக்க வார்த்தைகளேயில்லை. (திண்ணனார்) கண்ணப்ப நாயனாரும் பக்தியும் வெவ்வேறில்லை, இரண்டும் ஒன்றே என்று சொன்னாலும் போதாது. இதைக்கண்ட சிவபெருமானுக்கே பொறுக்கமுடியாமல் கண்ணப்பருக்குக் காட்சியளித்ததோடு மட்டுமல்லாமல்

"ஓ… நில் கண்ணப்பா! நில் கண்ணப்பா!" என்று அவர் கைகளைப் பிடித்து நிறுத்தி மற்றொரு கண்ணைப் பறித்து எடுக்க விடாமல் தடுத்தார். மறைந்திருந்து பார்த்துக்கொண்டிருந்த சிவகோச்சாரியார் கண்ணப்பரின் அளவிலாப் பேரன்பையும் அதற்கு அவருக்குக் கிட்டிய அருளையும் கண்டார். அப்பேர்ப்பட்ட சுயநலமிற்ற அன்பே சிவபெருமான் மிருகங்களின் இறைச்சியையும் இனிய கனியாக ஏற்றுக்கொண்டதற்குக் காரணம்.

"ஓ! அன்பிலும் பக்தியிலும் ஒப்பற்றவனே! நீ என் வலப்பக்கமாக இருப்பாயாக! என்று சொல்கிறார்!!

கண்ணப்ப நாயனார் ஒரு காலமும் இறைவனை அடைய வேண்டும் என்றும் எண்ணம் எல்லாம் இல்லை. தீடிரென வழிதவறி அந்த கோவிலுக்கு செல்கிறார். மேலும் அவரின் உள்ளுனர்வு அவரை இழுக்கிறது.

மேற்கண்டவாறு கண்ணப்பநாயனார்,

1. லிங்கத்தை கண்டவுடன், அவர் லிங்கத்தின் வரலாறு எல்லாம் அறிய வில்லை. அவரை அதுஈர்த்தது. கும்பிட்டார் அவ்வளவுதான்! இந்த லிங்கம் எப்படி இங்கு வந்தது என்று எல்லாம் அவர் சிந்திக்கவேயில்லை. எடுத்த எடுப்பிலே யார் இதை தனியாக இங்கு வைத்தது. மேலும் இதற்க்கு கறி உணவு படைக்கபடவில்லையே என்றுதான் அவர் எண்ணினார்.

2. மேலும் கோவிலில் யார் இருக்கிறார்கள். அவர்களிடம் அதை எப்படி வழிபட வேண்டும் என்று எல்லாம் அவர் எதிர்பார்க்கவில்லை.

3. மேலும் தான் சுவைத்த கறி துண்டையே படைக்கிறார். அப்படி எனில் எப்படி படைக்க வேண்டும் என்று கூட அவர் அறியாதவராக இருந்தார். ஆம், அவர் தன் வாயில் நீர் எடுத்து சென்று, அந்த லிங்கத்தை கழுவுகிறார். என்பதில் இருந்தே அவர் நிலை என்ன என்று தெரிந்து கொள்ளலாம்.

அவர் லிங்கத்திற்காக உணவு எடுக்க செல்லும் போது கூட தனியாக அந்த லிங்கத்தை விட்டு செல்லமுடியவில்லை நாம் செல்லும் சமயத்தில் காட்டு விலங்குகளால் ஏதேனும் ஆபத்து வருமா என்று அஞ்சினார். ஆம், அவர் லிங்கத்தை கடவுளாக எல்லாம் கருதவில்லை. அந்த லிங்கதிற்க்கே எல்லாம்

நாம்தான் என்று அதை குழந்தை போல பாவித்தார். எத்தனை பேரால் இது முடியும். படிப்பவர்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். முதலில் "கண்ணப்ப நாயனார்" போன்று இருப்பவர்கள் ஒரு காலும் குருவை தேட மாட்டார்கள்!

கண்டார் லிங்கத்தை அது முதல் ஆறு நாட்கள் ஊன், உறக்கம் மறந்தார். ஆறே நாட்கள்தான். இறைவனுடன் கலக்கிறார். சித்தர்களின் வரலாற்றிலே வெறும் ஆறே நாட்களில் இறைவனுடன் கலந்த சித்தன் "கண்ணப்ப நாயனார்" தவிர யாரும் எங்கும் இல்லை! இப்படி பட்ட அப்பழுக்கில்லாத கண்ணப்ப நாயனாரின் பக்தி கதையை புரிந்து கொள்ள வேண்டும்.

## அருஞ் சொற்பொருள்

1.விளவின் கோடு - விளாமரத்தின் கிளைகள்

2.ஆறலைத்தல் - பொருள் கொள வேண்டி வழிப் போவாரைத் தடுத்துத் துன்புறுத்துதல்.

3.பொச்சை - மலை

4.நறவு – தேன்

5.பொச்சையில் நறவு - சிறப்பில்லாத தேன்

6.பெரும்புறம் - பிடரியை அடுத்துள்ள பக்கம்

7.பால்மதி - நல்ல குளிர்ச்சியையும் நிறைவையும் உடையமதி

8.காளமேகம் – கரியமேகம்

9.வேம்பு இழைத்து - மலைவேப்பங்கொட்டைகளை இடையிடையே கோர்த்து

10.பறழ் – முயற்குட்டி

11.சேடர் – அறிவுடையார்

12.ஐவனம் - மலை நெல்

13.சேடை - மஞ்சளொடு கலந்த அரிசியும் மலரும்

14.சன்னவீரம் - அரசர்கள் தம் வெற்றிக் குரிய மாலையாக அணிவது

15.கோதை - வில்லில் நாண் ஏற்றி இழுத்துச் சுண்டு தலால் விரல்கள் காயமடையாது கையில் பாதுகாப்பாக அணியும் உறைகள்

16.சரணம் - மயிற்பீலி,

17.உரியாடை - புலி முதலியவற்றின் தோலால் ஆன உடை

18.பானற்குலமலர் – நீலமலர்

19.மெய்ப் பொற்பு – மெய்யழகு

20.காளிந்திநதி – யமுனை

21.அட்டம் - வேடுவர்கள் தமக்குள் உரையாடிக் கொள் ளும் குழூஉக் குறி

22.அருந்துதல் - அளவுபட உண்டல்

23.தின்றல் - பெருக உண்டல்

24.குடுமித்தேவர் - மலையின் உச்சியில் இருப்பவர்

25.ஏக நாயகர் - ஒப்பற்ற தலைவர்

26.படியிலாப்பரிவு - ஒப்பற்ற அன்பு

27.தரளம் – முத்து

28.விரிசுடர்ப்படலை - விரிந்து வீசுகின்ற ஒளிக்கூட்டம்

29.அநுசிதம் - அருவருப்பாகும் குற்றம்

30.பவித்திரம் - தூய்மை பொருந்தத் தகும் செயல்

31.இந்தனம் – விறகு

32.வேதகம் - வேறு படுத்துவது

33.துனை – விரைவு

34.கண்முதல் - கண்ணின் அடிப்பகுதி

35.சரம் மடுத்து - அம்பினால் இடந்து

# அலகு – 3

## தொகுப்புரை

கம்பர் இயற்றிய இராமாயணக்கதையில் கடல்தாவு படலம் இடம்பெற்றள்ளது. அவற்றில் அனுமன் கடல்கடந்து சென்று இலங்கையைக்கண்டு ஆராவாரம் செய்தல், மகேந்திரமலையில் ஏற்பட்ட குழப்பம், தேவர்முதலானோர் விடைதர அனுமன் கடலை கடத்தல், அனுமன் காலை ஊன்றி எழுந்த போது மலையிலும் கடலிலும் ஏற்பட்ட மாறுதல், வாலை உயர்த்தி வானில் அனுமன் செல்லும் காட்சி, அனுமனின் வேகம் போன்றவைகளை கம்பர் அழகாக வர்ணித்துப்பாடியுள்ளார்.

சைவசமயக்காப்பிமான பெரியபுராணத்தில் கண்ணப்ப நாயனார் புராணம் இடம்பெற்றுள்ளது. அவற்றில் கண்ணப்பநாயனார் பிறந்த பெத்தப்பி நாடு, அந்நாட்டில் உடுப்பூரின் அழகு அங்கு நடை பெறும் விழாக்கள், வேடர் தலைவன் நாகனுக்கு ஆண்குழந்தை பிறத்தல் திண்ணன் என்னும் பெயர் சூட்டி வளர்த்தல் திண்ணன் வேட்டையாட கற்றல்இ வில்வித்தை கற்றல், திண்ணனாரை தலைவனாக்குதல், திண்ணனார் வேட்டைக்குச்செல்லுதல், புலி பன்றி மானின் செயல்களைக் காணுதல் திண்ணனார் சிவனைக்காணுதல் சிவன்மேல்கொண்ட அன்பினால் உணவு வழங்குதல், சிவனுக்கு காவலாக அங்கேயே இருத்தல், சிவாச்சாரியார் சிவனை வணங்குதல், திண்ணனார் மீண்டும் சிவனை இறைச்சி படைத்து வணங்குதல், திண்ணனாரின் சுயநலமில்லாத பக்தியை இறைவன் மூலம் வெளிப்படுத்தல் இறைவன் திண்ணனாருக்கு காட்சி கொடுதல் போன்ற நிகழ்வுகள் மூலம் கண்ணப்பநாயனார் புராணம் அறியமுடிகிறது.

# அலகு - 3

## வினாக்கள்

## பகுதி - அ

### ஒரு மதிப்பெண்வினாக்கள்

1. கம்பராமாயணத்தில் உள்ள படலங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

அ) 116 ஆ) 115 இ) 118 ஈ) 150 விடை : இ) 118

2. கம்பராமாயணத்தில் கடல்தாவு படலம் இடம்பெற்றுள்ள காண்டம் எது?

அ) ஆரண்யகாண்டம் ஆ) சுந்தரகாண்டம்

இ) கிட்கிந்தா காண்டம் ஈ) யுத்தகாண்டம் விடை : ஆ) சுந்தரகாண்டம்

3. எந்த நாட்டைக்கண்டு அனுமன் இலங்கை என்று சந்தேகமடைந்தான்?

அ) ஏமாங்கதநாடு ஆ) துறக்கநாடு

இ) தமிழ்நாடு ஈ) தென்தமிழகம் விடை : ஆ) துறக்கநாடு

4. தாரகை, சுடர்கள், மேகம் என்று இவை தவிரத் தாழ்ந்து - என்ற பாடல்வரி இடம் பெறும் நூல் எது?

அ) கம்பராமாயணம் ஆ) சீவகசிந்தாமணி

இ) சூளாமணி ஈ) மணிமேகலை விடை : அ) கம்பராமாயணம்

5. இராமனுக்கு திருத்தொண்டு செய்து முடிக்கும் வரை எது வேண்டாம் என்று அனுமன் கூறுகின்றார்?

அ) உணவு ஆ) உறக்கம்

இ) செல்வம் ஈ) ஓய்வு விடை : ஈ) ஓய்வு

6. பெரியபுராணத்தின் ஆசிரியர் யார்?

அ) சேக்கிழார் ஆ) கம்பர்

இ) திருத்தக்கத்தேவர் ஈ) வால்மீகி விடை : அ) சேக்கிழார்

7. பெரியபுராணத்தில் இடம்பெற்றள்ள சருக்கங்களின் எண்ணிக்கை எத்தனை?

அ) 13 சருக்கங்கள் ஆ) 15 சருக்கங்கள்

இ) 18 சருக்கங்கள் ஈ) 25 சருக்கங்கள் விடை : அ) 13 சருக்கங்கள்

## பகுதி - ஆ

### ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1.கம்பர் – ஆசிரியர் குறிப்பு தருக.

2.இலங்கையைக்கண்ட அனுமனின் செயலைக்குறித்து எழுதுக.

3.கம்பராமாயண கடல்தாவு படலத்தில் மயேந்திர மலையில் நிகழ்ந்த குழப்பம் குறித்து எழுதுக.

4. அனுமன் காலை ஊன்றி எழுந்த போது நிகழ்ந்த மாறுதல்கள் குறித்து எழுக.

5. வானில் செல்லும் அனுமனின் தோற்றம் குறித்து எழுதுக.

6.வாலை உயர்த்தி வானில் சென்ற அனுமனின் காட்சி குறித்து எழுதுக.

7. சேக்கிழார் ஆசிரியர் குறிப்புத்தருக.

8.கண்ணப்பநாயனரின் இளமைப்பருவம் குறித்து எழுதுக.

9. கண்ணப்ப நாயனார் வில்பயிற்சி பெறும் பாங்கினை விளக்குக.

10. கண்ணப்பநாயனார் சிவனைக் காணும் விதத்தை குறிப்பிடுக.

11. கண்ணப்பநாயனார் சிவபெருமானுக்கு உணவு படைக்கும் பாங்கினை விளக்குக.

## பகுதி - இ

### பத்து மதிப்பெண் வினாக்கள்

1. கம்பராமாயணத்தில் இடம்பெறும் கடல்தாவு படலத்தில் இடம்பெறும் செய்திகள் குறித்து கட்டுரை வரைக.

2. கம்பராமாயணத்தில் வானில் செல்லும் அனுமனின் செயல்களையும், தோற்றத்தையும் குறித்து விளக்குக.

3. திண்ணனாரின் இளமைக்கால நிகழ்வுகளை விளக்குக.

4.திண்ணனார் சிவபெருமானுக்கு உணவுபடைத்லும் பக்தியும் குறித்து எழுதுக

5.கண்ணப்ப நாயனாரின் பக்திச்சிறப்பினை விளக்குக.

## பாடநூல்கள்

கம்பராமாயணம் - அ.சஞானசம்பந்தம் கம்பன் டிரஸ்ட் கோவை. பதிப்பு 2004

### பார்வைநூல்

கண்ணப்பநாயனார் - முகிலை ராசபாண்டியன் - தலைநகர் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ் வலைதளமுகவரி

1. http://ta.m.vikippedia.org
2. https://nearchathi.wordpress.com
3. www.tamilvu.org

# அலகு - 4

# தேம்பாவணி

## நாட்டுப் படலம்

“**தேம்பாவணி**” என்னும் நூல் இயேசு கிறிஸ்துவின் வளர்ப்பு தந்தையான புனித யோசேப்பு மீது இயற்றப்பட்ட முதற் பெரும் செய்யுள் வகை நூலாகும். இந்நூல் இத்தாலிய நாட்டவரான வீரமாமுனிவர் அவர்கள் தமிழில் திறம்பட ஆக்கிய நூல் எனப் புகழப்படுகிறது. கிறிஸ்தவ சமயத்தின் சுருக்கமென்றே இந்நூலை அறிஞர்கள் மதிப்பிடுகின்றனர்.

### தேம்பாவணியின் பொருள்

தேம்பா + அணி எனப் பிரித்து வாடாத மாலை என்றும், தேன் + பா + அணி எனப் பிரித்துத் தேன் போன்ற இனிய பாடல்களின் மாலை என்றும் இதற்குப் பொருள் உண்டு. இயேசு நாதரை வளர்த்த தந்தையாகிய சூசையப்பரைத் தலைவராகக் கொண்டு இது பாடப்பட்டது. சூசையப்பருக்குத் தேம்பாவணி எனப் பெயரிட்டு இந்நூலில் பாடியுள்ளார்.

### நூலின் அமைப்பு

- தேம்பாவணி மூன்று காண்டங்களைக் கொண்டது.
- ஒவ்வொன்றிலும் 12 படலமாக 36 படலங்கள் உள்ளன.
- மொத்தம் 3,615 விருத்தப் பாக்கள் 90 சந்த வகைகளுடன் பாடப் பெற்றது தேம்பாவணி.

### நூலின் சிறப்பு

தமிழில் அமைந்த காப்பியங்களிலேயே, தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத வெளிநாட்டவர் ஒருவரால் இயற்றப்பட்டது எனும் பெருமை தேம்பாவணிக்கே உண்டு.

## வீரமாமுனிவர்

1. இயற்பெயர் = கான்ஸ்டான் ஜோசப்பெஸ்கி

2. கான்ஸ்டான் என்னும் இத்தாலிமொழி சொல்லுக்கு அஞ்சாமை எனப் பொருள்.

3. இவர் தம் பெயரை "தைரியநாதசாமி" என மாற்றிக்கொண்டார்.

4. தமிழ்ச் சான்றோர் இவரை "வீரமாமுனிவர்" என அழைத்தனர்.

5. 1710ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு வந்த இப்பெரியார் 37 ஆண்டுகள் சமயப் பணியும் தமிழ்ப்பணியும் புரிந்து 1747ஆம் ஆண்டில் அம்பலக்காடு என்னும் இடத்தில் இயற்கை எய்தினார்.

படைப்புகள்: ஸ்ரீ திருக்காவலூர் கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை, வேதியர் ஒழுக்கம், பரமார்ர்த்த குருகதை, செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம், தொன்னூல் விளக்கம், சதுரகராதி போன்ற பல நூல்களை இயற்றியுள்ளார். திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால் இரண்டையும் இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்துள்ளார்.

## நாட்டுப்படலம்

தேம்பாவணியின் 3615 பாடல்களும் 36 படலங்களாக உட்பிரிவு பெற்றுள்ளன. இவற்றை ஒவ்வொன்றும் பன்னிரு படலங்கள் கொண்ட மூன்று பாகங்களாக, முதற்கண் வெளியிட்டோர் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காண்டமென்று எண்ணிக்கைப் பெயரிட்டுள்ளனர். முடி சூட்டுப் படலம், 131-ஆம் பாடலிலும், பாவுரை பதிகத்தும் புறவுரை ஆசிரியத்தும் படலத் தொகையும் பாடல் தொகையும் குறிக்கப்பட்டுள்ளன. காண்டம் பற்றிய விவரமே இல்லை. நூலின் தன்னிறைவு கொண்ட பெரும் பிரிவே காண்டம் எனக் கொள்ளத்தக்கது. அதனோடும் இக்காண்டப்பிரிவு பொருந்தவில்லை. எனவே, தேம்பாவணிக்குக் காண்டப் பிரிவு இல்லையென்று கொள்க.

'படலம்' என்பது காப்பிய உட்பிரிவாய்த் தன்னிறைவு கொண்டு, அடுத்து வரும் படலத்தோடு கதைத் தொடர்பு கொண்டு நிற்பது. இங்கு நம் பாடப்பகுதியாக நாட்டுப்படலம் இடம்பெற்றள்ளது அவற்றைக்காண்போம்.

இப்படலம் வளன் பிறந்த சூதேய நாட்டின் இயற்கை வளத்தை இணைத்துக் கூறும் பகுதி.

## தேம்பாவணி - நாட்டுப் படலம்

1. புள் உலாம் விசும்பு-இடை-தொறும் பொரும் படை பொருவ
வெள் உலாம் மழை வெண் கொடி உரு கொடு விளங்கி
தெள் உலாம் திளை திதைப்ப உண்டு எழுந்து உயர் பரந்து
வள் உலாம் கரு மத கரி இனம் என தோன்ற

2.போர் புறம் கொடு பொருந்தலர் உரத்தில் தேய்த்து ஒளிர் வேல்
சீர் புறம் கொடு திசை-தொறும் இருள் அற மின்னி
வார் புறம் கொடு வளர் முரசு ஒலி என அதிர்ந்து
நீர் புறம் கொடு நீல் முகில் முழங்கின-மாதோ

3.படை என செரு பகை தர படர்ந்தன அல்லால்
கடை என செறி கருணையோடு உஞற்றிய வள்ளர்
கொடை என செழும் குன்றொடு வயின்-தொறும் குளிர
மிடை என சொரி வியன் முகில் வரைவு இல பொழிவ

4.படித்த நூல் அவை பயன்பட விரித்து உரைப்பவர் போல்
தடித்த நீல் முகில் தவழ் தலை பொலிந்த பொன் மலையே
குடித்த நீர் எலாம் கொப்புளித்து அமுது என அருவி
இடித்து அறா ஒலி எழ திரை எறிந்து உருண்டு இரிவ

5.புள்ளி மால் வரை பொன் உலகு இடத்து எடுத்து உய்த்தல்
உள்ளி வான் விடும் வடம் என தாரைகள் ஒழுக
வெள்ளி நீள் தொடர் விசித்து அதை பிடித்து என சூழ
துள்ளி வீழ் உயர் தூங்கிய அருவியின் தோற்றம்

6.ஒள் நுரைத்து எரி உமிழ்ந்து அவிர் இன மணி வரன்றி
தெள் நுரைத்து எழும் திரை திரள் வயின்-தொறும் புகுந்து
வள் நுரைத்து எதிர் வதிந்த எலாம் சாய்த்து அவை கொடு போய்
புண் உரைத்து அட கொள்ளை செய் பொருந்தலர் போன்றே

7.விரை கிடந்து அசை வீ உமிழ் மதுவினால் பெருகி
நிரை கிடந்து எழும் சோலையும் கழனியும் நிறைப்ப
வரை கிடந்து இழி வளம் புனல் எங்கணும் உலவல்
திரை கிடந்து உயிர் சீர்த்து உறுப்பு உலாவிய போன்றே

8.அஞ்சு இலா எதிர் அடுக்கிய கல் எலாம் கடந்தே
எஞ்சு இலா எழில் இமைத்த நீள் மருதமும் நீக்கி
துஞ்சு இலா நதி தொடர்ந்து அகல் கரும் கடல் நோக்கல்
விஞ்சையார் எலாம் வெறுத்து வீடு இவறிய போன்றே

9.மலையின் நேர் அறல் மலிய நால் திணை அருந்திய பின்
அலையின் நேர் உறல் அவனி தன் மகர்க்கு எலாம் ஊட்டி
முலையின் நேர் உறீஇ விஞ்சு பால் முடுகலில் உடுத்த
கலையின் நேர் உறீஇ களிப்பொடு சிந்துவ போன்றே

10.செறி உலாம் புனல் சிறை செய்து பயன்பட ஒதுக்கி
வெறி உலாம் மலர் மிடைந்து அகல் வயல் வழி விடுவார்
பொறி உலாம் வழி போக்கு இலது இயல்பட அடக்கி
நெறி உலாவு அற நேர் அவை நிறுத்தினர் போன்றே
11.உவர்க்கும் தாழ் கடல் உடுத்து அகல் விரி தலை ஞாலம்
எவர்க்கும் தாய் என எண் இலா கிழிபட கீறும்
அவர்க்கும் தான் உணவு அளித்தலே நோய் செய்வார்க்கு உதவும்
தவர்க்கும் தாவ அரும் தருமம் என்று இயற்றுதல் போன்றே

12.கூர் விளைத்து அருள் குரு விதி போன்று ஒன்று கோடி
நீர் விளைத்த நெல் நிரம்ப என வித்தினர் இரட்ட
ஏர் விளைத்த பல் கடைச்சியர் குரவை ஆடு இயல்பால்
தேர் விளைத்த ஓர் சிறப்பு எழும் விழா அணி போன்றே

13.நோக்க இன்பு உளம் நுகர ஒள் முளரியோடு ஆம்பல்
நீக்கு அலாது எலாம் நீர்_மலர் களை என கட்டல்
ஆக்கம் ஆக்கினும் அறன் இழந்து ஆவது கேடு என்று
ஊக்கம் மாண்பினர் ஒருங்கு அவை ஒழிக்குதல் போன்றே

14.பூரியார் திரு போல் தலை பசிய கூழ் நிறுவி
நீரினார் தலை நேர நேர் வளைவொடு பழுத்த
ஆரம் மானும் நெல் அறுத்து அரி கொண்டுபோய் அங்கண்
போர் இது ஆம் என களித்தனர் போர் பல புனைவார்

15.மெய் கலந்த பொய் விலக்கி மெய் கொள்பவர் வினை போல்
வை கலந்த நெல் பகட்டினால் தெளித்து வை மறுத்து
கை கலந்து அடுத்து ஏற்குநர்க்கு அளித்த பின் களித்து
துய் கலந்த நெல் உண்ணவும் ஈயவும் தொகுப்பார்

16.ஈதலோடு இசை இனிய வாழ்வுகள்
ஆதலோடு அறன் அழிவு இல் ஆக்கினர்
காதலோடு உடல் கடிய நாள் வர
வீதலோடு உறும் வீட்டில் வாழ்வரே

17.மறமொடு ஆகுலம் மலிந்த தீது எலாம்
புறமொடு ஆகையின் பொருவு இலா வளர்
அறமொடு ஆன்ற சூதேய நாடு அமை
திறமொடு ஆண்மையை செப்ப சீரதோ

18.மிடியில் ஆர் நயன் விளைவில் மாற்றுவான்
முடியில் ஆர் கனி பொறை பொறா முயன்று
அடியில் ஆருயிர் அமைந்த நீர் தொழ
கடியில் ஆர் மரம் வளைதல் காணுமே

19.ஆலை ஆர் புகை முகில் என்று ஆர்ப்பு எழ
சோலை ஆர் மயில் துள்ள மாம் குயில்
மாலை ஆர் இருள் விரும்பும் மாக்கள் காண்
மேலையார் என மெலிந்து தேம்பும்-ஆல்

20.மல்ல விள் அலர் மலிந்த கான்-தொறும்
புல்ல அன்பு அறா பொருது காரணம்
இல்லது ஒல்லென குறும்புள் ஈந்த போர்
அல்லது இல்லது ஓர் அமர் அ நாட்டிலே

21.தீ எழ தகர் சினந்து தாக்குப
மீ எழ துகள் விரைந்து பின் உறல்
நோய் எழ பகை நுதலும் ஒன்னலர்
வாய் எழ செயும் வணக்கம் மானுமே

22.வேர்ப்பு எழ கயல் விழியர் கை வளை
ஆர்ப்பு எழ கடை தயிரில் ஆய நெய்
கூர்ப்பு எழ துயர் குறுக மேல் அறம்
ஏர்ப்பு எழ செய்வோர் இயல்பு மானுமே

23.கழை இறால் பனை கனிகள் தேங்கு அலர்
உழையில் தாவிய தேறல் உண்ட பின்
மழையில் தாவிய மதுவின் ஊங்கு இனிது
இழை இறா அழகு இளம் புள் பாடும்-ஆல்

24.உண்டு அகன்ற கன்று உள்ளி மேதிகள்
மண்ட அன்பு உறீஇ வழிந்த பால் திரள்
கொண்ட அன்னமே குடித்தல் ஆவது
கண்டது அங்கு உள களவு இது ஆம் அரோ

25.குயில் இனத்தொடு கொம்பில் ஆர் கிளி
பயில் இனத்தொடு ஞிமிறும் பாடவே
துயில் இனத்தொடு விரித்த தோகை கொள்
மயில் இனத்தொடு மகளிர் ஆடும்-ஆல்

26.கா சிலம்புவ களித்த புள் இனம்
வீ சிலம்புவ மிடைந்த தும்பிகள்
பா சிலம்புவ சிலம்ப பண் புகழ்
நா சிலம்புவ சிலம்பும் நாடு எலாம்

27.முட்டு இரட்டின முரண் தகர் பெடை
பெட்டு இரட்டின குயில் மிளிர்ந்த முத்து

இட்டு இரட்டின கரும்பு இன்பு ஈன்ற கள்
விட்டு இரட்டின வீ இனங்களே

28.நிழலின் கண் சிறைபடுத்தும் நீள் பொழில்
குழலில் பூ சிறைபடுத்தும் கோதையார்
கழலில் கால் சிறைபடுத்தும் காந்தர் நீர்
விழலின் தான் சிறைபடுத்தும் வேலியே

29.துன் அல் இல் சிறைபடுத்த தோம் இலால்
அன்ன பல் சிறை அல்லது இல்லை-ஆல்
பொன்ன நல் சிறை அன்ன புள் உறை
மன்னவர்க்கு இறை வழங்கும் நாட்டிலே

30.வாய்ந்த செந்நெலை மறுகும் பண்டியும்
ஆய்ந்த மெல் இலை அமையும் பண்டியும்
பாய்ந்த பூக ஒண் பழம் பெய் பண்டியும்
வேய்ந்த தீம் கனி விம்மும் பண்டியும்

31.பன்னும் தேங்கு இளநீர் பெய் பண்டியும்
துன்னும் தீம் கழை சுமக்கும் பண்டியும்
மின்னும் தேன் செறி வீ பெய் பண்டியும்
மன்னும் தேசு பல் மணி கொள் பண்டியும்

32.துளித்த தேறலை துவலை சோலை சூழ்
களித்த நாடு எலாம் கசடு இல் வாழ்வு உற
சுளித்த மள்ளர்கள் தூண்டும் ஏற்று இனம்
திளைத்த பண்டிகள் நெருங்கி தேயும்-ஆல்

33.பாய்ந்த தேங்கு அதின் பழங்கள் வீழ்தலால்
வாய்ந்த வாழை மா வருக்கை ஆசினி
சாய்ந்த தீம் கனி சரிந்த தேன் புனல்
தோய்ந்த வாய் எலாம் இனிமை தோய்ந்தன

34.வளைந்து அளித்தரும் கடலின் வாழ் வளை
உளைந்து அளித்த முத்து ஒருங்கு மற்று எலாம்
திளைந்து அளித்தலின் திரு என்று ஆண்டகை
விளைந்து அளித்தவை விருந்து என்று ஆம் அரோ

35.பொறையினோடு இகல் பொதிர்ந்த பொன் மணி
உறையினோடு இகல் உவந்து இடும் கொடை
மறையினோடு இகல் முனிவர் மாண்பு வான்
முறையினோடு இகல் முயன்ற நாடு எலாம்

36.காம் அலர் பெடை தழீஇ அன்னம் கண்படும்
தேம் மலர் தடம் தழீஇ சினைகள் நீடிய
பூ மலர் பொழில் தழீஇ பொலிந்த பொற்பு எழும்
தூ மலர் வயல் தழீஇ துளங்கு நாடு அதே

37.ஓலைகள் கிடந்த நீள் கமுகொடும் பனை
பாலைகள் மா மகிள் பலவு சுள்ளிகள்
கோலைகள் சந்தனம் குங்குமம் பல
சோலைகள் கிடந்தன தொகுக்கும் வண்ணமோ

38.தேன் வளர் அலங்கலை சிறை செய் கூந்தலோ
கான் வளர் சண்பகம் மலர்ந்த காவுகள்
வான் வளர் துளி நலம் வழங்கும் கொண்டலோ
தேன் வளர் ஒலி கொடு தேன் பெய் சோலையே
39.தோடு அணி கவினொடு தூங்கும் குண்டலம்
நீடு அணி மதி முகம் நிழல் செய் மாதரோ
கோடு அணி எழுது அரும் கோல போதொடு
சேடு அணி கனி நலம் திளைத்த சோலையே

40.நீல் நிரைத்து எழுதிய படத்தின் நேர் உடு
மேல் நிரைத்து எழுதிய விசும்பின் தோற்றமோ
கால் நிரைத்து எழும் தளிர் காழகத்து உயர்
தேன் நிரைத்து அவிழ் மலர் திளைத்த சோலையே

41.அ புறத்து அமுது உணும் சிறை பொற்பு ஆர்ந்த புள்
இ புறத்து அலர்கள் கொய் இளைஞர் வாள் முகம்
மு புறத்து எழுதிய முகைகள் காட்டிய
துப்பு உற சித்திர கூடம் சோலையே

42.கயில் துணை கலன் என கம்பில் தூங்கு அலர்
குயில் துணை குயிலவும் குழல் வண்டு ஊதவும்
மயில் துணை உலவி வந்து இரட்ட மற்று எலாம்
பயில் துணை களி மண பந்தர் சோலையே

43.முதிர் செயும் கனி மலர் மொய்த்து தூங்கலோடு
உதிர் செயும் பழம் துணர் ஒளி செய் குப்பையால்
கதிர் செயும் முடி கலன் கழிந்து மன்னவர்
பொதிர் செயும் துறவு இடம் போலும் சோலையே

44.வால் நிற தகர் இனம் கலையின் மான் இனம்
தூ நிறத்து உயரிய தூரியத்து இனம்
நீல் நிற பகட்டு இனம் நெடிது உழற்றலின்
கோன் நிற சிலம்ப நல் கூடம் சோலையே

45.கறாகறா என ஒர்-பால் காடை புள் இனம்
ஞறாஞறா என ஒர்-பால் நயந்த தோகைகள்
புறா குறாவுதலொடு புள் பல் ஓதையால்
அறாது உறா உணர்வு உகும் அரங்கம் சோலையே
46.மேல் வளர் அலர் படம் விரித்து வீணை செய்
பால் வளர் சுரும்பு இசை பாட மாம் குயில்
வால் வளர் மயில் நடம் காண மற்றை புள்
சால் வளர் நாடக சாலை சோலையே

47.கால் எடுத்து அடுத்து எதிர்த்து ஒளி கலாப நீள்
வால் எடுத்து பக மாற மஞ்ஞைகள்
கோல் எடுத்து அஞ்சன கோல காருகம்
மேல் எடுத்து ஆரிய கூத்து வீக்கும்-ஆல்

48.கூட நின்று ஓடை தன் குவளை கண் திறந்து
ஓட நின்று அலைந்து அலைந்து ஒருமித்து ஓர் இடம்
நாடலின் நகைத்து என நனைத்த முல்லை நீடு
ஆடலின் ஆவித்து என்று அலர்ந்த காந்தளே

49.தோகை கொள் மயில் என மாதர் தோன்றலின்
வாகை கொண்டார் என மயில் ஒடுங்கலால்
சாகை கொண்டு எனைய புள் சிரித்த தன்மை போல்
ஓகை கொண்டு ஒலிதர ஒலிக்கும் நாடு எலாம்

50.உதித்தன கதிர் என உவந்த மாம் குயில்
துதித்து என பாட ஒள் அனம் தன் தூய் நடை
விதித்து என முன் நடந்தன தம் மெல் அடி
பதித்து என நடந்தனர் பனி கொள் கோதையார்

51.இன் நிற பிறை கதிர் திரட்டி ஈட்டு எனா
பல் நிறத்து அலர்ந்த பூ படர்ந்த கா-இடை
கொன் நிறத்து அலர்ந்து என கொய்து கொய்து தாம்
மின் நிறத்து அடவி சூழ் விரும்பி ஏகுவார்

52.கொள்ளை கண்டு அளி இனம் கூ என் ஓதையும்
கிள்ளை கண்டு இனைவ போல் கீ என் ஓதையும்
வள்ளை கொண்டு இனிது இசை மறல பாடினர்
வெள்ளை கொண்டு உள பல நிறத்த வீ கொய்வார்

53.ஐ மணி பவளம் முத்து அம் பொன் இற்று எலாம்
பம்மு அணி பெற அரும் படலை கோத்து என
பொம்மு அணி மலர் எலாம் புணர் பொன் நூலினால்
தம் அணி இணை என தார் பிணிக்குவார்
54.பிணித்த தார் விரலின் மேல் பிறழ காட்டுவார்
அணி தகாது உனது என இசலி ஆர்த்த பின்
தணித்த பூண் ஒள் கலம் சவி கிலுத்தங்கள்
பணித்த பூம் புகை குழல் படிய சூடுவார்

55.முருகு விம்மிய மலர் குடைந்து மூழ்கு தேன்
பருகு விம்மிய அளி பசி தவிர்ந்த பின்
அருகு விம்மியது என அலர் கொய் மங்கையர்
உருகு விம்மிய களிப்பு உயிர்த்து பாடுவார்

56.பூமலி சேக்கை மேல் பொலிந்து நூல் படி
பா மலி பதத்து அறம் பழிச்சி பங்கய
தேம் மலி சேக்கை மேல் சிறந்த ஓதிமம்
நா மலி இனிது இசை நாண பாடுவார்

57.ஆம்பல் வாய் நறும் விரை அவிழ்த்து விள்ளிய
ஆம்பல் வாய் மலர்ந்து அன அணங்கையார் இனிது
ஆம்பல் வாய் குரலுடன் ஆய்ந்து வெண் மதி
ஆம்பல் வாய் திருந்து உணர்வு அறைந்து பாடுவார்

58.விண் புதைத்த மலர் பணை வாய் விரை குளித்த தேன் ஒழுகி
கண் புதைக்கும் இருள் பொழில் கொள் களி கூர்ந்த நாடு இதுவே
களி கூர்ந்த நாடு இதுவேல் கண் கடந்த கவின் நாடி
நளி கூர்ந்த நயன் நல்கும் வான் உலகம் நாடேமோ

59.நிழல் மூழ்கும் பூம் பொழில் கண் நிறம் மது கான் இன்பம் அலால்
குழல் மூழ்கும் இசை துவைப்ப கோடு அரும் சீர் நாடு இதுவே
கோடு அரும் சீர் நாடு இதுவேல் கோது என கோள் புறத்து இமைப்ப
வாடு அரும் சீர் மல்கி எழும் வான் உலகம் நாடேமோ
60.பட நாகம் தோல் உரித்த பான்மையின் கல் ஊடு உரிஞ்சி
தட நாகம் தூங்கு அருவி தாவு அழகு ஆர் நாடு இதுவே
தாவு அழகு ஆர் நாடு இதுவேல் தரங்கம் இலாது அருள் பவ்வம்
வாவு அழகு ஆர் திரு நிலைத்த வான் உலகம் நாடேமோ

61.பகை தீர்ந்து சண்பகத்தின் தண் நிழல் கீழ் பள்ளி வர
மிகை தீர்ந்து புறத்து எவர்க்கும் வேட்கை செயும் நாடு இதுவே
வேட்கை செயும் நாடு இதுவேல் விரி காலத்து இமிழ் குன்றா
வாட்கை செயும் நிலைமை உள வான் உலகம் நாடேமோ

62.நக்கு அளவாய் நயன் கொண்ட நாட்டு நலம் நாடிய-கால்
மக்கள் அவா மேல் நலம் கொள் வான் உலகம் நாடேமோ
வான் உலகம் நாடேமேல் மன் உயிர் மன் நயன் வெஃக
கான் உலகம் காட்டும் நலம் அ கவலை மாற்றுவதோ

63.பண் கனிந்த நரம்பு உளரி பாண் இசைகள் பாடல் எனா
கண் கனிந்த கவின் நல்லார் களி கூர்ந்து இன்னதும் பலவும்
தண் கனிந்த தேன் இசையால் சாற்றலொடு பல நாளும்
விண் கனிந்த இன்பு உண்பார் விழைவு ஓங்க அ நாடே

64.தேய முழங்கின ஆலைகள் பண்டிகள் தேய முழங்கின பா
ஆய முழங்கின ஆர் புகழ் சங்குகள் ஆயம் முழங்கின மேல்
பாய முழங்கின மேடகம் இன் புனல் பாய முழங்கின நீர்
தோய முழங்கின மேதிகள் தெண் திரை தோய முழங்கு இழையார்

65.கான் திரள் சிந்திய சோலை இபம் செறி கான் மலர் சிந்திய தீம்
தேன் திரள் சிந்திய பூ தரளம் செறி தீம் புனல் சிந்திய வான்
மீன் திரள் சிந்திய மான வளம் செறி வேய் மணி சிந்திய பால்
ஆன் திரள் சிந்திய சீர் எவையும் செறி ஆர் பொழில் சிந்தியதே

66.ஆலையின் வாய் உள தேன் அகலும் தரு ஆர் மலர் வாய் உள தேன்
சோலையின் வாய் உள தேனொடு தூறிய தூய் கனி வாய் உள தேன்
மாலையின் வாய் உள தேன் அளி வந்த இறால் அதின் வாய் உள தேன்
வேலியின் வாய் உள தேறிய செந்நெல் விளைக்குவ பாயினவே

67.பானு அழகே நனி காட்டிய பங்கய நானம் முயங்கு அழகே
மீன் அழகே நனி காட்டிய விண்டு அவிர் வீ இனம் மண்டு அழகே
தேன் அழகே நனி காட்டிய தெள் துளி மாரி செறிந்த அழகே
வான் அழகே நனி காட்டும் பளிங்கு என வாவி வழங்கு அழகே

68.காரொடு நேர் பொருதும் பொறையே பொழி காரொடு கை பொருதும்
தாரொடு நேர் பொருதும் கலனே தட மாரொடு தார் பொருதும்
பாரொடு நேர் பொருதும் சகடே நளிர் பாலொடு பா பொருதும்
சீரொடு நேர் பொருதும் பொழிலே செழு வீடொடு சீர் பொருதும்

69.காலை ஒளிர்ந்துளி மொட்டு இதழ் விண்ட கடி கமலம் தவிசின்
சூலை உளைந்து ஒளிர் முத்து சொரிந்த வளை குலம் நின்று இரிய
மாலை உறைந்துளி பொன் சிறை வந்து அது தன் கரு என்று அடைகாத்து
ஆலை உளைந்து இழி இக்கு இடும் இன்பம் அவித்து இசை பாடினவே

70.கா-இடை மா தவர் கந்தம் மலிந்தன கஞ்சம் மிடைந்த அனமே
பூ-இடை தேன் அளி கொம்பு மலிந்து புகன்ற மடம் கிளிகள்
நா-இடை பா இனம் நங்கையின் நன் கையில் நம்பும் நரம்பு உள யாழ்
யா-இடை ஆயினும் என்றும் அரும் தயை எந்தையை வாழ்த்தினவே

71.அறத்தில் துறும் புகழ் ஒள் புகழ் என்றும் அடும் பகை நின்றனர்-கொல்
திறத்தில் துறும் புகழ் வஞ்சனை என்றும் தெளிந்த மனம் சிதைய
மறத்தில் துறும் களி துன்பு என வந்து மயங்கி வழங்கும் எலாம்
புறத்தில் துறும் களி பொன்று இல உண்டு அன பொன் பொழில் பொங்கினவே

72.எல்லை நிகழ்த்திய எல் என எல்லை_இல் எந்தை நிகழ்த்திய நூல்
வில்லை நிகழ்த்திய மெய் மறையின் விதி உண்மை நிகழ்த்திய தூய்
ஒல்லை நிகழ்த்திய ஒள் அறம் ஒன்றிய உள்ளம் நிகழ்த்திய சீர்
சொல்லை நிகழ்த்திய நுண்மை அறிந்தவர் சொல்லி நிகழ்த்துவரோ

73.ஆற்ற வருந்து இல நல் அறம் அல்லதும் அல்லவை இல்லை எனா
மாற்று_அரும் துயர் இல்லதும் உள் மயல் மல்கலும் இல்லை எனா
ஏற்று_அரும் துதி ஒல் ஒலி அல்லதும் எள் அதும் இல்லை எனா
சாற்ற வருந்தினும் ஒல்லும் அரும் தமிழும் சமம் அல்லதுவே

74.பூமலிந்த பொருத்த அரும் பொற்பு எலாம்
பூமலிந்து பொருந்திய பொற்பினால்
நாம் மலிந்த நசைக்கு உயர் நாடினும்
நா மலிந்த இசைக்கு உயர் நாடு அதே

75.வண்டு உரைத்து மலர்ந்த அலர் புண் அலால்
வண்டு உரைத்து மலர்ந்த அக புண் இலால்
வண்டு உரைத்து மயக்கு இல நாடு அலை
வண்டு உரைத்து மயக்கு உறும் நாடு அதே

76.மாலை மாறி வயங்கிய மா மதி
மாலை மாறி வயங்கிய மாதர்கள்
மாலை மாறிய கற்பு உடை மார்பு உறை
மாலை மாறிய கற்பு உடை மாண்பர் அரோ

77.மாசு இகற்கு வழங்கிய அம்பு இலார்
மாசு இகற்கு வழங்கிய அன்பினார்
தேசிகத்து இணை சீர் வரை தோளினார்
தேசிகத்து இணை சீர் வரைத்து ஓதும்-ஆர்

78.அல்லது இல்லை அரும் தவம் ஆய் திரு
அல்லது இல்லை அருந்த அளித்தலால்
புல்லது இல்லை புனைந்த அற மாட்சியால்
புல்லது இல்லை புனைந்து அன வாழ்க்கையால்

79.இருள் அகன்று அவிர் எல் வினை போல் எலா
இருள் அகன்று அவிர் இல் வினையோர் தமுள்
அருள் அகன்ற கைப்பு ஆரும் இலாமையால்
அருள் அகன்று அகைப்பார் அலது இல்லையே

80.வேயும் முத்தம் மிடைந்தன வேலி வாய்
வேயும் முத்தம் மிடைந்தன வேலை வாய்
வாயும் முத்தம் மலிந்தன தீம் கழை
வாயும் முத்தம் மலிந்தன வாய் எலாம்

81.செல்லின் மாரி திளைத்து என வள்ளியோர்
செல்லின் மாரி திளைத்தன வண்மையே
சொல்லின் மாரி சொரிந்து என ஏது இலா
சொல்லின் மாரி சொரிந்தனர் வேதியார்

82.வாவு இபம் கயம் மல்கிய நாள் மலர்
வாவி பங்கயம் மல்கிய மாண்பு என
பாவி அங்கு இயலா பயன் ஆகையால்
பா இயங்கிய யா பயன் சால்பு அரோ

83.பார் அணிந்த அணிக்கல பான்மைபோல்
சீர் அணிந்த செழும் தட நாட்டு-இடை
மார் அணிந்து அணி மா மணி மானிய
ஏர் அணிந்த நகர்க்கு இயல் ஏத்துவாம

## தேம்பாவணி

### நாட்டுப்படலம்

#### மழை வளம்

பறவைகள் பறந்து உலாவும் வானத்தில் வெண்ணிறமாக இடந்தோறும் உலாவும் மேகங்கள், போருக்கு அணிவகுத்த படை போலவும், வெண்ணிறத்துணிக்கொடியின் உருவத்தைக் கொண்டும் விளங்கின. பின் அவை அசைந்து உலாவும் தெளிந்த கடல் நீரை மிகுதியாகக் குடித்து, எழுந்து உயர்வானத்தில் பரந்து, வலிமையோடு காட்டில் உலாவும் கரிய மத யானையின் கூட்டம் போல் தோன்றின. நீரைத் தம்மிடத்தே கொண்டு நீல நிறம் பெற்ற மேகங்கள், பகைவரது மார்பில் செலுத்திப் போரில் அவர் புறமிடக்கொண்டு ஒளிரும் வேலின் சீரைத் தம்மிடத்தே கொண்டு, திசை தோறும் இருள் கெடுமாறு மின்னின் கட்டிய வாரைப் புறத்தே கொண்டு வெற்றி வளர்க்கும் முரசின் ஒலி போல இடித்து முழங்கின.

செறிந்த தன்மையாய் நீரைச் சொரியும் பெரிய மேகங்கள், போரில் பகையை விளைவிக்கத் தோற்றத்தினால் படைபோல் எங்கும் பரவினவே அல்லாமல், இறுதியில், செறிந்த கருணையோடு செய்த வள்ளல்களின் கொடை போல், செழுமையான மலையோடு மற்றுள்ள இடந்தோறும் குளிருமாறு அளவில்லாது மழையைப் பொழிந்தது.

## ஆற்று வளம்

தாம் படித்தநூலைப் பிறருக்குப் பயன்படுமாறு சபையில் விரித்துரைப்பவர் போல், நீரால் தடித்த கரிய மேகம் தவழும் சிகரத்தோடு பொலிந்த அழகிய மலையும் தான் மழையால் முன் குடித்த நீரையெல்லாம் கொப்புளிக்கும். அந்நீர் அமுதம் போன்ற அருவியாக மலைமீது இடித்துப் பாய்ந்து, அறாத ஒலி எழுமாறு அலை அடிக்க உருண்டு ஆறாக ஓடும்.

செல்வமுள்ள அப்பெரிய மலையை வானுலகிற்கு எடுத்துச் செலுத்தக் கருதி வானவர் விடுத்த வடம் போல் மழைத் தாரைகள் பாய்ந்து கொண்டிருக்கும். பூமி வெள்ளியாலான நீண்ட சங்கிலிகளால் கட்டி அதை விடாது பிடித்துக் கொண்டிருக்கும் தன்மையாய், அம்மலையைச் சுற்றிலும் துள்ளி விழுந்த வண்ணம் உயரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் அருவியின் தோற்றம் அமைந்திருக்கும்.

## ஆற்று வெள்ளத்தின் தோற்றம்

தெளிந்த நுரையோடு எழுந்து பாயும் திரளான வெள்ளம் ஒளி பொருந்திய நுரை போன்றும் நெருப்பைக் கக்குவனவாகவும் விளங்கும் பல இனத்து இரத்தினங்களையெல்லாம் மலையினின்று வாரிக் கொண்டு, வழியில் எவ்விடங்களிலும் நுழைத்து, தடைபட்ட இடங்களில் வலிமையோடு நுரை பொங்க எழுந்து, தன் எதிரே தங்கியிருந்த எல்லாவற்றையும் சாய்த்து, அவற்றையெல்லாம் தன்னோடு இழுத்துக் கொண்டு போயிற்று. அதனால் அவ்வெள்ளம் புண்ணினின்று நுரையோடு குருதி எழுமாறு கொன்று கொள்ளையிடும் பகைவரைப் போன்று விளங்கியது.

மலையினின்று பாய்ந்தோடிய வளமுள்ள வெள்ளம், வாசனை பொருந்தி வெள்ளம் மோதுதலால் அசையும் மலர்கள் உமிழ்ந்த மதுவினால் மேலும் பெருகி வரிசையாகக் கிடந்து உயர்ந்து நிற்கும் சோலைகளையும் தாழ்ந்து கிடக்கும் வயல்களையும் நிறைத்து, அவ்வாறு எங்கும் உலாவிப் பரந்து நின்றது. அத்தோற்றம், நீரால் வரும் உயிர் பின் சிறந்து எழுந்து உறுப்புக்களிலெல்லாம் உலாவிப் பரந்தது போன்று இருந்தது.

ஓடுதல் ஓயாத ஆறு, தனக்கு எதிரே அடுக்காக நின்ற குன்றுகளையெல்லாம் அஞ்சாமல் கடந்து வந்து, குறையில்லாத அழகுடன்

விளங்கிய மருத நிலத்தையும் நீக்கி, பரந்த கருங்கடலையே நோக்கித் தொடர்ந்து செல்லும் காட்சி, அறிவுடையோர் இவ்வுலகிலுள்ள எல்லாவற்றையும் வெறுத்து, மோட்சமொன்றையே நாடுதலை ஒத்திருந்தது.

மலையினின்று புறப்படும் வெள்ளம், நான்கு நிலங்களும் மிகுதியாக அருந்திய பின்னும், கடலுக்குள் மேலும் மேலும் நேராகச் சென்று கொண்டிருக்கும். இக்காட்சி, நிலமகள் தன் மக்களுக்கெல்லாம் ஊட்டிய பின்னும் தன் முலையினின்று பொங்கிச் சுரந்து மிஞ்சிய பால் உந்துதலால், தான் உடுத்த ஆடையின்மேல் எழுந்து சுரந்து களிப்போடு சிந்துவதைப் போன்று இருந்தது.

செறிந்து ஓடும் வெள்ளத்தைச் சூதேய நாட்டு உழவர் அணை கட்டித் தடுத்து, பின்னால் பயன்படுமாறு சேர்த்து வைத்து, வாசனை பரக்கும் பூக்கள் செறிந்து பரந்து கிடக்கும் வயல்களில் வாய்க்கால் வழியே தக்க நேரத்தில் பாய விடுவர். இச் செயல், ஐம்பொறிகள் அலைக்கும் வழிகளிலே மணம் செல்ல விடாமல், நல்லியல்போடு பொருந்துமாறு அவற்றை முதலில் அடக்கி, பின் நன்னெறியோடு பொருந்திய புண்ணியத்தின்கண் நேரே அவற்றை நிலைபெறச் செய்யும் அறவோர் செயலை ஒத்திருந்தது.

## ஆற்றுநீரின் தன்மை

உப்புச் சுவையுள்ள ஆழமான கடலை ஆடையாக உடுத்து அகன்று விரிந்த இடத்தை உடைய இவ்வுலகம்எல்லோருக்கும் தானே தாயாக இருப்பதனால், தன்னைத் தாய் என்று எண்ணாமல் கிழித்துக் கீறும் உழவர்க்கும் தானே உணவளித்துப் பேணும். இது, துன்பம் செய்வார்க்கு உதவி செய்தல் தவ முனிவர்க்கும் எட்டுதற்கு அரிய புண்ணியமென்று அருள் உள்ளங்கொண்ட சிலர் செய்தலை ஒத்திருந்தது.

## உழத்தியர் செயல்

நெல்லை விதைத்தவர், "மிகுதியாகக் கொண்ட அருளுள்ள குரு விதித்த ஆசியுரை போன்று, நீர் விளைவித்த இவ்விதை நெல் ஒன்று கோடியாக விளைந்து நிரம்புவதாக!" என்று முழங்குதலாலும் அழகு பொருந்திய பல்லை உடைய உழத்தியர்

அப்பொழுது ஆடும் குரவைக் கூத்தின் தன்மையாலும், அவ்விதைப்புக் காட்சி தேரோடு கொண்டாடிய சிறப்புப் பொருந்திய ஒப்பற்ற திருவிழா அலங்காரம் போன்று விளங்கியது.

பார்வைக்கு இன்பமென்று உள்ளம் அழகை நுகர முற்படுமாயினும், ஒளி பொருந்திய தாமரையையும் ஆம்பலையுமே விலக்காமல் எல்லா நீர் மலர்ச் செடிகளும் பயிருக்குக் களையே என்று அவ்வுழத்தியர் பறித்தொழிப்பர். இச்செயல், செல்வங்களை ஆக்கித் தருமாயினும், அறத்தை இழந்து தேடிய செல்வம் கேடு தருவதென்று தெரிந்து, ஊக்கத்தை நம்பிய மாண்புடையார் அவற்றை ஒருங்கே ஒழித்துவிடுதலைப் போன்று அமைந்தது.

## உழவர்களின் செயல்

செல்வம் படைத்த அற்பர் போல் பசும் பயிராய் இருந்த காலத்தில் தலை நிமிர்ந்து நின்று, இப்பொழுது நல்லியல்பு உடையார் தலை போல முன்னே தலை வளைவோடும் பழுத்த முத்துப் போன்ற நெல்லை உழவர் அறுத்து, அரிக் கட்டுகளை அங்குள்ள களத்திற்குச் சுமந்து கொண்டு போய், "சூதேய நாடு அறிந்த போர் இதுவே ஆகும்", என்று சொல்லி, களிப்போடு அவற்றைப் பல நெற்போர்களாக அழகோடு குவித்து வைப்பர்.

மெய்யோடு கலந்த பொய்யை விலக்கி மெய்யை மட்டும் கொள்ளும் மேலோர் செயலுக்கு ஏற்ப, உழவர் வைக்கோலோடு சேர்ந்திருந்த நெல்லை எருமைக் கடாக்களால் மிதித்து, வைக்கோலைப் பிரித்து, தூய்மை பொருந்திய நெல்லை முதலில் இரு கைகளும் பொருந்த அடுத்து வந்து இரப்பவர்க்குக் கொடுத்து, பின் தாம் உண்ணவும் பிறருக்கு ஈயவுமென்று களிப்போடு களஞ்சியங்களில் சேர்த்து வைப்பர்.

## சூதேயநாட்டினர்

சூதேயநாட்டார் இரவலர்க்கு ஈதலோடு அதனால் வரும் புகழும், இனிய வாழ்வுகள் அமைவதோடு புண்ணியமும் அழிவில்லாத முறையில் தமக்கு ஆக்கிக் கொண்டனர். அதனால், தம் உடலை விட்டுப் பிரிய நாள் வரவும் ஆசையோடு மடிவர். மடிந்ததும் தாம் சென்று சேரும் வான் வீட்டில் நல்வாழ்வு பெறுவர். பாவத்தோடு துன்பமும் மற்ற மிகுதியான தீமைகள் எல்லாமுமே அந்நாட்டிற்குப் புறத்தே நின்று போயின. ஆதலால் ஒப்பில்லாது வளர்கின்ற புண்ணியத்தால் மாண்புற்ற சூதேய

நாட்டில் அமைந்துள்ள திறமையையும் ஆண்மையையும் எடுத்துச் சொல்லுதல் இயலுவதோ?

## நந்தவனத்தில் நிறைந்துள்ள மரங்கள்

நந்தவனத்தில் நிறைந்துள்ள மரங்கள் தம் உச்சியில் நிறைந்துள்ள கனிகளின் பாரம் தாங்காமல் வளையும். அது, வறுமைக் காலத்தில் தாம் அடைந்துள்ள நன்மையை மக்கள் விளைச்சல் நாளில் கொடுத்துத் தீர்ப்பதுபோல், மரங்கள் தமக்கு அடியில் அருமையான உயிராய் அமைந்து உதவிய நீரை முயன்று தொழுவதுபோல் தோற்றமளிக்கும்.

## மயிலின் செயல்

கரும்பாலையினின்று நிறைந்து மேல் எழும் கரும் புகையைக் கார் மேகம் என்று கருதி, சோலையில் நிறைந்துள்ள மயில்கள் ஆரவாரக் குரல் எழுப்பித் துள்ளி ஆடும். மாமரத்துக் குயில்களோ, மாலைப்பொழுதில், நிறையும் இருளை விரும்பும் தீய மக்களைக்கண்ட மேலோர்போல், மெலிந்து வருந்தும்.

## நாட்டின்நிலை

வளமாக விரிந்து மலர்கள் நிறைந்த வனம் தோறும் ஒரு போர் நடக்கும். அது பொருந்துவதற்கு உரிய அன்பு அறாமலும் போர் செய்வதற்கு உரிய காரணம் இல்லாமலும் காடைகள் ஒல்லென ஒலித்துத் தமக்குள் செய்து கொள்ளும் அன்புப் போர். இப்போரே அல்லது வேறு பகையால் நடைபெறும் போர் அந்நாட்டில் இல்லை. தீப்பொறி பறக்க ஒன்றோடொன்று சினந்து தாக்குவனவாகிய இரண்டு ஆட்டுக் கிடாய்கள், தூசி மேலே எழுமாறு விரைந்து பின் வாங்கும் நிகழ்ச்சி, துன்பம் செய்யுமாறு பகைச் செயலை மனத்துட் கருதிய பகைவர் பாயினின்று பிறக்கச் செய்யும் வணக்கச் சொல்லை ஒத்திருக்கும்.

## இடைச்சியர் செயல்

கயல் மீன் போன்ற கண்களை உடைய இடைச்சியர் தம் உடம்பில் வேர்வை எழவும், கையில் அணிந்த வளையல்களின் ஆரவாரம் எழுமாறும் வருந்திக் கடைந்த தயிரினின்று வெண்ணெய் மேலெழுந்து வரும். இது திரண்டு எழுந்த துன்பம் தம்மை அணுகிய காலத்தும் விடாது அறமே மேலோங்கி வரச் செய்யும் மேலோரின் இயல்பை ஒத்திருக்கும்.

## பறவைகளின் செயல்

கரும்பு, தேனடை, பனை, பழங்கள், தென்னை, மலர் - இவற்றினிடமாய் எழுந்து வந்த மதுவை, இணை பிரியாத அழகிய இளம் பறவைகள் உண்ட பின், மழைபோல் பெருகிய அம்மதுவைக் காட்டிலும் இனிதாகப் பாடும். எருமைகள் தம்மிடம் பால் குடித்து அகன்ற கன்றுகளை மீண்டும் நினைந்து, அவற்றின் மீது பெருகிய அன்பு கொண்டு தம் மடியினின்று பாலை வழிய விடும். அப்பாலைத் திரளாய்க் கூடிய அன்னங்கள் குடித்தலாகிய நிகழ்ச்சி அங்குக் காணப்படுவதாகும். அங்கு உள்ள களவு இது ஒன்றே ஆகும்.

மரக் கொம்புகளில் குயில் இனமும், பேச்சுப் பயிலும் நிறைந்த கிளி இனமும், வண்டும் சேர்ந்து பாடிக் கொண்டிருக்கும். மரத்தடியில் தம் இனத்தோடு துயில் கொண்டிருந்த மயில்கள் இப்பாடலைக்கேட்டு விழித்துக் கொண்டு, விரித்த தோகையோடு நடனம் ஆடும். அம்மயில் இனத்தோடு மகளிரும் சேர்ந்து ஆடுவர். களிப்புற்ற பறவை இனங்களின் ஆரவாரத்தால் சோலைகள் ஒலிக்கும். மொய்த்த வண்டுகளால் பூக்கள் ஒலிக்கும், யாழ் ஒழிப்பதனால் பாடல்கள் ஒலிக்கும். புகழுரைகளால் நாவுகள் ஒலிக்கும், இவ்வாறு நாடு முழுவதும் ஒலிமயமாய்க் காட்சியளித்தன.

## பலவகை ஒலிகள்

மாறுபாடு கொண்ட ஆட்டுக் கிடாய்கள் ஒன்றோடொன்று முட்டிக் கொள்வதனால் ஒலித்தன. குயில்கள் தம் பெட்டைகளை விரும்பிக் கூவுதலால் ஒலித்தன. கரும்புகள் தம்மிடமிருந்து சிதறிய முத்துக்களைத் தரையில் இடுதலால் ஒலித்தன. மலர் இனங்கள் இன்பத்தைப் பிறப்பித்த தேனைப் பொழிதலால் ஒலித்தன.

## பல வகை சிறைகள்

நீண்ட சோலைகள் தம் நிழலால் பார்ப்பவர் கண்களைச் சிறைப் படுத்தும். மகளிர் தம் கூந்தலில் பூவைச் சிறைப்படுத்துவர். ஆடவர் வீரக் கழலினால் தம் கால்களைச் சிறைப்படுத்துவர். நன்செய் நிலம் தன்னுள் நீர் வந்து பாய்ந்தவிடத்துத் தானே அதனைச் சிறைப்படுத்திக் கொள்ளும். பொன்

மயமான நல்ல சிறகை உடைய அன்னப் பறவைகள் வாழ்வதும், மன்னர்க்கெல்லாம் மன்னனாகிய தாவீது நீதிவழங்குவதுமான அச்சூதேய நாட்டிலே, இருள் செறிந்த இடத்தில் தள்ளிச் சிறைப்படுத்தத் தக்க குற்றம் எவரிடமும் இல்லாமையால், மேலே காட்டியது போன்ற பல வகைச் சிறைகளே அல்லாது வேறு சிறைகள் இல்லை என்கிறார் ஆசிரியர்.

### வண்டிகள்

விளைச்சலாற் கிடைத்த செந்நெல்லைச் சுமந்து திரியும் வண்டிகளும், ஆயந்தெடுத்த மெல்லிய வெற்றிலை கொண்டுள்ள வண்டிகளும், வானுற வளர்ந்த கமுகின் ஒளி பொருந்திய பழங்களை இட்டு வைத்த வண்டிகளும், அழகிய இனிய கனிகள் நிரம்பிக் கிடக்கும் வண்டிகளும் - கொய் தெடுத்த தெங்கு இளநீர்க் காய்களை இட்டு வைத்த வண்டிகளும், இனிமை பொருந்திய கரும்புகளைச் சுமக்கும் வண்டிகளும், தன் நிறைந்த ஒளியுடன் விளங்கும் மலர்களை இட்டு வைத்த வண்டிகளும், நிலைத்த ஒளியுடைய பலவகை இரத்தினங்களைக் கொண்டுள்ள வண்டிகளும், தேனை மழையாகப் பெய்த சோலைகள் சூழப் பெற்றுக் களித்த சூதேய நாடு முழுவதும் குறையில்லாத நல்வாழ்வு பெறுமாறு, சினங்கொண்ட உழவர்கள் தூண்டிச் செலுத்தும் காளை இனம் எழுச்சியோடு இழுத்துச் செல்லும் மேற்குறித்த பல வண்டிகளும் ஒன்றோடொன்று நெருங்கிச் செல்வதனால் தேயும்.

### நாட்டின் வளம்

ஓங்கி வளர்ந்த தென்னையின் நெற்றுக்கள் முற்றிவிழுந்தன. விழுகையில் அடியிலுள்ள வாழை, மா, வருக்கைப் பலா, ஆசினிப் பலா ஆகியவற்றின் இனிய கனிகளைக் கூடவே சாய்த்தன. அவ்வாறு சாய்ந்த கனிகளெல்லாம் சரிந்து தேன் கலந்து ஆற்று நீரில் சென்று சேர்ந்தன. அதனால், அவ்வாற்று நீர் தோய்ந்த இடங்களெல்லாம் அதன் இனிமை தோய்ந்து விளங்கின. பூமியைச் சூழ்ந்து குளிர்ச்சியோடு விளங்கும் கடலில் வாழும் சங்கு வருந்தி ஈன்று தந்த முத்தோடு மற்றுள்ள செல்வங்களெல்லாம் ஒன்று சேரப் பிறர்க்கு விருப்பத்தோடு கொடுப்பர்

சூதேய நாட்டார். அதனால்இ செல்வமென்று ஆண்டவன் விளைவித்துத் தந்தவையெல்லாம் அங்கு விருந்து என்று தோன்றுமளவிற்கு காட்சி அளித்தன.

### சூதேய நாட்டின் வளம்

வானுலகில் வழங்கும் முறைமைக்கு ஒத்தவாறு அறவாழ்வில் முயன்று கொண்டிருந்த அச்சூதேய நாடு முழுவதும் குவிந்து கிடந்த பொன்னும் இரத்தினங்களும் மலையை ஒத்திருக்கும். அந் நாட்டார் மகிழ்ந்து இரவலர்க்கு இடும் கொடை, மழையை ஒத்திருக்கும். அங்குள்ள முனிவர் தம் மாண்பு வேதத்தையே ஒத்திருக்கும். அச்சூதேயா நாடு ஆண் அன்னம் தன் ஆசை பெருகிய பெட்டையைத் தழுவிக் கொண்டு துயிலும் தேனுள்ள தாமரை மலர்த் தடாகங்கள் தழுவியும், கிளைகள் நீட்டிய அழகிய மலருள்ள சோலைகள் தழுவியும், பொலிந்த அழகோடு எழுந்து நிற்கும் தூய மலர்களை உடைய வயல்கள் தழுவியும் விளங்கும் நாடாகும்.

### சோலைகள்

ஓலைகள் கொண்ட நெடிய கமுகுகளும் பனைகளும் பாலை மரங்களும் மாமரங்களும் மகிழ மரங்களும் பலா மரங்களும் மரா மரங்களும் இலந்தை மரங்களும் சந்தன மரங்களும் குங்கும மரங்களும் கொண்ட சோலைகள் அங்குப் பல இருந்தன அவற்றைத் தொகை யெடுத்தல் இயலுவதோ?

வாசனை பெருகுகின்ற சண்பக மலர்கள் மாலைபோல் மலர்ந்துள்ள சோலைகள் தேன் பொருந்தியுள்ள மாலையைச் சிறைசெய்து கொண்டிருக்கும் மகளிர் கூந்தல் என்போமோ? வண்டுகள் வளர்க்கும் ஓசை எழும்பத் தேனைச் சொரியும் சோலைகள் வானத்தில் வளரும் துளியாகிய நலத்தைப் பூமிக்கு வழங்கும் கார் மேகம் என்போமோ? மரக் கிளைகளில் அணியணியாக எழுந்து நிற்கும் அழகிய பூக்களோடு அழகு பொருந்திய கனிகளின் நலமும் நிறைந்த சோலைகள், காதுகளில் தோடுகள் அணிந்த அழகோடு தொங்கும் குண்டலங்களும் மிகுதியான பிற அணிகலன்களும் சந்திரன் போன்ற தம் முகத்திற்கு ஒளிசெய்ய நிற்கும் மகளிர் என்போமோ? கிளைகளில் வரிசையாக எழுந்து நிற்கும் தளிர்களின் கருநிறத்திடையே உயர்ந்து, வண்டுகள் ஒலிப்பதனால் விரியும் மலர்கள் நிறைந்துள்ள சோலை, வரிசையாகச் சித்திரம் தீட்டிய நீலப் போர்வைக்கு நிகராக மேலே விண்மீன்களை வரிசையாகத் தீட்டி வைத்தது போன்ற வானத்தின் தோற்றம் என்போமோ? 'நிரைத்து எழுதிய நீல் படம்' என்று மாற்றிக் கூட்டுக என்று சோலைகளின் அழகை வர்ணித்துப் பாடியுள்ளார்.

## சோலையின் அழகிய தோற்றம்

சோலையின் அப்பக்கம் தத்தமக்கு உரிய உணவை உண்ணும் சிறகுகளால் அழகு நிறைந்த பலவகைப் பறவைகள்; இப்பக்கம் மலர்களைக் கொய்து கொண்டிருக்கும் இளைஞர்களின் ஒளியுள்ள முகங்கள்; முப்பக்கங்களிலும் தீட்டி வைத்தவைபோன்ற மொட்டுக்கள். இவ்வாறு காட்டிய அழகுப் பொலிவை நோக்குமிடத்து, ஒரு சித்திரக் கூடமாகவே சோலை காட்சியளிக்கும். கொம்புகளில் தொங்கும் மலர்கள் பூட்டுவாயிற் பொருந்திய இரட்டை வட ஆபரணம் போல் தோன்றவும், குயில்கள் துணைக் குயில்களைக்கூவி அழைக்கவும், வண்டுகள் குழலிசைபோல் ஊதவும், மயில்கள் இணை இணையாக உலாவி வந்து ஒலிக்கவும், மற்றப் பறவைகளெல்லாம் வரவேற்று அழைக்கும் தன்மையாய் அமையவும், களிப்பிற்கிடமான திருமணப்பந்தல் போல் சோலை விளங்கும்.

முதிர்ந்த பழங்களும் மலர்களும் மரங்களில் மொய்த்துத் தொங்கிக் கொண்டிருப்பதோடு, உதிர்ந்த பழங்களும் பூங்கொத்துக்களும் ஒளி செய்து குவியலாய்த் தரையில் கிடக்கின்றன. அதனால், ஒளி செய்யும் முடிகளையும், பிற அணிகலன்களையும் கழற்றி நீக்கிய மன்னர்கள் கூடியிருந்து தவம் செய்யும் துறவறச்சாலை போல் அச்சோலை விளங்கும்.

வெண்ணிறமான ஆட்டுக் கிடாய்க் கூட்டமும், கலைமான் கூட்டமும், தூய நிறத்தோடு உயரமாய் வளர்ந்த பொலிகாளைக் கூட்டமும், கரு நிறத்து எருமைக் கடாக் கூட்டமும் நெடு நேரம் தம்முள் ஒன்றோடொன்று போரிட்டுக் கொண்டிருத்தலால், அரசனது புகழ் வாய்ந்த நல்ல சிலம்பக் கூடம் போல் சோலை விளங்கும். ஒரு பக்கம் காடைப் பறவைகளின் கூட்டம் கறாகறா என்று ஒலிக்கவும், மற்றொரு பக்கம் விரும்பத்தக்க மயில்கள் ஞறாஞறா என்று ஒலிக்கவும், புறாக்கள் கூவுவதோடு பல வகைப் பறவைகளின் பல வகை ஓசை எப்பொழுதும் ஓயாமையால், அதுவரையில் பெற்றிராத அறிவைச் சிறுவர்களுக்குச் சொரிந்து தரும் கல்வியரங்கம் போல் சோலை விளங்கும்.

மேலே வளர்ந்துள்ள மலர்களை மேற்கட்டி விரித்தாற்போற் கொண்டு, அவ்விடத்து வளரும் வண்டுகள் வீணைபோல் இரைந்து செய்யும் இசைக்கு ஏற்ப மாமரத்துக் குயில்கள் கூவிப் பாட, தோகை வளர்ந்த மயில்கள் ஆடும் நடனத்தை மற்றப் பறவைகள் பார்த்துக் கொண்டிருக்க, இவ்வாறு பெரிதாய் வளர்ந்த நாடக சாலையே போன்று சோலை விளங்கும்.

### மயில்களின் நடனம்

மயில்கள் காலைத் தூக்கியும், பிற மயில்களை அடுத்து நின்றும், எதிர்த் திசையில் திரும்பிச் சென்றும், தோகையாகிய நீண்ட வாலைத் தூக்கி விரித்தும் அழகாக மாறி மாறி ஆடிக் கொண்டிருக்கும். மை போன்ற நிறமுள்ள கருங்குரங்குகள் அதனைக் கண்டு கோல்களைக் கையில் எடுத்துக் கொண்டும், மரங்களின்மேல் ஏறி நின்றும் ஆரியக் கூத்தைச் சிறப்பாக ஆடிக்காட்டும்.

### நீரோடை

சோலையை அடுத்த நீரோடை அக்காட்சியைக் கூடநின்று காண விரும்பியது; தன் குவளை மலர்களாகிய கண்களைத் திறந்தது. ஓடிச் சென்று காண விரும்பியும் ஓட இயலாமல் நின்றது. அலைந்து அலைந்து வருந்தியது பின் ஒருமித்து ஓர் இடத்தையே குறிப்பாக நாடி, அங்கு நின்று காண முடியாமல் நலிந்தது. நீரோடையின் அறியாமையைக் கண்டு நகைத்தாற்போல் முல்லைகள் மலர்ந்தன. நெடுநேரம் ஆடல் நிகழ்ந்தமையால் சலித்துப்போய்க் கொட்டாவி விட்டாற்போல் கார்த்திகைப் பூக்கள் மலர்ந்தன. நீரோடை நடனக் காட்சியைக் காண இயலாமல் நலிந்ததாகக் காட்டிய கற்பனை இது. அலைதலைக் காற்றாலும் அலையாலும் அலைவதாகவும், ஒருமித்து ஓர் இடம் நாடுதலை அவை இல்லாதபோது ஒருமுகமாக நிமிர்ந்து நிற்பதாகவும் கொள்க. இதற்கு நேர்மாறாகக் கரைமேல் நின்ற காந்தள் பார்த்துப் பார்த்துச் சலித்துப் போயிற்று என்கிறார் ஆசிரியர்.

### மகளிரின் தோற்றம்

தோகை கொண்ட மயில்போலச் சூதேய நாட்டு மகளிர் அங்கு வந்து தோன்றினர். அவர் தம்மை வெற்றி கொண்டனர் என்று மயில்கள் அடங்கின. மற்றப் பறவைகள், மயில்களை இகழ்ந்து சிரித்ததுபோல், மரக் கொம்புகளில் அமர்ந்திருந்து, களிப்புக் கொண்டு ஒலித்தன. இவ்வாறு சூதேய நாடு முழுவதும் ஒலிமிகுந்து காணப்படும். மகளிர் வந்து தோன்றலால் கதிரவன்கள் சோலை இருளினிடையே வந்து உதித்தன என்று மகிழ்ந்த மாமரத்துக் குயில்கள் அவற்றைத் துதித்ததுபோல்

பாடின. ஒளி பொருந்திய அன்னம் தன் தூயநடையை அம்மகளிருக்குக் கற்பித்ததுபோல் முன்னே நடந்தது. குளிர்ச்சி பொருந்திய மாலையை அணிந்த அம்மகளிர் அத்தடத்தின் மீது தம் மெல்லிய அடியைப் பதித்ததுபோல் நடந்து சென்றனர்.

கண்ணுக்கு இனிய ஒளியுள்ள பிறைச் சந்திரனின் கதிர்களைத் திரட்டித் தொகுத்தாற்போல், பல நிறங்களோடு மலர்ந்த பூக்கள் பரந்து கிடந்த சோலையில், இவையெல்லாம் அழகிய நிறத்தோடு மலர்ந்து வீணே கிடந்தன என்று கொய்து கொய்து, மின்னலின் தன்மையில் அம்மாதர் அச்சோலையை விருப்பத்தோடு சுற்றி நடந்து செல்வர்.

## பெண்களின் செயல்

மலர்களை அம்மாதர் கொள்ளையிடுதலைக்கண்டு வண்டினங்கள் கூ கூ வென்று எழுப்பும் ஓசையும், கிளிகள் கண்டு வருந்துவன போல் கீ கீ யென்று எழுப்பும் ஓசையும் தம்முள் மயங்குமாறு, அம்மாதர் தம் வள்ளைப் பாட்டை இனிய இசையோடு பாடியவராய், வெள்ளை முதற்கொண்டு அங்குள்ள பல நிற மலர்களையும் பறித்தெடுப்பர். சிறந்த பவளமும் முத்தும் போன்ற மணிகள், அழகிய பொன் இத்தகைய எல்லாம் கொண்டு, நெருக்கமாய் அழகு பொருந்த அரிய படலை மாலையாகக் கோத்தது போல், மிகுந்த அழகுள்ள மலர்களையெல்லாம் இணைக்கும் பொன்மயமான நூல் கொண்டு, தமது அழகிற்கு இணையாகும்படி, மாலையாகக் கட்டுவர்.

அம்மாதர் தாம் தாம் கட்டிய மாலையைத் தத்தம் விரலின் மேல் சுழல விட்டுப் பிறருக்குக் காட்டுவர் : "உன்னுடையது அணியத் தகாது! என்று தம்முள் வாதிட்டுச் சிறிதுநேரம் ஆரவாரம் செய்வர். பின், தொங்கிய ஆபரணமுள்ள ஒளிபொருந்திய தம் மார்புகளிலும், அழகிய மணிக்கட்டு களிலும், மெல்லிய மணப்புகை ஊட்டிய கூந்தல்களிலும் படியுமாறு சூடிக்கொள்வர்.

## மகளிரின் பாடல்

வாசனையைப் பரப்பிய பூக்களைக் குடைந்து, உள்ளே மூழ்கிக் கிடந்த தேனைப் பருகும் போதும் இரைந்த வண்டுகள், பசி நீங்கிய பின் அப்பூக்களின்

அருகே இரைந்தது போல, பூக்களைப் பறிக்கும் அம்மகளிரும் ஆசையால் உருகி, பெருகிய களிப்பினால் குரலெடுத்துப் பாடுவர். அம்மாதர் பூக்கள் நிறைந்த மெத்தையின்மேல் பொலிவுடன் அமர்ந்திருந்து, தேன் நிறைந்த தாமரை மலராகிய படுக்கைமேல் சிறந்து தங்கிய அன்னத்தின் நாவில் நிறைந்து பிறந்த இசையும் நாணுமாறு, வேதநூல் முறைப்படி, பாக்களுக்குரிய நிறைவான சொல் அமைப்போடு புண்ணியத்தைப் புகழ்ந்து பாடுவர்.

அப்பெண்கள் தேனின் வழியாக நறுமணத்தைப் பரவவிட்டு மலர்ந்த செவ்வல்லி மலர் போன்ற வாயைத் திறந்து வீணையிடத்துப் பிறந்தது போன்ற குரலுடன் பொருளை இனிது ஆராய்ந்து, வெண்ணிறமான சந்திரனின் ஒளிபோல் வாய்ந்த திருந்திய உணர்வுகளை எடுத்துக் கூறிப்பாடினர்.

'வானத்தை மூடி மறைத்த மலர்க் கொம்புகளினின்று வாசனையில் மூழ்கிய தேனை ஒழுகவிட்டு, பார்ப்பவர் கண்களை மூடி மறைக்கும் இருண்ட சோலைகளைக் கொண்டுள்ள களிப்பு மிகுந்த நாடு இச்சூதேய நாடே ஆகும். களிப்பு மிகுந்த நாடு இது வென்றால், கண்ணுக்கு அடங்காத அழகையும் நாடி, குளிர்ச்சி மிகுந்த இன்பத்தைத் தரும் வானுலகத்தைத் தேடாது அமைவோமோ?

'நிழலில் மூழ்கிக் கிடக்கும் பூஞ்சோலை கண்ணுக்கு நிறமும் வாய்க்குத் தேனும் மூக்கிற்கு வாசனையும் உடலுக்கு இன்பமும் தருவதல்லாமல், புல்லாங்குழலில் மூழ்கிக் கிடக்கும் இசை காதுக்கு இன்பமாகவும் ஒலிக்க, இவ்வாறு குறைதற்கு அரிய செல்வச் சிறப்புள்ளது இச்சூதேய நாடே ஆகும். குறைவற்ற செல்வச் சிறப்புள்ள நாடு இதுவென்றால், விண்மீன்களையும் குற்றமுள்ளவை எனப் புறத்தே தள்ளி மின்னவிட்டு, என்றும் வாடுதற்கு அரிய செல்வமெல்லாம் நிறைந்து உயர்ந்து விளங்கும் வானுலகத்தைத் தேடாது அமைவோமோ?"

'படமுள்ள பாம்பு தன் தோலைச் சட்டையாகக் கழற்றிய தன்மைபோல், கல்லின் ஊடே உராய்ந்து வந்து, பெரிய மலை மீது தொங்கியதுபோல் அருவி பாய்ந்தோடும் அழகு நிறைந்த நாடு இதுவே ஆகும். அருவி பாய்ந்தோடும் அழகு நிறைந்த நாடு இது வென்றால், அலையே இல்லாமல் அருள் என்னும்

கடல் பாய்ந்து பரக்கும் அழகு நிறைந்து, செல்வமெல்லாம் நிலையாகக்கொண்ட வானுலகத்தைத் தேடாது அமைவோமோ?"

'பகையும் தீர்ந்து, துன்பமும் நீங்கப் பெற்று சண்பக மரத்தின் குளிர்ந்த நிழலின் கீழ் உறக்கம் கொள்ளஇ வெளி நாட்டிலுள்ள யாவர்க்கும் ஆசையைத் தூண்டும் நாடு இதுவே ஆகும். அவ்வாறு ஆசையைத் தூண்டும் நாடு இதுவென்றால், முடிவில்லாது விரிந்த காலமெல்லாம் இன்பம் குறையாத வாழ்க்கையைத் தரும் நிலைபேறு கொண்ட வானுலகத்தைத் தேடாது அமைவோமோ? என'றும் மேலும், நாவினால் நக்கும் அளவாக நன்மையைக் கொண்ட இந்நாட்டு நலத்தை விரும்பிய காலத்து, மக்களின் ஆசைகளுக்கும் மேலாக நலம் கொண்டுள்ள வானுலகத்தைத் தேடாது அமைவோமோ?' அவ்வாறு வானுலகத்தைத் தேடாது அமைவோமாயின், நிலை பெற்ற மானிட உயிர் நிலை பெற்ற நன்மையையே விரும்பிக்கொண்டிருக்க, காடாகிய இவ்வுலகம் காட்டும் நலம் அக்கவலையை மாற்றும் தன்மையது ஆகுமோ? 'வீணையின் கனிந்த நரம்புகளைத் தடவிப் பாணரே இசைகளைப் பாடுவதுபோல், கண்ணுக்குக் கனிவான அழகுள்ள அம்மகளிர் களிப்பு மிகுந்து, இதுவும் வேறு பலவும் குளிர்ச்சி கனிந்த தேன் போன்ற இசையால் புகழ்ந்து சொல்லுதலோடு, அந்நாடு வானுலக ஆசையில் ஓங்குமாறு, விண்ணுலகினின்று கனிந்த பேரின்பத்தைப் பல நாளும் நுகர்வர்.

சூதேய நாட்டில், ஆலைகள் தேய்வதனால் முழங்கின. வண்டிகள் தரையில் தேய்வதனால் முழங்கின. பாக்களை ஆய்வதனால் நிறை புகழ் முழங்கின. சங்குகள் நிகழ்ச்சிக்கு ஏற்ப ஆராய்ந்து ஊதப் படுதலினால் முழங்கின. ஒன்றன்மேல் ஒன்று பாய்ந்து மோதுதலால் ஆட்டுக் கிடாய்கள் முழங்கின. குளம் வயல்களிற் பாய்வதனால் இனிய நீர் முழங்கின. எருமைகள் நீரில் விழுந்து தோய்வதனால் முழங்கின. அணிகலன் அணிந்த மகளிர் நீராடத் தெளிந்த நீரில் தோய்வதனால் முழங்கினர்.

## பலவகை செல்வங்கள் நிறைந்த நாடு

சோலைகள் வாசனையை அங்குத் திரளாகச் சிந்தின. மரக்கிளைகள் தம்மிடத்துச் செறிந்துள்ள வாச மலர்களைச் சிந்தின. பூக்கள் இனிய தேனைத் திரளாகச் சிந்தின. எங்கும் செறிந்து கிடந்த குளம் பொய்கை போன்ற இனிய நீர் நிலைகள் தம்மிடமுள்ள சங்குகள் ஈன்ற முத்துக்களைச் சிந்தின. விண்மீன்களின் திரள் சிந்திக் கிடப்பதுபோல வளம் செறிந்த மூங்கில்கள் தம்மிடமுள்ள மணியாகிய முத்துக்களைச் சிந்தின. பசுக் கூட்டங்கள் பாலைச் சிந்தின. எல்லாம் தன்னிடம் செறிந்து நிறைந்துள்ள அந்நாடு செல்வங்கள் எல்லாவற்றையும் சிந்தித் தந்தது.

ஆலையிலுள்ள கருப்பஞ் சாறாகிய தேனும், அகன்று படர்ந்த மரங்களில் நிறைந்துள்ள மலர்களில் உள்ள தேனும், சோலைகளிலுள்ள தேனொடு, சிதறிக் கிடந்த தூய பழங்களிலுள்ள தேனும், மாலைகளிலுள்ள தேனும், வண்டுகள் சேர்த்துத் தர வந்த தேனடையிலுள்ள தேனும் ஒன்றாகக் கலந்து, வயலிலுள்ள சிறந்த நெந்நெல்லை விளைவிக்கும் அளவிற்குப் பாய்ந்தோடின.

வாசனை பொருந்திய தாமரை மலர்களின் அழகு கதிரவனின் அழகை நன்றாகக் காட்டின. மலர்ந்து ஒளிரும் மலர்க்கூட்டங்களில் செறிந்து கிடந்த அழகு விண்மீன்களின் அழகை நன்றாகக் காட்டின. மழையிடம் செறிந்து கிடந்த தெளிந்த நீர்த்துளிகளின் அழகு தேனின் அழகை நன்றாகக் காட்டின. நன்றாகப் பளிங்கு போல் காட்டும் குளங்கள் வழங்கிய அழகு, வானுலகத்தின் அழகாக அமைந்தது.

மலைகள் கார்மேகத்தோடு நேரே போர் செய்து நிற்கும்; பொழியும் மழையோடு ஈவோர் கைகள் போர் செய்து நிற்கும். அணிகலன்கள் மாலைகளோடு நேரே போர் செய்து நிற்கும்; அகன்ற மார்போடு மாலைகள் போர் செய்து நிற்கும். வண்டிகள் பூமியோடு நேரே போர் செய்து நிற்கும். குளிர்ச்சி தரும் பாலோடு பாக்களின் இனிமை போர் செய்து நிற்கும். சோலை செல்வங்களோடு போர் செய்து நிற்கும்; செழுமையான வான்வீட்டோடு அச்செல்வங்கள் போர் செய்து நிற்கும்.

காலையில் சூரியன் ஒளிர்ந்த போது, மொட்டின் இதழ்கள் விரிந்த மணமுள்ள தாமரை மலர்களாகிய மெத்தையினுள் கருப்ப நோவு கொண்டு ஒளி பொருந்திய முத்துக்களை ஈன்று சொரிந்த சங்கினங்கள் அங்கிருந்து நீங்கின. மாலைப் பொழுது வந்த போது பொன்மயமான சிறகுகளை உடைய அன்னங்கள் அங்கு வந்து சேர்ந்தன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு மலரிலுமுள்ள முத்தைத் தன் முட்டையென்று கருதி

அடைகாத்தது. அதனால், அவ்வன்னங்களெல்லாம் ஆலையில் நைந்து இறங்கும் கரும்பு தரும் சாற்றின் இன்பத்தை வென்ற முறையில் மகிழ்ந்து இசை பாடின.

காடுகளில் பெரிய தவ முனிவர்களும் வாசனை நிறைந்த தாமரை மலர்களில் செறிந்திருக்கும் அன்னங்களும், பூக்களில் தேன் வண்டுகளும், மரங்களில் நிறைந்து பேசிக் கொண்டிருந்த இளங்கிளிகளும், மக்கள் நாவுகளில் பாடல் வகைகளும், மாதர்களின் நல்ல கைகளில் நம்பகமான நரம்புகளை உடைய யாழ்களும், வேறு எவ்விடத்தாயினும், எந்நாளும், அரிய தயவுள்ள எம் தந்தையாகிய ஆண்டவனை எல்லாமே வாழ்த்தின.

மயங்கச் செய்யும் யாவற்றையும் புறத்தே போக்கினர். அதனால் உண்டாகும் இன்பத்தை முடிவின்றி அனுபவித்து அந்த அழகிய நாடு மகிழ்ச்சியால் பொங்கினது. எல்லை நிகழ்த்திய எல் என, எல்லை இல் எந்தை நிகழ்த்திய நூல், வில்லை நிகழ்த்திய மெய் மறையின் விதி, உண்மை நிகழ்த்திய தூய் ஒல்லை நிகழ்த்திய ஒண் அறம் ஒன்றிய உள்ளம் நிகழ்த்திய சீர்,

சொல்லை நிகழ்த்திய நுண்மை அறிந்தவர் சொல்லி நிகழ்த்துவரோ? ஒளியைப் பரப்பிய கதிரவனைப் போல, எல்லை இல்லாத எம் தந்தையாகிய ஆண்டவனே சொல்லித் தந்த நூலாய் அமைந்து ஒளியைப் பரப்பிய மெய் மறையின் நெறிமுறைகளை உண்மையென்று காட்டும் வகையில், விரைந்து கடைப்பிடித்த தூய ஒளியுள்ள அறத்தோடு ஒன்றிய உள்ளம் அந்நாட்டில் விளைவித்த சிறப்புக்களை, சொல்லைக் கையாளக்கூடிய நுட்பம் அறிந்தவரும் சொல்லிக்காட்ட வல்லவரோ?

அந்நாட்டில், செய்வதற்கு வருத்தம் தராத நல்ல புண்ணியங்களே உள்ளன அல்லாமல் பாவங்களே இல்லை என்றும், மாற்றுவதற்கு அரிய துயரங்களே இல்லாதிருத்தலோடு உள்ளத்தில் மயக்கம் மிகுதலும் இல்லை எனவும், ஏற்ற அரிய புகழ் ஒல்லென ஒலிக்கும் ஒலியே அல்லாமல் இகழும் ஒலி என்பதே இல்லை எனவும், இவை போன்றவற்றை முற்றச் சொல்ல வருந்தி முயன்றாலும், எதைச் சொல்லவும் இயலும் அரிய திறம் வாய்ந்த தமிழும் இதைச் சொல்வதற்குச் சமமாக நின்று ஈடு கொடுக்கக் கூடியதன்று.

பூக்கள் நாடெங்கும் நிறைந்து, பூவுலகெங்கும் நிறைந்துள்ள ஒன்று கூட்டுதற்கு அரிய அழகுக ளெல்லாம் தன்னிடத்துப் பொருந்தியுள்ள மேன்மையினால், நாம்

நம்மிடம் நிறைந்துள்ள ஆசைக்கும் உயர்வாகவே ஆராய்ந்து புகழ முற்படினும், நம் நாவில் நிறைந்துள்ள புகழைக் காட்டிலும் உயர்வுள்ள நாடு அச்சூதேய நாடு.

வண்டுகள் உராய்வதனால் மலர்ந்து மலர்களிடையே காணப்படும் புண்களே அல்லாமல், அம்பு துளைப்பதனால் திறந்து மார்புப் புண்படுதல் இல்லாமையால், குற்றம் கூறி மயக்கம் அடைவதற்கு இடமில்லாத நாடு அது. கடலிலுள்ள சங்குகள் ஒலித்து இன்ப மயக்கம் தரும் நாடும் அதுவே.

## கற்புள்ள மாதர்கள்

மாலை இருள் மாறி விளங்கிய நிறைமதியின் அழகு இயல்பை மாறச் செய்து விளங்கிய முகமுள்ள மாதர்கள் மயக்கம் நீங்கிய கற்புள்ள தம் மார்பில் தவழும் மாலையாக மாறிய முல்லை மலர்களைக் கொண்டுள்ள மாண்பினர் ஆவார். பிறர் மாசு காரணமாக எழுந்த பகையைப் போக்கவென்று செலுத்திய அம்பு இல்லாதவராய், மேகத்தோடு மாறுபடுவதற்கென்று வறியவர்க்கு வழங்கிய அன்புடையவராய், பொன்னுக்கு இணையான சிறப்புள்ள மலை போன்ற தோளை உடையவராகிய அந்நாட்டு வீரர்தம் புகழோடு பொருந்திய சிறப்பையெல்லாம் வரைந்து காட்டும் முறையில் யார் எடுத்துக் கூறுவார்?

## தவம்

அந்நாட்டில், அரிய தவம் நடைமுறையாய் அமைந்துள்ளமையால், தவம் அல்லாத அவம் இல்லை. எவரும் எவர்க்கும் உண்ண உணவு அளித்தலால், செல்வம் அல்லாத வறுமை இல்லை. யாவரும் அணிந்துள்ள அறத்தின் மாட்சியால், அறத்திற்குப் புன்மையான மறம் இல்லை. அழகு செய்தாற் போன்ற வாழ்க்கையால், அதற்குப் புன்மையான அலங்கோல வாழ்க்கை இல்லை.

இருள் நீங்கி ஒளிரும் பகலவனின் செய்கை போல், எல்லா வகையான மயக்கமும் நீங்கி விளங்கும் இல்லற வாழ்க்கை கொண்டோர் எல்லோரும், அருள் நீங்கிய வெறுப்புணர்வு யாரிடமும் இல்லாமையால், அருள் விரிவடைந்து எழுச்சி கொள்வாராய் உள்ளனரே அல்லாமல், வேறு வகையார் அங்கு இல்லை.

### முத்துக்கள்

மூங்கில்களில் முத்துக்கள் செறிந்து கிடந்தன. வயல்களில் மேலே மூடிக்கிடக்கும் நெல் முத்துக்கள் செறிந்து கிடந்தன. கடலில் சங்குகளிடமாய் வாய்க்கும் முத்துக்கள் மலிந்து கிடந்தன. இடமெல்லாம் இனிய கரும்புகளினின்று கிடைக்கும் முத்துக்கள் மலிந்து கிடந்தன.

### வள்ளல்கள்

மேகத்தால் ஆகிய மழை மிகுதியாகப் பொழிவதுபோல், வள்ளல்களிடம் இரவலர் சென்றால் வள்ளல்கள் கொடையே மழை போல் மிகுதியாகப் பொழிந்தனர். தேன் மழை பொழிந்தது போல், வேதியராகிய குருக்கள் குற்றமில்லாத உபதேசச் சொல்லை மழையாகப் பொழிந்தனர்.

### நால்வகைப்பயன்

தாவிப் படர்ந்த மரக் கொம்புகளில் நிறைந்து கிடந்த புதுமலர்கள்இ தடாகத்தில் நிறைந்து கிடந்த தாமரை மலர்கள் போல குளிர்ச்சியோடு விளங்கின் பாவிகள் அந்நாட்டில் இயங்க முடியாத நற்பயனை இயல்பாகவே அது கொண்டுள்ளமையால் பாக்களிடையே புலவர்கள் இயங்க விடும் நால்வகைப் பயன்களில் எப்பயன் அங்கே சால்புடையதாகும் என்று கூறுகின்றார்.

### எருசலேம் நகர் இயல்பு

இப்பூவுலகம் அணிந்துள்ள அழகிய அணிகலன்போலஇ சிறப்புக்களெல்லாம் ஒருங்கே அணிந்துள்ள செழுமையான பெருமை வாய்ந்த சூதேய நாட்டில், அது தன் மார்பில் அணிந்த அழகிய பெரிய மணி போன்ற அழகு புனைந்த எருசலேம் நகர்க்கு உரிய இயல்பைத் தொடர்ந்து போற்றுவோம்.

இவ்வாறு தேம்பாவணியில் நாட்டுப்படலத்தில் இடம் பெற்ற பாடலகளில் சூதேய நாட்டின் சிறப்பு, அழகு, வளம் ஆகியவற்றை சிறப்பாக எடுக்காட்டியுள்ளார் ஆசிரியர்.

## அருஞ்சொற்பொருள்

1. திரை- நீர்
2. மிடைதல் - நெருங்குதல்
3. புள்ளி - சிறப்பு
4. மால்வரை - பெரிய மலை
5. விசித்து - கட்டி
6. புண்உரைத்து - புண்படுத்தி
7. கிடந்து - வயிற்றில் தங்கி
8. எஞ்சிலா - எஞ்சுதல்
9. அறல் - தண்ணீர்
10. கூழ் - பயிர்
11. பகடு - எருது
12. மிடி - வறுமை
13. கடி - நந்தவனம்
14. கழை - கரும்பு
15. இறால் - தேனடை
16. கண்படும் - உறங்கும்
17. அலங்கல் - மாலை
18. காழகம் - நீலஆடை
19. காருகம் - கருங்குரங்கு
20. ஆவித்தல் - கொட்டாவி விடுதல்
21. சாகை - மரக்கிளை
22. அளி - வண்டு
23. ஆமடகம் - ஆட்டுக்கடாக்கள்
24. சகடு - வண்டி
25. அல் - இருட்டு
26. செல் - மேகம்

# சீறாப்புராணம்

## சுரத்ததிற்புனலழைத்த படலம்

### சீறாப்புராணம்

சீறத் என்னும் அரபுச் சொல்லின் தமிழ் வடிவம். புராணம் என்பது பழமையான சீறாப் புராணம் = சீறாவைக் கூறும் புராணம். சீறத் என்பது சீறத்துன்னபி என்ற அரபுத் தொடரின் சுருக்கம் ஆகும். இதற்கு நபிகள் நாயகத்தின் வரலாறு என்று பொருள். சீறா என்பது வரலாறு எனப் பொருள்படும். திருநபி அவர்களின் வரலாற்றைக் கூறும் புராணம் என்பது இதன் பொருள்.

### உமறுப்புலவர்

உமறுப்புலவர் (1642 - 1703) முகம்மது நபி அவர்களின் வரலாற்றை அடியொற்றித் தமிழ் இலக்கிய மரபிற்கேற்பச் சீறாப்புராணம் என்ற காப்பியத்தைப் பாடியவர். உமறுப்புலவரால் இயற்றப்பட்ட சீறாப்புராணம், முகம்மது நபியவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் புராணமாகப் பாடப்பட்ட இலக்கியமாகும். இந்நூல் விலாதத்துக்காண்டம், நுபுவத்துக்காண்டம், ஹிஜிரத்துக்காண்டம் என்ற மூன்று காண்டங்களும் 92 படலங்களும், 5027 பாடல்களும் உள்ளன.

### காப்பிய அமைப்பு

இக்காப்பியம் மூன்று காண்டங்களைக் கொண்டது. அவை:

1) விலாதத்துக் காண்டம்
2) நுபுவ்வத்துக் காண்டம்
3) ஹிஜ்ரத்துக் காண்டம் என்பவை ஆகும்.

### விலாதத்துக் காண்டம்

சீறாப் புராணத்தின் முதல் காண்டம் விலாதத்துக் காண்டம் ஆகும். விலாதத் என்ற அரபுச் சொல்லுக்குப் பிறப்பு என்பது பொருள். இதில் நபிகள் நாயகத்தின் பிறப்பும், இளமையும், தொழில் முயற்சியும் முதலில் கூறப்படுகின்றன. பின்னர் கதீஜா நாயகியாரின் உறவு, அவர்கள் திருமணம், பாத்திமா பிறப்பு ஆகிய செய்திகள் கூறப்படுகின்றன.

## நுபுவ்வத்துக் காண்டம்

இது இரண்டாவது காண்டம். நுபுவ்வத் என்ற அரபுச் சொல்லின் பொருள் தீர்க்க தரிசனம் என்பதாகும். இது நபிகள் நாயகம் நபித்துவம் என்னும் நபிப் பட்டம் பெற்றதைப் பாடுகிறது. வானவர் தலைவர் ஓதிய திருக்குர்ஆன் வேத உரைகள் நபிகள் நாயகத்திற்கு வெளிப்படுத்தப்பெற்றதும், அதனை நபிகள் நாயகம் மக்களுக்கு எடுத்துரைத்து அறிவுரை கூறியதும் கூறப்படுகின்றன. மேலும் தீமைகள் செய்து வந்த குறைசிகள் எனும் குலத்தவரின் கொடுமைகளும் இக்காண்டத்தில் கூறப்பட்டுள்ளன. முஸ்லீம்களின் பொறுமையைப் பற்றியும், இசுலாம் உறுதி பெற்றது பற்றியும் இக்காண்டம் தெரிவிக்கிறது.

இதில் இருபத்தொரு படலங்கள் உள்ளன.

## ஹிஜ்ரத்துக் காண்டம்

இது மூன்றாவது காண்டம். ஹிஜ்ரத் என்ற அரபுச் சொல்லுக்கு இடம் பெயர்தல் என்பது பொருள்.

மக்காக் குறைசிகள், நபிகள் நாயகத்திற்குக் கொடுமைகள் பல செய்தனர். நபிகள் நாயகம் மக்காவை விட்டு, மதீனாவிற்கு வரவேண்டுமென்று அங்குள்ள மக்கள் அழைத்தனர். அந்த அழைப்பை நபிகள் நாயகம் ஏற்றார். இசுலாமிய அறநெறிகளை வளர்க்க மக்காவை விட்டு மதீனா நகர் சென்றார். அங்கு இசுலாமிய அறநெறி வளர்த்த வரலாறும் இக்காண்டத்தில் விவரிக்கப்படுகிறது. ஆனால் நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாறு முடிவுபெறவில்லை. உறனிக் கூட்டத்தார் படலத்துடன் முடிகிறது. நபிகள் நாயகத்தின் ஐம்பத்தேழாவது வயதுவரை நடந்த நிகழ்ச்சிகளோடு சீறாப் புராணம் நிறைவு அடைகிறது. இது நாற்பத்தேழு படலங்களால் ஆனது.

## தமிழ் மரபு

சீறாப் புராணத்தில் தமிழ்ப் பண்பாடு விளக்கப்பட்டுள்ளது. இசுலாமிய மரபுகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. நானில வருணனையும், பாலை நில வருணனையும் காணப்படுகின்றன. போர்க்களக் காட்சிகள் தமிழகத்துப் போர்களோ எனக் கருதுமாறு பாடப்பெற்றுள்ளன. இயற்கை கடந்த

நிகழ்ச்சிகள் மிகுதியாக உள்ளன. கற்பனைகளும் அணிகளும் நிறைந்து விளங்குகின்றன.

## இரு பண்பாட்டின் பாலம்

உமறுப் புலவர் கம்பராமாயணத்தில் நல்ல புலமையும் ஈடுபாடும் கொண்டவர். சீவக சிந்தாமணியையும் நன்கு கற்றவர். இத்தகைய பின்புலத்தில் இசுலாம், தமிழ் ஆகிய இருபெரும் பண்பாடுகளையும் இணைத்து அழியாக் காப்பியம் பாடிய பெருமை உமறுப் புலவருக்கே உரியது. இரண்டு பண்பாடுகளைக் கலந்து பாடினாலும் இரண்டுமே தம் தம் தனித்தன்மையை இழந்து விடாதபடி பாடியிருப்பது மற்றொரு சிறப்பு. இவ்வாறு சீறாப் புராணத்தில் சிறப்பும் தனித்தன்மையும் பொருந்தி அமைந்துள்ளன.

## கடவுள் வாழ்த்து

தமிழ்ப் புலவர்கள் காப்புப் பாடல் பாடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். உருவமற்ற ஓர் இறைக்கோட்பாடு இசுலாமியத்தின் அடிப்படை. இறைவனைப் போற்றுதல், முகம்மது நபி, பிற மதிப்பிற்குரிய சான்றோர்கள் ஆகியோரைப் போற்றுதல் என்னும் மரபில் தனித்தனியாக 17 பாடல்களில் கடவுள் வாழ்த்தை உமறுப் புலவர் பாடியுள்ளார்.

## தமிழ் மரபும் காளி வழிபாடும்

பாலை நிலத்தைப் பாடும்போது காளியின் சித்திரத்தினைக் கண்முன் கொண்டு நிறுத்துகிறார். காளியைப் பாலை நிலத்துக்குரிய கடவுளாகவும் பேய்களை அவளுடைய படைகளாகவும் பாடுவது தமிழ் மரபு. இதனையே உமறுப் புலவர்,

**மூஇலை நெடுவேல் காளிவீற் றிருப்ப**
**முறைமுறை நெட்டுடல் கரும்பேய்**
**ஏவல்செய் துஉறைவது அலதுமா னிடர்கால்**
**இடுவதற்கு அரிது ...**

என்று பாடுகிறார்.

இந்தப் பாடலில் தமிழ்நாட்டில் கொற்றவை என்று போற்றி வணங்கப்படும் காளியைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் காண முடிகிறது.

இது இருபத்து நான்கு படலங்களைக் கொண்டு உள்ளது. அவற்றில் நம் பாடப்பகுதியாக விலாதத்து காண்டத்தில் சுரத்திற்புனலழைத்த படலம் இடம்பெற்றுள்ளது அவற்றைக் காண்போம்.

## சுரத்திற்புனலழைத்த படலம்

1.முன்னிலையாக நடந்திட நடந்து முதிர் அடவிகள் கடந்ததன் பின்
தன்னிகரில்லான் திருவுளப்படியால் தரையினில் ஜிபுறயீல் இறங்கி
இ நிலத்து எவர்க்கும் தெரிகிலாவண்ணம் இளம் பிடி ஒட்டை ஒன்று எளிதாய்
பன்ன அரும் பாதை தலை தடுமாற பண்பொடு கொடு நடத்தினரே முன்னிலை யாசு நடந்திட நடந்து

2.மட்டு அவிழ் புயத்தான் ஆசு முன் நடத்திவந்த ஒட்டகம் புதுமையதாம்
பெட்டை ஒட்டகத்தை கண்டு பின் தொடர பிசகினது அரு நெறி கானில்
செட்டு அரும் எருதும் புரவியும் இடைந்து சிறுநெறி-வயின் வெகு தூரம்
எட்டி முன் நடப்ப சிறுநெறி குறுகி இருந்ததும் தேய்ந்துபோயதுவே.

3. ஆசு எனும் அரசன் ஒட்டக கயிற்றை அசைத்திடும் திசை எலாம் நடப்ப
வாசியும் எருதும் கூன் தொறு தொகையும் வழி கெட தனித்தனி மறுக
தேசிகர் கலங்கி யாம் இதற்கு என்-கொல் செய்குவது என மனம் இடைந்து
வீசிய கானல் சுடச்சுட கருகி விடர் விடும் பாலையில் அடைந்தார்

4. பருந்து இருந்து எழுந்து பறந்த சில் நிழலும் பற்று அறா கானலில் தேய்ந்த
கரிந்து இலை தோன்றாது ஒவ்வொரு விருக்கம் கணங்களின் குலம் என தோன்றும்
எரிந்து எரி மேய்ந்து கரிந்து விண்ணிடம் காந்திடும் தரை ஒரு துளி நீரும்
அருந்திட கிடையாது அலகைகள் திரிந்து அங்கு ஆள்வழக்கு அற்ற வெம் கானம்

6. பாலை என்று உலர்ந்த செம் நில கானல் பரப்பினை புனல் என ஓடி
சாலவும் இளைத்து தவித்து உழை இனங்கள் தனித்தனி மறுகிய மறுக்கம்

மால் உளர்ந்து இருண்ட புன்மன சிறியோர் மருங்கினில் இரந்து இரந்து இடைந்து
கால் அற தேய்ந்த பல கலை மேலோர் கருத்தினில் வருத்தம் ஒத்தனவே.

7. கள்ளியின் குலங்கள் வெந்து ஒடுங்கின வேர்க்கட்டையின் உள் துளை கிடந்து
புள்ளி பூத்திருந்த பை தலை பாந்தள் புறம் திரிந்து உறைந்திடாது இறந்து
முள் எயிறு ஒதுங்கி செம் மணி பிதுங்கி முளை-தொறும் கிடப்பதை செறிந்த
கொள்ளி இந்தனங்கள் என்று உழை குலங்கள் குறுகிட பயந்து கால் மறுகும்.

8. மூவிலை நெடு வேல் காளி வீற்றிருப்ப முறைமுறை நெட்டு உடல் கரும் பேய்
ஏவல்செய்து உறைவது அலது மானிடர் காலிடுவதற்கு அரிது செம் நெருப்பு
தாவி எ பொருப்பும் கரிந்தன சிவந்து தரை பிளந்தது அதில் பிறந்த
ஆவியோ எழுந்த புகை பரந்ததுவோ அற கொடும் கானல் என்பதுவே.

9. சேந்து எரி பரந்த பாலையில் புகுந்து செல் நெறி சிறிதும் தோன்றாமல்
காந்து எரி கதிரோன் எழு திசை தெற்கு வடக்கு மேற்கு எல்லை காணாமல்
மாந்தரும் மாவும் திசை தடுமாறி வாயில் நீர் அற உலர்ந்து ஒடுங்கி
ஏந்து எழில் கருகி மனமுடைந்து உருகி எரிபடு தளிரை ஒத்திடுவார்.

10. மன்னவன் ஆசு முன் நடந்து அதற்கு ஓர் வல் வினை பின்தொடர்ந்ததுவோ
இன்னை நாள் அகிலம் அடங்கலும் தழலால் எரிபடு காரணம் தானோ
முன்னை நாள் விதியோ நகரை விட்டு எழுந்த முகுர்த்தமோ பவங்கள் முற்றியதோ
பன்னுதற்கு எவை என்று அறிகுவோம் கொடியேம் பாலையில் படும் வரலாறே.

11. பாடுறு புனல் அற்று ஒவ்வொரு காதம் படு பரல் பரப்பு நால் திசைக்கும்
ஓடுவர் திரும்பி மீள்குவர் அடி சுட்டு உச்சியும் வெதுப்புற உலர்ந்து
வாடுவர் துகில் கீழ் படுத்தி ஒட்டகத்தின் வயிற்றிடை தலை நுழைத்திடுவார்
தேடிடும் பொருட்கோ உயிர் இழப்பதற்கோ செறிந்து இவண் அடைந்தனம் என்பார்.

12. ஓங்கிய உதய கிரி மிசை எழுந்த மதி என ஒட்டகை-அதன் மேல்
வீங்கிய புயமும் கரத்தினில் அயிலும் வெண் முறுவலும் அலர் முகமும்
பாங்கினில் குளிர்ந்த வெண் கதிர் பரப்ப பரிமள மான்மதம் கமழ
தூங்கு இசை மறை தேர் முகம்மதும் பாலை துன்புறாது இன்பமுற்றனரே.

13. பாலையில் அடைந்து பசியினால் இடைந்து பலபல வருத்தமுற்றதுவும்
வேலை வாருதி போல் வழி பிழைத்ததுவும் விழுந்து யான் முகம் உடைந்ததுவும்
கோலம் ஆர் புலி வந்ததும் முகம்மதை யாம் கூட்டி வந்துறு பவம் என்ன
சாலவும் உரைத்தான் நீதியை வெறுத்த தறுகணான் எனும் அபூஜகிலே.

14. மூரி வெற்பு அனைய புய முகம்மதுவை முன்னிலை தலைவராய் நிறுத்தி
தாரையில் செலும் நம் இடர்களும் தவிரும் தழல் எழும் பாலையும் குளிர்ந்து
வேரி அம் கமல வாவி அம் கரை ஆம் விரைவினில் சாம் அடைகுவம் என்று
ஆரிதுக்கு உரைத்தார் தாது அவிழ் மலர் தார் அணி திகழ் புயத்து அபூபக்கர்.

15. ஈது நன்று என ஒத்து அனைவரும் இசைத்தார் எழில் முகம்மதுவும் முன்னிலையாய்
பாதையில் நடப்ப பெரியவன் அருளின் பணி கொடு ஜிபுறயீல் இறங்கி
பேதம் அற்று அணுகி ஒட்டக கயிற்றை பிடித்தனர் அரை நொடி பொழுதில்
தீது அற நெறியும் தெரிந்தன நான்கு திசைகளும் தெளிதர தெரிந்த

16. தலைமை முன்னிலையாய் முகம்மது நடப்ப சாரும் நல் நெறியினை சார்ந்தோம்
நிலம் மிசை கரிய மேகம் ஒன்று எழுந்து நிழல் இவர்க்கு இடுவதும் கண்டோம்
மலை கடல் திரை போல் கானலில் வெதும்பி அலைந்திடும் வருத்தமும் தவிர
புலன் உற புனலும் பருகுவம் சிறிது போழ்தில் என்று அனைவரும் புகன்றார்.

17. மந்தரம் பொருவாது எழுந்த பொன் புயத்து முகம்மதும் ஏறு வாகனத்தின்
கந்தர கயிற்றை அசைத்திட உளத்தின் கருத்து அறிந்து ஒட்டகம் களித்து
சுந்தர புவியில் வலது கால் ஓங்கி தொட்டிட தொட்ட அ போதில்
சிந்து நேர் கடுப்ப நுரை திரை பிறங்க செழித்து எழுந்தது நதி பெருக்கே.

18. ஆறு எழுந்து ஓடி பாலையை புரட்டி அழகுறு மருதம்-அது ஆக்க
தேறல் கொப்பிளித்து வனசமும் குவளை திரள்களும் குமுதமும் விரிய
வேறுபட்டு உலர்ந்த மரம் எலாம் தழைத்து மென் தழை குளிர்தர பூத்து
தூறு தேன் துளித்து கனிகளும் காயும் சொரிதர சோலை சூழ்ந்தனவே.

19. வற்றுறா செல்வ பெருக்கு இனிது ஓங்கும் வகுதை அம் பதி உசைன் நயினார்
பெற்ற பேறு இது-கொல் என முழு மணியாய் பிறந்த மெய் துரை அபுல் காசீம்
சுற்றமும் கிளையும் சிறப்பொடு தழைத்து சூழ்ந்து இருந்து அணி திகழ்வது போல்
குற்றம் இல் நதியின் இரு கரை மருங்கும் குறைவு அற தளிர்த்தன தருக்கள்.

20. நானமும் புழுகும் பாளித குலமும் நறை கெட மிகுந்த வாசம்-அதாய்
தேனினும் கருப்பம் சாற்றினும் திரண்ட தெங்கு இளநீரினும் இனிதாய்
ஊனம் இல் நதியில் ஒரு கை நீர் அருந்தி உடல் குளிர்ந்து அரும் பசி ஒடுங்கி
ஆனனம் மலர்ந்து முகம்மதை புகழ்ந்து அங்கு அனைவரும் மத களிறு ஆனார்.

# சீறாப்புராணம்

## சுரத்திற்புனலழைத்த படலம்

### ஒட்டகத்தின் முன்னால் செல்லுதல்

பாதையின்கண் முன்னிலையாக ஆசு என்பவன் நடந்திட யாவர்களும் பின்னால் நடந்துசென்று முதிர்ந்த வனங்களைத் தாண்டி அதன் பிறகு, தனக்கு யாதொரு உவமையுமில்லாதவனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் திருச்சித்தத்தின்படி ஜிபுறீல் அலைகிஸ்ஸலாமவர்கள் ஆகாயத்தை விட்டும் பூமியின் கண்ணிறங்கிச் சொல்லுதற்கரிய இவர்களின் பாதையானது இலேசாகத் தடுமாற்றமுற இவ்வுலகத்தின் கண்ணுள்ள யாவர்கட்குந் தோற்றாத வண்ணம் இளம்பருவத்தையுடைய ஒரு பெண்ணொட்டகத்தை ஆசென்பவனின் ஒட்டகத்தின் முன்னால் பண்புடன் கொண்டு நடத்தினார்கள்.

தேனானது அவிழாநிற்கும் மலர்மாலை யணிந்த தோள்களையுடையவனான ஆசு என்பவன் முன்னிலையாக நடந்துவந்த ஆணொட்டகமானது ஜிபுறீல் அலைகிஸ்ஸலாமவர்கள் அதன் முன்னால் நடத்திடும் நூதனமாகிய பெண்ணொட்டகத்தைப் பார்த்து அதைப் பின்பற்றவே, அவர்கள் சென்ற அந்தக் காட்டில் அரிதான பாதையானது பிசகினது. வியாபாரப் பொருள்களையுடைய அரிய எருதுகளும் குதிரைகளும் வசக்கேடுற்றுச் சிறிய ஒரு பாதையினிடமாகத் தாவி அதிக தூரமுன்னால் நடக்க அந்தச் சிறிய பாதையுங் குறுகி இருந்ததும் இல்லாமல் தேய்ந்து போய்விட்டது.

## பாலைநிலத்தில் செல்லுதல்

அப்போது ஆசென்று சொல்லா நிற்கும் அரசனானவன் தனது ஒட்டகத்தினது நாணயக்கயிற்றை ஆட்டிடுந் திக்குகளெல்லாவற்றிலும் அவ்வொட்டகம் நடக்கவும், குதிரைகளும் இடபங்களும் கூனலையுடைய ஒட்டகக் கூட்டங்களும் பாதையானது கெட்டுப்போகவே, தனித்தனியாகவே நின்று மறுக்க மடையவும் தேசாந்தரிகளாகிய அவர்கள் யாவர்களும் கலக்கமடைந்து நாம் இவ்விபத்திற்கு யாது செய்குவதென்று மனமானது வசக்கேடுற்று எவ்விடமும் எறிந்த வெயிலின் வெப்பமானது தங்களது தேகத்தை அதிகமாகச் சுடும்படி தீய்ந்து பிளவுகளை விடாநின்ற ஒரு பாலை நிலத்தின்கண் போய்ச் சேர்ந்தார்கள்.

அப்பாலை நிலமானது பின்னுதலைக் கொண்ட அலைகளையுடைய கடலினை வற்றச் செய்துப் பெரிதான புறச்சமுத்திரத்தைக் குடித்துத் தனது மனஞ் சந்தோஷமடைந்து வடவாமுகாக்கினியின் சுவாலையானது ஏகமாயிருந்து விளையாடிக் கொண்டிருந்த தலமோ? அல்லது சொல்லுதற் கரிய தென்கீழ்த் திசையையுடையவனான அக்கினிதேவன் தனது கூட்டமாகிய சேனைகளோடும் தங்கியிருந்த பாசறையோ? மேலான ஆகாயத்தின் உச்சியானது அற்றுப் போகும்படி யுருக்காநின்ற வுலைக்கூடமோ? இவற்றில் இன்னதென்று யாம் அறிந்திலோம்.

## வெப்பமுடைய கானகம்

அதுமட்டுமல்லாமல், பருந்துகளானவை இருந்து எழும்பிப் பறந்த சிறிய நிழல்களும், பற்றுதலற்றுத் தேய்ந்த அவ்வெயிலினால் இலைகளானவை யனைத்துந் தீய்ந்து வெளியினிற்றெரியாது ஒவ்வொரு விருட்சங்களும் பிசாசங்களின் கூட்டத்தைப்போல விளங்காநிற்கும், மேலும் அக்கினியானது எவ்விடமும் எரிந்து அங்குள்ள புற்பூடாதிக ளெல்லாவற்றையுஞ் சாப்பிட்டு ஆகாயமுங்கரிந்து சுடாநிற்கும் அந்தப் பூமியின்கண் குடிப்பதற்கு ஒரு துளி ஜலமாவது அகப்படாது. இன்னம் அங்கு பிசாசங்கள் திரிந்து மனுஷியர்களின் நடபடியற்ற வெப்பமுடைய கானகம்.

அன்றியும், மானினது கூட்டங்கள் பாலையென்று சொல்லும்படி காய்ந்த செந்நிறத்தின் நிலமாகிய வெயிலினையுடைய பரப்பை நீரென்று நினைத்து ஓடி மிகவுமிளைப்புற்றுத் தாகத்தையடைந்து ஒவ்வொன்றாக மறுகிய மறுக்கமானது மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை யென்னு முவ்வாசையினது மயக்கத்தினாற் சுழற்சிதங்கிக் கறுத்த கீழ்மையான மனத்தையுடைய சிறியோர்களின் பக்கத்தில் யாசித்து வசக்கேடுற்றுக் காலமுழுவதுந் தேய்ந்த பல சாஸ்திரங்களையும் கற்றுத் தெளிந்த மேலோர்களது சிந்தையின்கண்ணுள்ள வருத்தத்தை நிகர்த்திருந்தது.

### மான்கூட்டங்கள்

அப்பாலைநிலத்திலுள்ள கள்ளியினது கூட்டங்கள் சூரிய வெப்பத்தினால் அவிந்து ஒடுக்கமுற்ற வேர்க்கட்டைகளின் அகத்துவாரங்களில் புள்ளிகள் பூத்திரா நிற்கும் படா மகுடத்தினையுடைய சர்ப்பங்கள் அவ்வெப்பத்தினால் வெளியில் உலாவி மீளவும் அங்கு சென்று தங்கிடாது கிடந்து இறந்து அவற்றின் தாழை முட்கள் போன்ற மடங்குதலாகிய பற்கள் ஒதுங்கிச் செந்நிறத்தையுடைய மணிகள் பிதுங்கி முளைகள் தோறுங் கிடப்பதை மான்கூட்டங்கள் கண்டு இவைகள் நெருங்கிய சுவாலைகளையுடைய நெருப்பெரியுங் கொள்ளிகளென்றும் அவ்விடத்தில் செல்ல அச்சங்கொண்டு நின்று காற்கள் மறுக்கமடையும்.

அன்றியும், அப்பாலைநிலத்தில் முக்கவராகப் பொருந்திய இலைகளையுற்ற வேலாயுதத்தையுடைய காளியென்னும் பிசாசமானது வீறுடனிருக்க, நெடிய உடல்களையுடைய கரிய பேய்கள் வரிசை வரிசையாய் ஏவல் புரிந்து தங்குவதல்லாது மானிடர்கள் கால் வைப்பதற்கும் அரிதாகும். மேலும் சிவந்த நிறத்தையுடைய நெருப்புத் தாவலுற்று எல்லா மலைகளும் கரிந்தன. தரைகள் சிவப்படைந்து பிளந்தன. ஆனால் முழுக்கொடுமையையுடைய கானலென்று சொல்லுவது அவ்விதங் கரிந்து பிளப்புற்றவைகளி லிருந்துண்டாகும் ஆவியோ? அல்லது ஓங்கிய புகையானது பரந்ததுவோ? இன்னதென்று யாமறியோம்.

### நெருப்பிற்பட்ட தளிர்

அவ்விதம் சிவந்து அக்கினிப் பரப்புற்ற அந்தப் பாலை நிலத்தின்கண் வியாபாரிகளான அம்மனுஷியர்களும் குதிரை, ஒட்டகம், காளை முதலிய மிருகங்களும் நுழைந்து செல்லும் பாதையானது கொஞ்சமேனுந் தெரியாது சுடாநின்ற தீயினது கிரணங்களையுடைய சூரியனுதயமாகும் திசையாகிய கிழக்கு தெற்கு வடக்கு மேற்கு என்னும் நான்கெல்லைகளுந் தோற்றாமல் தடுமாற்றமுற்று வாயிலுள்ள உமிழ்நீர் முழுவதுங் காய்ந்து சோர்வடைந்து சரீரத்தின்கண் தாங்குகின்ற அழகானதும் தீய்ந்து மனமுடைந்து கரைதலுற்று நெருப்பிற்பட்ட தளிரை ஒத்திருந்தார்கள்.

இப்பாதையின்கண் படாநிற்கும் வரலாறானது அரசனாகிய ஆசென்பவன் முன்னிலையாகச் சென்றதற்கு ஒரு வலிய வினையானது வந்து பின்பற்றியதோ? அல்லது உலகமெல்லாம் இந்தநாளில் அக்கினியால் எரிபட்டிடுங்காரணமோ? ஆதிகாலத்தின் விதிப்பயனோ? நாம் அனைவரும் நமதூராகிய திருமக்கமா நகரத்தை விட்டும் எழும்பிய சுபவேளையோ? நமது பாவங்களனைத்து மொன்றுகூடி

முதிர்ந்ததுவோ? கொடுமையையுடையோமாகிய யாம் இவற்றில் சொல்லுதற்கு எவையென்று அறியமுடியவில்லை.

நீரானது இல்லாமல் துன்பத்தைப் பொருந்திய ஒவ்வொரு காவதமும் கூர்மையுற்ற பரற்கற்களின் பரப்பைக் கொண்ட நான்கு திக்குகளிலும் ஓடுவார்கள். திரும்பி மீண்டு வருவார்கள். பாதங்கள் வெந்து சிரசும் சூட்டைப் பொருந்தும்படி காய்ந்து வாடுவார்கள். வஸ்திரங்களைக் கீழே வைத்து அதன்மீது ஏறி நின்றுக்கொண்டு தலைகளை ஒட்டகத்தின் வயிற்றினது பக்கத்தில் புகுத்திவிடுவார்கள். நாம் சம்பாதித்திடுந் திரவியத்திற்காகவோ? அல்லது ஜீவனை இழந்து விடுவதற்காகவோ கூட்டமுற்று இவ்விடத்தில் வந்து சேர்ந்தோமென்று சொல்லுவார்கள்.

## கஸ்தூரிவாசனை

அப்போது தூங்கிய இசைகளையுடைய வேதங்களனைத்தையுந் தெளிந்த நபிமஹ்மூது முகம்மது சல்லல்லாலகு அலைகிவசல்லமவர்களும் வளர்ச்சி தங்கிய உதய பருவதத்தின் மேல் எழும்பிய சந்திரனைப் போல ஒட்டகத்தின் மீது பருத்த தோள்களும் வேலாயுதமும் வெண்ணிறத்தையுடைய பற்களும் தாமரைமலர் போன்ற முகமும் பக்கங்களிற் குளிர்ச்சி பொருந்திய வெள்ளிய கிரணங்களைப் பரப்பவும், தேகத்தின் கண்ணுள்ள கஸ்தூரிவாசனை கமழவும் இருந்து அந்தப் பாலை நிலத்தைத் துன்பமுறாது இன்பமுற்றார்கள்.

அப்பொழுது நியாயத்தை வெறுத்த தறுகண்ணனென்னும் அபூஜகிலானவன் நாமனைவோர்களும் இந்தப் பாலை நிலத்தின்கண் வந்து சேர்ந்துப் பசியினால் வசக்கேடுற்றுப் பற்பல துன்பங்களடைந்தும், நீர்த்திரைகளையுடைய சமுத்திரத்தைப் போன்ற பாதையானது தவறினதும், யான்பூமியின் கண் விழுந்து முகந்தகர்ந்ததும், அலங்காரமாகிய வேங்கையானது வந்து சேர்ந்ததும், இந்த முகம்மதென்பவனை நம்மோடு கூட்டிக் கொண்டு வந்ததினால் பொருந்திய பாவமென்று மிகவாக எடுத்துச் சொன்னான்.

## சாம்நகரம் செல்லுதல்

இதழ்கள் விரிந்த புஷ்பமாலையினது அழகு பிரகாசியாநின்ற தோள்களையுடைய அபூபக்கரவர்கள் பெருமைதங்கிய மலைபோலும் புஜங்களையுடைய நபிமுகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை முன்னிலையின் நாயகராக நிற்கச் செய்து நீங்கள் பாதையின்கண்

செல்லுங்கள். உங்களுடைய துன்பங்களும் நீங்கும். அக்கினியானது எழும்பாநின்ற இந்தப் பாலை நிலமுங் குளிர்ச்சியடைந்து வாசனை பொருந்திய அழகிய தாமரைத் தடாகங்களின் கரைகளைப் போலாகும். நாமும் சீக்கிரத்தில் சாம்நகரத்தைப் போய்ச் சேருவோமென்று ஆரிதென்பவருக்குச் சொன்னார்கள்.

அவ்வண்ணம் அபூபக்கரவர்கள் கூறியவார்த்தைகளை அனைவரும் கேட்டு இதுவே நல்ல சமாச்சாரமென்று அனைவர்களும் சம்மதித்துச் சொன்னார்கள். பின்னர் அழகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களும் யாவர்கட்கும் முன்னிலையாய் அப்பாதையின்கண் நடக்கப் பெரியவனான ஆலாவின் கிருபையினது கட்டளைகொண்டு ஜிபுறீல் அலைகிஸ்ஸலாமவர்கள் வானலோகத்தை விட்டும் பூமியின் கண்ணிறங்கிப் பேதமில்லாது நபிகணாயகமவர்களின் ஒட்டகத்தை நெருங்கி அதன் நாணயக் கயிற்றைப் பிடித்தார்கள். அவ்விதம் பிடிக்கவே ஒரு அரைநொடிப் பொழுதிற் குற்றமறப் பாதையுந் தோன்றினது. தேர்ச்சியுறும்படி நான்கு திக்குகளுந் தெரிந்தன.

அப்போது அப்பாதையின் கண்ணுற்ற அனைவரும் நபிமுகம்மது அவர்கள் முன்னிலையினது நாயகராய் நடக்கவே, நாம் அடையக்கூடிய நல்ல பாதையினையடைந்தோம். கருநிறத்தையுடைய மேகமொன்றெழும்பி இப்பூமியின் மீது அவர்களுக்கு நிழலிடுவதையும் பார்த்தோம். அலைகளையுடைய சமுத்திரத்தினது திரையைப் போல வெயிலினால் வாட்டமுற்று அங்கு மிங்கும் அலைந்து திரியும் துன்பமும் தீரும்படியாகவும், இந்திரியங் களுணர்ச்சியுறும்படியாகவும், இன்னங் கொஞ்ச நேரத்தில் தண்ணீருங் கொடிப்போமென்று ஒருவர்க்கொருவர் பேசிக் கொண்டார்கள்.

## ஆற்றின் தோற்றம்

அவ்வாறு அவர்கள் பேசிக் கொள்ளவே மலைகளுந் தமக்கொப்பாகாதபடி யோங்காநிற்கும் அழகிய புயங்களையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுந் தாங்கள் ஏறியிருக்கப்பட்ட வாகனமாகிய ஒட்டகையின் கழுத்தினது நாணயக் கயிற்றை அசைக்கவும், அவ்வொட்டகமானது அவர்களது மனத்தின் கண்ணுள்ள எண்ணத்தைத் தெரிந்து சந்தோஷமடைந்து அழகிய பூமியின்மீது தனது வலதுகாலை யோங்கித் தோண்டவும், தோண்டிய அந்தச் சமயமே சமுத்திரத்தைப் போல விரைவினில் நுரைகளும் திரைகளும் பிரகாசிக்கும்படி ஆற்றினது பிரவாகஞ் செழிப்புற் றெழும்பினது.

அவ்வாறு ஆறானது எழும்பி எவ்விடமும் ஓட்டமுற்றுப்பரவி அந்தப் பாலை நிலத்தைத் திருப்பி அழகு பொருந்திய மருதநிலமாக்கவே, தாமரைகளும் குவளைக் கூட்டங்களும் ஆம்பல்களும் மதுவைக் கக்கி மலர, வேற்றுமைப்பட்டுக் காய்ந்த விருட்சங்களனைத்தும் குளிர்ச்சியுறும் வண்ணம் மிருதுவாகிய தளிர்களைத் தளிர்த்துப் பூத்துப் பொழியாநிற்கும் தேனைச் சிந்திப் பழங்களும் காய்களும் சொரியும்படியாக நானாபக்கங்களுஞ் சோலைகள் சூழ்ந்தன.

## விருட்சங்கள் பிரகாசித்தன

வற்றாத சம்பத்தின் மிகுதியானது இனிமையுடனோங்கா நிற்கும் அழகிய வகுதை நகரத்திலுள்ள ஹ_சையின் நயினாரவர்கள் பெற்றபேறானது இதுவென்று சொல்லும்படி பூரணவிரத்தின மாயுதயமான சத்தியவதிகாரியாகிய இந்நூலின் கொடைநாயகம் அபுல் காசீமரைக்காயரவர்களை அவர்களின் உற்றார்களும் பந்துக்களும் தளிர்த்து சிறப்புடன் வளைந்திருந்து அழகு பிரகாசிப்பது போலக் குற்றமற்ற அவ்வாற்றினது இருகரைகளின் பக்கங்களிலும் விருட்சங்கள் குறைவில்லாது வளைந்துநின்று தளிர்த்துப் பிரகாசித்தன.

## ஆற்றுநீரை பருகுதல்

அப்போது அவ்விடத்திலுள்ள அனைவரும் கஸ்தூரி, புழுகு, பாளிதக்கூட்ட முதலியவைகளின் வாசனைகளும் கெட்டுப் போகும்படிப் பெருகிய வாசனையுடையதாய்த்தேன் கருப்பஞ்சாறு திரட்சியுற்ற தெங்கினிளநீர் இவைகளின் இனிமையைப் பார்க்கிலும் இனிமையுடையதாய்க் குறைபாடற்ற அவ்வாற்றினது ஜலத்தில் ஒரு சிறங்கை நீரைக் குடித்துச் சரீரங் குளிர்ச்சியடைந்து அரிய பசியானது ஒடுங்கி முகமலர்ச்சி பெற்று நபிமுகம்மது அவர்களைத் துதித்து மதங்களைப் பொழியாநின்ற யானைகளை ஒத்திருந்தார்கள்.

இவ்வாறு சுரத்தில் புனலழைத்த படலத்தில் நபிமுகம்மது அவர்கள் செயல்கள் குறித்து உமறுப்புலவர் குறிப்பிட்டுள்ளார்.

# அலகு - 4

## தொகுப்புரை

கிறித்துவ சமயக்காப்பிமான தேம்பாவணி வீரமாமுனிவரால் இயற்றப்பட்டது. இதில் இயேசுவின் வளர்ப்புத்தந்தையான வளன் பிறந்த சுதேய நாட்டின் வளத்தனை கூறியுள்ளார். மழைப்பொழிவு, ஆற்றின் வளம், ஆற்றவெள்ளத்தின் தோற்றம், உழவர்களின் செயல், நாட்டின்நிலை, பறவைகளின் செயல்கள், பலவகை ஒலிகள் நாட்டின்வளம், சோலை அழகு, மயில்களின் நடனம், மகளிரின் தோற்றம் பல்வேறு வகையான செல்வம் நிறைந்த நாடு, எருசலேம்நகரத்தின் இயல்பு போன்றவை அழகுற எடுத்துகாட்டியுள்ளார் ஆசிரியர்.

இஸ்லாம் சமயக்காப்பியமான சீறாப்புராணம் உமறுப்புலவர் அவர்காளால் இயற்றப்பட்டது. சுரத்தில் புனல் அழைத்தபடலம் பாடமாக அமைந்துள்ளது. அதில் ஒட்டகத்தின் முன்னால் பாலைநிலத்தின் வழியாக செல்லல், வெப்பத்தின் கொடிய தன்மை, சாம்நகரம் செல்லுதல், ஆற்றின் தோற்றம், ஆற்றுநீரை பருகுதல் போன்ற செய்திகள் அடங்கிய படலம்.

# அலகு - 4

## வினாக்கள்

## பகுதி - அ

### ஒருமதிப்பெண் வினாக்கள்

1.தேம்பாவணியை இயற்றியவர் யார்?

அ) வீரமாமுனிவர் ஆ) கால்டுவெல்

இ) போப் ஈ) தத்துவப் போதகர் விடை: அ) வீரமாமுனிவர்

2. 'தேம்பாவணி' என்பது எந்தவகைக் காப்பியம்?

அ) கிறித்துவக் காப்பியம்

ஆ) இசுலாமியக் காப்பியம்

இ) வைணவக் காப்பியம்

ஈ) சைவக்காப்பியம் விடை: அ) கிறித்துவக் காப்பியம்

3.வீரமாமுனிவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

அ) இத்தாலி ஆ) பிரான்சு

இ) சுவீடன் ஈ) இங்கிலாந்து விடை: அ) இத்தாலி

4.தேம்பாவணி என்ற சொல்லை தேம்பா + அணி என்று பிரித்தால் கீழ்க்கண்ட எந்தபொருளை அது குறிக்கும்

அ) வாடாதமாலை ஆ) தேன்போன்ற இனியபாடல்களால் ஆன மாலை

இ) இலத்தீன் மொழிகொண்ட பால்கள் ஈ) வாடாத பாமாலை

விடை: அ) வாடாதமாலை

5. தேம்பாவணியில் இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை எவ்வளவு?

அ) 3615 ஆ) 3515 இ) 3415 ஈ) 3645 விடை: அ) 3615

6. "மயில் துணை உலவி வந்து இரட்ட மற்று எலாம்

பயில் துணை களி மண பந்தர் சோலையே" - என்ற பாடல்வரிகள் இடம்பெறும் நூல் எது?

அ) வளையாபதி ஆ) சீவகசிந்தாமணி

இ) சிலப்பதிகாரம் ஈ) தேம்பாவணி விடை: ஈ) தேம்பாவணி

7. சீறாப்புராணத்தை இயற்றியவர் யார்?

அ) உமறுப்புலவர் ஆ) வீரமாமுனிவர்

இ) அப்துல் காசிம் ஈ) அபுபக்கர் விடை: அ) உமறுப்புலவர்

8. சீறாப்புராணத்தில் உள்ள காண்டங்களின் எண்ணிக்கை?

அ) 3 ஆ) 4 இ) 5 ஈ) 6 விடை: அ) 3

9. மூவிலை நெடு வேல் காளி வீற்றிருப்ப முறைமுறை நெட்டு உடல் கரும் பேய் - என்ற பாடல்வரி இடம்பெறும் நூல் எது?

அ) வளையாபதி ஆ) சீவகசிந்தாமணி

இ) சீறாப்புராணம் ஈ) தேம்பாவணி விடை: இ) சீறாப்புராணம்

10. நபிமுகம்மது அவர்களின் மேல் வீசிய வாசனை பொருள் எது?

அ) அகில் ஆ) சந்தனம்

இ) கஸ்தூரி ஈ) மல்லிகை மணம் விடை: இ) கஸ்தூரி

## பகுதி - ஆ

### ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1. தேம்பாவணி நூல்குறிப்பு தருக.
2. தேம்பாவணியில் இடம் பெறும் மழை வளம் குறித்து எதுக.
3. தேம்பாவணியில் இடம்பெறும் ஆற்றுவெள்ளம் குறித்து எழுதுக.
4. தேம்பாவணியில் உழத்தியரின்செயல் குறித்து எழுதுக.
5. சூதேயநாட்டின் வளம் குறித்து எழுதுக.
6. தேம்பாவணியில் இடம் பெறும் சோலையின் தோற்றம் குறித்து விளக்குக.
7. சுதேய நாட்டின் பெண்களின் தோற்றம் குறித்து எழுதுக.
8. பல்வகை செல்வங்கள் நிறைந்த நாடு சூதேயநாடு என்பதை விளக்குக.
9. சீறாப்புராணத்தில் பாலை நிலத்தல் செல்லும் காட்சி குறித்து எழுதுக.
10. வெப்பமுடைய கானகம் குறித்து எழுதுக.
11. பாலைநிலத்தில் அஞ்சும் மான் கூட்டங்கள் குறித்து எழுதுக.
12. பாலைநிலத்தில் தோன்றிய ஆற்றின் வெள்ளம் குறித்து எழுதுக.

# பகுதி - இ

## பத்து மதிப்பெண் வினாக்கள்

1. சூதேய நாட்டின் நீர்வளம் நிலவளம் குறித்து கட்டுரை வரைக.
2. சூதேய நாட்டின் செல்வவளம் குறித்து எழுதுக.
3. சூதேய நாட்டில் பெண்களின் தோற்றம் செயல் குறித்து கட்டுரை வரைக.
4. சீறாப்புராணத்தில் இடம் பெறும் பாலைநிலக்காட்சியும் அதனால் விலங்குகளின் தன்மையும் குறித்துக்கட்டுரை வரைக.
5. சீறாப்புராணத்தில் நபிமுகம்மது அவர்களின் அருளால் பாலைநிலத்தில் வெள்ளம் பெருக்கெடுத்து செழிப்புற்ற காட்சியினை புலப்படுத்துக.

---

## பாடநூல்கள்

தேம்பாவணி - மரியஅந்தோணி - வீரமாமுனிவர் ஆய்வுக்களம் பாளையங்கோட்டை.

## பார்வை நூல்

சீறாப்புராணம் - மூலமும் உரையும் - செய்குதம்பி பாவலர்.

தமிழ் வலைதளமுகவரி

1. http://ta.m.vikippedia.org
2. https://nearchathi.wordpress.com
3. www.tamilvu.org

# அலகு - 5

## இராவண காவியம் - புலவர் குழந்தை

### இராவண காவியம்

புலவர் குழந்தையின் இராவண காவியம் பழந்தமிழ் மரபைப் பின்பற்றி எழுதப்பட்ட காப்பியமாகும். பழைய யாப்பு மரபினைப் பின்பற்றிக் கலிவிருத்தம், கொச்சகம் முதலிய யாப்பு வகைகளால் இக்காப்பியம் யாக்கப்பட்டுள்ளது.

இக்காப்பியம் ஐந்து காண்டங்களால் ஆனது. அவை,

1) தமிழகக் காண்டம்,

2) இலங்கைக் காண்டம்,

3) விந்தக் காண்டம்,

4) பழிபுரி காண்டம்,

5) போர்க் காண்டம்

இக்காப்பியக் காண்டம் ஒவ்வொன்றும் பல படலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. நூலில் அமைந்துள்ள மொத்தப் படலங்கள் ஐம்பத்தேழாகும். பாயிரம் உட்பட ஐந்து காண்டத்திலும் உள்ள மொத்தப் பாக்கள் 3100.

இக்காப்பியத்தின் தொடக்கப் படலம் தமிழகக் காண்டத்தின் தமிழகப் படலமாகும். இக்காப்பியத்தின் நிறைவுப் படலம் போர்க் காண்டத்தில் உள்ள இறுவாய்ப் படலம் ஆகும்.

புலவர் குழந்தை தாம் படைத்த இக்காவியத்தைத் தமிழர்க்குக் காணிக்கையாக்கியுள்ளார். தமிழர்கள் தம் பண்பாட்டுச் சிறப்பை அறிந்து வாழ்வதற்காக இராவணனின் பெருமை படைப்பதாக நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

### புலவர் குழந்தை

புலவர் குழந்தை ஓலவலசுப் பண்ணைக்காரர்குடியில் 1-7-1906இல் பிறந்தார். முத்துச்சாமிக் கவுண்டர், சின்னம்மையார் என்பவர்களின் ஒரே மகனாவார். இவர் திண்ணைப் பள்ளியில் கற்ற காலம் மொத்தமாக எட்டு மாதங்களேயாம். இயற்கையிலேயே கவிபாடும் ஆற்றல் வாய்க்கப் பெற்றவர். இசைப் பாடல்களே இவர் முதன் முதலாகப் பாடிய பாடல்கள். ஆசிரியர் உதவியின்றித் தாமே முயன்று தமிழ்

கற்றுச் சீரிய புலமை எய்தினார். அதன் அடையாளமாக 1934இல் சென்னைப் பல்கலைக் கழகத்தின் புலவர் பட்டம் பெற்றார். ஆசிரியராகவும் தலைமைத் தமிழாசிரியராகவும் 39 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

தந்தை பெரியார் தொடங்கிய சுயமரியாதை இயக்கத்தில் புலவர் குழந்தை தம்மை இணைத்துக் கொண்டார். சுயமரியாதைக் கொள்கையில் உறுதியுடையவராய்த் திகழ்ந்தார். இறை நம்பிக்கை இல்லாதவர். 1938, 1948 ஆகிய ஆண்டுகளில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கு கொண்டார். வேளான் என்னும் மாத இதழை நடத்தினார். விதவை மணம், கலப்பு மணம், சீர்திருத்தமணம் ஆகியவற்றை முன்னின்று நடத்தினார். திருக்குறள் குழந்தை உரை என்ற நூலினை இருபத்தைந்து நாட்களில் எழுதி வெளியிட்டார்.

புலவர் குழந்தை தமிழ்ச் செய்யுள் மரபினைச் சிதையாமல் காக்க வேண்டும் என்னும் கருத்துடையராவார்.

## பிற படைப்புகள்

இராவண காவியத்தைத் தவிர, புலவர் குழந்தை மரபுவழி யாப்பில் அமைந்த அரசியலரங்கம், நெருஞ்சிப்பழம், காமஞ்சரி, உலகப் பெரியோன் கென்னடி, திருநணாச் சிலேடை வெண்பா, புலவர் குழந்தை பாடல் ஆகியவற்றைப் படைத்துள்ளார். இவற்றுள் அரசியலரங்கம் சிந்துப்பாவில் தமிழக வரலாற்றினைச் சுவைபடக் கூறுகிறது. காமஞ்சரி என்னும் நாடகநூல் பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் மனோன்மணீயம் போல ஒரு நாடகக் காவியமாகும்.

புலவர் குழந்தை பழந்தமிழ் நூல்களுக்கு உரையும் எழுதியுள்ளார். திருக்குறள், தொல்காப்பியப் பொருளதிகாரம், நீதிக்களஞ்சியம் ஆகியவை அவரால் விளக்கவுரை எழுதப்பட்ட நூல்களாகும்.

புலவர் குழந்தையின் யாப்பிலக்கண நூல்கள் எளிமையாக யாப்பிலக்கணத்தை, கவிதை இயற்றும் நெறிகளை விளக்குகின்றன. அவ்வகையில் யாப்பதிகாரம், தொடையதிகாரம் ஆகியவை சூத்திர வடிவில் இலக்கண நெறிகளை விளக்குவனவாகும்.

புலவர் குழந்தை சில ஆய்வு நூல்களையும் இயற்றியுள்ளார். அவை தொல்காப்பியர் காலத் தமிழர், திருக்குறளும் பரிமேலழகரும், பூவாமுல்லை

என்பனவாம். நாட்டு வரலாற்று நூல்கள் கொங்குநாடு, தமிழக வரலாறு ஆகியவையும் தனி மனித வாழ்க்கை வரலாற்று நூல்கள் தீரன் சின்னமலை, அண்ணல் காந்தி ஆகியவையும் குறிப்பிடத்தக்கன. மேலும் பல நூல்களை இயற்றித் தமிழுக்கு அரும்பணி ஆற்றியுள்ளார். அவை கொங்குநாடும் தமிழும், கொங்குக் குல மணிகள், அருந்தமிழ் விருந்து, அருந்தமிழ் அமிழ்து, சங்கத்தமிழ்ச் செல்வம், ஒன்றே குலம், தமிழெழுத்துச் சீர்திருத்தம் என்பனவாம்.

## தமிழ் காண்டம் - தாய்மொழிப்படலம் (1-11 பாடல்கள்)

1. தெண்டிரை மூன்று திசையினுங் காப்ப
வண்டமிழ் விந்த மலைவடக் கார்ப்பப்
பண்டுந முன்னர் பயன்பட வாழ்ந்த
தண்டமிழ் வேலித் தமிழகங் காண்பாம்.

2. நனிமிகு பண்டுநற் நற்றமிழ்ச் செல்வி
பனிமலை காறும் பகைசிறி தின்றி
இனிதுயர் வெண்குடை நீழ லிருந்து
தனியர சோச்சித் தமிழகங் காத்தாள்.

3. சீரியல் வாய்ந்த செழுந்தமி ழன்னை
மாரி வழங்கும் வடதலை நாட்டை
ஆரிய ரென்னு மயலவர் தங்கள்
பேரறி யாத பெருமையி னாண்டாள்.

4. விந்த வடக்கு விளங்கி யிருந்த
நந்தமிழ் மக்கணன் னாகரி கத்தைச்
சிந்து வெளிப்புறந் தேறி யறிந்தார்
சிந்தை மகிழ்ந்து செருக்குற நாமே.

5. சிந்துவி னொன்றோ திசையிசை மேய
அந்தநன் னாட்டி னகன்றதன் மேற்கில்
நந்திய வாணிக நாடிருப் பாக
வந்தனர் வாழ்ந்து மணித்தமிழ் மக்கள்.

## பெருவள நாடு

6. தன்கடன் குன்றித் தமிழகங் கொண்ட
தென்கடல் முன்பு செழுந்தமிழ் நாடா
நன்கட னாடு நனிவளந் தேங்கிப்
பொன்கட னாடப் பொலிந்தது காணும்.

7. ஆயிரங் கல்லி னகன்ற பரப்ப
தாயய னாட ரவாவுற நீங்கிப்
போயவ ரேங்கப் பொலிவுறு செல்வம்
தாயது மாண்ட சரக்கறை மானும்.

8. ஆயநன் னாட்டி னணியுறுப் பாக
ஞாயிறு செல்ல நடுக்குற வோங்கிச்
சேயுயர் வானின் றிகழ்மணித் தூணின்
மீயுயர் செல்வக் குமரி விளங்கும்.

9.அம்மலை மேற்கி னணியர ணாகத்
தம்மன வூக்கந் தளர்வுற வொன்னார்
செம்மலை வீழ்க்குந் திறனொ டகன்று
கம்மென வானங் கடந்துற வோங்கும்.

10. அம்மலை தோன்றி யதன்பெயர் பெற்றுக்
கைம்மலை கண்டு களித்தெதிர் செல்லும்
மைம்மலை போல வளனுறப் பாய்ந்தே
அம்மலை நாட்டையவ் வாறணி செய்யும்.

11. நாட்டு புகழ்த்தமிழ் நாட்டி னதுதென்
கோட்டிலின் றுள்ள குமரி முனைக்கு
நோட்ட மிகுமிரு நூறுகற் றெற்கில்
ஊட்டுங் குமரியா றோடின காணும்.

# தமிழ் காண்டம் - தாய்மொழிப்படலம்

## தமிழகம்

தெளிந்த அலைகடல்கள் தெற்கு, கிழக்கு, மேற்கு ஆகிய மூன்று திசைகளிலும் காவலாக அமைய, வளமையான தமிழ் விந்த மலையை வடக்குத் திசையிற் கொண்டு ஒலிப்ப, பண்டைக் காலத்தில் நம் முன்னோர்கள் வாழ்ந்த தண்டமிழ் வேலியாகக் கொண்டிருந்த தமிழகம் என்பதைக் காண இருக்கிறோம்.

மிகமிகப் பழங்காலத்தே, நம் நற்றமிழ்ச் செல்வியானவள், வடக்கே பனி (இமய) மலைவரை பகை எதுவும் இல்லாமல் இனிதாக உயர்ந்த வெண்கொற்றக் குடைநிழலில் இருந்து தனியாட்சி செலுத்தித் தமிழகத்தைக் காவல் பூண்டிருந்தாள்

## செந்தமிழ்

மழைவளம் நல்கும் வடபுலத்தை, ஆரியர்கள் எனப்படும் அயலாரது பெயர் அறியப்படுவதற்கு முன்னரே, சிறப்பு இயல்பு வாய்ந்த செழுந் தமிழ்த்தாய் பெருமையோடு ஆண்டு வந்தாள்.

## அகழ்வாய்வு

விந்திய மலைக்கு வடக்கிலும் வாழ்ந்திருந்த தமிழ் மக்களின் நாகரிகச் சிறப்பைச் சிந்துவெளியில் மேற்கொள்ளப் பட்ட அகழ்வாராய்வு முடிவுகள், நம் உள்ளம் மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்ளத்தக்க வகையில் வெளிப்படுத்தியுள்ளன.

சிந்துவெளியில் மட்டுமன்றி எல்லாத் திசைகளிலுமுள்ள சிந்து வெளிகளும் மேற்கில் விரிந்து கிடந்து தழைத்த செல்வமுடைய யவன நாடு உள்ளிட்ட பகுதிகளில் சென்று தமிழ்மக்கள் வாழ்ந்து வந்தனர்.

## பெருவள நாடு

தனது பொறுப்பான கடமையில் தவறி, தமிழகத்தைத் தன் பால் கொண்ட தென்கடல், முன்னர்ச் செழுந்தமிழ் நாடாக இருந்த காலை நல்ல கடலும்கூட விரும்பும் அளவு மிகுந்த வளம் நிறைந்த பிற நாடுகள் செல்வம் கடன் கேட்கப் பொலிந்து இருந்தது பெருவள நாடு.

ஆயிரம் தொலைகற்கள் அளவு பரப்புடையதாகி, அயல் நாட்டவர் பேராசை கொள்ளும்படியாகவும் இப்பகுதியை விட்டுப் போனவர் ஏங்கும்படியாகவும், பொலிவு பெற்ற செல்வவளம் நிரட்டுப் பொருள் சேர்த்துவைக்கும் அறை போல அது திகழ்ந்தது.

அப்படிப்பட்ட பெருவளநாட்டின் அணி செய்யும் உறுப்பு ஆகக் கதிரவன் தாண்டிச் செல்ல நடுக்கம் கொள்ளும் அளவுக்கு வெகு தொலைவு வானில் ஓங்கி உயர்ந்து மாணிக்கத் தூண்போல மேலோங்கிய செல்வவளம் தாங்கிக் குமரி என்னும் மலை திகழ்ந்திருந்தது.

அந்த நிலப்பரப்பின் மேற்குப் பக்கம் அழகிய அரணாகத் திகழ்ந்த குமரிமலை, தமது உள்ளத்தின் ஊக்கமானது தளர்வுறும் அளவு பகைவரின் செருக்கினை வீழ்த்தக்கூடிய ஆற்றலொடு நெடுகப் பரந்து, அகன்று, விண்முகில் மோத உயர்ந்து விளங்கியது.

அப்படிப்பட்ட குமரி மலையில் தோன்றியதால் அந்தப் பெயரைப் பெற்று அதாவது குமரியாறு என அழைக்கப்பெற்று, காணப்பெறும் அலைக்கரங்களைக் கண்டு மகிழ்ந்து எதிரே இருண்ட மழை முகில் போல நீர் வளம் சுரந்து பாய்ந்து குமரி மலை நாடாகிய பெருவளநாட்டுக்கு அழகு செய்தது.

புகழ்நாட்டிக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டின் தென்பகுதியில் இன்றிருக்கும் குமரி முனையிலிருந்து பார்த்தால் தெற்கே இருநூறு கல் பரப்பளவில் வளம் செய்யும் குமரியாறு ஓடியது.

இவ்வாறு தமிழகமும் தமிழகத்தில் எல்லை, தமிழ்மொழியின் சிறப்பு ஆகியவற்றை இராவணகாவியம் மூலம் அறிந்து கொள்ளலாம்.

## சொற்பொருள்

வாணிக நாடு - யவன நாடு

கடல் நாடும் - கடலும் விரும்பும்

பொன் கடன் நாட - செல்வம் கடன் கேட்க

செம்மல் - (பகைவரின்) செருக்கு

நோட்டம் – பார்வை

ஊட்டுதல் - வளஞ் செய்தல்

# குறுங்காவியம்

## வீராயி - தமிழ்ஒளி

### ஆசிரியர்

கவிஞர் தமிழ்ஒளி 1924ஆம் ஆண்டு செப்டம்பர் 21ஆம் நாள் பிறந்து, 1965ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 29ஆம் நாள் 40 ஆண்டுகள் வாழ்ந்து மறைந்தார். தந்தை பொ.சின்னையா, தாய் செங்கேணியம்மாள். தலைமகன் ஆனதால் தன் தாயின் தாய் வீட்டில் (பாட்டி வீட்டில்) குறிஞ்சிப் பாடியை அடுத்த ஆடூரில் பிறந்தார். கவிஞரின் இயற்பெயர் விஜயரங்கம். பெற்றோர் செல்லமாக அழைத்த பெயர் பட்டுராசு. கவிஞர் அவராகச் சூட்டிக் கொண்ட தமிழ்ஒளி என்ற பெயர் அவரைப் புரட்சிப் பாவலராக அடையாளப்படுத்தியது.

கவிஞர் தமிழ்ஒளி புதுவைக் கல்வே கல்லூரியிலும் கரந்தைத் தமிழ்க் கல்லூரியிலும் பயின்றவர். புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனின் அன்பிற்கு ஆட்பட்டவர்.

தமிழ் இதழ்களில் பணியாற்றிச் சிறந்த இதழாளராகவும் தமிழ்ஒளி திகழ்ந்தார். அவ்வகையில் குறிப்பிடத்தக்க இதழ்கள் முன்னணியும் ஜனயுகமும் ஆகும்.

கவிஞர் தமிழ்ஒளி பன்முகப் படைப்பாளியாகவும் கவிஞராகவும் விளங்குகிறார். அவரின் காவியப் படைப்புகள் கவிஞனின் காதல், நிலைபெற்ற நிலை, வீராயி, மேதின ரோஜா, விதியோ வீணையோ?, மாதவி காவியம், கண்ணப்பன் கிளிகள், புத்தர் பிறந்தார், கோசலைக்குமரி ஆகியனவாம்.

கவிஞர் தமிழ்ஒளியின் கவிதைத் தொகுப்புக்களான தமிழ்ஒளியின் கவிதைகள், மக்கள் கவிதைகள் ஆகியவை குறிப்பிடத்தக்கனவாம். குழந்தைக்கான பாடு பாப்பா என்ற கவிதைத் தொகுப்பும் அவருடையதாகும்.

கவிஞர் தமிழ்ஒளியின் சிலப்பதிகாரம் நாடகமா? காவியமா?, திருக்குறளும் கடவுளும், தமிழும் சமஸ்கிருதமும், தமிழ்ச் சமுதாயம் ஆகிய கட்டுரைகளும் சிறந்த படைப்புகளாகும்.

கவிஞர் தமிழ்ஒளி சிறுகதை படைப்பதிலும் தம் பங்களிப்பைச் செய்துள்ளார். அவையாவன அறிவூட்டும் 100 அற்புதக் கதைகள், குருவிப்பட்டி, உயிரோவியங்கள் என்பன. மாமாவின் சாகசம் என்ற குறுநாவலையும் படைத்துள்ளார்.

தமிழ்ஒளி நாடகங்களாகக் கவிஞர் விழா, சிற்பியின் கனவு ஆகியவற்றைத் தீட்டியுள்ளார்.

முதலில் திராவிட இயக்கத்திலும், அடுத்துப் பொதுவுடைமை இயக்கத்திலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு பணியாற்றிவர் கவிஞர் தமிழ் ஒளி.

## வீராயி

கவிஞர் தமிழ்ஒளியின் காப்பியம் **வீராயி**. சிதைந்த சேரி, வீராயி தப்பினாள், நிலைபெற்ற உறவு, வாழ்வில் இடி, அண்ணன் எங்கேடி, கொலைகாரன், மன்றினில் வீரன், சிதறிய குடும்பம், தேயிலைத் தோட்டத்திலே மாரி இறந்தான், காதலன் கிடைத்தான், கண்ணீர் வெள்ளம், கப்பல் ஏறினர், மங்கையுடன் வந்தான், பறைச்சியா?, பயப்படாதே, புரட்சி மணம், நாடு செய்த தீமை, முடிந்தது வாழ்வு ஆகிய உட்பிரிவுகளால் ஆனது.

இக்காப்பியத்தில் எண்சீர் ஆசிரிய விருத்தங்களும் ஆறுசீர் ஆசிரிய விருத்தங்களும் சிந்துப்பாக்களும் கலிவெண்பாவும் ஆசிரியமும் விரவி வந்துள்ளன.

### சிதைந்த சேரி

மழை பிடித்துப் பெய்கிறது ஐப்பசியில்;
ஏழை மனங்குமுறும் விதம்போலும் இடிக்கிறதுவானில்!
தழை பிடித்த மரமெல்லாம் குளிர்பிடித்துக் கொள்ள,
தலைநீட்ட முடியாமல் பறவையெலாம் அங்கு
விழிமூடித் துணைகளுடன் சிறகணைத்துக் கொண்டு
வேடன்போல் தாக்குகிற ஊதலிடைத் துஞ்சும்!
கிழித்தெழுந்து முகில்தன்னைப் புரட்சியுள வேகம்,
கீழ்த்திசையும் மேற்றிசையும் காட்டிவிடும் மின்னல்

நீரோடு நீர்மோதிக் குளமெல்லாம் வழியும்
நெடுந்தூர வாய்க்காலில் பெருகிவரும் வெள்ளம்
வேரோடு செடி கொடிகள் அள்ளிவந்து சேர்க்கும்
'விதி' நம்பிக் கத்துகிற வெறுங்கூச்சல் காரர்
ஊரோடு சேர்ந்தூளை யிடுவதனைப் போலே

ஒருபெரிய ஒலிக்கோவை யிடுந்தவளைக் கூட்டம்!
போரோடும் எரிகின்ற வைக்கோலின் புகைபோல்
புதுமுகில்கள் கூடாரம் அடித்துவிடும் வானில்

தரையெல்லாம் புரையோடிச் சில்லிட்டுப் போகும்
தாழ்வார மூலையிலே ஆடுடனே மாடும்
ஒருசாணின் அளவினிலே உடல்ஒடுக்கி நிற்கும்!
ஒண்டஇடம் இல்லாமல் ஊரெங்கும் சுற்றித்
தெருவினிலே கையேந்திச் சிறுபிச்சை வாங்கித்
திரிவோர்கள் குறட்டோரம் போய் நின்று மெய்யை
இருகையின் ஆதரவால் காப்பாற்ற முயல்வார்!
எதிர்த்தடிக்கும் சாரலிலே என்செய்வார் பாவம்?

நொடிக்கு நொடி மழை நூறு நூறு மடங் காக
நொள்ளை விழி உள்ளும்போய்ப் பாய்கின்ற மின்னல்,
இடியுடனே மிக அதிக வேகத்தைக் கொள்ள
இருட்டியது குகைபோலும் எங்கெங்கும் அந்தோ!
நடிப்பன்றி மெய்யறியா உலகிற்கே இன்று
நாசந்தான் கிட்டியதோ ! என்னென்று சொல்வேன்?
அடியெடுத்து வெளியினிலே வைப்பார்கள் இல்லை!
அணைந்ததுவாம் ஊர்முற்றும் மின்விளக்கு கூட

காடுவெட்டிக் கழனியெலாம் உழுதுழுது வையக்
காவல் செயும் உழவர்களும், மக்கள் நலம் பேணி
வீடுகட்டி வைத்தவரும், ஆடையெலாம் நெய்து
வீட்டாரின் நாட்டாரின் மானத்தைக் காக்கப்
பாடுபடுந் தோழர்களும், பனிவெய்யில் யாவும்
படுவதனைத் தடைசெய்யக் குடை செய்து, செக்கு
மாடுகளாய் உழைத்தவரும், வெள்ளத்தில் வீழ்ந்து
மரணத்தின் பின்னோடும் எறும்பாகித் தவித்தார்

மஞ்சத்தில், பஞ்சணையில் நெஞ்சுவக்கக் குந்தி
மகிழ்பவர்கள் அடைமழையைப் பொருட்படுத்த வில்லை
வெஞ்சுரத்தில் வெள்ளத்தை உண்டாக்கு கின்ற
வீறுடைய தொழிலாளர் ரத்தத்தின் மேலே
கொஞ்சமுமே கூசாமல் உட்கார்ந்து கொண்டு
கும்மாளம் அடிப்பவர்கள் மழைக்கஞ்சு வாரோ?
கஞ்சிக்கும் வழியின்றிக் கண்ணீரைச் சிந்தும்
கதியற்ற ஒருகூட்டம் கலங்குவதார் கண்டார்?

சொத்தெல்லாம் விளைத்தவனைச் சுரண்டுதடா வையம்
சுடர்மாடம் கட்டியவன் வெய்யிலிடைப் புழுவாய்க்
கொத்தடிமை யாகின்றான்; ஈதென்ன துன்பம்?
கோடுயரும் மாடங்கள் மதிற்சுவர்கள் சூழ
செத்தையினை அசைக்காதார் சுகந்துய்த்தல் காணீர்!
சேரியிலே அடடாவோ உழைக்கின்ற கூட்டம்
பொத்தல் மிகுங் குடிசையிலே வாழ்கின்றாரையா !
புயல்கிளப்பும் மழையினிலே அவரென்ன செய்வார்?

விண்மீன்கள் மொய்த்ததுபோல் பொத்தலடா பொத்தல்!
வெற்றுடலில் சுற்றுகிற கந்தலெனக் கீற்றுக்
கண்களிலே மழையோட்டம் அருவியெனப் பாயும்
கதறியழு கின்றார்கள் ஏழையெலாம் அங்கே!
உண்டுறங்கும் மகராசர் காதினிலே இந்த
ஓலந்தான் கேட்டிடுமோ? இல்லையடா இல்லை!
கண்டிரங்கா நெஞ்சத்தைக் கல்லென்று சொல்வேன்
காட்டுவிஷப் பாம்பென்று நீங்களெலாஞ் சொல்வீர்!

சுவரெல்லாம் ஓதமடா ; சுற்றிலுமே ஈரம்
'சோ'என்று பெய்கின்ற மழையெல்லாந் தலையில்
தவிக்கின்றார் பறவையிளங் குஞ்சுகளைப் போலே!
தணல்காணா துறங்குகிற அடுப்போரம் ஓடி,

சவம்போன்று சில்லிட்ட உடல்சுமந்து நிற்பார்!
'தட்டடடடா; வெட்டடடடா' என்னும்இடி யோசை!
எவன் நம்மைச் சுரண்டுகிறான்? அவனிந்த இன்னல்
இழைத்திட்டான்; 'விதி' யென்றே ஏடெழுதி வைத்தான்

ஏழைகளே, பசிப்பிணியில் வறுமையிலே சிக்கி,
ஈடில்லாக் கோடையிலும் மழையி லுமே பட்டு,
வாழை யெனப் பிறருக்குப் பலன் தந்து நீங்கள்
வாழாமல் சாகாதீர்! சத்தியமாய்ச் சொல்வேன்!
'கோழை நிலை வெட்டிடடா ; பணக்காரர் ஆட்சி
'குப்புறவே கவிழ்த்திடடா' என்னும் இடி யோசை!
தாழையிலே வாழ்கின்ற பாம்புபணக் காரர்!
தரித்திரத்தை உண்டாக்கம் கொள்ளை, அவர் கொள்ளை!

பஞ்சத்தை முதலாளி கொடுக்கின்ற கூலிப்
பைசாவைத் 'தலையெழுத்தின் பலன்' என்று சொல்லும்
பஞ்சையடா பஞ்சை ! யவர் நெஞ் செல்லாம்
நொந்தார் பச்சையிளங் குழந்தைக்குப் பாலில்லை அண்ணே!
வஞ்சனையே அறியாதார் வாடுகிறார் என்னே!
வலுவிழந்த குடிசைகளே அரண்செய்யும் சேரி
மிஞ்சிடுமோ? அம்மக்கள் பிழைப்பாரோ ஐயோ !
மேற்கினிலே பேரிரைச்சல் தோன்றுவதைக் கேளீர்!
கரைபெயர்ந்து விட்டதுவாம் அவ்வூரின் ஏரி
கடலலைபோல் படையெடுத்து வருகிறது வெள்ளம்?
இருட்டினிலே சாக்காட்டை எதிர்நோக்கி விட்டார்!
இடுப்பொடிய உழைத்தபலன் இன்றைக்குக் காண்பார்!
குருட்டுலகம் செவிட்டுலகம் கொலைகார உலகம்
கொஞ்சமுமே ஏழைகளின் நிலைகருதல் உண்டோ?
உருண்டதடா குடிசையெலாம் வெள்ளத்தின் மேலே
'ஓ' என்ற குரலெழுப்பி அழுகின்றார் மக்கள்

குழந்தையினை மார்பணைத்தப் பெண்களொரு பக்கம் !
'கோ'வென்று கதறுகிற ஆடவரின் ஓலம்!
தழுவியுமே அன்பாலே வெள்ளத்துத் தாயைச்
சரண்புகுந்து வையத்துக் கொடுமையினை நீத்தார்!
அழவில்லை பணக்காரர், ஆறறிவு பெற்றோர்!
அழுதனவே அந்நேரம் தவளையுடன் பாம்பும்!
அழவில்லை சேரிதனை ஒதுக்கியுமே வைத்த
அன்பரெலாம்; அந்நேரம் அழுததுவே வானம்!

சேரியினைச் சூறையிடும் வெள்ளத்தின் மேலே
சிறைப்பட்ட வைக்கோலின் போரொன்று காணீர்!
காரிருளைக் கிழித்த தொரு மின்னல் ! அட அந்தக்
கனமிகுத்தப் போர்மேலே இருமனிதர் உருவம்!
கூரம்பின் குறிதப்பிப் பிழைத்திட்ட பறவைக்
குஞ்சுகள்போல் நெஞ்சிணைத்து வைக்கோலின் போர்மேல்
ஆரவுடல் தழுவியுமே கிடக்கின்றார்; வெள்ளம்
அடித்துக்கொண் டோடுதந்த வைக்கோலின் சுமையை

இரவெல்லாம் புரண்டோடி ஓய்ந்திட்ட வெள்ளம்
இருங்கடலில் போய்வீழ்ந்து களைப்பாறும் நேரம்
கரம்விரித்துக் கடலலைமேல் ஒளிசிந்திக் கோலக்
காட்சியிலே கண்விழித்துக் கதிரவனும் எழுந்தான்
மருதூரின் சிறுசேரி இருந்தஇடம் எங்கே?
மண்மூடிப் போய்விட்டக் கொடுங்கோரக் காட்சி !
குருதியினை வியர்வை யெனக் கொட்டியுழைத் தோரின்
குடும்பங்கள் அழிந்தனவாம், கொடுமைக்குத் தப்பி !

வாழ்விதுதான் 'பொய்' யென்றான் காவியுடைக் காரன்
வாழ்விதுவும் 'பொய்' யென்று மகராசன் சொன்னான்
தாழ்வதுவும் உயர்வதுவுந் 'தலைவிதி யால் என்னுந்
தத்துவத்தைப் பண்டிதனும் சொல்லிவிட்டுப் போனான்

பாழடைந்த சேரிக்குப் பலசதைகள் சொன்னார்
பரிதாபக் காட்சியினை மேற்பூச்சுப் பூசிச்
சீழொழுகுங் கட்டியினைச் சீலையினால் மூடுஞ்
செயல்போன்று நியாயங்கள் ஏதேதோ சொன்னார்

ஒன்றுமட்டும் உண்மையிதில்; சொல்கின்றேன் கேளீர்:
உயிர்வாழ, ஊர்வாழ ஒருபெரிய தேசம்
இன்றுமட்டும் வாழ்வதற்குப் பகலிரவா யுழைத்த
ஏழைகளை நிர்க்கதியாய் விலங்கினுமே கேடாய்
நன்றியின்றி ஊர்க்கப்பால் நடமாட்டம் அற்ற
நஞ்சொத்த இடத்தினிலே ஒதுக்கியுமே வைத்துக்
கொன்றுவிட்ட இந்நாட்டார் வாழ்வுநிலை யில்லை!
கொடும்பிரிவு தீரும்வரைநேர்ந்திடு மித் தொல்லை!

பெருந்தொந்திக் காரர்களும் சரிகை தலைப் பாகைப்
பேர்பெற்றப் பெரியதனக் காரர்களும் இங்கு
விருந்தருந்தி வாழ்வதற்கு விலாவெலும்பு நோக
'விதி' நம்பி உழைத்தவர்கள் கதியிதுதான் கண்டீர்!
மருதூரின் சேரியினர் மண்ணோடு மண்ணாய்
மறைந்தனராம் தமிழரசு மறைந்ததனைப் போன்று!
பெருநாடே நீ அவர்க்குத் தந்தபரி சிதுவோ?
பிறர்வாழ உயிருதவுந் தமிழ்நாடு நீயோ?

புல் பூண்டும் மண்ணுள்ளே போய்மறைந்து கொண்டு
பொங்கி வருந் துக்கத்தை அடக்குவன போலும்!
நல்லவரின் மரணம்போல் வருத்தமிகுந் தோற்றம்!
நலமிக்கப் பெருநாடு பேரடிமை யுற்றுச்
செல்வத்தை இழந்ததுபோல் நெஞ்சுருகுந் தோற்றம்!
செத்தவர்கள் தமக்கிங்கே ஒருசொத்து மில்லை!
எல்லாமும் எசமானர் பெட்டியிலே பொன்னாய்
இருப்பதனை இவ்வுலகம் எவ்வாறு நம்பும் ?

## வீராயி தப்பினாள்!

சேரியினர் எல்லோரும் மறைந்தார்கள் என்ற
சேதியது பரவுகையில் மருதூரின் மேற்கே
தேரினிலே உச்சியினிற் பொம்மையினைப் போன்று,
சீற்றமது தணிந்திட்ட வெள்ளத்தில் வைக்கோல்
போரிடையே இருஜீவன் ! உணர்வேதும் இன்றிப்
பொழிபனியில் நனைந்திட்ட மரம்போன்று கிடந்தார்!
ஊரிடையே செல்லுமொரு வாய்க்காலைத் தொட்டே
ஓடுகின்ற வெள்ளத்தில் மிதந்ததுவாம் வைக்கோல்!

புதுப்பட்டி என்கின்ற பெயருடைய தவ்வூர்!
போய்மறிக்கும் பாலத்தின் கீழாக வெள்ளம்
முதுகுதனை நெளித்துக்கொண் டோடிற்றுச் சீராய்!
மொய்வைக்கோல் போரந்தப் பாலத்தில் மோதி
மெதுவாக நகர்ந்தே,பின் அசைவேதும் இன்றி
மிகவுயர்ந்து பாலத்தின் மேலுயர்ந்து நிற்கும் !
இதுகண்டார் புதுப்பட்டி தன்னிலிருப் போர்கள்!
'என்னவிந்தை' யென்றோடி வந்தங்கே பார்த்தார்!
இளமங்கை ஒருத்தி; ஒரு கிழவன்; இரு ஜீவன் !
இலையுதிர்ந்து கிடப்பதைப்போல் கிடப்பதனைக் கண்டார்!
உளமிரங்கிப் புதுப்பட்டிக் காரர், சிலர் அங்கே
உறுவைக்கோல் போர்மீது முயன்றேறி அந்த
எளியவரைத் தூக்கியுமே வந்தார்கள்;கண்டார்!
என்னபரிதாபமடா கிழவனுயிர் இல்லை!
வெளுத்தமுகம், வெற்றுடலாய்க் கிடந்திட்டான் கிழவன்!
மெல்லிழைபோல் மங்கைக்கு மூச்சுவரும், போகும்!

வேடிக்கைப் பார்க்கின்ற கும்பலிலே ஒருவன்
வீரண்ணன் என்கின்ற பறைச்சிறுவன் அங்குக்
கூடிநின்ற மனிதரிடம், 'மருதூரின் சேரி

குடிமுழுகிப் போனதெனச் சொன்னதெலாம் உண்மை!
ஓடியுமே வந்தபெரும் வெள்ளத்திற் சிக்கி
உயிர்துறந்த இக்கிழவன் தனை நானும் அறிவேன்!
'வேடப்பன்' இவன்பெயராம்; இப்பெண்ணின் தந்தை!
'வீராயி' எனும்பெயர்தான் இவள்பெயராம், என்றான்!

வியப்புற்றார் அங்கிருந்தோர்; அடுத்தகணம் அன்னோர்
மெதுவாக நழுவியுமே நடந்திட்டார் என்னே!
பயப்பட்டார் பறையர்களைத் தொட்டெடுத்து விட்டால்
பார்ப்பவர்கள் என்சொல்வார் என்றொதுங்கிப் போனார்!
தயைமிக்க இந்துமதம் வளர்த்துவிட்ட எண்ணம்!
தமிழரிடை இத்தீமை விளைத்தவரைக் காணின்
கையிரண்டும் காலிரண்டும் வெட்டி அவர்கண்ணைக்
கழுகுக்குப் பலியிடுவேன்; என்ன இது நீதி?

வீரண்ணன் பார்த்திட்டான்; இரக்கமொரு பக்கம்
மேல்சாதிக் காரர்களின் விந்தையொரு பக்கம்
ஈரமிகும் நெஞ்சத்தைச் சுமந்தோட லானான்
இரண்டடியிற் சேரியினைப் போயடைந்து கூவி
'வாரீரோ' மருதூரின் வேடப்பன் மாண்டு
மடிந்திட்டான்; அவன்மகளோ குற்றுயிராய்ப் போனாள்
போரான வைக்கோலில் தொத்தியுமே வந்தார்;
'புறப்படுக!' எனச்சொல்லி உறவினரை அழைத்தான்

தாழ்த்தலின்றி வீரண்ணன் தந்தையுமே வந்தான்:
'தம்பி, அவன் நம்குடிக்கே ஒன்றுவிட்ட சொந்தம்
ஊழ்வினையால் நாம்வேறு, அவன்வேற தானோம்
ஒருமகளை விட்டவனும் இறந்தானா, பாவம்!
மூழ்கியதோ மருதூரின் சிறுசேரி அந்தோ!
முதலில்நாம் அப்பெண்ணைக் காப்பாற்ற வேண்டும்;

ஏழ்பிறப்பும் புண்ணியத்தைச் செய்தோர்கள் ஆவோம்;
இப்போதே வா' என்றான் பறந்தார்கள் அங்கே!

அவர்பின்னே மற்றும்சிலர் ஓடிவர லானார்!
அடைந்தார்கள் பாலத்தை ; வீரண்ணன் தந்தை
கவலையுடன் சென் றந்தக் காரிகையைத் தூக்கிக்
கடிதினிலே வீட்டுக்கு நடந்திட்டான்; - கிழவன்
சவந்தன்னைச் சேரியினர் சூழ்ந்தார்கள்; பையன்
தன்னுறவை அவர்களிடம் வெளிப்படுத்திக் கொண்டான்
சுவையில்லா வாழ்க்கையினைத் தொலைத்துவிட்ட வேடன்
சுடுகாட்டுக் கேகிவிட்டான் சேரியினர் துணையால்!

சாதியிலே தாழ்ந்தவராய் ஏழையரா யிங்குத்
தலைமுறைகள் பலகழித்தும் அடிமைகளா இந்தத்
தேதிவரை வாழ்கின்ற எளியோர்க்கு வசதி
தேவை; அவர் வாழ்க்கைக்குச் காப்பளிக்க வேண்டும்!
நீதிசெய முன்வருவாய், தமிழ்நாடே நீதான்;
நிலமுழுது நெல்விளைத்துக் காவலெலாங் காத்து
தீதின்றி நாம்வாழச் செய்கின்ற மக்கள்
திக்கற்றுச் சாவதெனில் மாக்கொடுமை யன்றோ?

அவர்தானே நம்ஆடு, மாடுகளைக் காத்தார்?
அவர்தானே தானியங்கள் அத்தனையும் சேர்த்தார்?
எவர்மறுப்பார்? உழைப்பெல்லாம் நாமுறிஞ்சி விட்டோம்
"எக்கேடும் அவர்கெட்டால் நமக்கென்ன?' என்று
சுவர்போலும் மரம்போலும் இருக்கின்றோம் நாமே!
தொல்லையெலாம் அவருக்குச்; சுகமெல்லாம் நமக்கோ?
தவறுதலே நம்வாழ்க்கைத் தத்துவமாய்க் கொண்டோம்;
தக்கதொரு நியாயத்தைச் செய்துவிட வேண்டும்!

## நிலைபெற்ற உறவு

வீரண்ணன் தந்தையவன் மாரிஎனும் பறையன்
வீராயி தனக்கங்குப் பணிவிடைகள் செய்தான்
ஈரத்தை உலர்த்திவிடத் தீப்பற்ற வைத்தான்
எப்படியோ ஒருவாறு தப்பிவிட்டாள் நங்கை!
யாரிவர்கள், நாமெங்கே இருக்கின்றோம்? என்றே
அறிய அவள் முயற்சித்தாள், பேச்சுவர வில்லை
'வீராயி, அஞ்சாதே!' என்றுசொல்லி மாரி
விரைவினிலே நொய்கஞ்சிக் காய்ச்சுதற்குச் சென்றான்

குளிர்காயும் வகைசெய்து கஞ்சியினைக் காய்ச்சிக்
கொடுக்கின்ற பணியினிலே ஈடுபட்ட மாரி
வெளிசென் ற தன்மகனை எதிர்பார்த்த போது,
வீரண்ணன் விரைவாக வீட்டிற்குள் நுழைந்தான்
ஒளிபெற்றாள் கண்களிலே; உயிர்பெற்றாள் நங்கை!
ஒன்றுமே புரியாத புதிரான நிலைமை!
கிளிபோன்று வாய்திறந்தே 'அப்பா'என் றழைத்தாள்
கேட்டதுமே மாரியவன் விசனத்தைக் கொண்டான்

'வீராயி, நீ சிறிதும் கவலையுற வேண்டாம்;
வேறில்லை, நாங்களெலாம் உன்சொந்தக் காரர்
யாராரோ செய்திட்ட புண்ணியண்டி, அம்மா!
உன் தந்தை இறந்திட்டார்; நீ தப்பி விட்டாய்
ஊரெல்லாம் மூழ்கியதே உன்னுயிர்தான் கெட்டி!
உனக்கொன்றும் நேராது பசிதீரக் கஞ்சி
நீரருந்திக் களைப்புதனைப் போக்கிக்கொள் கண்ணே!
நீ எனக்கு மகள் தான்; என் ஆதரவில் வாழ்வாய்?
என்றுசொல்லித் தன்பழைய துணிஒன்றைத் தந்தான்
எழுந்திருக்க முயற்சித்தாள்; வீராயி சோர்ந்தாள்

அன்றிருந்து தாயில்லா எனைவளர்த்து விட்ட
அப்பாவோ இறந்திட்டார்; நான் பிழைத்தும் என்ன?
ஒன்றல்ல பலதுன்பம் உற்றோம்! எம் சுற்றம்
ஒழிந்தவுடன் நாங்களுமே ஒழிந்திருக்க வேண்டும்
குன்றேபோல் மிதந்துவந்த வைக்கோலில் ஏறிக்
குந்தியபின் நடந்ததெலாம் நானறிய மாட்டேன்'

பலசொல்லி அழுதிட்டாள்; வீரண்ணன் நெஞ்சம்
பாசத்தால் விம்மியது; "நம்தங்கை யிவளாம்
விலகியதோர் உறவுதனைச் சேர்த்துவிட்டாள் தங்கை"
விழிகளிலே அன்புதனைப் பெருகவைத்தான் வீரன்!
'கலங்காதே, வீராயி இவன் உன்றன் அண்ணன்
கஞ்சியினைக் குடி' என்று மாரியுமே சொன்னான்
நிலைபெற்று விட்டதடா அவர் உறவும் அன்றே!
நீக்கிவிட இனியுலகில் எவராலே முடியும்?

கஞ்சியினை அருந்தியபின் களைப்பு நீங்கிக்
கடுந்துயரம் வீராயி பொறுத்துக் கொண்டாள்
பஞ்சையரின் அன்பதுவே தூய்மை யாகும்!
பசிப்பிணியில்,வறுமையெனுந் தீயில் அன்னோர்
நெஞ்சகத்தில் வாழ்வதுவே உண்மை அன்பாம்!
நிலத்திற்கும் பொருளுக்கும் ஆசைப் பட்டுக்
கொஞ்சுபவர் பணக்காரர்; ஈரம் சற்றுக்
குறைந்திட்டால் அவர்உறவும் குறைந்து போகும்!

பேரரசின் வீழ்ச்சியினை, இறுமாப் போடு
பிறர்நாட்டைப் பிடித்தாண்ட மன்ன ரெல்லாம்
வேரற்று வீழ்ந்ததனைச், சாம்ராஜ் யங்கள்
வெற்றுடலா யானதனைக் கண்டும், கொஞ்ச
நேரமுமே நின் றிருந்து பார்த்தி டாமல்

நீள்வழியில் ஓடுகிற காலம், அந்தச்
சேரிதான் அழிந்ததனைப் பார்த்துக் கொண்டு
சிலைபோன்று நின்றிடுமோ? பறந்தோ டிற்றே!

## வாழ்வில் இடி

நாள், கிழமை, மாதங்கள் ஓடி, ஆண்டும்
நகர்ந்ததுவே பலமா ற்றம் நிகழ்த்தி விட்டு!
வாள்விழியாள் வீராயி, பருவ வானில்,
வண்ணமதி போல்அழகில் வளர்ந்து வந்தாள்
தேள்போன்ற வஞ்சகர்கள் வாழுகின்ற
திருட்டுலகில் மெய்யான ரசிகத் தன்மைக்
கேள்கொண்டா ரிடத்தினிலும் இருப்ப தில்லை !
கீழ்மையினைச் சுவைப்பதுவே வாழ்வா யிற்று!

புதுப்பட்டி ஜமீன்தாரின் வயலுக் கந்தப்
புனிதையுமே நடவுநடச் செல்வாள்; ஏழை
முதுகினிலே ஏறியுமே வீற்றி ருக்கும்
முரட்டுளமும் காமமுமே கொண்டோ னான
மதுக்குடியன் ஜமீன்தாரன் நாளும் வந்து
வயலிடையே வீராயி தன்னைக் கண்டு
முதுமைமிகும் எருதொன்று வைக்கோல் தன்னை
முறைத்துநின்று பார்ப்பதுபோல் பார்த்துச் செல்வான்

எப்படியும் இப்பெண்ணை அடைய வேண்டும்.
இன்றேல் நம் ஆவியிருந் தாவ தென்ன?
தப்பியிவள் பறையரிடம் பிறந்து விட்டாள்;
தனியாக இவள் கூலி கேட்க வந்தால்
கைப்பிடியில் அடக்கிடலாம் என்றே எண்ணிக்
கள்ளனவன் தீமையினை வளர்த்தான் நெஞ்சில்
இப்புவியில் பயமின்றி ஏழை மக்கள்
எவ்வாறு வாழ்வார்கள் ? ஒருநாள் தன்னில்,

அந்தியிலே புட்களெல்லாம் கூடு தேடி
ஆகாய வீதியிலே கீதம் பாடி
சிந்தை மிகக் களிப்புற்றுச் செல்லும் போதில்,
தேன்மொழியாள் வீராயி வயலை விட்டே
அந்தகனாம் ஜமீன்தாரின் வீட்டை நோக்கி
அன்றைக்குப் பெறுங்கூலி கேட்கச் சென்றாள்!
கொந்தளித்துக் குமுறிற்று வானம் அந்தக்
கோதையவள் மிக அஞ்சி நடக்க லானாள் !

வீட்டருகில் போய்நின்றாள்; முகிலின் கூட்டம்
விரைவாக வானிடையே சூழ்ந்துகொண்டு
கோட்டைமுர சொலிப்பதுபோல் இடித்துக் கூவிக்
கொக்கரித்து மின்னெழுப்பி மழையைச் சிந்த
பாட்டு மொழிப் பாவையுமே நொந்தாள் ; அந்தப்
பாதகனும் வீராயி தன்னைக் கண்டு
வேட்டையது கிடைத்ததென எண்ணிக் கொண்டு
வெளியில் ஏன் நிற்கின்றாய்? வா, இங்" கென்றான்.

மழையினிலே நனையாதே; ஆபத் திற்கு
மண்ணினிலே பாபமெதும் இல்லை யன்றோ?
பிழையாக நான் கருத மாட்டேன் ; தீட்டுப்
பேசுவதும் என் வழக்க மில்லை' யென்றே
அழைத்திட்டான் ; வீராயி களங்க மின்றி,
அவன் கருத்தைக், காமத்தை உணரா ளாகி
நுழைந்திட்டாள்; அவ் வெறியன் மிருக மானான் !
கொடியினிலே வீழ்ந்ததிடி அவளின் மேலே!

பருந்தொன்று கோழியிளஞ் குஞ்சு தன்னைப்
பாய்ந்தடித்துக் கவ்வுதல் போல், அவளைப் பற்றி
ஒருகணத்தில் அறைக்குள்ளே இழுத்துச் சென்றான்!
ஓடியுமே இமைப்பினிலே தாழை யிட்டான்!

திருமிக்காள் வீரர்யி வீரங் கொண்டாள்;
திடங்கொண்டாள்; பெருங்கூச்சல் இட்டாள்; அந்தோ
திருடனிடம் அகப்பட்டேன்! என்றே கத்தித்
திகைப்புற்று மிகக்கதறிப் புடைத்து நின்றாள்

நேரந்தான் ஆயிற்று. மழையும் வந்து
நின்றெப்போ போயிற்றே; இன்னும் தங்கை
வீராயி வரவில்லை' என்றே எண்ணி
விறகுதனைப் பிளந்திருந்த வீரண் ணண்தான்
கூரான கோடரியைக் கீழே வைக்குங்
கொள்கையினை மறந்தோனாய், விரைவு கொண்டே
நேராக ஜமீன்தாரின் வீட்டுப் பக்கம்
நிமிடத்தில் ஓடியுமே நின்று பார்த்தான்.

'கூலிபெறச் சென்றிருப்பாள்' என்ற எண்ணங்
கொண்டவனுந் தேடுகையில் குணமொன் றில்லாக்
காலியவன் ஜமீன்தாரின் வீட்டில் தங்கைக்
கதறுமொரு குரல் கேட்டான்; கதவைப் பார்த்தான்!
நூலிழையும் சந்தின்றித் தாழ்ப்பா ளிட்ட
நூதனத்தைக் கண்டிட்டான்; ஓடி நின்றே
ஆலியெனக் கோடரியை ஏந்திச் சீறி
அறைக்கதவைப் பிளந்திட்டான் வேகத் தோடே!

குலமகளைக் கற்பழிக்கத் துணிந்தோ னான
குடிகேடன், கோடையிடி கேட்ட நாகம்
கலங்குவது போல் நெஞ்சில் அச்சங் கொண்டு
கையுதறி நின்றிட்டான்; மேலும் மேலும்
பலங்கொண்ட வரையினிலும் பிளந்தான் வீரன்
பாறையினைப் பிளந்ததுபோல் கதவு தன்னை
நிலத்தினிலே விழுமாறு தகர்த் தெறிந்தே
நிமிர்ந்திட்டான்; ஜமீன்தாரை நேரில் கண்டான்!

அண்ணன் நின்றனன்; மங்கை அச்சமும்
அகன்ற தாமவள் ஒடி வந்துமே,
'பெண்ணைப் பெற்றிலா இந்த மூடனைப்
பெரிய வன்என நினைத்ததுண்டு நான்!
கண்ணி லான் பெருங் காமுகன் ஒரு
காட்டி னில்திரி மிருக மொத்தவன்!
எண்ணிலான், நிலை! எண்ணிலான் அறம்!
ஈனனாமிவன், ஈனன்!' என்றனள்.

'மான மற்றிடு மூடனே, அட!
மானிலம் உனை மதிக்குமோ துளி
ஞான மற்றிடு பேடியே, பெரு
நாணமற்றிடு புலையனே, சிறு
கானகந்திரி குறவ ராயினும்
கற்பெனில் அவர் ஆவி யாம், மதி
தானழிந்தனைத் தரும மோர்கிலாத்
தடிய னே, உனை விடுத்தி னடா!

கூலி பெற்றிட வந்த என் னுயிர்க்
குணமிகுத்திடு தங்கை யை, ஒரு
நீலி பெற்றிடு நீச னே, உன்
நெஞ்சில் ஏது நினைத்தனை? அவள்
தாலி பெற்றிடு வரையி னிற்சடை
தாங்கு முக்கணன் ஆயினும் அட!
மேலி டக் கை ஒப்பி லாள்; தலை
வெட்ட நானு ளேன் எவனையும்!'

என்று வீரனும் சீறுவான்; அவன்
எதிரில் நின்ற வம் மூர்க்கனும் "அட!

நன்று நன்றடா! கிட்ட வந்தனை !
நாய்களே உமை வாட்டு வேன்" எனச்
சென்று தன்னறை தன்னில் தொங்கிடும்
திரித்து பின்னு தோற்சாட்டையில்
ஒன்று பற்றியே ஓடி வந்துமே
ஓங்கி அடித்தனன் அவரையே!

சினமி குத்திட வீரனும், புலி
சீறு கின்ற தோர்நிலை யிலே, பெருங்
கனத்த கோடரி தூக்கியே அக்
கயவன் தன் தலை நோக்கியே, 'கைத்
தினவெ டுத்தது பாரடா, இனித்
திறமை காட்டடா மடயனே, இழி
நினைவை விட்டிடு' என்று பொங்கியே
நெருங்கி நின்றெதிர்த் தாக்கினான்!

## அண்ணன் எங்கே?

அடிபட்டப் பெரும்பன்றி அலறிக் கொண்டே
அகல்நிலத்து வீழ்வதுபோல் வீழ்ந்தான், அந்தக்
குடிகேடன், குணமில்லான் : நாணமிக்க
குலக்கொடியைக் கற்பழிக்கத் துணிந்த மூடன்!
இடிபட்ட சுவர்போலும் வீழ்ந்தான் ; ரத்தம்
எங்கணுமே பரவியது; வீரன் அந்தோ
பிடிபட்டான்; ஜமீன்தாரின் ஆட்க ளெல்லாம்.
பெருங்கூச்சல் கேட்டோடி வந்தார் அங்கே!

சூழ்ந்தார்கள் வீரனையே! சிறையில் மாட்டித்
துடுக்கடக்க வேண்டுமென இழுத்துச்சென்றார்!
'தாழ்ந்திருக்கும் நாய்களுக்குச் சலுகை தந்தால்

தலைமேலே ஏறிடுவார்' என்றார்,தீயில்
வீழ்ந்ததொரு புழுவென்னத் துடிதுடித்தே
வீராயி அழுதிட்டாள், சோர்ந்தாள் அண்ணா,
பாழ்நெஞ்சம் கொண்டவர்கள் இவ்வா றுன்னைப்
படுத்தினரே' என்றுள்ளம் வதைய லானாள்!

சாவடிக்குச் செய்திதனைத் தெரிவித்தார்கள்;
தலைச்சிகப்புச் சேவகர்கள் விரைந்தே வந்தார்!
'யாவரிவர், சிறுநாய்கள்? என்றே தங்கள்
அடக்குமுறை நடத்திவிடத் துணிந்தார்; வீரன்,
'நாவடக்கிப் பேசிடுவீர் என்றான்; 'உன்றன்
நடுமுதுகின் தோலுரிப்போம் நடப்பாய்' என்றார்!
காவல்செயுந் தன்மையினர் எலும்பு போட்டால்
கடிக்கின்ற நாயானார் பணத்தினாலே!
ஆயிதன் நெஞ்சு கொதித்ததே -என
தாவி யொடுங்கினும் அஞ்சிடேன்!
வாயில் வராதன பேசினால் - உமை
வாட்டிட என்வலி காட்டுவேன்!
தாயின் வயிற்றிற் பிறந்திலீர்- குணத்
தந்தையர் உம்மை வளர்த்திலார்!
நாயின் வயிற்றிற் பிறந்த நீர் – ஒரு
ஞாய மறிந்திட வொல்லுமோ?

ஏழை எளியவர் ஆயினும்-எவர்
ஈட்டிய சொத்தைத் திருடினோம்?
கூழைக் குடிப்பவர் ஆயினும் உங்கள்
குடியைக் கெடுத்திட வில்லையே!
பாழும் பணத்திமிர் கொண்டுமே - சதி
பண்ணத் துணிந்திடு மூடரே!

வீழும் அநீதி அநீதியே -கற்பை
விற்றிடல் என்னடா நீதியே!

கன்னியென் கற்பையழிக்கவே - அந்தக்
காமுகன் செய்தனன் மாபழி!
இன்னுயி ரண்ணன் காப்பாற்றுதல் - குற்றம்
என்றுமே சொன்னவன் ஆரடா!
இன்னல் விளைத்திட. சாட்டையால்-எமை
எட்டி அடித்தது நியாயமோ?
சின்னத் தனமவன் செய்யவோ?- இதைச்
சிந்தையில் நாங்களும் போற்றவோ?

செல்வம் படைத்தவர் யாவரும்-என்ன
செய்யினும் மானிலம் ஏற்குமோ?
தொல்லை யடக்க எதிர்க்கவும் - பெருந்
துன்ப மழித்துமே மீளவும்
இல்லையோ ஏழைக்கு ரிமைகள்-அட!
ஈனர்களே பதில் சொல்லிரோ?
வெல்வது நீதி நன்னீதியே - அட!
வீழ்ந்திடும் உங்கள் அநீதியே!

என்று குமுறிடும் தங்கையை -அவள்
இன்னுயிர் அண்ணனும் நோக்கியே,
"சென்று தந்தையிடம் சொல்லுவாய்-பயம்
சிந்தை யகற்றிடு; மீளுவேன்!
கொன்றுவிட இவர் விட்டிடேன் - வலி
கொண்ட என் தோளுண்டு தங்கையே!
தொன்றுதொட்டுத் துயர்ப்பட்டவர் - இந்தத்
துன்பத்தைக் கண்டுமே அஞ்சவோ?

தந்தை நமைத்தேடி அலைகுவார்- அவர்
தளரும் முதுமையை எண்ணுவாய்!
முந்தும் இருட்டுக்கு முன்னரே- சென்று
முதலில் நிகழ்ந்ததைச் சொல்லுவாய்!
வந்திடுந் துன்பம் வரட்டுமே - தந்தை
மனத்தை நீ தேற்றிடு சென்றுமே!
எந்தவிதம் இவர் என்னையே -சிறை
இட்டுப் படுத்துவர், பார்க்கிறேன்!

செல்க நீ தங்கையே" என்றனன் - அவள்
தேம்பி அழுதுமே சென்றனள்!
'பல்லை உடைத்திடு முன்னமே - சொல்லைப்
பத்திரம் செய்திடு தம்பியே!
கொல்லையிலே குழிவெட்டுவோம் - சிறை
கொண்டு செலுத்தியே வாட்டுவோம்!
புல்லனே செல்லடா' என்றுமே -அந்தப்
போக்கிரி கும்பல் உரைத்ததே!

ஆவியிது மலை அல்லடா! -உங்கள்
அநுமதிதன்னில் ஈ தென்னுடல்
மேவி யிருப்பதும் இல்லையே - இதை
விடுவதும் மீட்பதும் என்வசம்! சாவினை
இவ்விடம் காட்டுவேன் - வருந் தண்டனைக்
கால்பெறுந் தூசியே!
போவீர்' எனச் சொல்லிச் சீறியே—அவன்
போர்வீரன் என்ன நடந்தனன்!

சென்றாள் அழுதவணம் வீராயி; தேம்பியுமே
நின்று திரும்பிடுவாள்; நெஞ்சம் நெருப்பாக
'அண்ணாவோ' என்றலறி ஆர்ப்பாள்; அகதியென்றே –
எண்ணாமல் என்னை இனியதொரு தாய்வயிற்றில்
ஒன்றாய்ப் பிறந்தே உடன் வளர்ந்த தங்கையென
என்றும் இளைக்காத அன்புடனே என்னலத்தைத்
தன்னலமாய்ப் பேணுந் தமையனுக்குத் துன்பமெனில்
இன்ன லதைப் போலே ஏதுண்டு வேறெனக்கே?

பொங்கும் எரிமலையில் பூஞ்சோலை எற்றுக்கோ?
வாழை தனிற் பாம்பு வாழ்வதுபோல் இன்னழகும்
ஏழை தனை அடைந்தே இன்னல் படுத்துவதேன்?
காமுகர்கள் வாழ்கின்ற காட்டிடையே, கன்னியர்கள்
தீமுகத்தைக் கொண்டிருத்தல் நன்றாகும்! தீயவர்கள்
கன்னிக் கவின் அழகைக் கண்டால் விலங்காகி
இன்னல் புரிவார்கள்! என்றன் அழகினிலே
நச்சரவு போன்றவனும் நாட்டமது கொண்டதினால்
இச்சகத்தில் என்அண்ணன் துன்புற்றார்; சிட்டொன்றின்
குஞ்சுதனைக் கூடுவிட்டுக் கீழெடுத்துப் போட்டதுபோல்,
அஞ்சுகின்ற என்றனையே ஆரிங்கே தேற்றிடுவார்?-
தந்தை முதுமைநிலை தன்னை அடைந்திட்டார்!
சிந்தை மெலிந்திடுவார், தேற்றுவதார் அன்னவரை?
வெள்ளத்தில் அன்றேநான் வீழ்ந்திறக்க மாட்டாமல்
கள்ளமிலா நல்லவர்க்குக் கஷ்டத்தை உண்டாக்க
ஆவி பிழைத்திட்டேன்; அன்புள்ளோர் தம் குடிக்கே
பாவி பெருஞ்சுமையைப் பாரத்தை ஏற்றிவிட்டேன்!"
என்றழுத வண்ணம் இருட்டுகிற நேரத்தில்
சென்று குடில் அடைந்து தேம்பியிரு கண்வீங்கி
'அப்பாவோ' என்றலறி நின்றிட்டாள் ; அந்நேரம்
ஒப்பாரி சத்தம் உயிர்தன்னை ஆட்டிவிட
மாரி எழுந்து மகளின் நிலை கண்டு

வாரி இருகையால், 'வந்ததென்ன வீராயி?
அண்ணன் உனைத்தேடி வந்தான்; அவனெங்கே?
கண்களெலாம் வீங்கினவே காரணந்தான் யாதம்மா?
கூறென்றான், கோதை குளித்தெழுந்தாள் கண்ணீரில்!
மாறு நடந்ததப்பா மாபாவி ஜமீன்தாரன்

கூலி பெறச் சென்ற என்னைக் கொடுமைசெய
மேலிட்டான் கையை ; மிருகமெனத் தன்னறையில்
தள்ளி எனைப் பூட்டித் தாழிட்டான் ; அந்நேரம்
துள்ளியுமே வந்தண்ணன், துஷ்ட னவன் கதவைக்
கோடரியால் வெட்டிக் கொடுமை உடைத்தெறிந்தார்;
மூடன் எதிர்த்திட்டான் ; மூண்டபெருங் கோபத்தால்
மண்டை தனை நோக்கி மாட்டிவிட்டார் கோடரியால்!
தொண்டைக் கிழிய அவன் தூரத்தில் கேட்கும் வணம்
கூவினான் ; ஆட்களெலாம் கும்பல் மிகக்கூடி
தாவி பிடித்தண்ணன் தன்னையுமே சாவடிக்கு
'வா' வென் றிழுத்தார்கள் ; மங்கை நான் அவ்விடமே
சாகத் துணிந்தேன் ; தடுத்தென்னை வீட்டிற்கே
போயிருப்பாய், பின் வருவேன்; அப்பாவுக் காறுதலாய்
நீயிருப்பாய்' என்று நிகழ்த்தியுமே சென்று விட்டார்!
என் செய்வேன் அப்பா?' இடிவிழுந்த தும்தலையில்!
என்னால் உமக் கிந்தத் துன்பமெலாம்' என்றழுதாள்!
'வீரண்ணன் சென்றானா வீணர்களின் சாவடிக்கே?
யாருன்னை வீராயி ஆதரவு செய்திடுவார்?
நானோ நலிந்திட்டேன்; இன்றைக்கோ நாளைக்கோ
போனாலும் போயிடுவேன்; புத்திமிகும் உன் அண்ணன்
இங்கிருந்தால் என்னை எடுத்தவனும் போட்டிடுவான்;
தங்கை யுனைக்காத்துத் தக்கவனைத் தேடியுமே
கண்ணுக் கழகாய்க் கலியாணஞ் செய்திடுவான்;
எண்ணமெலாம் மண்ணாக என்னகுறை செய்தோமோ ?

வஞ்சகத்தைக் கொண்டிங்கு வாழும் பணக்காரர்
நெஞ்சகத்தை யாரறிவார்? நீதி அவர் கையில்!
ஆட்சி அவர் கையில் ! யாவும் அவர் கையில்!
மீட்சி பெறவழிதான் மேதினியில் உண்டாமோ?
பச்சைக் குழந்தைப் பதறி அழுவதுபோல்
இச்சை மகளை அணைத்தழுதான் ; இன்னலிலே
மூடும் இருளில் முதியவனும் மங்கையுமாய்
காடும் இரங்கும் வணம் கண்ணற்றோர் நெஞ்சினிலும்
சோகம் பிறக்கும் வணம் சோர்ந்து கிடந்தார்கள் ;
ஆகம் துடிக்கு மவர் ஆபத்தைக் கண்டிரங்கி
நீளிரவு நீந்திற்றுத் துன்பத்தில் ; வீரண்ணன்
நாளிரண்டில் தூக்கு மரத்தை நணுகிடுவான்!
மாண்டான் ஜமீன்தாரன் மண்டை யடி வேகத்தால்!
ஆண்டான் இறந்துவிடில் அன்னோன் தயவினிலே
வாழும் அடிமையினை விட்டுவைக்க ஒப்புவரோ?
வீழும் வரையினிலே சாதிப் பிரிவுகளும்,
நல்ல தொழிலாளர் தம்மை நசுக்கி வரும்
பொல்லா முதலாளி போயொழியுந் தேதிவரை
எங்கும் எவருக்கும் எம்போதும் துக்கந்தான்!
கங்குல் இனி நீங்கும் காண் !

## கொலைகாரன்

கிழக்கிருட்டு முதலாளி தன்னை இளங்
கதிரோனின் கிரண மென்னும்
உழைப்பவர்கள் கிழித்தெறிந்து குருதியினை
ஓட விட்டார்! அடடே. வானம்
விழித்ததடா புரட்சியிலே ! செவ்வாழைப்
பிளந்திட்ட விதத்தைப் போலே
கிழித்திரையாம் மேகத்தில் கிளர்காலை
ஓவியத்தைக் காணு வீரே !

புலர்கின்ற காலையிலே புட்ளெலாம்
சோலையிலே பாட்டுப் பாடி

கலகலப்புச் செய்திடுமாம்; அப்போது
கண்ணீரைச் சிந்த விட்டே
குலக்கொடியும் தந்தையுமாய் எழுந்திருந்தே
ஊர்க்காப்புக் கோட்டம் நோக்கி
வெலவெலத்து நடந்தார்கள் ; சேரியினர்
கண்டார்கள் விசனங் கொண்டார்!

சென்றடைந்தார் கோட்டத்தை ; வீராயி
சிந்தை யெலாம் நொந்தாள் அந்தோ !
நன்றியிலா இவ்வுலகம் அவளையுமே
நாவேதுங் கூசி டாமல்
ஒன் றல்ல பலவசைகள் உரைத்ததுவாம்;
மாரியவன் உகுத்தான் கண்ணீர்!
கொன்றானே-ஜமீன்தாரைக் கொலைகாரன்
அவன் தங்கை இவள் என்றார்கள்!

வீரண்ணன் விளம்புகின்ற சொல்மாற்றிக்
குற்றத்தைப் பதிவு செய்யும்
ஈரமற்ற நெஞ்சுடைய கோட்டத்தார்
எதிரினிலே சென்று நின்றே
வீராயி உரைக்கின்றாள்: "நீங்களெலாம்
ஏழைகளின் வாழ்வு காக்க
ஊராளும் நல்லவர்கள்; என் சொற்கள்
ஒன்றி ரண்டைக் கேட்பீர் ஐயா !"
மேலும் அவள் சொல்லுமுனம் மிருகம்
போல் சேவகனும் பாய்ந்து வந்தே
பாலுண்ணுங் குழந்தையெனப் பசப்புகிற
நீலி, அடி நகர்ந்து செல்வாய்!
ஏலுமென நினைத்திட்டாய் உன் எண்ணம்
இங்கே தான் ; ஏழை நாயே
காலுடைத்துப் போட்டிடுவேன் என்றவளைக்
கைநீட்டித் தள்ளிட்டானே!

விலங்கெடுத்து மாட்டியுமே வீரண்ணன்
கைகளிலே இழுத்தார்; ஆயி
கலங்குகிறாள் ; மாரியவன் கனன்றோடித்
தன்மகளைத் தூக்கி விட்டே
தலைமோதிக் கைகளினால் தன் மகனைக்
கண்டழுதான்; வீரன் சொல்வான்:
"நிலமுண்டு, வானுண்டு ; மக்களெலாம்
நீடிங்கே இருப்பார் அன்றோ?

உண்மைக்கு மதிப்பு வரும் ஒரு காலம்
வரும் ; அப்போ துணர்ந்து கொள்வார்
கண்போன்ற தங்கையினைக் கற்பழிக்க
முனைந்தவனின் உயிரைக் கொன்ற,
அண்ணனுக்குத் தீங்கிழைத்த நடு நிலைமை
அற்றோரின் செயலைக் கண்டே,
மண்ணுலகம் பழி தூற்றும்; யாவருமே
என் பேரை மறவார் அன்றோ?

இறப்பெனினும் எனக்கிப்போ தின்பந்தான்;
என் தங்கைக் கற்பைக் காத்தேன் !
அறங் கொன்ற அறிவிலியை அடியோடே
ஒழித்திட்டேன் ; அப்பா, இந்தத்
திறமடைதல் யாவர்க்கும் எளிதல்ல ;
உன் மகனே இந்தப் பேறு
சிறப்புறவே பெற்றிட்டான்; நீர் உயர்ந்தீர்;
சிறிதேனும் கவலை வேண்டாம்!

வந்திடுவீர் மன்றத்தில் நீதியினை
வழங்கிடுவார் கேட்டுச் செல்வீர்!
வெந்தே நான் போயிடினும் விசனத்தை
விட்டிடுவீர்; வீரா யிக்குச்

சிந்தை களிப் புறும் வண்ணங் கலியாணம்
செய்திடுவீர்" என்றே சொல்லிச்
செந்தலையர் பின் அவனும் திருக்கையில்
விலங்கேந்திச் சென்றிட் டானே!

"என்வயிறு பற்றியுமே எரியுதடா
மகனே, நான் இந்நாள் மட்டும்
உன்னை நம்பி உயிர் வாழ்ந்தேன்" என்றழுதான்
மாரியுமே! "அண்ணா, அண்ணா!
துன்பத்தால் வாடும் எமைத் தொலைவினிலே
விட்டீரே !" என்றே ஆயி,
அன்பு மிகுந் தந்தையுடன் தலையின்மேல்
கைவைத்தே அழுது சென்றாள்!

## மன்றினில் வீரன்

ஏழை யுகுத்த கண்ணீர்- குளம்
என்ன நிறைந்த தங்கே !
வாழ உழைத்தவர்கள் - உடல்
வாடிப் பசி மிகுத்தே
வீழு மந் நேரத்திலே - அவர்
விம்மி விடும் மூச்சே
சூழும் விசிறிகளாய் - அங்குச்
சுற்றிக் கிடந்த தடா !

உயிர்கள் அத்தனையும் -உண்
டுறங்கும் இரவி லந்தோ
வெயில் எனத் தகிக்கும் - தணல்
வீசிடும் ஆலையி ல
துயில்வ தின் றியுமே - உழைத்
தோய்ந்த வர்கண் ணொளியைத்

தயவின்றிப் பிழிந்தே - அமைத்த
தங்க ஒளி விளக்கம்!

குள்ளச் சமூகமடா - கறை
கொள்ளும் சமூகமடா!
கள்ளச் சமூகமடா – அதன்
கட்டு களிற் பட்டுமே
உள்ள மழிந்த வர்தம் - தலை
ஓடுகள் மன்றினிலே
உள்ளெறியும் விளக்கின் - மேல்
ஒட்டிக் கவிந்தன வாம் !

மணத்தின்வத்திகளால் - மலர்
வாய்ந்திடு பன்னீரால்
பிணத்தின் துர்நாற்றம் - தன்னைப்
பிறர் நுகராமல்
தணிக்கை செய்பவர் போல்- கொடுந்
தண்டனைப் பட்டிறந்தோர்
நிணத்தின் துர்நாற்றம்-மறைக்க
நிறைத்த மலர்ச் சோலை!

எத்தனை ஆடம்பரம்!-அங்
கெத்தனை ஆர்ப்பாட்டம்!
மெத்தைகள் அத்தனையும் - உடல்
மெலிந்த சக்கிலியின்
சொத்துகள் ஆகும் ; அவை - செய்யும்
'சொரக்' கெனும் ஒலியில்
செத்த அச் சக்கிலிதான் - ஏதோ
செப்பு கிறான் மெதுவாய்!

இத்தனை நீதிகளும் -உயர்
ஏற்றமிகு மன்றினில்
மெத்த உயர்ந்த வராம் - மிக
மிகவும் கற்றவராம்!
அத்தனை சட்டங்களும் -அவர்
அறிந்து விட்டவராம்!
சத்திய போதக ராம் - நீதி
சாதிக்கும் வல்லவராம்!

வந்து விட்டார் அவரும் -அவண்
மன்றமும் கூடியதே!
தொந்தி சரியவிட்டே - எழில்
தோற்றத்துடன் அமர்ந்தார் !
வந்தனை செய்தனராம்- அவண்
வாய்ந்திடு சேவகர்கள்!
நிந்தனை செய்தனராம் - உடன்
நின்றிடு வீரனையே!

## மன்றினில் வீரன்

ஊரார்கள் கூடிவிட்டார்; பொய்யே சொல்லும்
உளவாளர், சேவகர்கள் காவல் செய்தார்!
தீராத ஆத்திரமே கொண்டோன் வீரன்
சிறுகைதிக் கூண்டினிலே ஏறி நின்றான்!
பாராத தெல்லாமும் உரைக்கும் சான்று
பகர்பவர்கள் பணத்திற்குப் பின்னால் நின்றார்!
தேராத நீதிபதி கேள்வி கேட்க,
திக்கற்ற வீரனுமே பதில் சொல் கின்றான்

"ஜமீன்தாரை நீ கொலை செய்தாயா?"

"ஆமாம்; உண்மை! அஃதவன் பிழையே!"

"குற்றம் என்பதை ஒப்புக் கொண்டிடு!

"கற்பழிப்பது கடும்பிழை அல்லவோ?

"ஆமாம், அதற்கு?"……………….

……………………………………..."ஆபத் தொன்று

நேர்ந்தால் அதனை நீக்க லாகாதோ?"

"நீதி மன்றமும், நியாயங் காக்கும்

கோட்டமும் இருக்கக் கொலை செய்வதுவோ?

உயிரை மீண்டும் உடலில் சேர்ப்பையோ?"

"கற்பழிந்தபின் நீங்கள் காட்டிடும்

நீதி மன்றமும், நியமஞ் செய்திடும்

கோட்டமும் மீண்டும் கொடுக்குமோ கற்பை?"

ஏட்டில் இலாத சிக்கல்……………….

……………………………………"தமிழர்

நாட்டில் நங்கையர் கற்பே நல்லுயிர்!

மானம் அதுவே ! வாழ்வும் அதுவே !

வானம் பொழியும் மழையும் அதனால்

வருவ தென்பதே பெரியோர் எண்ணம்!"

"எப்படி யாயினும் இன்னுயிர்க் கொன்றவன்

கொலைக் குற்றத்திற் காளா கின்றான்!"

"ஒப்புக் கொள்கிறேன் ; ஒன்றே ஒன்று!

உம்முடன் பிறந்த தங்கையை ஒருவன்

கற்பழிக்க நீர் கண்ணால் கண்டால்

என்ன செய்குவீர்? எப்படிக் காப்பீர்?

நீதி மன்றம் தேடி நடந்து

சேவகர் தம்மை அழைத்தே வந்து

காவல் செய்து காப்பிரோ கற்பை!"

'கேட்கத் தகாதன கேட்கிறாய் ; உன்றன்
கொலைக் குற்றத்தை ஒப்புக் கொண்டனை !
கொஞ்ச நேரம் யோசிக் கின்றேன்!"
சபையில் மௌனம் ; சாக்காட் டமைதி !

வந்தனர் அப்போ வாடிய மேனியர் ;
வந்தனர் வீரனின் தந்தையும் தங்கையும்!
செந்தழற் பார்வையில் சீறிடும் மாரியும்,
செகத்தை அழிக்கும் ஊழியின் தோற்றமும்
கொந்தளிப்பும் கொண்ட வீராயியும்
கும்பல் கிழித்துமே வந்தனர் மன் றிடை!

தந்தனன் தூக்குத் தண்டனை ' என்றனன்
தடுக்கி வீழ்ந்திடு நீதியின் தலைவனும்!

சிரித்துக் குமுறியே கொக்கரித்தான் "இங்குச்
சீக்கிரம் தூக்கினில் என்னையிடும்!
விரித்துக் கரத்தினைச் சாவைத் தழுவுவேன் ;
வீரமிலாதவன் நானலவே!
பிரித்துப் படித்திடும் ஏட்டினில் கற்றிடும்
பித்தர் மொழிகளைத் தீயினிலே
எரித்து மகிழ்ந்திட என்றன் பின்னே வரும்
இளைஞர்க ளுண்டென" வீரன் சொன்னான்!

ஆலமரம் ஒன்று சூறையிலே, அடி
அற்றுத் தரையினில் வீழ்வதுபோல்
கோல மிகுத்திடு நங்கை விழுந்துமே
கூண்டருகிற் செல்லத் தாவினளே !
காலப் பெருவெள்ளம் தூக்கும் அலையெனக்
கையினை மார்பில் அறைந்தனளே !

'ஞாலமே ஈதென்ன நீதி" என்றே அந்த
நங்கை மனந்திரிந்தே யுரைப்பாள்:

"இன்னுயிர் அண்ணனை விட்டிடுவீர்! எனை
ஏற்றிடுவீர் தூக்கு மேடையிலே!
அன்னை யிருந்திடில் உங்களுக்கே, அவள்
ஆணையாய்ச் சொல்கிறேன் ஒப்பிடுவீர்!
என்னை ஜமீன்தாரன் கற்பழிக்கத் துணிந்
தெட்டிப் பிடித்திடு நேரத்திலே
வன்மை மிகுத்திடு கோடரியால், அவன்
வாழுயிர் கானே குடித்து விட்டேன் !

கொலையினைச் செய்தவள் நானிருக்க ஒரு
குற்றமிலா என்றன் அண்ணனையே
தலையினை வெட்டிடத் தூக்கிலிடச் சொன்ன
தப்பிலி மக்களே, நீதியிதோ?
விலைக்குங்கள் நீதியை விற்றுப் பிழைக்கிறீர்;
வேட்டை யிடுகிறீர் மக்களையே !
நிலையிலை உங்களின் நீணில வாழ்வடா,
நீங்களும் சாவது நிச்சயமே !

அண்ணனே இங்கெதும் ஆதர வற்றிடும்
அன்புமிகுந் தங்கை என்னையுமே
கண்ணை அவித்துமே விட்டுச் செல்லாதீர்கள்;
கைதிக்கூண்டுதனை வெட்டிடுவீர்!
அண்ணனே" என்றவள் ஆத்திர முற்றுமே
அன்னவன் அண்டையில் செல்கை யிலே
பெண்ணிவளைப் பற்றித் தள்ளுக' என்றுமே
பிறந்தது நீதியில் உத்தரவே!

நங்கையைப் பற்றி யிழுத்துமே-மன்றின்
நடுவில் நிறுத்தித் தடுத்தனர் -பல
வெங்கொடுமை செயும் சேவகர் - நரை
மீசை துடித்திட மாரியும், -சினம்
பொங்கிடக் கைகள், நரம்பெலாம் -மிக்கப்
புடைத்து வலிமையைக் கொண்டிட "எமைச்
சங்கடம் செய்திடு மூடரே -இன்று
சத்தியம் உம்மையே கொல்லுவேன்!

என்னரும் மைந்தனைக் கொல்வதா ?-அவன்
ஏனடா உங்களின் வீட்டிலே - இளங்
கன்னியர் கற்பை அழிக்கவே - ஒரு
காரியம் செய்தது முண்டோடா? - பணந்
தன்னை வணங்கிடும் புல்லரே- உயர்
சத்தியம் மாறிடும் எத்தரே !- இனி
என்னையும் என் மகள் தன்னையும் - உடன்
ஏற்றிடுவீர் தூக்கு மேடையில்!
வானில் மதியும் மறைந்திடும் - பெரு
வாரியிலும் அலை ஓய்ந்திடும் !- சுடர்
மீனும் நிலையினில் மாறிடும் - கதிர்
மேற்கினில் சென்றும் முளைத்திடும்! - எனில்
ஊனில் உயிருள்ள நாள் வரை - அன்பை
ஊட்டி வளர்த்துமே காத்திடும்-சுவைத்
தேனெனும் மக்களை விட்டுமே -எந்தத்
தேசத்தில் உண்டடா பெற்றவர்?"

இவ்விதம் சொல்லி அரற்றுவான் - மன்றம்.
இடிபடக் கொக்கரித்தோடுவான்!- கொல்லும்

வெவ்விலங் கொத்தவர் சேவகர் — அவர்
வேகமாய் வந்துமே மாரியை - ஒரு
கவ்வினில் கவ்விப் பிடித்தனர் - அந்தக்
கன்னியையும் உடன் சேர்த்தனர் !- 'இனி
இவ்விடம் விட்டுமே செல்லுவீர்'-என
எற்றி வெளியினில் தள்ளினர்!

மன்றம் கலைந்தது ; காவலர், - தளை
மாட்டியே வீரனைக் 'காரினில்'- கொண்டு
சென்றனர்; அன்னவன், தந்தையைக் - கை
சேர்த்துத் தொழுதனன்; தங்கையை -"இளந்
தென்றலைப் போன்றிடு செல்வமே -நீ
தேறுதல் கூறிடு தந்தைக்கே! பணம்
வென்றது;சாவின் உலகிலே-நாம்
மீண்டும் சந்தித்தோர் குடும்பமாய்

வாழ முடிந்திடும் ! ஆயினும் -உன்றன்
வாழ்க்கையை நீயுங் கெடுத்திடேல்-பொய்
வீழ உன் கண்களால் பார்த்திடு - இன்றேல்
வீராயி, உன்றன் வயிற்றினில் - நலன்
சூழப் பிறந்திடும் பிள்ளைகள் - கண்டு
சொல்லட்டும் என்றன் துயரத்தை - வஞ்சர்
ஆழக் குழியினைத் தோண்டினார்- அதில்
ஆழ்ந்திட நானுமே போகின்றேன்!

போகின்றேன்" என்றவன் போயினான் - இதைப்
பொது மக்கள் கண்டும் இரங்கிலார் - "விதி
சாகின்றான்" என்று நடந்தனர் - வெறுந்
தரையில் மகளும் நல் தந்தையும் - 'தணல்

வேகின்றோம்' என்று விழுந்தனர்- பண
வெறியர்கள் கண்டு களித்தனர் - மிக
நோகின்ற நெஞ்சினை ஆற்றவும் - அவர்
நோதலை நீக்கவும் யாருளார்?

அடிபட்ட மானென்ன அருங் கண்கள்
தமை அன்றே இழந்தோ ரென்ன
ஒடிபட்டக் கிளையென்ன, உறுதழலிற்
பட்ட இளந் தளிரே யென்ன,
பிடிபட்டப் பெரும்பாம்பின் வாயினிலே
தவளை யென, வெறிநா யொன்றால்
கடிபட்டக் குழந்தையெனக் காரிகையும்
மாரியுமே கிடந்தார் அங்கே!

கண்ணிருந்தும் குருடர்களாய்க் காதிருந்தும்
செவிடர்களாய் இங்கே வாழும்
எண்ணற்ற மூடர்களின், பார்வையிலே
இவ்விருவர் பட்டா ரல்லர்;
'உண்ணுகவா' என்றவரை ஒருவருமே
அழைத்துண்ண வைத்தா ரல்லர்!
மண்புழுதி தன்னையுமே மதிப்பது போல்
அன்னவரை மதித்தே சென்றார்!
என்ன இது ஞாலமடா ! ஏழைகளும்
இங்கேதான் வாழ்வதற்குச்
சின்ன தொரு புகல் உண்டோ? சிறிதேனும்
நெஞ்சினிலே இரக்க முண்டோ?
தன்னலமே பெருகிற்றுத்; தரணியிலே
மக்களெலாம் வறுமை என்னும்
இன்னலிலே வதைகின்றார்! பணக்காரர்
மிதிக்கின்றார் ! கொடுமை என்னே?
உழுது பயிர் செய்வோர்கள் உணவின்றிச்

சாகின்றார் ; அரசாங் கத்தைத்
தொழுது பிழைத் திடுவோர்கள் துரைமார்கள்
ஆகின்றார்! துயரங் கொண்டே
அழுது துடித் திடும் ஏழைப் பெண்கள் தமை
அதிகார வெறிய ரெல்லாம்
பழுது செய முற்படுவார் ! தடுப்பவரின்
உயிர் பறிப்பார் ; கேட்பா ருண்டோ?

பட்டினியால் பசியுற்றோன் திருடுகிறான் ;
பணக்காரர் தலையைச் சென்றே
வெட்டுகிறான் ஏழையுமே வெங்கொடுமைத்
தாளாமல்; அரசாங் கத்தார்,
சட்டத்தால் தண்டித்துச் சிறையினிலே
தள்ளுகிறார்; நீதி மன்றில்
"வெட் டொன்று துண்டிரண்டாய்க்' கேட்பார்கள்
விவரத்தைச் சொல்ல வொட்டார்!
இல்லாரை இல்லாராய் எந்நாளும்
வைப்பதற்கும், எதிர்த்தே ஒன்றுஞ்
சொல்லாமல் ஏழையரைத் தூக்கிட்டுக்
கொல்வதற்கும், திமிர்கொண் டுள்ள
பொல்லாத மகராசர் புரட்டுக்குத்
திருப்புகழைப் பாடு தற்கும்
வல்லானை விட்டிங்கே வாய்க்காலை
வெட்டியுமே வகுத்தார் நீதி!
மகராசர் முன்னோடும் முதற் பிள்ளை
அரசாங்கம் ; அவர் கோட்டைக்குள்
புகமுடியா தெவரையுமே பொழுதெல்லாம்
தடுத்த வணம் வாயில் தன்னில்
நகம் நீட்டிப் பல் நீட்டி நின்றிருக்கும்
நாயதுவே சட்ட மாகும்!
இகழ் வோரைக் கடிக்க வரும் ; எலும்பிட்டால்
வாலாட்டும்; என்னே நீதி?

## சிதறிய குடும்பம்

என்னவருத்தமடா - இதை
எவ்விதம் சொல்லுவனே?
மென் மணத்தாமரையின் இலை
வீழ்ந்திடு நீர்த்துளியின்
தன்னிலை யுற்றனராம் - கிழத்
தந்தையும் கன்னியுமே
இன்னல் உலகினிலே - இனி
எங்கவர் ஏகுவரே ?

வீடு நினைப்பதிலார்- பசி
வெம்மை நினைப்பதிலார்!
பாடு நினைப்பதிலார் - அவர்
பட்டினி எண்ணுகிலார்!
தேடுகிறார் எதையோ-பர
தேசிகள் அன்னவரோ?
நாடு வெறுக்குமவர் - ஒரு
நன்னிலை எய்துவரோ?

வேரை யிழந்த மரம் - உறு
வேலி யிழந்த பயிர்
கூரை யிழந்த குடில்- வலி
கோட்டை யிழந்த நகர்,
நீரை யிழந்த குளம் - என
நெஞ்சு பதை பதைத்தே
ஊரை யிழந்த அவர்-பல
ஊர்களில் சுற்றினராம்!

காற்றினில் பஞ்செனவும்-இருட்
காட்டில் வழிதவறிச்

சேற்றில் நடந்து செலும்-பிற
தேச மகன் எனவும்
சீற்ற மிகுங் கடலில்- திசை
தப்பும் கப்பல் எனவும்
ஆற்றொணா வெந்து யரால் --அவர்
அலைந்து நிலை குலைந்தார்

நைந்த உடைகிழிந்தே - பனை
நாரென ஆச்சுதடா!
செந்துவர் மண் புழுதி- தலை
சிக்கிப் பிடித்ததடா!
தந்தை விழுந்திடுவான் - மகள்
தாவிப் பிடித்திடுவாள்!
இந்த விதமவரே- ஊர்
எங்கணும் சுற்றினரே!

உழைக்க வலுவிருந்தும் - தொழில்
ஒன்று மிலாமலந்தோ
பிழைக்க வழியின்றியே- தெருப்
பிச்சை யெடுப்பவரும்
கிழித்த கோட்டினிலே-ஒரு
கீற்றுக் கடந்தவரை
இழிவு சொல்லுகிற - கொடும்
ஈன சமூகத்தினால்

ஒடுக்கப் பட்டவரும் - வெறுத்
தொதுக்கப் பட்டவரும்
அடக்கப் பட்டவரும்- துணை
அற்ற அகதிகளும்
அடையும் சத்திரத்தைப் - பகல்
ஆகிடும் நேரத்திலே

நடை மிக மெலிந்தே - அவர்
நண்ணி இருந்தனரே!

இந்நாட்டில் வாழ் வதற்கு வெறுத்தனவாம்
இருஜீவன் ; இதுபோல் துன்பம்
எந்நாட்டில் காண்போம் நாம் ? எத்தனையோ
ஏழையர்கள் இன்னும் இங்கே
வெந்நாகம் தீண்டியர்போல் வெய்துற்று
வாடுகிறார்! அவர்கள் யாரும்
தந்நாடு வெறுப்பவரே தஞ்சமிலா
திருப்பவரே ஆவார், ஐயா!

வாழ்வெல்லாங் கசப்பாச்சு ; மேல்நிகழ்ந்து
வருகின்ற பொழுதெல் லாமும்
சூழ்கின்ற இருளாச்சு; துயரத்தின்
எதிரொலியே செவியில் தோய
வீழ்அருவி போல்கண்ணீர் சிந்தியுமே
விசனத்தால் மாரி சொல்வான்!
"ஊழ்வலியோ, வீராயி ? ஒன்றிலுமே
எனக்கினிமேல் பற்றே யில்லை!

என்வயிறு காடுற்ற நெருப்பென்ன
எரிகிறதே ; இந்த நாட்டில்
பன்னூறு நாளிருந்து பணிசெய்து
பார்த்திட்டோம்; பலன்தான் என்ன?
கன்னெஞ்சர் ஆனார்கள்: கற்பழிக்க
வந்தார்கள் ; வீரண் ணன்றன்
இன்னுயிரைக் கொன்றார்கள் ; எதற்கிந்த
நாட்டினில் நாம் இருக்க வேண்டும்?
காட்டிற்குச் சென்றங்கு விலங்குகளின்
உறவினிலே கலந்து வாழ்வோம்!

கேட்டிற்குள் நாம் வீழ்ந்தால் அவைவந்து
நமைக்காக்கும் கேண்மை யோடே !
பாட்டிற்குப் போகாமல் பசியின்றிக்
காய், கனிகள் புசித்து வாழ்வோம்!
தீட்டென்று மிருகமெலாம் நமைச்சொல்லிச்
சேரியிலே தள்ளி டாவாம்!

சேரியெனும் இடமில்லை காட்டினிலே ;
அதுவன்றிக் கற்பைத் தின்னும்
பூரியர்கள் அங்கில்லை ; சட்டத்தால்
பொய்சொல்லிப் புன்மை சேர்க்கும்
ஆரியர்கள் அங்கில்லை ! யாவையுமே
பொதுவுடமை; பாலை தன்னில்
நீரிருக்க முடியாது ; மனிதரிடம்
நீதியிலை ; நீங்கிச் செல்வோம்!

ஒன்றென்னைத் தடுக்கிறது; சென்றானே
உன் அண்ணன் அவன் எண்ணந்தான்
நின்றென்னைத் தடுக்கிறது; நெஞ்சார
உனக்குமணம் நிகழ்த்தி விட்டால்,
இன்றைக்கே ஏகிடுவேன் ; என்றாலும்
சொல்கின்றேன், கொஞ்சங் கூட
நன்றியிலா மனிதனை நான் நம்பியுனை
எவ்வாறு மணஞ்செய் விப்பேன்?"

என்று பல பிதற்றியுமே இளங்குழந்தை
போல்,ஏதுங் குறிப்பே யின்றிக்,
கன்றென்னக் கதறுகிற தந்தைக்குக்
கண்ணீரைக் கடலாய்க் காட்டி
தென்றலுக்கும் வருத்தம்வரத் தேனுக்குஞ்
சூடேறக் குளத்தெண் ணீரில்

அன்றலர்ந்த தாமரையும் அகம்வாட
வீராயி அழுதிட் டாளே

ஒருமனிதன் அந்நேரம் அங்கேவந்
துரைக்கின்றான் ; 'ஐயோ, நீங்கள்
இருவருமே ஏனிங்கே விசனமுடன்
இருக்கின்றீர்! நேர்ந்த தென்ன?
வருவீரேல் என்னோடு வளர்நாடு
கடல்தாண்டி வேற்றூர் சென்று
பெருவாழ்வு வாழ்ந்திடலாம்; பெறற்கரிய
சலுகையெலாம் பெறலாம் கண்டீர்!

அமைதியுடன் வாழ்ந்திடலாம்; அனைவருமே
அன்புடனே ஆத ரிப்பார்
சுமையற்றத் தொழிலுண்டு; சுகமான
சம்பளமோ அதிகம் உண்டு!
நமையாரும் மதிப்பார்கள்; நலிவில்லை;
'ஆப்பிரிக்கா' என்னும்பேரே
அமைகின்ற நாடதுவாம்; அங்கேதான்
பூலோக சுவர்க்கம் உண்டு !

உற்றாரை உறவினரை உறுமைந்தர்
தமையிழந்தோர் துயரங் கூடக்
கற்றாரைக் காணுங்கால் நீங்குகிறக்
கவலையெனக் கடிதில் நீங்கும்
வெற்றுரைகள் இவையல்ல விரைவினிலே
புறப்படுவீர்! வந்து பார்த்தால்,
எற்றைக்கும் அவ்விடத்தை விடமாட்டீர்!"
என்றவனும் உரைத்திட்டானே !

உழைப் புறிஞ்சி உயிர்உறிஞ்சி உரிமையினை
உறிஞ்சியுமே ஓட விட்ட

பிழைமலிந்த நாடிதனைப் பெருந்துன்ப
விருட்கிடங்கை விட்டே நீங்கி
முழைகாடு சென்றிடவும் மனந்துணிந்த
முதியவனும் மகளும் இந்த
அழைப்புதனை ஏற்றார்கள் ; அல்லாமல்
இந்நாட்டில் அவரென் செய்வார்?

பொய் யொன்றே வாழ்வாகப் புன்செயலே
அறமாகப் பொருளே என்றும்
மெய்யான உறவாகக் கொண்டிங்கே
மேலான மனித வாழ்வைத்
துய்ய புகழ் அன்பு தனை நாகரிகத்
தொன்மையினை மறந்து வாழும்
உய்வறியா மாக்களிலே பல பிரிவில்
அவன் ஒருவன் பேர் கங் காணி !

மெலிந்திட்டப் பசுவினையே 'கசாப்பிற்கு'
விற்கின்ற செயலே போன்று
நலிந்திட்ட மனிதர்களை நயமாக
ஏமாற்றி அழைத்துச் சென்றே
பலியிடுவான் முதலாளி காலடியில்
பணம் பெற்றுப்; பாவம் அன்னோர்
எலியாக அடங்கியுமே அடிமைகளாய்
எப்போதும் உழைக்க வேண்டும்!

காடாக மேடாகக் கரம்பாகக்
கிடக்கின்ற இடத்தை யெல்லாம்
வீடாக,விளை நிலமாய்த் தங்கத்தை
வைரத்தை வெட்டிச் சேர்க்கும்
நாடாக ஆக்கிவிட நரம்பொடிய
உழைக்கின்ற கூலிக் காரர்
ஆடாக அடங்குபவர் ஆயிரமாய்
ஆயிரமாய் அங்கே வேண்டும்!

கொள்ளையிட முதலாளி கொண்டதொரு
திட்டமிது ! முடித்து வைக்க
வெள்ளை யரின் சலுகையுடன் விடப்பட்ட
"கருங்காலி' பேர், 'கங்காணி'!
நொள்ளையராய் நொந்தவராய் நூறு துயர்க்
கொண்டவராய் நுடங்கி வாழும்
சொள்ளையராம் ஏழையர்கள் சுடுகாட்டைச்
சுவர்க்கமென நம்பிச் சென்றார் !

கங்காணி சொன்ன மொழி முதியோனும்
காரிகையும் ஏற்றுக் கொண்டார்!
தங்காமல் அவன் பின்னே நடந்திட்டார்!
உணவுடைகள் தந்தான் அன்னோன்
பொங்குகடல் நீந்துகிற கப்பலிலே
புறப்பட்டார்! மாரி அந்தோ
கங்குலிடைத் தன் மகனைக் காண்கின்றான் ;
வீராயி கலங்கு கின்றாள்!

குடியிருந்த பெருந் தோட்டம் சூறையினால்
அழிவுற்றுக் கூடெல் லாமும்
பொடியாகி மரமெல்லாம் ஒடிபட்ட
நேரத்தில் புட்கள், அந்தோ
துடிப்புற்றே வேறுதிசை செல்கின்ற
விதம்போலே துன்பக் கண்ணீர்
வடித்தவணம் செல்கின்றார் ! வாழாமற்
போகின்றார்! வழியொன் றில்லார்!

கடலலைகள் அவரிதயக் கொந்தளிப்பு
போல் வனவாம்! கண்காணாத
இடத்திற்குப் போகின்றார் ! பிரிவெண்ணி
வருத்தமுற எவரே உள்ளார்?
அடித்தாலும், ஒரு சமயம் அணைக்கின்ற

அருங்கைகள் இல்லா நாட்டில்
மடிந்தாலும் இருந்தாலும் மற்றெந்த
நிலையுறினும் இரங்குவார், யார்?

தானீன்ற மக்கள் தமைத் தாயொருத்தித்
துரத்துகிற தரித்திரத்தில்
தேனீன்ற தமிழ்நாடு வாழ்வதினும்
செத் தொழிதல் சிறப்பே யன்றோ?
கூனீன்ற கொள்கையினால் தமிழ் நாட்டின்
வளமெல்லாங் குன்றிப் போக
வானீன்ற மழையின்றி மண்வற்றி
மதப்போரே வளர்ந்த தாமே !

## தேயிலைத் தோட்டத்திலே

கடல் தாண்டி விட்டதடா கப்பல் ; அந்தக்
கரைச்சீமை சென்றதடா! கடுங்கானத்தின்
திடல் போன்று கிடந்திட்ட 'ஆப்பிரிக்கா'
செழிப்பாக,உழைத்துதிரம் சிந்தப் போகும்
அடிமைகளை இறக்குகிறார் ! முதலா ளித்வம்
ஆனந்தம் அடைகிறது ! மனிதர் தம்மைப்
பிடித்துவந்து விற்கின்ற கங்காணிக்குப்
பெருமையெனில் நமக்கின்று கொதிக்கும் உள்ளம்!

அடிமைகளின் கூட்டத்தை விலைக்குப் பேசி
ஆடுகளை வாங்குதல் போல் வாங்கு கின்றார்!
குடிப் பிறந்த தமிழ் மக்கள் அதிலே உள்ளார்!
குறுங்கண்ட மாகிய இவ் விந்தி யாவின்
உடை வேறு பண்பாடு வெவ்வேறான
ஒன்றல்ல பல நாட்டு மக்கள் உள்ளார்!
எடைபோட்டால் அனைவருமே நடைப்பிணந்தான்
இனி அவர்கள் 'தலைவிதியை' யாரே கண்டார்?

சுடுகாடு போன்றதுவாம் சுரங்கம்! அங்கே
தொல்லை யெலாம் ஏற்றதொரு கும்பல் ! 'ரப்பர்'
எடுக்கின்ற தோட்டத்தில் இருமிக் கொண்டே
இரவு பகல் உழைத்ததொரு கும்பல் ! சாவைக்
கொடுக்கின்ற தேயிலையின் தோட்டத்துள்ளே
கொடுமை யெலாம் அடைந்ததொரு கும்பல் ! வாழ்வு
கெடுமாறு பலவாகப் பிரிந்து சென்றே
கேடெல்லாம் உற்றதடா,கூலிக்கூட்டம்!

புலிசீறிப் பாயவரும்! தவறி விட்டால்
புதர்ப்பாம்பு கடித்துவிடும் ! கொடுந்தேள்கொட்டும்
எலிகூடப் புகமுடியா மலையின் மேலே
ஏறியுமே தேயிலையைக் கிள்ள வேண்டும்!
கிலிபிடித்த உளத்தோடு சென்று, மேனி
கீறுகிற முட்களினால் வருந்தி, அங்கே
சலியாமல் உழைத்தால்தான், கால்வயிற்றுச்
சாப்பாட்டைப் பெறமுடியும் பிழைத்திருக்க!

வெள்ளத்தில் வீழ்ந்துமிகத் தத்தளித்து
மேலேறிக் கரைவந்த எறும்பைத்,தீயில்
தள்ளிவிட்டால் எவ்வாறாம்? அவ்வா றாகத்
தவிப்புற்றுத் தேயிலையின் தோட்டத்துள்ளே
கள்ளொழுகும் பாளையெனக் கண்ணீர் சிந்திக்
காரிகையும் மாரியுமே அழுதார் ! அந்த
வெள்ளை முதலாளி, யவன் சவுக்கு கொண்டு
விரட்டியுமே வேலையினை வாங்கலானான்

கங்காணி சொல் நம்பி வந்தாரந்தோ!
கழுத்தறுக்கும் கொலைகாரக் கொள்ளைக்கூட்டம்
எங்கணுமே உலகத்தில் கொடுவாள் ஏந்தி
இருக்கின்ற உண்மையினை ஏழை மக்கள்

இங்கறிய முடிந்திடுமோ? எளியோர் வாழ்வை
இவ்வாறே படுத்திடு நீ உலகே ! உன்றன்
வெங்கொடுமை வளரட்டும் ; அதற்கு மேல்தான்
வெடிகுண்டாய்த் தொழிலாளர் மாறுவார்கள்!

உடல் இளைத்து விழி குழிந்து கன்னம் வற்றி
உறுவயிறு மிக்கொட்டி உழைக்கும் போதும்
'நடவுங்கள் விரைவினிலே' என்று சொல்லி
நடுமுதுகில் சாட்டையினால் அடித்து வாட்டிப்
படவைப்பான் முதலாளி துன்பந்தன்னை!
பதைக்கின்றார் தேயிலையின் தோட்டத்துள்ளே!
அட மனிதா, நீ யென்ன நாவை நீட்டி
அளக்கின்றாய்? "ஒருலகம்" என்கின்றாயே?

எங்கேயோ சறுக்கிவிழும் ஒருவனுக்கே
எடுக்கின்றாய் காவடிநீ; உன்கா வின்கீழ்
நங்கையர்கள் மிதிபட்டுக் கிடக்கின் றாரே !
நரைபட்ட முதியவர்கள் துடிக்கின் றாரே !
தங்கத்தை எடுத்துனக்குத் தருகின்றார்கள் ;
தடியடியை அவருக்குத் தருகின்றாய் நீ!
'பங்கத்தை உலகோர்கள் அறியார்' என்றோ
பசப்புகிறாய் வெள்ளையனே, நிசமாய் வீழ்வாய்!

## மாரி இறந்தான்

துறவியெனத் தாடியதும் வளர லாச்சு
துன்பத்தால் முகமதுவும் கருக லாச்சு ;
பிறந்த தொரு நாட்டினிலும் இன்ப மில்லை!
பிற நாட்டில் நரகமெனும் பெரிய தொல்லை!
இறந்துவிட மாரியுமே எண்ணு கின்றான்;
இதையறிந்தோ ஒரு பாம்பு பகலில் அன்று

நறுக்கென்று மாரியினைக் கடித்துக் கொன்று
நழுவிற்றுத் - தீர்ந்ததடா ஏழை வாழ்வு!

தேயிலைத் தோட்டத்திலே - அவன்
செத்து விழுந்து விட்டான்!
ஆயி மனம் பதைத்தாள் - இனி
ஆதர வில்லை யடா !
"தாயினும் பன்மடங்காய் - எனைச்
சாவினில் மீட்டு வந்தே
நோயினில் வீழாமல் - மிக
நோற்று வளர்த்த தந்தை !

தூக்கு மரத்தினிலே- மகன்
தொங்கிடப் போகையிலும்
வாக்குத் தவறாமல் -எனை
வாழ்ந்திட வைப்பதற்கே
மாக்கடல் தாண்டி வந்தே -இவண்
மடிந்த தந்தையினைப்
போக்கி நான் வாழுவனோ ?"-எனப்
புலம்பு கின்றனளாம்!

"அண்ணனைக் கொன்று விட்டாய் - எமை
அடித்துத் துரத்திவிட்டாய்!
கண்ணெனுந் தந்தையுமே -இந்தக்
காட்டினில் மாண்டு விட்டார்!
பெண்ணுளம் அற்றனையோ?- என்னைப்
பெற்ற தமிழ் நாடே? எண்ணிட மாட்டாயோ?- பரா-
தீனர் எம் இன்னலையே!
உன்னிரும்புச் செவியில்-என்றன்
ஓலத்தைச் சேர்ப்பவ ரார்?

பொன்வெறி மிக்கவர்கள் – வெள்ளைப்
பூதக் கொடு மனத்தார்
இன்னல் புரிகின்றனர் - இதை
இவ்வுல கொப்பிடுமோ?
தன்னந் தனிமையிலே-இனி
சாகாமல் தப்புவனோ?

தேயிலைத் தோட்டத்திலே - ஒரு
திக்கற்று நின்று விட்டேன்!
மாயிரு ஞாலமே கேள் !- பெரு
வானமே, வாரியே, கேள்!
வாயிருந்தால் உமக்கே - இதை
மக்களிடத்தி லெல்லாம் போயிசைத்தே விடுவீர்--அவர்
புகலட்டும் நீதியினை !

அண்ணன் இறந்தவுடன் - என்
ஆவி துறந்திருப்பேன்!
புண்ணியத் தந்தையினால் - அதைப்
பொறுத்துக் கொண்டிருந்தேன் !
கண்ணி ரண்டில்லை யின்று - பினர்
காட்சியும் தப்பிடுமோ?
மண்ணில் உயிர் விடுவேன்!"-என
மங்கை துணிந்துவிட்டாள்!

தந்தையைக் கை தொழுதாள் - தன
தாவி நிகர் அண்ணனை
வந்தனை செய்து கொண்டாள் - 'உமை
வந்தின்று சாவுலகில்
சந்திப்பேன்' என்று சொலி- அவள்

சாகத் துணிந்து விட்டாள்!

அந்தம் அடைந்திடுமோ ?- இனி

அவளின் நாடகமும்?

சிறிய கத்தி யொன்றை -இடையில்

செருகி வைத்திருந்தாள்!

குறியுடன் எடுத்தே - நெஞ்சில்

குத்திட எத்தனித்தாள்!

மறித்த கைகளிலே - அவ்வெழில்

மங்கைக் கைப்பட்டதுவாம்!

தெறித்த கோபத்திலே – அவள்

திரும்பிப் பார்த்தனளே !

## காதலன் கிடைத்தான்!

காளை ; இளம்பருவம்- அவன்

கண்களில் நற்பரிவு!

"மாள மனந் துணிந்தாய் -இது

மா பரிதாப மம்மா !

வேளை வந்தே யிறந்தார் - அவர்;

விசனம் நீங்கிடம்மா !

நாளைக் கழித்து விட்டால் - நம்

நாட்டுக்குச் சென்றிடலாம்!"

என்றுரை செய்தனனாம் - அந்த

இளைஞன்; நல்லிளை ஞன்!

ஒன்றும் புரியவில்லை - அவள்,

ஒதுங்கி நின்று விட்டாள்!

'சென்றுங்கள் காரியத்தை - ஐயா,

செய்திடுவீர்; இதிலே

நன்றும் தீமையு மிலை'-என
நங்கையும் செப்பினளாம்!

" கண்களால் கண்டு விட்டேன் -ஒரு
காரிய மில்லை யம்மா !
பெண்கள் தற்கொலை யுண்ண- எந்தப்
பேதை மனிதனுமே கண்டுமே
செல்வானோ ?- நான்
காட்டு மிருக மன்றே?
எண்ணிட வேண்டுமம்மா" -என்
றிறைஞ்சிக் கேட்டுக் கொண்டான்

"அதிலும் அம்மா நீ- தமிழ்
ஆரணங் கானதினால்
'விதி' யெனச் சொலினும் -உயிர்
விட்டிட நான் பாரேன் !"
"கதியு மில்லை யையா - உங்கள்
கருணை நெஞ்சினையே
மதித்துப் போற்றுகிறேன் - எனை
மாள விடுவீரையா !

பிறந்த நாட்டினிலே- கொடும்
பேய்க ளிருக்குதையா
அறமும் இல்லை ஐயா!-என்
அண்ணனைக் கொன்றவர்கள்
சிறக்கும் அந் நாட்டை - நான்
திரும்பிப் பார்ப் பேனோ?
உறங்கும் நேரத்திலும் - என
துள்ளம் நடுங்கு மையா!"

என்று மனம் வெதும்பும் -அவ்
வேந்திழைக் கால்கள் தமைச்
சென்று பிடித்துக் கொண்டான் - "எனைச்
சீக்கிரம் இவ் விடத்தே
கொன்று விடுவை யம்மா!- பினர்
குத்திக் கொள் உன்றனையும்!
இன்றெனில் ஒப்புகிலேன்" - என
இளைஞன் கூறிடுவான்!

சட்டென்று தான் குனிந்தே - அவள்
தடக்கை நீக்கியுமே
"கெட்ட உலகினிலே -உம்
கேண்மை சிறப் புடைத்தாம்!
தட்டிடேன் உங்கள் சொலை-இது
சத்தியம் " என்று ரைத்தாள்!
துட்ட முதலாளியும் - அங்குத்
தோன்றினன் அக் கணத்தே !

நங்கை நடுங்கி விட்டாள்- "இவண்
நாடகம் என்னடி சொல்?
கொங்கை குலுக்குகிறாய்- இவன்
கூட்டியே வந்தனனோ?"
"பங்க மிலாப் பயலே- உனைப்
பார் என்ன செய்கிறேன் நான்?
அங்கம் சிதைத்திடுவேன்!"- என
ஆர்ப்பொலி செய்திடுவான்!

"பாம்பு கடித்த தையே !-இப்
பாவையின் தந்தையினை

தீம்பு கண்ட பிறகும் - சிறி
திரக்க மற்ற வராய்
வீம்புகள் பேசுகிறீர் !- இழி
வெத்தனை சொல்லு கிறீர்!
தேம்பும் இந்நே ரத்திலும் - பழி
செப்புதல் நல்லறி வோ?"

நெஞ்சு கொதித்தவனாய் - இவை
நிகழ்த்தும் இளைஞனையே
"மிஞ்சினையோ மடயா?- எனை
மீறியே பேசுகிறாய்;
அஞ்சி நடுங்கிடடா!'-என்
றடித்தான் சாட்டையினால்!
கெஞ்சினாள் பாவையுமே - அதைக்
கேட்டிடுமோ மிருகம்?

ஆட்களையே அழைத்தான் -"இவன்
ஆணவத்தை அடக்க
வாட்டிச் சிறையினிலே - இட்டு
வையுங்கள் என்று சொன்னான்
தீட்டுக் கிழவனிவன் - செத்துத்
தீர்ந்தன னாகை யினால்
போட்டிடுவீர் இழுத்தே - மிக்கப்
புடைத்துமே இவளை

வேலையும் வாங்கிடுவீர் - சிறு
வேசி யிவள்" என்றனன்!
பாலையின் வேடரெனும் - அப்
பாதகப் புல்லர்களும்
சேலைப் பிடித்திழுத்தார் - இளந்

தென்னவள் தன்னையுமே
"தோலை யுரித்திடுவோம்" - எனச்
சொல்லி யிழுத்துச் சென்றார்!

## கண்ணீர் வெள்ளம்

மழைக் கொதுங்கி நிற்கையிலே மரமும் வீழ,
மற்றதனால் தாக்குண்டு கிடக்கும் போது
தழைக்கிளையின் காய்திருட வந்தா யென்று
சதிகாரர் ஓடிவந்து சூழ்ந்து துன்பம்
இழைக்குமொரு கொடுமையென அந்தத் தீயோர்
இழைத்தபெருந் தீமையினால் நங்கை, அந்தோ
நிழலற்றத் தரைபோன்று கொதித்துக் கண்ணீர்
நிலம் பெருக விட்டழுது சென்றிட் டாளே!

தந்தைக்கு வந்ததொரு தீங்கும், நெஞ்சந்
தழுவுகிற அன்பாலே, தனக்கு நேர்ந்த
வெந்துயரில் பங்கு கொள விரைந்தே வந்து
வியன் இளைஞன் ஏற்றதொரு துன்பும் எண்ணி
சிந்தையொரு வழியில்லா நிலைமை யுற்றுச்
சின்னவரின் கொடுமையினை ஆற்றாளாகி
செந்தமிழ நாட்டன்னம் துயருற் றந்தோ
தேம்புகிறாள் ; விம்முகிறாள் ; திணறுகின்றாள் !

ஆழமிலா நீருடைய கிணற்றில் வீழ்ந்தே
ஆவியது போகாமல் திகைப்பதே போல்
வாழ மன மில்லாத அந்தப் பாவை
வாடுகிறாள்!எதிர்பாரா நிலையில் அந்த
வேழம் நிகர் இளைஞனுமே வந்து தோன்றி
மிக விறைஞ்சி நின்றதையும் எண்ணு கின்றாள்
வீழருவி பெருகிற்றோ ! வெள்ள ஊற்றோ!
விதவை விடுங் கண்ணீர்தான் அவள் கண்ணீரோ!

## கப்பல் ஏறினர்

பற்பல நாட்களும் ஏகின - இருட்
பாஞ் சிறை நீங்கியவ் வாலிபன்
பொற்புறு பாவையைக் காணவே - பகற்
போதிலோர் நாளினில் வந்தனன்!
நற்பவள இதழ் ! வெண்ணகை ;- எழில்
நங்கை அந்நேரத்தில் மாமலைக்
கற்களில் காலும் இடறியே - புதர்க்
காட்டினில் வீழ்ந்திடக் கண்டனன் !

தேடிய செல்வம் புழுதியில் - விழுந்
தெதிரில் கிடப்பதைக் கண்டதும்
ஓடி எடுத்தந்த மங்கையை -உயிர்
ஊறிடும் அன்பெனுங் காதலால்
வாடிய மாமலர் மேனியில் - விழி
வைத்துப் பரிவொடு நின்றனன்.!
ஈடிணை அற்றதோர் கற்பினாள் - முகம்
ஏறிட நாணம், விலகியே,

"என் துயரந்தனில் பங்கினை -நீர்
ஏற்றுப் பெருந்துன்பம் எய்தினீர்!
இன்ன லுறுமிந்த வேளையும்-எனை
இவ்விடம் வந்துமே தாங்கினீர்!
புன்மைமிகும் முதலாளியும்-என்றன்
பொற்புறு கற்பை யழிக்கவே,
கன்மலை தன்னில் தொடர்ந்தனன் – எனக்
காரிகை சொல்லிக் கதறினாள்!

"அன்னமே ஒன்றிற்கும் அஞ்சிடேல் - என
தாவி யிருக்கும் வரையிலும்
உன்னலன் ஓம்புதல் என்கடன் - இனி
ஒருகணம் நாமிங்கு நின்றிடில்
ஒன்னலர் தீமைப் படுத்துவர்-கையில்
உறுபொறுள் கொஞ்சமும் உண்டுகாண்!
அன்னதைக் கொண்டிந் நரகினை -விட்
டகன்று நம் நாட்டிற்குச் செல்லுவோம்

கப்பலும் இன்றைக்குச் சென்றிடும் - எனக்
கங்காணிப் பேய்க ளுரைத்தன!
தப்பியே செல்லுவோம்" என்றனன் - அதைத்
தையலும் ஒப்பினள்; சென்றனர்!
இப்புவி என்னென்ன செய்யுமோ? - இன்னும்
எவ்விதம் துன்பப் படுத்துமோ?
கப்பும் இருளிடைக் கப்பலும் - இளங்
காதலரை ஏற்றிச் செல்லுமாம்!

குழும் இருளிடைக் காதலர் - உளம்
தொட்டுச் சுவைத்தது காதலை!
வாழு முயிருடலாயினார்- எழில்
மலரும் மணமும்போல் சேர்ந்தனர்!
பாழும் உலகில் மெய்க்காதலர் - விலை
பகரும் மாமணிச் சொத்துகாண்
வீழும் வரை அவர் ஒன்றுகாண்-எனில்
வீழ்ந்திடில் இருவரும் மாய்வராம்!

## மங்கையுடன் வந்தான்

சேரியது மூழ்கியஅம் மருதூரில் ஒருநாள்
செல்லப்பக் கவுண்டரவர் திருமகனும் வந்தான்!

கோரியதோர் கொள்கையினைத் தடுத்ததினால் தந்தை.
கோபித்துக் கொண்டவனும் ஆப்பிரிக்கா' சென்றான்
ஓரியெனக் கங்காணி வந்துலவும் நேரம்;
உயரிளைஞன் தனை அவனும் ஏமாற்றி, அந்தச்
சீரில்லா ஊருக்கே அழைத்தேகி விட்டான்!
திரும்பி வந்தான் தப்பித்தே ஒரு நங்கையோடு !

அன்புமிகும் நம்மைந்தன் ஆனந்தன் வந்தான்;
அவன் பின்னே வந்திட்ட அம்மங்கை யாரோ?"
என்பதனைப் பெற்றோர்கள் அறிந்திடமுற் பட்டார்!
ஏழைபோல் தோன்றுகிறாள்; நம்குலமோ, யாதோ?
பொன்படைத்த நம்குடும்பப் புகழ்மறைந்துபோமே!
பொறுத்தவனைக் கேட்டிடலாம் என்றிருந்த வேளை
கொன்பயிலும் புதுப்பட்டிக் காரர்சிலர் அந்தக்
குடமருதூர்க் கவுண்டரிடம் கடன் கேட்க வந்தார்!

## பறைச்சியா?

வந்தவர்கள் திடுக்கிட்டார் கவுண்டரிடம் சென்றார்
"வழக்கத்தை மாற்றுகிறீர்; ஈதென்ன ஐயா?
இந்தப் பெண் புதுப்பட்டி மாரிமகள் அன்றோ?
இல்லத்துள் பறைச்சியினை எப்படிநீர் சேர்த்தீர்?
சொந்தத்தை உம்மோடு நாங்களெலாம் கொள்ளல்
தோஷமெனக் கருதுகிறோம்; இக்கணமே நாங்கள்
வந்தவழி பார்த்தெங்கள் ஊருக்குச் செல்வோம்!
வயிற்றெரிச்சல் இதைசகிக்க எப்படியும் ஒப்போம்!

ஆண்டுசில ஆயிற்றுப் பறைப்பெண்ணும் ஓடி !
ஆச்சரியம்! இங்கிப்போ தெப்படியோ வந்தாள்!
மாண்டொழிந்து போனாலும் கடுகுக்குக் காரம்

மறைந்திடுமோ? யாமெல்லாம் ஏழ்மையினால் காய்ந்த
பூண்டாக மாறிடினும் குலத்தன்மை மாறோம்!
போகின்றோம்" எனச்சொல்லிக் கோபிக்க லானார்!
"வேண்டுகிறேன், நீங்களெலாம் வெளிசெல்ல வேண்ட
வெறிமகனை நான்பெற்றேன்,அவனிழுத்து வந்தான்!

"இப்போதே உம் எதிரில் விரட்டுகிறேன் அவரை!
என்மகனே ஆனாலும் குலமானம் போக
ஒப்பேனே" என்றவரும் ஓடியுமே வீட்டில்
ஒளிவிழியால் காதலினைப் பரிமாறி நின்ற
தப்பேதும் அறியாதக் காதலரைச் சீறித்
தாக்கியுமே வெளித்தள்ளி ஆர்ப்பாட்டஞ் செய்தார்!
கப்பலிலே கால்வைத்தக் காலிக்கு மாட்டுக்
கறிதின்னும் புத்தியது வாராதா என்ன?"

ஆனந்தன் அன்னையவள் திடுக்கிட்டுப் போனாள் !
"அடி, நீலி நீபெற்ற மகன்ஒழுங்கைப் பாரு!
ஈனநாய்ப் பறைச்சியினை இங்கழைத்து வந்தான்!
என்மானம் போகிறதே, என்னடிநான் செய்வேன்?
வானமழைப் பெய்யாமல் நிறைகின்ற கேணி,
வளமிக்க முப்போக வயல்கள் நமக்குண்டு!
ஏனடி, நம் சாதியிலே நமையொதுக்கி விட்டால்,
இதைவிடவோர் அவமானம் நமக்கேது சொல்லு?

தொலையட்டும் கழுதையது பறைக்குட்டி யோடு!
துளியேனும் இடங்கொடுத்தால், உன்கழுத்து துண்டு !
அலையட்டும்! எங்கேனும் சாகட்டும் சென்று!
அப்பண்ணக் கவுண்டரவர் ஆட்களுடன் வந்தார் ;
இலைபொறிக்கி நாயிவளும் புதுப்பட்டி தானாம்!

என்னுயிரே போவதுபோல் அவர்பேசி விட்டார்
தலைமுழுகப் போகின்றேன் இன்றே அப் பயலை !
தறுதலையாய்ப் போய்விட்டான்; போகட்டும் போடி!"

## பயப்படாதே !

அடுக்கடக்காய் வளர்ந்ததவர் அதிகாரப் பேச்சு!
ஆனந்தன் சினமுற்றான் ; காதலியை அழைத்துக்
"துடுக்கடக்கப் போகின்றேன் மேல்சாதித் திமிரை
தூரப்போய் நீநின்று பயப்படவே வேண்டாம்!
நடுக்கடலில் தப்பித்தோம்: இங்கென்ன மானே?
நமக்கென்றும் சாவுண்டு ; வீணாக மாண்டு
விடுவதினும் போராடி உயிர்விடுதல் நன்று!
வீராயி உனக்கென்ன தெரியாதா?" என்றான் !

"கைகோர்த்துக் கொள் என்றன் பக்கத்தில் வா நீ!
கலியாணம் நமக்கென்று மேளத்தைக் கொட்டித்
தைமாதத் திருநாளைக் கொண்டாடி விடுவோம்!
தப்பட்டி அடித்திடுவான், ஒரு பணத்தைத் தந்தால்;
வைவோர்கள் வையட்டும், நமக்கென்ன, வெட்கம்?
வா" என்றான்; இருவருமாய்ச் சென்றார்கள் எதிரில்
வைக்கோலை எரிவித்து மேளத்தைக் காய
வைத்துக்கொண் டிருந்திட்டான்; ஒருபறையன் அங்கே!

"உன் குடிசை யெங்கேசொல்? உனக்கின்று ரூபாய்
ஒன்றிற்கு மேல் தருவேன் மேளத்தைக் கொட்டு!
சென்றிடலாம் குடிசைக்கு வா" என்று சொல்லி
சீக்கிரமாய்க் கூப்பிட்டான், ஆனந்தன் - 'ஓகோ!
இன்றைக்கு நரிமுகத்தில் நாம் விழித்தோம் என்றே
எழுந்திட்டான் அப்பறையன் தன்குடிசை காட்ட!

தென்னவனும் பூவையுமே கைகோர்த்துக் கொண்டார்!

சிரிக்கின்றார், நடக்கின்றார்; சீர்திருத்தக் காரர்!

## புரட்சி மணம்

சென்றார்கள் குடிசைக்குள்
ஆனந்தன் சொன்னான்:
"தெருவினிலே நீ நின்று
மேளத்தைக் கொட்டு!
நன்றாகக் கொட்டிடுவாய்:
யாரேனுங் கேட்டால்
நடக்குதொரு கலியாணம்
வீராயி, என்னும்

வென்றாளும் பெண்ணுக்கும்
ஆனந்தன் தனக்கும்,
விமரிசையாய்க் கலியாணம்
நடக்குதெனச் சொல்லி
குன்றாத ஒலியெழுப்பிக்
கொட்டிடுவாய் மேளம்
கொட்டிடுவாய் மேள" மென
ஆனந்தன் சொன்னான்,

"பக்கத்தில் வீராயி
உட்கார்ந்துகொள்வாய்
பறையடிக்கப் போகின்றான்
பார்" என்று சொன்னான்!
அக்கணமே வீராயி
உட்கார்ந்து கொண்டாள்!
அடிக்கின்றான் மேளத்தை
அப்பறையன் அங்கே!

எக்களிப்புக் கொள்ளுதடா
பறையோசை எங்கும்!
உதிர்நின்ற சாதிவெறி
மதவெறிகள் எல்லாம்
சுக்காகப் போயிற்றுப்!
பறையோசை ஓடிச்
சுதந்திரத்தைச் சொல்லியுமே
முழக்குதடா ஊரில்!

காதெல்லாம் கிழியும் வணம்
பறையடித்து விட்டான்
'கவுண்டருக்கும் பறைச்சிக்கும்
கலியாணம்' என்று!
தீதெல்லாம் கிழியும் வணம்
ஆனந்தன் செய்தத்
திருமணத்தைப் பறையடித்துத்
திக்கெட்டுஞ் சாற்றிச்

சூதெல்லாம் ஒழியும்வணம்
சுழலுதடா ஓசை!
தொல்லைமிகத் தருகின்ற
வைதீகம் செய்தத்
தோதெல்லாம் அழிந்துவிடத்
துள்ளுதடா ஓசை !
சுற்றுதடா பறையோசைப்,
புரட்சியினைச் சொல்லி!

## நாடுசெய்த தீமை

ஊரிலிது கேட்டார்கள் ஓடோடி வந்தார்!
உறுமியுமே செல்லப்பக் கவுண்டரவர் வந்தார்!
நேரினிலே கண்டார்கள் பறைச்சியுடன் குந்தி
நிமிர்ந்தவண்ணம் இருக்கின்றான் ஆனந்தன்; இந்தப்

பாரினிலே இதுபோன்ற அநியாயம் இல்லை
பறக்கிறது காற்றினிலே கவுண்டர் குல மானம்!
"வேரினிலே பிடிக்கின்ற புழுவிந்தப் பையன்!
விடவேண்டாம் இருவரையும் கொல்லுங்கள்" என்றார்.

மேளத்தைக் கிழித்தார்கள்! 'அடித்த பறைப் பையன்
விலாவெலும்பை முறி' என்றார்; அவனோடி விட்டான்!
'மாளத்தான் போகின்றான் ஆனந்தன்' என்று
மார்தட்டித் தடிகளுடன் சூழ்ந்தார்கள் அங்கே;
கூளத்தைச் சிதைப்பதுபோல் குடிசையினைச் சாய்த்துக்
கூடியுமே தடியடியை நடத்துகிறார் குண்டர்!
வாளொத்த விழியுடைய வீராயி தன்னை
வலப்பக்கம் அணைத்தவணம் ஆனந்தன் நின்றான்!

## முடிந்தது வாழ்வு

குருதியிலே காதலர்கள் குளிக்கின்றா ரந்தோ !
கொடுமையிலே இதுபோன்ற கொடுமையுமே உண்டோ?
ஒருவாறு வெறிதீர்த்தே ஊரார்கள் சென்றார்!
உடல்சோர்ந்து காதலர்கள் தரைசாய்ந்துவிட்டார்!
திருந்தாதத் தமிழ்நாடே நீ செய்ததீமை
தீ,மண், நீர், காற்று, வெளி உள்ளளவும் மக்கள்
ஒருபோதும் மறவார்கள், உண்மையிது சொன்னேன்!
உயர்காதல் கொன்றாய் நீ வாழுதியே நன்றே!

ஆனந்தன், வீராயி வீரண்ணன் மாரி
அருங்காதல் கற்பினிலே அன்பினிலே இங்கு
மானமுடன் வாழ்ந்தவர்கள்! தமிழ்நாடே நீதான்
மனம்பொறுக்க மாட்டாமல் அவர் உயிரைக் கொன்றாய்!
வானத்து விண்மீனை இருள் அழித்தல் இல்லை!
மாக்கொடுமைத் தமிழ்ப் பண்பு தனையழித்த லுண்டோ?

ஈன செயல் அழியுங்காண்; அவரழிய மாட்டார்!
என்றைக்கும் இங்கவர்கள் நாமமது வாழும்!

## காவிய மாந்தர்

இனி, காவிய மாந்தரைப் பற்றிக் காணலாம்.

**வீராயி**

கவிஞர் தமிழ்ஒளியின் வீராயி காப்பியத்தலைவி. காப்பியத் தொடக்கத்திலிருந்து முடிவு வரை துன்பமும் துயரமும் சூழ வாழ்ந்து முடிந்தாள். பிற கதைமாந்தர் அனைவரும் அவளது துன்பத்துக்குக் காரணமாகவோ அல்லது துன்பம் துடைப்பவர்களாகவோ உருவாக்கப்பட்டிருக்கின்றனர்.

மருதூரைச் சேர்ந்தவர்கள் வேடப்பனும் அவன் மகள் வீராயியும். வெள்ளத்தால் மருதூர்ச்சேரி அழிந்தது. வைக்கோற் போரில் ஏறி வேடப்பனும் வீராயியும் உயிர் பிழைத்தனர். வைக்கோற் போர் பயணத்தில் வேடப்பன் இறந்தான். வீராயி ஆதரவு அற்றவள் ஆனாள். அச்சூழலில் அவளுக்கு ஆதரவாக மாரியும் அவன் மகன் வீரண்ணனும் இருந்தனர்.

பருவவானில் வண்ணமதிபோல் வீராயி வளர்ந்தாள். அவள் அழகில் புதுப்பட்டி சமீன்தார் உள்ளம் இழந்தான். செய்த வேலைக்குக் கூலி வாங்கச் சென்றவிடத்தில் முரட்டுக் குணமும் காமமும் மதுக்குடியும் உடைய சமீன்தாரின் காம வேட்டைக்குப் பலியாக இருந்த அவள் வீரண்ணனால் காப்பாற்றப்பட்டாள். சமீன்தார் வீரண்ணனின் கோடரிக்கு இரையானான்.

வீரண்ணன் தக்க சமயத்தில் வந்து காப்பாற்றி இராவிடில் அவள் சமீன்தாரின் காம இச்சைக்கு இரையாகி இருப்பாள்.

வீரண்ணனுக்குத் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டதை அறிந்து வீராயி துன்பமுற்றாள்; துடித்தாள். அடிபட்ட மானாக, ஒடிபட்ட கிளையாக, தழலில் பட்ட தளிராக, பெரும்பாம்பின் வாயில் அகப்பட்ட தவளையாக என்றெல்லாம் அவள் துயரம் பேசப்பட்டுள்ளதால் அவள் உற்ற துயரின் ஆழம் புலப்படுகிறது.

ஆதரவற்ற வீராயி மாரியுடன் பல இடங்களில் சுற்றித் திரிந்தாள். அவர்களை அன்புடன் ஆதரித்து உணவிடுவார் எவருமிலர். சொந்த நாட்டில் வாழ வழியின்றி உயிர் வாழ்வதை விடக் கடல்தாண்டி உழைத்துப் பிழைக்க எண்ணினாள். 'சுமையற்ற

தொழிலும் சுகமான சம்பளமும்' கிடைக்கும் என்ற கங்காணியின் சொல்லை நம்பி ஆப்பிரிக்காவிற்குக் கப்பலில் புறப்பட்டனர்

## வீராயியும் மாரியும்

ஆப்பிரிக்கா நாட்டில், முதலாளி ஒருவனிடம் வீராயியையும் மாரியையும் கங்காணி விலைபேசி விற்றுவிட்டான். அவர்கள் அங்குத் தேயிலைத் தோட்டத்தில் உழைத்தார்கள். வெள்ளை முதலாளி சவுக்கால் அவர்களை அடித்து விரட்டி வேலை வாங்கினான். வீராயியின் வாழ்க்கை கண்ணீரும் கம்பலையுமாய்க் கழிந்தது.

மாரியின் அன்பிலும் ஆதரவிலும் ஓரளவு ஆறுதல் கொண்ட வீராயி மற்றும் ஒருமுறை அனாதை ஆனாள். மாரி பாம்பு தீண்டி இறந்தான். அவள் துன்பத்திற்கு ஆளானாள்.

**அண்ணன் இறந்தவுடன் - என்**
**ஆவி துறந்திருப்பேன்**
**புண்ணியத் தந்தையினால் - அதைப்**
**பொறுத்துக் கொண்டிருந்தேன்**
**கண்இரண் டில்லைஇன்று - பினர்**
**காட்சியும் தப்பிடுமோ?**
**மண்ணில் உயிர்விடுவேன் - என**
**மங்கை துணிந்துவிட்டாள்**

வீராயி, தன் இடையில் செருகி வைத்திருந்த சிறிய கத்தியை எடுத்துத் தன் நெஞ்சில் பாய்த்திட எத்தனித்தபோது ஆனந்தன் என்னும் மற்றொரு தேயிலைத் தோட்டத் தொழிலாளி அவளைத் தடுத்தான். அவன் 'நாளை கழிந்துவிட்டால் நம் நாட்டிற்குச் சென்றிடலாம்' எனக் கூறினான். ஆனால் அவளோ தன்னை மாய்த்துக் கொள்வதிலேயே கருத்தாக இருந்தாள். 'என்னைக் கொன்ற பின்னர் உன்னையும் மாய்த்துக்கொள்' என்று அவள் இருகால்களையும் பற்றிக் கொண்டான். அவள் சட்டெனக் குனிந்து அவன் கைகளை நீக்கிவிட்டு

**கெட்ட உலகினிலே - உம்**
**கேண்மை சிறப்புடைத்தாம் !**
**தட்டிடேன் உங்கள்சொலை - இது**

**சத்தியம் என்றுரைத்தாள்.**

வீராயி சாகும் எண்ணத்தை விட்டாள்.

முதலாளியின் கொடிய கண்களில் ஆனந்தனும் வீராயியும் அகப்பட்டுக் கொண்டனர். முதலாளி ஆனந்தனைச் சாட்டையால் அடித்தான். மேலும் அவன் தன் ஆட்களை வரச் செய்து ஆனந்தனைச் சிறையில் இடச் செய்தான். வீராயி வேலையை இழந்தாள். சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட ஆனந்தன் அவளைத் தேடினான், முடிவில் அவளைக் கண்டான்.

**தேடிய செல்வம் புழுதியில் - விழுந்து**
**எதிரில் கிடப்பதைக் கண்டதும்**
**ஓடி எடுத்து**

அவள் மேனியில் விழி ஒட்டி நின்றான். முதலாளி தன் கற்பைக் குலைக்க முனைந்ததையும் கூறிக் கதறினாள்.

ஆப்பிரிக்காவிலிருந்து தாயகம் புறப்படும் கப்பலில் ஆனந்தன் வீராயியை அழைத்துக் கொண்டு தன் ஊராகிய மருதூர்க்கு வந்தான். வீராயி ஆனந்தனோடு அவன் வீட்டில் இருந்தாள்.

புதுப்பட்டிக்காரர்கள் வீராயி மாரியின் மகள் என்றும் பறைச்சி என்றும் ஆனந்தனின் தந்தை செல்லப்பக் கவுண்டரிடம் கூறினர். அவரும் சாதியிலே தன்னை ஒதுக்கி வைத்துவிடுவார்கள் என்ற அச்சம் கொண்டார். மகனையும் வீராயியையும் வசை பாடினார். மனைவிக்கும் எச்சரிக்கை விடுத்தார்.

**தொலையட்டும் கழுதையது பறைக்குட்டி யோடு !**

**துளியேனும் இடங்கொடுத்தால் உன்கழுத்து துண்டு -**

வீராயியை ஆனந்தன் திருமணம் புரிந்து கொள்ள முடிவு செய்தான். கவுண்டருக்கும் பறைச்சிக்கும் திருமணம் என்ற செய்தி பரவியது. செய்தி கேட்ட கவுண்டர்,

**வேரினிலே பிடிக்கின்ற புழுஇந்தப் பையன்**
**விடவேண்டாம் இருவரையும் கொல்லுங்கள் –**

என்று தன் அடியாட்களுக்கு ஆணை இட்டார். அவர்கள் குடிசையைச் சூழ்ந்து கொண்டு சிதைத்தார்கள். ஆனந்தன் அஞ்சாமல் வீராயியை அணைத்த வண்ணம் நின்றான். குண்டர்களின் கொடுந்தாக்குதலுக்கு ஆளான வீராயியும் ஆனந்தனும் உயிர் துறந்தனர்.

தாழ்ந்த குலத்தில் பிறந்த வீராயி துன்பங்களை வாழ்நாள் முழுதும் எதிர் கொண்டாள். தன் கற்பைக் காத்துக்கொள்ளக் கடுமையாகப் போராடினாள். ஆனால் வாழ்க்கைப் போராட்டத்தில் இறப்பைத் தழுவிக் கொண்டாள்.

## சாதியம்

வீராயி முழுக்க முழுக்கச் சமுதாயக் காப்பியம் ஆதலின் இந்தியச் சமுதாயத்தில் வேர் விட்டிருக்கும் சாதியத்தைக் கருப்பொருளாகக் கொண்டுள்ளது.

கடும் வெள்ளத்தால் வைக்கோற்போரில் ஏறி உயிர் பிழைத்த பறையர் இனத்தைச் சேர்ந்த வேடப்பனையும் வீராயியையும் சாதி இந்துக்கள் காப்பாற்ற முன்வரவில்லை. இதற்கு ஆன காரணத்தைக் கவிஞர் தமிழ்ஒளி விவரிக்கிறார்.

**பயப்பட்டார் பறையர்களைத் தொட்டெடுத்துவிட்டால்**
**பார்ப்பவர்கள் என்சொல்வார் என்றொதுங்கிப் போனார் -**

இத்தகைய சாதிய உணர்வுதான் அவளின் முடிவிற்கும் காரணமாயிற்று. ஆப்பிரிக்காவில் தேயிலைத் தோட்டத்தில் உடல் உழைப்பைத் தரும் ஆனந்தனின் அன்பிற்கு ஆட்பட்டாள். ஆப்பிரிக்காவில் வாழப் பிடிக்காமல் வீராயி ஆனந்தனோடு தாயகம் திரும்பினாள். மருதூரில் உள்ள தன் வீட்டிற்கு அவளை அழைத்து வந்தான்; தன் வீட்டிலேயே அவளைத் தங்க வைத்தான். புதுப்பட்டிக்காரர்கள் ஆனந்தன் தந்தை செல்லப்பக் கவுண்டரிடம் வீராயி பறைச்சி என்பதைக் கூறி வைத்தனர். பறைச்சியை வீட்டிற்குள் தங்க வைத்திருக்கும் அவனோடு உறவு கொள்வதைத் தவிர்ப்பதாகவும் கூறினர். உண்மை அறிந்த செல்லப்பக் கவுண்டர் வெகுண்டார். காதலர்களை வீட்டைவிட்டு வெளியே தள்ளினார்.

**ஒளிவிழியால் காதலினைப் பரிமாறி நின்ற**
**தப்பேதும் அறியாத காதலரைச் சீறித்**
**தாக்கியுமே வெளித்தள்ளி ஆர்ப்பாட்டம் செய்தார்**

மகன் ஆனந்தன் பறைச்சியினை அழைத்து வந்ததால் மானம் போய் விட்டதாக வருந்தினார்.

ஆனந்தனும் தந்தையின் ஆர்ப்பரிப்பையும் வசையையும் கேட்டுச் சினமுற்றான். அவளுக்கு ஆறுதல் கூறினான்.

**துடுக்கடக்கப் போகின்றேன் மேல்சாதித் திமிரை**
**தூரப்போய் நீநின்று ; பயப்படவே வேண்டாம்**

**நடுக்கடலில் தப்பித்தோம் இங்கென்ன மானே !**

**நமக்கென்றும் சாவுண்டு ; வீணாக மாண்டு**

**விடுவதிலும் போராடி உயிர்விடுதல் நன்று -**

வீராயியைத் தான் திருமணம் செய்து கொள்ளப் போவதைப் பறையறைந்து ஊரார்க்குத் தெரிவித்தான், ஆனந்தன். இச்செய்தியைக் கேட்ட செல்லப்பக் கவுண்டர் தன் குலமானம் அழிவது கண்டு,

**வேரினிலே பிடிக்கின்ற புழுவிந்தப் பையன்**

**விடவேண்டாம் இருவரையும் கொல்லுங்கள் -**

என்று அடியாட்களை ஏவிவிட்டான். அவர்கள் ஆனந்தனும் வீராயியும் வாழும் குடிசையைக் கூளத்தைச் சிதைப்பதுபோல் சிதைத்தார்கள். காதலர்கள் அடியாட்களால் தாக்கப்பட்டு இறந்தனர்.

## சாதியத்தின் கொடுமைக்குக் காதலர்கள் பலியானார்கள்

காதலர்களின் மண உறவிற்கும் சாதி தடையாக இருக்க அதே சமயத்தில் மற்றொரு பக்கம் வன்முறைப் பாலியலில் சாதி தடையாக இல்லை. வீராயியின் அழகில் மயங்கிய புதுப்பட்டி சமீன்தார் அவளை வன்முறையாகக் கற்பழிக்க எத்தனித்தபோது சாதி தடையாக இல்லை. செல்வாக்குடையவர்களின் மனப்போக்கு சாதியின் இருப்பைத் தீர்மானிக்கிறது.

இவ்வாறு வீராயி காப்பியத்தில் சாதியின் வன்கொடுமை காதலர்களின் இறப்பிற்குக் காரணமாக இருக்கிறது. மனிதநேயம் மறுக்கப்படுகிறது என்பதைக் காணலாம்.

வீராயி என்னும் குறுங்காப்பியத்தில் வீராயி என்ற தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த பெண் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சிக்கல்களும், சாதிய வெறிக்குத் தன் காதலனோடு பலியாவதும் பேசப்பட்டன.

# அலகு - 5

## தொகுப்புரை

இராவணகாவியம் புலவர் குழந்தை அவர்களால் இயற்றப்பட்ட காவியம். இதில் புராணமரபுப்படி இயற்றப்பட்ட காப்பிய ஆயினும் புராணகதைக்கு எதிராக எழுதப்பட்ட சிறந்த காப்பியம். இராவணனைக் காவியத்தலைவனாக்கி சிறந்த கதைத்தலைவனாகக்காட்டியுள்ளார். அவற்றில் தமிழ்காண்டம் என்னும் தலைப்பில் தமிழகத்தின் எல்லை, பெருமை நாட்டின் சிறப்பு ஆகியவை அழகுற படைத்துக்காட்டியுள்ளார் ஆசிரியர்.

கவிஞர் தமிழ் ஒளி அவர்களால் இயறறப்பட்ட குறுங்காவியம் வீராயி. இதில் கதைமுழுவதும் வீராயி துன்பத்திலே படைத்துக்காட்டப்பட்டுள்ளாள். தந்தையின் இறப்பு ஆப்பிரிக்கநாட்டில் ஏற்பட்ட துன்பம், சாதிக்கொடுமை, சாதிக்கொடுமையில் காதலர்கள் பலியாதல் போன்ற கதைப்பின்னனியில் வீராயி கதை படைக்கப்படுள்ளதை அறியலாம்.

---

## அலகு - 5 வினாக்கள்

## பகுதி - அ

### ஒரு மதிப்பெண்வினாக்கள்

1.இராவணகாவியத்தின் ஆசிரியர் யார்?

அ) சேக்கிழார் ஆ) கம்பர்

இ) திருத்தக்கத்தேவர் ஈ) புலவர் குழந்தை

விடை: ஈ) புலவர் குழந்தை

2.இராவணகாவியத்தில் இடம்பெற்ற பாடல்களின் எண்ணிக்கை எத்தனை?

அ) 3300 ஆ)3100 இ) 3150 ஈ)3050

விடை: ஆ)3100

3. இராவண காவியத்தில் இடம் காண்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

அ) 3 ஆ) 4 இ) 5 ஈ) 6

விடை: இ) 5

4. தாய்மொழிப்படலம் இடம் பெறும் படலம் எது?

அ) இலங்கைக்காண்டம் ஆ) தமிழகக் காண்டம்

இ இ) விந்தக் காண்டம் ஈ) பழிபுரி காண்டம்

விடை: ஆ) தமிழகக் காண்டம்

5. தன்கடன் குன்றித் தமிழகங் கொண்ட தென்கடல் முன்பு செழுந்தமிழ் நாடா - என்ற பாடல்வரி இடம் பெறும் நூல் எது?

அ) இராவண காவியம் ஆ) தேம்பாவணி

இ) வீராயி ஈ) சீறாப்புராணம்

விடை: அ) இராவண காவியம்

6.வீராயி கதையின் ஆசிரியர் யார்?

அ) ஆனந்தன் ஆ) தமிழ்ஒளி

இ) பாராதியார் ஈ) புலவர் குழந்தை

விடை: ஆ) தமிழ்ஒளி

7. வீராயி தந்தையின் பெயர் என்ன?

அ) வீரண்ணன் ஆ) மாரி

இ) வேடப்பன் ஈ) ராமசாமி

விடை: இ) வேடப்பன்

8. சமீன்தாரைக் கோடாரியால் கொன்றவன் யார்?

அ) வீரண்ணன் ஆ) மாரி

இ) வேடப்பன் ஈ) ராமசாமி

விடை: அ) வீரண்ணன்

9.வீராயியும் மாரியும் எந்தநாட்டிற்குச் சென்றனர்?

அ) ஆப்பிரிக்கா ஆ) அமெரிக்கா

இ) மலேசியா ஈ) ஆஸ்திரேலியா

விடை: அ) வீரண்ணன்

10.வீராயியை திருமணம் செய்து கொள்ள அறிவிக்கும் ஆண் யார்?

அ) வீரண்ணன் ஆ) மாரி

இ) வேடப்பன் ஈ) ஆனந்தன் விடை: ஈ) ஆனந்தன்

---

## பகுதி - ஆ

### ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1.புலவர்குழந்தை ஆசிரியர் குறிப்புத் தருக.

2.தமிழகபடலம் குறித்து எழுதுக.

3. தமிழகபடத்தில் இடம் பெறும் பெருவள நாட்னெ; வளம் குறித்து எழுதுக.

4. தமிழ் ஒளி ஆசிரியர் குறிப்புத்தருக.

5. வீராயியின் சிதைந்த குடும்பம் குறித்து எழுதுக.

6. வீராயியின் வாழ்க்கையில் நிகழும்துன்பம் குறித்து எழுதுக.

7.வீராயி தேயிலைத்தோட்டத்தில் படும் அவலம் குறித்து எழுதுக.

8. வீராயிக்கு ஏற்படும் சாதியக்கொடுமை குறித்து விளக்குக.

## பகுதி – இ

### பத்து மதிப்பெண் வினாக்கள்

1.இராவண காவியத்தில் இடம்பெறும் தமிழகப்படலம் குறித்துக்கட்டுரை வரைக.

2. வீராயிகதையில் வீராயியின் கதாப்பாத்திரம் குறித்து கட்டுரை வரைக.

3.வீராயி கதையில் இடம் பெறும் சாதியக்கொடுமை குறித்துக்கட்டுரை வரைக.

---

### பார்வை நூல்

புலவர் குழந்தையின் இராவணகாவியம் மூலமும் உரையும் - பேராசிரியர் ந. வெற்றியழகன்

வீராயி காவியம் - தமிழ்ஒளி - தமிழர்பதிப்பகம் சென்னை

காப்பியக்கொள்கை, து.சீனிவாசன், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1985.

தமிழ் வலைதளமுகவரி

3. http://ta.m.vikippedia.org
4. https://nearchathi.wordpress.com
5. www.tamilvu.org